உ

# தொல்காப்பியம்.

இஃது
ஜமதக்கினிய றாரிஷியின் புத்திரரும்,
அகஸ்திய மஹாரிஷியின் முதன் மாணாக்கரு
மாகியதிரணதூமாக்கினியென்னுமியற்பெயரையுடைய

## தொல்காப்பியமகாரிஷியினால்

ருளிச்செய்யப்பட்டது.
இதில்
முதலாவது - எழுத்ததிகாரமூலமும்,
மதுரை ஆசிரியர் பாரத்துவாசி

## நச்சினார்க்கினியரால்

அருளிச்செய்யப்பட்டவதனுரையும்,
கரலிகிதங்களாலாய வழுக்களை நீக்கி யச்சிட்டுத் தருகவெனச் சில
வித்துவான்கள் கேட்டுக்கொள்ளக் கனம் பொருந்திய
கம்பேனி யாரால் ஏற்படுத்தப்பட்ட யூநிவர்
சிட்டியென்னுஞ் சகல சாஸ்திர
சாலைத் தமிழ்த் தலைமைப்
புலமைநடாத்திய
மழவை

## மகாலிங்கையரவர்களால்

பலபிரதிகளைக்கொண்டாராயப்பட்டு
திருவண்ணாமலை

## வீரபத்திரையரால்,

நமது கல்விக்கடல் அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டன.

---

சாலிவாகன - ௵ - [illegible] - சரியான பிலவங்க ௵ ஆவணிமீ.

# சிறப்புப்பாயிரம்

## நிலமண்டிலவாசிரியப்பா.

மணிநீர்ப்புவியின் வளஞ்சுரந் தொ
ளிரு- மணிநீர்த்தில்லை யாடகப்பொ
துவிற்-பனிமலைமங்கை பார்த்துளங்
களிப்பத்-தனிநடங்குயிற்றுஞ்சம்பு
நப்பெருமான் - றமருகப் பறைக்க
ண் அ இ உ ணு வென் - றமர்தருசூத்தி
ரமர் திமீரோழ்பெற-வடமொழிக்கிய
ல்பாணினிமாமுநிக்குத்-திடமுறநன்
குதெரித்ததைப்போல-விந்தமும்வே
லையும்வீறுபோய்க்குன்றக்-கந்தமெ'ம
ன்கமலக் கரத்தினைவிதிர்த்தவருந்தவ
க்கொள்கையகத்தியமுநிக்குத்-திருந்
திசை நுணுக்கச் செந்தமிழியலினைச்
செப்பினனம்முநிதேர்ந்துளநிறீஇ-
யொப்பிறன்பெயர்கொ ளொரு நூ
லியற்றி_யீராறுசீடருமியல்வலராகச்-
சிருடனேதினன்றிகழ் தருமவருண்-
முதன்மா ணவனென முந்நீருலக-
மிதமொடுபுகலவினிதுவீற்றிருந்தங்
கொல்காப்பெரும்புக ழுற்றுமீதோ
ங்கிய-தொல்காப்பியமுநி தலங்குத
ன்பெயரி- னியற்றியதொல்காப்பிய
மெனுமொருநூ னயத்தகுமளவை
யாய்றன் ணுவதன் றியுங்-கோவையா
ர்திருக் குறள்சிந்தாமணி - தேவியற்
சங்கச்செய்யுள்களாதி - யிலக்கியங்க
ளுக் கிலக்கணமாகியும்-புலப்படுமுல
மும்புகழ்தக்கிணங்க- உச்சிமேற்புல
வருவந்து கொடெய்வ-நச்சினார்க்கி
னியர்செய் நல்லுரைய துவுங்-நரவிக
தங்களிற்காணுறுபிழையினைச் - சரத
மொடுணர்ந்துசால்புறத்திருத்தி -ய
ச்சிறப்பதிப்பித்தருளுகவென்றே-யிச்
சித்துணர்வுடை யோர்சிலரியம்பவி
ன்-விழைப்பமொடுலகின்மேவுறவிளங்
க-வெழுத்ததிகாரத்தியலொன்பானு
ங்- காண்டகுமச்சிற்கவப்புறச் செய்
தனன்-மாண்டருதாமரை மலராதிக
ளின்-புதுமணம்பரப்பிப்புறந்திரிந்
தயரு-மதுகரத்தொகுதியைவருகெ
னப்பணித்துத்- தாதுறுகமலத்தண்
ணறவருத்தித்-தீதறுபகலிற் செவ்வி
திற்புரந்து-நள்ளிருட்பொழுதுநண்
ணியகாலைக் . கொள்ளைகொள் குமுத
மலர்த்தேன்குடிப்பித்·துவர்க்கடற்பு
வியினுறுமிரவலரை-நிவப்புறுபுகழெ
னுநேரிழைதன்னைத்·தூதெனவிடுத்
துத்தொக்குறவிளித்தங் காதரவோ
டுமலர்முகங்காட்டி, மற்றொருபாற்
செலாவகைப்பொருளளித்து· முற்
றும்புரக்கு முதிர்கொடையாளரிற்·
றுன்னியவாவியுந் துதைமலர்ச்சோ
லையு· மன்னிநல்வளந்தரு மழைவை
மாநகரான்.சிவமறையோர்குலஞ்சிர்
பெறத்தோன்றிய · தவநிறை தரும
றைச்சைவசிகாமணி·யுடையானுடை

ப்பொருளுறு மிருபொருளு மிடை
யருதொன்று மென்றெழின்மறைமு
டிவின்· விளங்குயர்சைவ விசிட்டாத்
துவிதக் களங்கமின்முடிவிற்கருத்து
டைப்புனித னியலிசை நாடகமெனு
முத்தமிழு மபலறத்தெரிந்த மாட்சி
கொள்புலவன்· பரிமேலழகர்செய்ப
ண்புரைதனிலும்- விரிவுரைசெயத்த
குமீக்கூர்மதியுளோ னவையின் மற்
றொருவரடுத்துரைசெயாமற்· சுவை
யுறு மொழிபல சொன்மொழி வல்
லோன்· உத்தரமொழிமற்றுறுதிலைச
மொழியின்· சத்திஃதெனவேதவடைய
றத்தெரிந்தோ · னென்னிருகண்ணி
னு மிதையமென்மலரினுந்· துன்னி
யெக்காலமுந் துலங்கிவாழ்தோன்ற
ல் நல்லன வுளவெலா நசையொடுந
டாத்தி.யல்லனவுளவெலாம் றுறவக
ற்றி, மகிமைபெறுமகாலிங்கையனெ
ன்னப்· புகலுமியற்பெயர்பொருந்
துநாவலனே ... ... ... ... *

இஃது

கைலாசபரம்பரையாய்விளங்காநின்ற

திருவாவடுதுறையாதினவித்துவான்

# தாண்டவராயசுவாமிகள்

இயற்றியது.

# தொல்காப்பியச்சூத்திரவகராதி.


| சூத்திரம் | பக்கம் |
|---|---|
| அஆஉஊ | ௱௬ |
| அஆவென்று | ௱௯ |
| அஇஉஅம் | ௨௯ |
| அகமென்கிளவிக்கும் | ௱௫௮ |
| அகர ஆகாரம் | ௱௫௭ |
| அகர இகர | ௪௬ |
| அகர உகர | ௪௩ |
| அகரத்திம்பர் | ௪௩ |
| அகரவிறுதிப் | ௱௰௫ |
| அக்கென்சாரியை | ௱௪௨ |
| அடையொடு | ௱௯௰ |
| அணரிநுனிநா | ௫௯ |
| அண்ணஞ்சேர்ந்த | ௫௭ |
| அண்ணநண்ணிய | ௫௫ |
| அதனிலையுயிர்க்கு | ௨௨௧ |
| அத்தவண்வரினும் | ௱௨௩ |
| அத்திடைவரூஉ | ௯௯ |
| அத்தினகர | ௭௩ |
| அத்தேவற்றே | ௭௭ |
| அத்தொடுசிவணும் | ௱௯௰ |
| அந்நான்மொழியுந் | ௨௱௨ |
| அப்பெயர்மெய்யொழி | ௱௭௪ |
| அம்மின்இறுதி | ௭௪ |
| அம்மூவாறும் | ௨௫ |
| அரையளபு | ௨௨ |
| அரையெனவருஉ | ௯௮ |
| அல்லதன்மருங்கிற் | ௱௬௫ |
| அல்லதிளப்பினியற் | ௱௬௨ |
| அல்லது மெனும் | ௱௬௩ |
| அல்லது-விறுதி | ௱௯௪ |
| அல்லதிளப்பினெல் | ௨௱௧ |
| அல்வழியெல்லாமியல் | ௱௭௮ |
| அல்வழியெல்லாமுற | ௱௮௰ |
| அல்வழியெல்லாமுற் | ௱௮௯ |
| அல்வழியெல்லாமெல் | ௱௫௮ |
| அவ்வழி-பன்னீருயிருந் | ௫௩ |
| அவ்வியனிலையு | ௨௨ |
| அவற்றுள்-அஆஆயிரண் | ௫௪ |
| அவற்றுள்-அஇஉஎ | ௰௭ |
| அவற்றுள்-இகரவிற | ௮௮ |
| அவற்றுள்-இன்னினி | ௭௧ |
| அவற்றுள்-ஈரொற்றுத் | ௱௯௪ |
| அவற்றுள்-ஈரமுங்காலு | ௭௮ |
| அவற்றுள்-ணனகான் | ௨௭ |
| அவற்றுள்-ணிறுத்தசொல் | ௯௨ |
| அவற்றுள்-மெய்யீ | ௯௰ |
| அவற்றுள்-மெல்லெழு | ௮௪ |
| அவற்றுள்-ரகார | ௪௰ |
| அவற்றுள்-ளஃகான் | ௨௭ |
| அவற்றுவழிமருங்கிற் | ௬௯ |
| அவைதாம்-குற்றிய | ௰௯ |
| அவைதாம்-மியற்கை | ௱௰௧ |
| அவைதாம்-மின்னே | ௭௰ |
| அவைதாம்-முன்னப் | ௮௧ |
| அவைதாம்-மெய் | ௯௩ |
| அவையூர்பத்தினு | ௨௱௰௮ |
| அவ்வாறெழுத்தி | ௫௫ |
| அழனெனிறுதி | ௱௭௯ |
| அழனேபுழனே | ௱௰ |
| அளந்தறிகிளவியு | ௨௱௯ |
| அளபிறந்துயிர்த்தலு | ௩௰ |
| அளவாகுமொழிமுத | ௭௧ |
| அளவிற்குநிறையிற்கு | ௱ |
| அளவுநிறையு--குற் | ௨௱௰௮ |
| அளவுநிறையுமாயிய | ௨௱௰௧ |
| அளவுநிறையுமெண்ணு | ௱௮௭ |
| அளவுநிறையும்வேற்று | ௱௯௧ |
| அன்றவருகாலை | ௱௯௭ |
| அன்னவென்னு | ௱௰௮ |
| அன்னென்சாரியை | ௱௰ |
| அஃறிணைவிரவுப் | ௮௯ |
| ஆஈஊஏஐ | ௰௮ |
| ஆஎஒ-என்னு | ௪௯ |
| ஆஏஒஅம். | ௩௰ |
| ஆகாரவிறுதி | ௱௨௪ |
| ஆடூஉமகடூஉ | ௱௪௨ |
| ஆணும்பெண்ணு | ௭௫௪ |
| ஆண்மரக்கிளவி | ௱௫௪ |
| ஆதனும்பூதனும் | ௱௭௩ |
| ஆயிரக்கிளவி | ௨௱௰௫ |
| ஆயிரம்வரினு | ௨௱௫ |
| ஆயிரம்வரினே | ௨௱௰௯ |
| ஆயிரம்வருவ | ௱௮௭ |
| ஆய்தநிலையலும் | ௱௮௧ |
| ஆரும்வெதிருஞ் | ௱௭௮ |
| ஆவயின்வல் | ௱௫௩ |
| ஆவுமாவும் | ௱௨௫ |
| ஆவோடல்லது | ௪௯ |
| ஆறன்மருங் | ௨௱௰௯ |
| ஆறனுருபினகர | ௯௮ |
| ஆறனுருபினு | ௯௯ |
| ஆறென்கிளவி | ௨௱௰௩ |
| ஆவினகரமு | ௭௨ |
| ஆனொற்றகர | ௱௨௩ |
| ஆன்முன்வரூஉ | ௱௨௯ |
| இஈஎஏஐ | ௫௪ |
| இக்கின்னிகர | ௭௩ |
| இகரயகர | ௪௪ |
| இகரவிறுதிப் | ௱௩௰ |
| இடர்வரை | ௱௩௫ |
| இடைநிலைரகர | ௨௱௭ |
| இடைப்படிற் | ௩௩ |
| இடைபெழுத் | ௨௫ |
| இடையொற்றுத் | ௱௯௭ |
| இதழியைந்து | ௫௯ |
| இயற்பெயர் | ௱௭௩ |
| இரண்டுமுத | ௨௨௧ |
| இராவென் | ௱௨௯ |
| இருதிசை | ௨௱௪ |
| இருளென்கி | ௱௯௰ |
| இலமென்கி | ௱௫௯ |
| இல்லமரப் | ௱௫௮ |
| இல்லென்கிளவி | ௱௮௪ |
| இலவொடுதெவப் | ௱௫௰ |
| இருஅற்றேற்ற | ௱௭௪ |
| இன்னிடைவரூஉ | ௱௭ |
| இனியணி | ௱௩௰ |
| இன்னென. | ௭௫ |
| இன்றியென்று | ௱௩௰ |
| ஈகாரவிறுதி | ௱௩௫ |
| ஈமுங்கமு | ௱௪௯ |
| ஈறு முத்தமொழியுமு | ௱௯௯ |
| ஈரெழுத்தமொழியும் | ௱௯௮ |
| ஈரெழுத்தொரு | ௱௯௩ |
| ஈறியன்மருங்கினி | ௱ |
| ஈறியன்மருங்கிலு | ௩௪ |
| உஊஒஓவென்னு | ௪௯ |
| உஊஒஔவென | ௫௪ |
| உவைதாநவொடு | ௪௯ |
| உகரமொடுபுணரும் | ௯௭ |
| உகரவிறுதி | ௱௩௯ |
| உச்சகரமிரு | ௪௩ |
| உச்சகாரமொடு | ௫௬ |
| உட்பெறுபுள்ளி | ௨௨ |
| உணரக்கூறிய | ௱௯௬ |
| உண்டென்கிளவி | ௨௱௩ |
| உதிமரக்கிளவி | ௱௩௩ |

# தொல்காப்பியச்சூத்திரவகராதி.


| சூத்திரம் | பக்கம் |
|---|---|
| உத்திமுரலா | ௫௧ |
| உப்பகாரமொடு | ௫௨ |
| உப்பகாரமொன்றென | ௪௯ |
| உம்மையெஞ்சிய | ௱௨௪ |
| உயர்திணைப்பெயரே | ௯௬ |
| உயர்திணையாயி | ௱௮ |
| உயர்திணையாயினு | ௱௯௪ |
| உயிரும்புள்ளியுமிறுதி | ௨௨௪ |
| உயருமபுள்ளியுமிறுதியா | ௯௭ |
| உயிர்முன்வரினு | ௱௰௭ |
| உயிர்முன்வரினு | ௱௮௮ |
| உயிரிறுசொன்முன் | ௯௧ |
| உயிரீறுகியமுன்வரின் | ௮௯. |
| உயிரீறுயவுயர்திணைப் | ௮௭ |
| உயிர்மெய்யல்லன | ௪௫ |
| உயிர்மெய்யீறு | ௯௫ |
| உயிர்ஔவெஞ்சிய | ௪௭ |
| உரிவருகாலை | ௱௩௨ |
| உருபியலிலையு | ௱௫௰ |
| உருவினுமிசையினு | ௩௪ |
| உளப்பெயர்க்கிளவி | ௱௨௰ |
| ஊகாரவிறுதி | ௱௪௰ |
| ஊவெனொருபெய | ௱௪௧ |
| எ-எனவருமுயிர் | ௪௮ |
| எஒஎனுமுயிர | ௪௮ |
| எகரஒகரத் | ௨௫ |
| எகரவொகரம் | ௱௪௨ |
| எனன்மரமாயி | ௱௯௬ |
| எஞ்சியவெல்லா | ௫௰ |
| எட்டனொற்றே. | ௨௱௮ |
| எண்ணினிறுதி | ௱௰௨ |
| எண்ணுப்பெயர்க் | ௱௬௬ |
| எப்பெயர்முன்னரும் | ௭௫ |
| எருவுஞ்செருவு | ௱௩௮ |
| எல்லாமென்னு | ௱௮ |
| எல்லாமொழிக்கு | ௭௬ |
| எல்லாருமெனனும் | ௱௬ |
| எல்லாவெழுத்தும் | ௫௪ |
| எழுத்தெனப்படுப | ௰௧ |
| எழுத்தோரன்ன | ௮௰ |
| ஏகாரவிறுதி | ௱௪௫ |
| ஏயெனிறுதி | ௱௪௪ |
| ஏழனுருபிற்குத் | ௱௰௩ |
| ஏழென்கிளவி | ௱௮௯ |
| ஏனவைபுணரி | ௱௮௫ |
| ஏனவைவரினே | ௱௩௭ |
| ஏனைப்புளிப் | ௱௩௩ |
| ஏனைமுன்வரினே | ௨௱௧ |
| ஏனையெகினே | ௱௯௯ |
| ஏனைவகரந் | ௱௮௫ |
| ஏனைவகரமின் | ௱௭ |
| ஐஒடுகுஙின் | ௯௭ |
| ஐஔவெனனு | ௩௯ |
| ஐகாரஔகாரங் | ௭௮ |
| ஐகாரவிறுதிப் | ௱௪௫ |
| ஐந்தனொற்றே ம | ௨௱௮ |
| ஐந்தனொற்றே மு | ௨௱௰௨ |
| ஐந்தனொற்றேமெல் | ௨௱௰ |
| ஐந்தனொற்றேய | ௨௱௰௯ |
| ஐந்தன்முன்றதம | ௨௱௰௧ |
| ஐயம்பலவென | ௱௮௮ |
| ஐயின்முன்னரும் | ௭௩ |
| ஒடுமரக்கிளவி | ௱௩௬ |
| ஒவ்வுமற்றே | ௪௮ |
| ஒழித்ததனிலையு | ௱௪௬ |
| ஒற்றிடையினமிகா | ௱௬௯ |
| ஒற்றுநிலை | ௱௬௬ |
| ஒற்றுமிகுதகர | ௱௭௨ |
| ஒன்றுமுதலாகப் | ௱௰௨ |
| ஒன்றுமுதலாகவெ | ௨௱௫ |
| ஒன்றுமுதலாகிய | ௨௱௰௬ |
| ஒன்றுமுதலொன்பா | ௨௱௯ |
| ஒன்பானிறுதிமர | ௨௱௰௯ |
| ஒன்பானொடுமொழி | ௨௱௰௩ |
| ஒன்பானொகரமிசைத் | ௨௱௮ |
| ஒன்பான்முதனிலை | ௨௱௰௪ |
| ஓகாரவிறுதிஏகார | ௱௪௬ |
| ஓகாரவிறுதிக்கொன் | ௱௯ |
| ஓரளபாகுமிடனு | ௪௪ |
| ஓரெழுத்தொரு | ௩௭ |
| ஔகாரவிறுதிப் | ௱௫௰ |
| ஔகாரவிறுவாய்ப் | ௨௰ |
| ஔவெனவருஉ | ௮௭ |
| ககாரஙகார | ௫௫ |
| கசதபமுதலிய | ௮௪ |
| கசதபமுதன்மொழி | ௨௱௰ |
| கண்ணிமைநொடி | ௨௰ |
| கதநபமவெனும் | ௪௫ |
| கவவோடியையி | ௪௮ |
| காரமுங்கரமு | ௭௮ |
| கிளந்தவல்ல | ௨௨௯ |
| கிளைப்பெய-கொ | ௱௫௫ |
| கிளைப்பெய-கிளை | ௱௭௰ |
| கீழென்கிளவி | ௱௮௮ |
| குமிழென்கிளவி | ௱௮௯ |
| குயினென்கிளவி | ௱௯௬ |
| குறியதனிறுதிச் | ௱௨௬ |
| குறியதன்முன்ன | ௩௪ |
| குறியதன்முன்னரு | ௱௨௯ |
| குறுமையுநெடுமையு | ௪௰ |
| குறையென்கிளவி | ௬௮ |
| குற்றியலிகர | ௩௨ |
| குற்றியலுகரக்கின்னே | ௬௬ |
| குற்றியலுகரத்திறுதி | ௱௰௧ |
| குற்றியலுகரமுறை | ௪௭ |
| குற்றியலுகரமும | ௯௰ |
| குற்றெழுத்திம்பரு | ௱௪௩ |
| குற்றெழுத்தைச்சா | ௩௯ |
| குன்றிசைமொழி | ௩௫ |
| கொடிமுன்வரினே | ௱௪௭ |
| ஙஞணநமன | ௨௭ |
| சகரக்கிளவியு | ௪௫ |
| சகாரஞகார | ௫௫ |
| சாடென்கிளவி | ௱௭௯ |
| சார்ந்துவரினல்லது | ௫௭ |
| சாவவென்னுஞ் | ௱௰௭ |
| சிறப்பொடு | ௱௭௪ |
| சுட்டினியற்கை | ௱௩௧ |
| சுட்டின்முன்னரு | ௱௩௯ |
| சுட்டின்முன்னர் | ௱௰௯ |
| சுட்டுச்சினைநீடிய | ௨௱௨ |
| சுட்டுமுதலாகியவகர | ௱௮௪ |
| சுட்டுமுதலாகியவிகர | ௬௪ |
| சுட்டுமுதலாகியவையெ | ௱௪ |
| சுட்டுமுதலிறுதியியல் | ௱௩௭ |
| சுட்டுமுதலிறுதியுருபியா | ௱௩௬ |
| சுட்டுமுதலிறுதியுருபியா | ௱௪௫ |
| சுட்டுமுதலுகர | ௱௪ |
| சுட்டுமுதல்வகர | ௱௯ |
| சுட்டுமுதலுயினு | ௱௯௬ |
| செய்யாவென்னு | ௱௨௪ |
| செய்யுண்மருங்கின் | ௱௪௮ |
| செய்யுளிறுதிப் | ௪௨ |
| சேவென்மரப் | ௱௪௪ |
| ஞகாரையொற்றிய | ௱௫௧ |

| சூத்திரம் | பக்கம் | சூத்திரம் | பக்கம் | சூத்திரம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| ஞணநமனயரல | ௫௧ | நீயெனொருபெயருரு | ௱௩௯ | பெற்றமாயின் | ௱௪௫ |
| ஞநமயவவெனுமுத | ௮௨ | நீயெனொருபெயர் | ௱௫ | பொன்னென்கிளவி | ௱௭௬ |
| ஞநமவவியையினு | ௱௫௨ | நீயென்பெயருமி | ௱௩௫ | மகப்பெயர்க்கிளவி | ௱௨௩ |
| ஞநமவவென்னும் | ௨௮ | நும்மெனிறுதியி | ௱௭ | மகரத்தொடர்மொழி | ௫௨ |
| ஞநவென்புள்ளிக் | ௱௬ | நும்மெனிறுதியு | ௯௭ | மகரவிறுதிவே | ௱௫௬ |
| டகாரணகார | ௫௫ | நும்மெனொருபெயர் | ௱௯௫ | மகன்வினைகிளப்பின் | ௱௭௭ |
| டறலளவென்னும் | ௨௬ | நுனிநாவணரி | ௫௬ | மக்களென்னும் | ௱௯௧ |
| ணகாரவிறுதி | ௱௫௩ | நூறுபிரமுன் | ௨௱௰௭ | மரப்பெயர்-கம் | ௱௯௮ |
| ணனவென்புள்ளி | ௮௬ | நூறுமுன்வரினும் | ௨௱௰௩ | மரப்பெயர்-மெல் | ௱௨௨ |
| ணனவென்புள்ளிமுன் | ௮௪ | நூறூர்ந்துவருஉம் | ௱௮௭ | மருவின்றொகுதி | ௬௪ |
| தகரம்வருவழி | ௱௮௰ | நூறென்கிளவி | ௨௱௰௭ | மழையெனகிளவி | ௱௪௮ |
| தத்தந்திரிபே | ௫௪ | நெடியதன்-பியல்பா | ௱௮௧ | மனனுஞ்சினனு | ௱௬௮ |
| தம்மியல்கிளப்பி | ௩௯ | நெடியதன்-பியல்பு | ௱௮௰ | மஃகான்புள்ளி-னத் | ௱௭ |
| தமிழென்கிளவி | ௱௮௬ | நெடியதன்முன்னர் | ௯௫ | மஃகான்புள்ளி-வய் | ௨௮ |
| தாநாமென்னு | ௱௭ | நெட்டெழுத்திம்பரு | ௩௩ | மாமரக்கிளவியு | ௱௨௮ |
| தாவென்கிளவி | ௱௭௭ | நெட்டெழுத்திம்பரொ | ௱௰௧ | மாறகோளெ-மென் | ௱௪௩ |
| தாழென்கிளவி | ௱௮௫ | நெட்டெழுத்தேழே | ௩௬ | மாறகோளெ-மைய | ௱௪௯ |
| தானும்பேனுங் | ௱௭௫ | நெல்லுஞ்செல்லுங் | ௱௮௰ | மின்னும் | ௱௭௨ |
| தான்யானெனும் | ௱௭௫ | படர்க்கைப்பெயரு | ௱௯௧ | மீனென்கிளவி | ௱௭௰ |
| தான்யானென்னு | ௱௰ | பதக்குமுன்வரினே | ௱௩௧ | முதலாவெனதம் | ௪௬ |
| திங்கண்முன்வரி | ௱௩௫ | பத்தனொற்றுக்கெட | ௨௱௫ | முதலீரெண்ணினொ | ௨௱௭ |
| திங்களுநாளு | ௱௪௭ | பத்தென்கிளவி | ௱௮௭ | முதலீரெண்ணின | ௨௱௰௨ |
| திரிபுவேறுகிளப்பி | ௨௱௪ | பலரறிசொன்முன் | ௱௧ | முதனிலைநீடினு | ௨௱௰௫ |
| தெற்றவெகரமுஞ் | ௱௪௩ | பலவற்றிறுதிநீடு | ௱௨௧ | முதனிலையெண்ணா | ௨௱௨௮ |
| தேனென்கிளவி | ௱௭௰ | பலவற்றிறுதியுரு | ௱௨௩ | முனென்றே | ௱௫௬ |
| தொடாவிறுதி | ௱௨௧ | பல்லவைநுதலிய | ௱௩ | முற்றியலுகர | ௪௭ |
| தொழிற்பெய | ௱௫௫ | பவ்வீழியைய | ௫௬ | முன்னுயிர் | ௨௱ |
| தொழிம்பெய | ௱௯௬ | பனியெனவருஉங் | ௱௩௨ | முன்னென்கிளவி | ௱௭௬ |
| தொழிம்பெய | ௱௮௩ | பனையின்முன்னர் | ௱௪௬ | மூவளபிசைத்தல் | ௰௮ |
| தொழிற்பெய | ௱௧௰ | பனையுமரையு | ௱௪௬ | மூன்றனொற்றேந | ௨௱௰௪ |
| நகரவிறுதி | ௱௫௨ | பனையெனவளவுங் | ௯௯ | மூன்றனொற்றேப | ௨௱௭ |
| நமவவென்னு | ௨௱௰ | பன்னிருயிரும் | ௪௪ | மூன்றனொற்றேவகர | ௨௱௰௧ |
| நாட்பெயர்க்கிளவி | ௱௯௭ | பாழென்கிளவி | ௱௮௬ | மூன்றனொற்றேவகர | ௨௱௰௫ |
| நாண்முற்றோன்றந் | ௱௩௪ | பீரென்கிளவி | ௱௭௯ | மூன்றனொற்றேவந் | ௨௱௯ |
| நாயும்பலகையும் | ௱௮௨ | புணரியனிலையிடை | ௩௨ | மூன்றன்முதனிலை | ௨௱௰௨ |
| நாவிளிம்புவீங்கி | ௫௬ | புளிமரக்கிளவிக் | ௱௩௩ | மூன்றதன்பிட்ட | ௫௯ |
| நான்கனொற்றே | ௨௱௰௧ | புள்ளியில்லா | ௨௩ | மூன்றுநான்கு | ௨௱௰௨ |
| நான்கனொற்றே | ௨௱௰௫ | புள்ளியிறுதியு-சொல் | ௱௰௩ | மூன்றுமாறு | ௨௱௭ |
| நான்கனொற்றேறகர | ௨௱௭ | புள்ளியிறுதியு.வல் | ௯௰ | மெய்ந்நிலைசுட்டி | ௨௩ |
| நான்குமைந்து | ௨௱௰௪ | புள்ளியீற்றுமுன் | ௭௯ | மெய்யினவபே | ௨௨ |
| நிலாவென்கிளவி | ௱௨௭ | புள்ளும்வள்ளுந் | ௱௯௰ | மெய்யினியக்கம் | ௯௮ |
| நிறத்தசொல்லுங் | ௯௪ | பூல்வேலென்று | ௱௮௩ | மெய்யினியற்கை | ௨௩ |
| நிறையுமளவும் | ௨௱௬ | பூவெனொருபெய | ௱௪௪ | மெய்யினவழிய | ௨௪ |
| நீடவருதல் | ௱௰௭ | பெண்டென்கிளவி | ௨௱ | மெய்யுயிர் | ௭௯ |
| நீட்டம்வேண்டி | ௰௮ | பெயருந்தொழிலும் | ௭௫ | மெய்யோடியையி | ௨௧ |
| | | | | மெல்லெழுத்-ற | ௨௰௫ |

| சூத்திரம் | பக்கம் | சூத்திரம் | பக்கம் | சூத்திரம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| மெல்லெழுந்தாற | ௫௭ | ரகாரவிறுதி | ௱௭௮ | வெயிலென்கிளவி | ௱௮௪ |
| மெல்லெழுத்தி-ணகர | ௱௮௮ | லகாரவிறுதி | ௱௭௯ | வெரிநென்னிறுதி | ௱௫௩ |
| மெல்லெழுத்தி-னகர | ௱௭௯ | லனவெனவருஉ-முன் | ௮௬ | வேற்றுமை-குறி | ௬௫ |
| மெல்லெழுத்தி-னவ | ௱௮௪ | லனவெனவருஉ-பிறு | ௨௨ | வேற்றுமை-வழி | ௬௮ |
| மெல்லெழுத்தி-னிற | ௱௭௧ | வகரக்கிளவி | ௫௨ | வேற்றுமை-வல் | ௮௫ |
| மெல்லெழுத்துமிகி | ௱௬௪ | வகரமிசையு | ௱௬௭ | வேற்றுமை-யகீ | ௬௩ |
| மெல்லெழுத்துமிகி | ௱௭௧ | வடவேங்கடந்தென் | ௧ | வேற்றுமை | ௱௨௨ |
| மெல்லெழுத்துமிகு | ௬௧ | வண்டும்பெண்டும் | ௱௯௯ | வேற்றுமை | ௱௨௬ |
| மெல்லெழுத்துற-செல் | ௱௫௭ | வரன்முறைமூன் | ௭௮ | வேற்றுமை | ௱௩௬ |
| மெல்லெழுத்துற | ௱௭௭ | வல்லெழுந்தென் | ௨௫ | வேற்றுமை | ௱௩௮ |
| மெல்லொற்று | ௱௯௮ | வல்லெழுத்துமு | ௬௭ | வேற்றுமை | ௱௪௰ |
| மென்மையுமிடை | ௭௪ | வல்லெழுத்திய | ௱௨௨ | வேற்றுமை | ௱௪௬ |
| மொழிப்படுத் | ௪௨ | வல்லெழுத்துமி | ௱௨௭ | வேற்றுமை-யொகர | ௱௫௰ |
| மொழிமுத | ௮௫ | வல்லெழுத்து-யொல் | ௱௩௩ | வேற்றுமைக்குகெட | ௱௫௨ |
| யகரம்வருவழி | ௱௯௫ | வல்லெனகிளவி | ௱௮௨ | வேற்றுமை-யெண் | ௱௫௬ |
| யகரவிறுதி | ௱௭௭ | வல்லொற்று-வரு | ௱௯௫ | வேற்றுமை யிரண் | ௱௬௬ |
| யாழவென்னும் | ௨௮ | வல்லொற்று-மிகு | ௨௱௧ | வேற்றுமை யெகி | ௱௭௩ |
| யாழவென்றமு | ௩௯ | வளியெனவருஉம் | ௱௩௩ | வேற்றுமை குற | ௱௭௫ |
| யவமுன் | ௱௰௭ | வன்றொடர்மொழியு | ௱௯௭ | வேற்றுமை யாய் | ௱௮௪ |
| யாதெனிறுதி-மன் | ௱௰௩ | வஃகான் | ௭௬ | ழகாரவிறுதி | ௱௮௫ |
| யாதெனிறுதி-முரு | ௨௱ | வாழியவென்னு | ௱௨௰ | ழகரவுகர | ௱௩௧ |
| யாமரக்கிளவியும் | ௱௨௭ | விசைமரக்கிளவி | ௱௪௬ | ளகாரவிறுதி | ௱௮௮ |
| யாவினுமொழியே | ௨௱௨ | வின்னொன | ௱௫௪ | னகாரவிறுதி | ௱௬௮ |
| யாவெனவினுவி | ௱௫ | வினையெஞ்சுகிளவிக் | ௱௪௰ | னகாரவிறுவாய்ப் | ௨௧ |
| யாவென்வினவு | ௱௪ | வினையெஞ்சுகிளவியு | ௱௰௬ | னகாரைமுன்னர் | ௪௨ |
| | | | | னஃகான் | ௭௨ |


தொல்காப்பியச்சூத்திரவகராதிமுற்றிற்று.


| பக்கம் | இயலகராதி. | சூத்திரம் |
|---|---|---|
| ௱௰௫ | உயிர்மயங்கியல் | ௯௩ |
| ௱௩ | உருபியல். | ௩௰ |
| ௱௯௩ | குற்றியலுகரப்புணரியல் | ௭௮ |
| ௮௧ | தொகைமரபு | ௩௰ |
| ௰௩ | நூன்மரபு | ௩௩ |
| ௫௩ | பிறப்பியல் | ௨௰ |
| ௫௯ | புணரியல் | ௪௰ |
| ௱௫௧ | புள்ளிமயங்கியல் | ௱௰ |
| ௩௨ | மொழிமரபு | ௪௯ |


இயலகராதிமுற்றிறு.

ஆக இயல் ௯ க்கு ச்சூத்திரம் ௪௱௮௰௩

சிவமயம்.

கணபதி துணை.

# தொல்காப்பியம்,

## சிறப்புப்பாயிரம்.

வடவேங்கடந்தென்குமரி; யாயிடைத்; தமிழ்கூறுநல்லுலகத்து; வழக்குஞ்செய்யுளுமாயிருமுதலி;னெழுத்துஞ்சொல்லும்பொருளுநாடிச், செந்தமிழியற்கைசிவணியநிலத்தொடு,முந்துநூல்கண்டுமுறைப்படவெண்ணிப், புலந்தொகுத்தோனேபோக்கறுபனுவ, னிலந்தருதிருவிற்பாண்டியனவையத்,தறங்கரைநாவினான்மறைமுற்றிய,வதங்கோட்டாசாற்கரிறபத்தெரிந்து,மயங்காமரபினெழுத்துமுறைகாட்டி, மல்குநீர்வரைப்பினைந்திரநிறைந்த, தொல்காப்பியனெனத்தன்பெயர்தோற்றிப், பல்புகழ்நிறுத்தபடிமையோனே. (என்பது- பாயிரம்.)

எந்நூலுரைப்பினுமந்நூற்குப்பாயிரமுரைத்துரைக்கவென்பதிலக்கணம்.

என்னை! ஆயிரமுகத்தானகன்றதாயினும்,பாயிரமில்லதுபனுவலன்றே. என்றலின்) பாயிரமென்றதுபுறவுரையை. நூல்கேட்கின்றான்புறவுரைகேட்கிற் கொழுச்சென்றவழித் துன்னூசியினிதுசெல்லுமாறுபோல வந்நூலினிதுவிளங்குதலிற்புறவுரைகேட்டல்வேண்டும். என்னை! பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூலினிதுவிளங்கும். என்றலின்)

அப்பாயிரந்தான் - தலையமைந்தயானைக்குவினையமைந்தபாகன்போலவும் அளப்பரிய வாகாயத்திற்குவிளக்கமாகியதிங்களுஞாயிறும்போலவு மந்நூற்கின்றியமையாச்சிறப்பிற்றாயிருத்தலினதுகேளாக்கார்க்குன்றுமுட்டியகுரீஇப்போலவுங் குறிச்சிபுக்கமான்போலவு மாணாக்கனிடர்ப்படுமென்றுணர்க. அப்பாயிரம் - பொதுவுஞ்சிறப்புமெனவிருவகைத்து. அவற்றுட்பொதுப்பாயிரமெல்லாநூன்முகத்துமுரைக்கப்படும். அதுதானான்குவகைத்து. *

ஈவோன்றன்மையீதலியற்கை, கொள்வோன்றன்மைகோடன்மரபென, வீரிரண்டென்பபொதுவின்றொகையே. என்னுமிதனானறிக. *

ஈவோர்- கற்கப்படுவோருங்கற்கப்படாதோருமெனவிருவகையர். அவருட் கற்கப்படுவோர் நான்குதிறத்தார். *

மலைநிலம்பூவேதுலாக்கோலென்றின்ன, ருலைவிலுணர்வுடையோர். *

என்னுமிதனுள் மலையே; அளக்கலாகாப்பெருமையுமருமையு, மருங்கலமுடைமையு மேறற்கருமையும், பொருந்தக்கூறுப பொச்சாப்பின்றி, நிலத்தினியல்பேநிணைக்குங்காலைப், பொறையுடைமையொடுசெய்பாங்கமைந்தபின், விளைதல்வண்மையும்போய்ச்சார்ந்தோரை, யிடுதலுமெடுத்தலுமின்னணமாக, வியையக்கூறுபவியல்புணர்ந்தோரே. *

பூவினதியல்பேபொருந்தக்கூறின், மங்கலமாதலு நாற்றமுடைமையுங், காலத்தின்மலர்தலும்வண்டிற்குநெகிழ்தலுங், கண்டோருவத்தலும்விழையப்படுதலு, முவமத்தியல்பினுணாக்காட்டுப. *

துலாக்கோலியல்பேதூக்குங்காலை, மிகினுங்குறையினுநில்லாதாகலு, மையந்தீர்த்தலுநடுவுநிலைமையோ, டெய்தக்கூறுபவியல்புணர்ந்தோரே. *

எனநான்குங்கண்டுகொள்க. இனிக்கற்கப்படாதோருநான்குதிறத்தார். *

கழற்பெய்குடமேமடற்பனைமுடத்தெங்கு, குண்டிகைப்பருத்தியோடிவையெனமொழிப. *

இதனுட்கழற்பெய்குடமாவது - கொள்வோனுணர்வுசிறிதாயினுந்தான்கற்றதெல்லாமொருங்குரைத்தல். மடற்பனையென்பது- பிறராற்கிட்டுதற்கரிதாயினிதாகியபயன்களைக்கொண்டிருத்தல். முடத்தெங்கென்பது- ஒருவர்நீர்வார்க்கப்பிறர்க்குப்பயன்படுவதுபோல் ஒருவர்வழிபடப்பிறர்க்குரைத்தல். குண்டிகைப்பருத்தியென்பது- சொரியினும்வீழாதுசிறிதுசிறிதாகவாங்கக்கொடுக்குமதுபோலக் கொள்வோனுணர்வுபெரிதாயினுஞ்சிறிதுசிறிதாகக்கூறுதல். *

இனி ஈதலியல்பேயியல்புறக்கிளப்பிற், பொழிப்பேயகலநுட்பமெச்சமெனப், பழிப்பில்பல்லுரைபயின்றநாவினன், புகழ்ந்தமதியிற்பொருந்துமோனாயிற், றிகழ்ந்தவறிவினன்றெய்வம்வாழ்த்திக், கொள்வோனுணர்வகையறிந்தவன்கொள்வரக், கொடுத்தன்மரபெனக்கூறினர்புலவர். இதனானறிக.

இனிக்கொள்வோருங் - கற்பிக்கப்படுவோருங்கற்பிக்கப்படாதோருமெனவிருவகையர். அவருட்கற்பிக்கப்படுவோரறுவகையர். *

அவர்தாம் - தன்மகனாசான்மகனேமன்மகன், பொருணனிகொடுப்போன்வழிபடுவோனே, யுரைகோளாளனோடிவரென மொழிப. இதனானறிக. *

இனியிவர்தன்மை- அன்னங்கிளியேநன்னிறநெய்யரி, யானையானேறென்றிவைபோலக், கூறிக்கொள்பகுணமாண்டோரே. இதனானறிக. *
இனிக்கற்பிக்கப்படாதோரொண்வகையர். *

மடிமானிபொச்சாப்பன்காமுகன்கள்வ,னடுநோய்ப்பிணியாளனுருச்சினத்தன், றடுமாறுநெஞ்சத்தவனுள்ளிட்டெண்மர்,நெடுநூலைக்கற்கலாதார். *

எனவிவர். இவர்தன்மை - குரங்கெறிவிளங்காயெருமையாடே, தோணியென்றாங்கிவையெனமொழிப. இதனானறிக. இவருட்களங்கடியப்பட்டார் -

மொழிவதுணராதார்முன்னிருந்துசாய்வார், படிறுபலவுரைப்பார்பல்கானகுவார், திரிதருநெஞ்சத்தார்தீயவையோர்ப்பார், கடியப்பட்டாரவையின்கண். இனிக்கோடன்மரபு *

கோடன்மரபுகூறுங்காலைப், பொழுதொடுசென்றுவழிபடன்முனியான், முன்னும்பின்னுமிரவினும்பகலினு, மகலானாகியன்பொடுபுணர்ந்தாங், காசறவுணர்ந்தோன்வாவெனவந்தாங், கிருவெனவிருந்து * சொல்லெனச்சொல்லிப், போவெனப்போகிநெஞ்சுகளனாகச்,செவிவாயாகக்கேட்டவைகேட்டவை, வல்லனாகிப்; போற்றிக்கோடலதுவதன்பண்பே. இதனானறிக. *

எத்திறமாசானுவக்குமத்திற, மறத்திற்றிரியாப்படர்ச்சிவழிபாடே. *

செவ்வன்றெரிகிற்பான்மெய்ந்நோக்கிக்காண்கிற்பான்,பல்லுரையுங்கேட்பான்மிகப்பெரிதுங்காதலான்,றெய்வத்தைப்போலமதிப்பான்றிரிபில்லா,னிவ்வாறுமாண்புமுடையாற்குரைப்பவே, செவ்விதினூலைத்தெரிந்து. *

வழக்கினிலக்கணமிழுக்கின்றறிதல், பாடம்போற்றல்கேட்டவைநினைத்த, லாசாற்சார்ந்தவையமைவரக்கேட்ட, லம்மாண்புடையோர் தம்மொடுபயிறல், வினாதல்வினாயவைவிடுத்தலென்றிவை, கடனாக்கொளினேமடநனியிகக்கும். *

அனையநல்லோன்கேட்குவனாயின்,வினையினுழப்பொடுபயன்றலைப்படாஅன்
அனையனல்லோனம்மரபில்லோன், கேட்குவனாயிற்கொள்வோனல்லன்.
இவ்வாற்றானுணர்க. இம்மாணாக்கன்முற்றவுணர்ந்தானாமாறு - *
ஒருகுறிகேட்போனிருகாற்கேட்பிற், பெருகநூலிற்பிழைபாடிலனே. *

---

*இருந்தென்பதன்பின் - எடவிழெனவவிழ்த்து-எனப்பாடமும்உண்டு

முக்காற்கேட்பின், முறையறிந்துரைக்கும். *

ஆசானுரைத்தவையமைவரக்கொளினுங், காற்கூறல்லது பற்றலவாகும். *
அவ்வினையாளரொடுபயில்வகையொருபாற், செவ்விதினுரைப்பவவ்விருபாலு, மையமறுபுலமைமாண்புநனியுடைத்தே. *

பிறர்க்குரையிடத்தே நூற்கலப்பாகுந், திறப்படவுணருந்தெளிவினோர்க்கே.

இதனானறிக. பொதுப்பாயிரமுற்றிற்று. இனிச்சிறப்புப்பாயிரமாவது - தன்னானுரைக்கப்படுநூற்கின்றியமையாதது. அதுபதினொருவகையாம்.

ஆக்கியோன்பெயரேவழியேயெல்லை, நூற்பெயர்யாப்பேநுதலியபொருளே, கேட்போர்பயனோடாயெண்பொருளும், வாய்ப்பக்காட்டல்பாயிரத்தியல்பே. *

காலங்களனேகாரணமென்றிம், மூவகையேற்றிமொழிநருமுளரே. *

இப்பதினொன்றுமிப்பாயிரத்துள்ளேபெறப்பட்டன. இனிச்சிறப்புப்பாயிரத்திலக்கணஞ்செப்புமாறு -

பாயிரத்திலக்கணம்பகருங்காலை, நூனுதல்பொருளைத்தன்னகத்தடக்கி, யாசிரியமானும்வெண்பாவானு, மருவியவகையானுவரல்வேண்டும். *

இதனானறிக. நூல்செய்தான்பாயிரஞ்செய்யிற்றன்னைப்புகழ்ந்தானாம். *
தோன்றாதோற்றித்துறைபலமுடிப்பினுந், தான்றற்புகழ்தறகுதியன்றே. என்றலின்.) பாயிரஞ்செய்வார்தன்னாசிரியருந் தன்னோடொருங்குகற்றவொருசாலைமாணாக்கருந்தன்மாணாக்கருமெனவிவர். அவருள் இந்நூற்பாயிரஞ்செய்தார் தமக்கொருசாலைமாணாக்கராகியபனம்பாரனார். *

வடவேங்கடந்தென்குமரியாயிடை-(என்பது)வடக்கின்கண்வேங்கடமுந் தெற்கின்கட்குமரியுமாகியவவ்விரண்டெல்லைக்குள்ளிருந்து— தமிழ்கூறுநல்லுலகத்துவழக்குஞ்செய்யுளுமாயிருமுதலின்-(எ-து)தமிழைச்சொல்லுநல்லாசிரியரது வழக்குஞ்செய்யுளுமாகிய வவ்விரண்டையுமடியாகக்கொள்ளுகையினாலே — செந்தமிழியற்கைசிவணியநிலத்தொடுமுந்துநூல்கண்டு- (எ-து) அவர்கூறுஞ்செந்தமிழியல்பாகப்பொருந்தியசெந்தமிழ்நாட்டிற்கியைந்தவழக்கோடேமுன்னையிலக்கணங்களியைந்தபடியைமுற்றக்கண்டு—முறைப்படவெண்ணி-(எ-து) அவ்விலக்கணங்களெல்லாஞ்சில்வாழ்நாட்பல்பிணிச்சிற்றறிவினோர்க்கறியலாகாமையின் யானித்துணைவரையறுத்

துணர்த்துவ லென் றந்நூல்களிற் கிடந்தவாறன்றி யதிகாரவகைமையான் மு
றைப்படச்செய்தலையெண்ணி — எழுத்துஞ்சொல்லும்பொருளுநாடி -
(எ-து) அவ்விலக்கணங்களுளெழுத்தினையுஞ்சொல்லினையும்பொருளினையு
மாராய்ந்து — போக்கறுபனுவல்- (எ-து) பத்துவகைக்குற்றமுந்தீர்
ந்து முப்பத்திரண்டுவகையுத்தியோடுபுணர்ந்தவிந்நூலுள்ளே — மயங்காம
ரபினெழுத்துமுறைகாட்டிப்புலந்தொகுத்தோனே -(எ-து)அம்மூவகையி
லக்கணமுமயங்காமுறைமையாற் செய்கின்றமையினெழுத்திலக்கணத்தைமு
ன்னர்க்காட்டிப்பின்னரேனையிலக்கணங்களையுந்தொகுத்துக்கூறினான் — நில
த்தருதிருவிற்பாண்டியனவையத்து -(எ-து) மாற்றாரது நிலத்தைக்கொள்ளு
ம்போர்த்திருவினையுடையபாண்டியன்மாகீர்த்தியவையின்கண்ணே — அற
ங்கரைநாவினான்மறைமுற்றியவதங்கோட்டாசாற்கரிறபத்தெரிந்து -(எ-து)
அறமேகூறு நாவினையுடைய நான்கு வேதத்தினையு முற்றவறிந்த வதங்கோ
டென்கிறவூரிலாசிரியனுக்குக்குற்றமறவாராய்ந்துகூறி — மல்குநீர்வரைப்பி
னைந்திரநிறைந்ததொல்காப்பியனெனத்தன்பெயர்தோற்றி- (எ-து) கடல்
சூழ்ந்தவுலகின்கண்ணே ஐந்திரவியாகரணத்தை நிறையவறிந்த பழையகாப்
பியக்குடியினுள்ளோனெனத்தன்பெயரைமாயாமைநிறுத்தி — பல்புகழ்நி
றுத்தபடிமையோனே- (எ-து) பலபுகழ்களையுமிவ்வுலகின்கண்ணேமாயா
மைநிறுத்தியதவவேடத்தையுடையோனென்றவாறு:— ❋

இருந்துதமிழைச் சொல்லுமெனக்கொள் ளுகையினாலேபொருந்தியநா
டெனக் கண்டெண்ணியாராய்ந்து தன்னூலுள்ளே தொகுத்தான் அவன்யா
ரெனினவையின்கண்ணேகூறியுலகின்கண்ணேதன்பெயரைநிறுத்திப்புகழை
நிறுத்தினபடிமையோனென்க: இப்பாயிரமுஞ்செய்யுளாதலினிங்ஙனமாட்
டுறுப்புநிகழக்கூறினார்· இதற்கிங்ஙனங்கண்ணழித்தலுரையாசிரியர்கருத்தெ
ன்பதவ்வுரையாலுணர்க· இனிமங்கலமரபிற்காரியங்கள்செய்வார்வடக்குங்கி
ழக்குநோக்கியுஞ்சிந்தித்துநற்கருமங்கள்செய்வாராதலின்மங்கலமாகியவட
திசையைமுற்கூறினார்.இந்நூனின்று நிலவுதல்வேண்டித்) தென்புலத்தார்க்கு
வேண்டுவனசெய்வார்தெற்குமேற்குநோக்கியுங்கருமங்கள்செய்வாராதலிற்
றென்றிசையைப்பிற்கூறினார்·நிலங்கடந்தநெடுமுடியண்ணலைநோக்கியுலகந்
தவஞ்செய்துவீடுபெற்றமலையாதலானும்எல்லாருமறியப்படுதலானும்வேங்க
டத்தையெல்லையாகக்கூறினார்·குமரியுந்தீர்த்தமாகலினெல்லையாக்கூறினார்·

இவ்விரண்டினையுநூலேயேயோதுவார்க்கு நல்வினையுண்டாமென்றுகருதி வற்றையேகூறினார். வடவேங்கடந்தென்குமரியிவையிரண்டுமேகப்பாட்டெல்லையாயின - என்னை! குமரியாற்றின்றெற்கு நாற்பத்தொன்பதுநாடுகடல்கொண்டதாகலின்; கிழக்குமேற்குங்கடலெல்லையாகமுடிதலின் வேறெல்லைகூறாராயினார். வேங்கடமுங்குமரியும்யாண்டையவென்றால்வடவேங்கடந்தென்குமரியெனவேண்டுதலினதனைவிளங்கக்கூறினார். உலகமென்றதுபலபொருளொருசொல்லாகலினீண்டாசிரியரையுணர்த்திற்று; அவரையேயுலகங்கண்ணாகவுடைமையின்.) என்னை! ※

வழக்கெனப்படுவதுயர்ந்தோர்மேற்றேநிகழ்ச்சியவர்கட்டாகலான ※

என மரபியலுட்கூறுதலின்.) அவ்வாசிரியராவார் அகத்தியனாருமார்க்கண்டேயனாருந்தலைச்சங்கத்தாருமுதலியோர். உலகத்துஉலகத்துடையவெனவிரிக்க வழக்காவது சிலசொற்பிறந்த வக்காலத்து இஃதறத்தையுணர்த்திற்று இஃது பொருளையுணர்த்திற்று இஃதின்பத்தையுணர்த்திற்று இஃதுவீட்டையுணர்த்திற்றுஎன்றுணர்விப்பது. செய்யுளாவது பாட்டுரைநூலேயென்னுஞ்செய்யுளியற்சூத்திரத்தாற்கூறியவேழும்அறமுதலியமூன்றுபொருளும்பயப்பநிகழ்வது. முதலினென்றதுமுதலுகையினலே.— (எ-று) எழுத்தென்றதியாதனையெனின் கட்புலனாகாவுருவுங் கட்புலனாகியவடிவுமுடையவாய் வேறுவேறுவகுத்துக்கொண்டுதன்னையேயுணர்த்தியுஞ்சொற்கியைந்துநிற்குமோசையையாம். கடலொலிசங்கொலிமுதலியவோசைகள்பொருளுணர்த்தாமையானுமுற்குவீளையிலதைமுதலியனபொருளுணர்த்தினவேனுமெழுத்தாகாமையானுமவையீண்டுக்கொள்ளாராயினார்; ஈண்டுருவென்றதுமனனுணர்வாய்நிற்குங்கருத்துட்பொருளை. அதுசெறிப்பச்சேறலானுஞ்செறிப்பவருதலானும் இடையெறியப்படுதலானும் இன்பதுன்பத்தையாக்கலானும் உருவுமுருவுங்கூடிப்பிறத்தலானும்உந்திமுதலாகத்தோன்றி யெண்வகைநிலத்துப்பிறந்துகட்புலனாந்தன்மையின்றிச்செவிக்கட்சென்றுறுமூறுடைமையானும் விசும்பிற்பிறந்தியங்குவதோர்தன்மையுடைமையானுங்காற்றின்குணமாயதோருருவாம். வன்மைமென்மையிடைமைகோடலானுமுருவேயாயிற்று; இதனைக்காற்றின்குணமென்றலிவ்வாசிரியர்கருத்து. இதனைவிசும்பின்குணமென்பாருமுளர். இவ்வுருஉருவுருவுருவாகியெனவும் உட்பெறுபுள்ளியுருவாகுமேயெனவும் காட்சிப்பொருட்குஞ்சிறுபான்மைவரும். வடிவாவது கட்புலனா

னியேநிற்கும். அதுவட்டஞ்சதரமுதலியமுப்பத்திரண்டனுளொன்றையுணர்த்தும்-மனத்தானுணருநுண்ணுணர்விலோருமுணர்தற்கெழுத்துக்கட்கு வேறுவேறுவடிவங்காட்டி யெழுதப்பட்டுநடத்தலிற்கட்புலனாகியவுரிவடிவுமுடையவாயின. இதற்குவிதியுட்பெறுபுள்ளியுருவாகும்மே யென்னுஞ்சூத்திரமுதலியனவாம்.— இவ்வாற்றாற்பெரும்பான்மைமெய்க்கேவடிவுகூறினார். உயிர்க்கும் எகரஒகரத்தியற்கையுமற்றே யெனவடிவுசிறுபான்மை கூறினார். இனித்தன்னையுணர்த்துமோசையாவது தன்பிறப்பையுமாத்திரையையுமேயறிவித்தற்றன்னைப்பெறநிகழுமோசை; சொற்கியையுமோசையாவது ஓரெழுத்தொருமொழிமுதலியவாய்வருமோசை. இனிச்சொல்லென்றதியாதனையெனின் எழுத்தினாலாக்கப்பட்டிருதிணைப்பொருட்டன்மையுமொருவனுணர்தற்குநிமித்தமாமோசையை இவ்வுரைக்குப்பொருள்சொல்லதிகாரத்துட்கூறுதும். ஈண்டு- டறலளவென்னுஞ்சூத்திரமுதலியவற்றான்மொழியாகமயங்குகின்றனவுமவ்வாக்கத்தின்கண்டங்குமென்றுணர்க. எழுத்து - சொல்லிற்கவயவமாதலினதனை முற்கூறிய வயவியாகிய சொல்லைப் பிற்கூறினார். இனிப்பொருளென்றதியாதனையெனின்சொற்றொடர்கருவியாகவுணரப்படுமறம் பொருளின்பமுமவற்றது நிலையின்மையுமாகிய வறுவகைப்பொருளுமாம். அவைபொருளதிகாரத்துட்கூறுதும். வீடுகூறாரோவெனின் அகத்தியனருந்தொல்காப்பியனாரும் வீடுபேற்றிற்குநிமித்தங்கூறுதலன்றிவீட்டின்றன்மைதமிழாற்கூறாரென்றுணர்க. *

அது-அந்நிலமருங்கினறமுதலாகிய,மும்முதற்பொருட்குமுரியவென்ப என்பதனானுணர்க. இக்கருத்தானேவள்ளுவநாயனாருமுப்பாலாகக்கூறிமெய்யுணர்தலானிமித்தங்கூறினார். செந்தமிழ்செவ்வியதமிழ். முந்துநூல்- அகத்தியமும் மாபுராணமும் பூதபுராணமும் இசைநுணுக்கமும். அவற்றுட் கூறிய இலக்கணங்களாவன - எழுத்துச்சொற்பொருள் யாப்பும் சந்தமும் வழக்கியலும் ஆகியலும் அமைச்சியலும் பார்ப்பனவியலும் சோதிடமுஞ் சாந்தருவமும் கூத்தும் பிறவுமாம். புலமென்றதிலக்கணங்களை. பனுவலென்றதவ்விலக்கணங்களெல்லா மகப்படச்செய்கின்றதோர்குறி. அவை யிதனுட்கூறுகின்றவுரைச்சூத்திரங்களானுமரபியலானுமுணர்க. பாண்டியன்மாகீர்த்தி யிருபத்துநாலாயிரம்யாண்டுவீற்றிருந்தானாதலினவனும் அவையிலுள்ளோருமறிவுமிக்கிருத்தலினவர்கள்கேட்டிருப்ப அதங்கோட்

டாசிரியர்கூறியகடாவிற்குவிடைகூறினார். அகத்தியனார்அதங்கோட்டாசிரியனைநோக்கி நீர்தொல்காப்பியன்செய்தநூலைக் கேளற்கவென்றுகூறுதலானுந்தொல்காப்பியனாரும் பல்காலுஞ்சென்று யான்செய்தநூலைநீர்கேட்டல்வேண்டுமென்றுகூறுதலானு மிவ்விருவரும்வெகுளாமலிந்நூற்குக்குற்றங்கூறிவிடுவலெனக்கருதியவர்கூறியகடாவிற்கெல்லாம் விடைகூறுதலின்றிறபவென்றார் அவர்கேளல்மினென்றதற்குக்காரணமென்னையெனின் தேவரெல்லாருங்கூடியாஞ்சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசையுயர்ந்ததித்ற்கு அகத்தியனாரேயாண்டிருத்தற்குரியரென்றவரை வேண்டிக்கொள்ளவவருந்தென்றிசைக்கட்போதுகின்றவர்கங்கையாருழைச்சென்று காவிரியாரைவாங்கிக்கொண்டுபின்னர்யமதக்கினியாருழைச்சென்று அவர்மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டுபுலத்தியனாருழைச்சென்று அவருடன்பிறந்தகுமரியார்உலோபாமுத்திரையாரை யவர்கொடுப்ப நீரேற்றிரீஇப்பெயர்ந்து துவாரவதிப்போந்து நிலங்கடந்தநெடுமுடியண்ணல்வழிக்கண்ணரசர்பதினெண்மரையும் பதினெண்கோடிவேளிருள்ளிட்டாரையுமருவாளரையுங்கொண்டுபோந்து காடுகெடுத்துநாடாக்கிப் பொதியிலின்கணிருந் திராவணனைக்கந்தருவத்தாற்பிணித்திராக்கதரை யாண்டியங்காமைவிலக்கித்திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரைநோக்கி நீர்சென்று குமரியாரைக்கொண்டுவருகவெனக்கூறவவருமெம்பெருமாட்டியை யெங்ஙனங்கொண்டுவருவலென்றார்க்குமுன்னாகப்பின்னாகநாற்கோல் நீளமகலநின்று கொண்டுவருகவென்றார்க் கவருமங்ஙனங்கொண்டு வருவழிவையைநீர்கடுகிக் குமரியாரையீர்த்துக்கொண்டு போயவழித்தொல்காப்பியனார் கட்டளையிறந்து சென்றோர்வெதிர்ங்கோலைமுறித்து நீட்டவதுபற்றியேறினார் அதுகுற்றமென்றுஅகத்தியனார்குமரியாரையுந்தொல்காப்பியனாரையுஞ்சுவர்க்கம்புகாப்பீரெனச்சபித்தார் யாங்களொருகுற்றமுஞ்செய்யாதிருக்கவெங்களைச் சபித்தமையானெம்பெருமானுஞ்சுவர்க்கம்புகாப்பீரென வகத்தியனாரையுஞ்சபித்தாரதனானவர்வெகுண்டாராதலினவன்செய்தநூலைக்கேளற்கவென்றார் நான்குகூறுடையாய்மறைந்தபொருளா முடைமையானான்மறையென்றார் அவைதைத்திரியமும்பெளடிகமுந்தல்வாகாரமுஞ் சாமவேதமுமாம் இனி இருக்கும்யசுவும்சாமமும் அதர்வணமுமென்பாருமுளர் அதுபொருந்தாது இவரிந்நூல்செய்தபின்னர் வேதவியாதர் சில்வாழ்நாட்சிற்றறிவினோருணர்தற்குநான்குகூறாகச்

.செய்தாராதலின்) முற்கூறிய நூல்கள்போலவெழுத்திலக்கணமுஞ்சொல்லிலக்
கணமுமயங்கக்கூறாதுவேறோரதிகாரமாகக்கூறினாரென்றற்கெழுத்துமுறை
காட்டியென்றார். வரைப்பின்கண்ணேதோற்றிநிறுத்தவென்க. இந்திரனாற்செ
ய்யப்பட்டதைந்திரமென்றாயிற்று. பல்புகழாவன - ஐந்திரநிறைதலுமகத்தி
யத்தின்பின்னிற்நூல்வழங்கச்செய்தலு மகத்தியனைச் சபித்த பெருந்தன்
மையுமைந்தீநாப்பணிற்றலுநீர்நிலைநிற்றலும்பிறவுமாகியதவத்தான்மிகுதலு
ம்பிறவுமாம். படிமை - தவவேடம். வடவேங்கடந்தென்குமரியென்பது - கட்
டுணாவகைபாவெனன்றொடுபுணர்ந்தசொற்சீரடி. ஆயிடையென்பது - வழிய
சைபுணர்ந்தசொற்சீரடி. தமிழ்கூறுநல்லுலகத்தென்பது - முற்றடியின்றிக்கு
றைவுசீர்த்தாயசொற்சீரடி. இங்ஙனஞ்சொற்சீரடியைமுற்கூறினார். சூத்தி
ரயாப்பிற்கின்னோசைபிறத்தற்கு - பாஅவண்ணஞ்சொற்சீர்த்தாகிநூற்பா
ற்பயிலுமென்றலின்) ஏனையடிகளெல்லாஞ்செந்தூக்கு. வடவேங்கடந்தெ
ன்குமரியெனவேயெல்லையும், எழுத்துஞ்சொல்லும் பொருளுநாடி யென
வேநுதலியபொருளும்பயனும்யாப்பும், முந்துநூல்கண்டெனவேவழியும்,
முறைப்படவெண்ணியெனவேகாரணமும், பாண்டியனவையத்தெனவேகா
லமுங்களனும், அரிறபத்தெரிந்தெனவேகேட்டோரும், தன்பெயர்தோற்றி
யெனவேயாக்கியோன்பெயரும்நூற்பெயரும்பெறப்பட்டன. தொல்காப்
பியமென்பதுமென்றுறுப்படக்கியபிண்டம். பொருள்கூறவேயப்பொருளை
ப்பொதிந்தயாப்பிலக்கணமுமடங்கிற்று. நூறுகாணங்கொணர்ந்தானென்றா
லவைபொதிந்தகூறையுமவையெனவடங்குமாறுபோல) இனியிவ்வாறன்றிப்
பிறவாறு கண்ணழிவுகூறுவாருமுளராலெனின் வேங்கடமுங் குமரியுமெல்
லையாகவுடையநிலத்திடத்து வழங்குந்தமிழ்மொழியினைக்கூறுநன்மக்கள் வ
ழக்குஞ்செய்யுளுமென்றாற் செந்தமிழ்நாட்டைச்சூழ்ந்த கொடுந்தமிழ்நா
டுபன்னிரண்டினும் வழங்குந்தமிழ்மொழியினைக்கூறுவாரை நன்மக்களென்
றொன்று பொருடருதலானுமவர்கூறும் வழக்குஞ்செய்யுளுங்கொண்டெ
ழுத்துஞ் சொல்லும் பொருளு மாராய்தல் பொருந்தாமையானுமவர்கூறு
ம்வழக்குஞ் செய்யுளு மாகிய விருகாரணத் தானு மெழுத் துஞ் சொல்லும்
பொருளுமாராய்ந்தானெனின் அகத்தியர்க்குமாறாகத்தாமு முதனூல் செய்
தானென்னும் பொருடருதலானு மங்ஙனங் கொடுந்தமிழ் கொண் டிலக்கண
ஞ்செய்யக்கருதியவாசிரியர்குறைபாடுடையவற்றிற்குச் செந்தமிழ்வழக்கை

யுமுந்துநூலையுமாராய்ந்து முறைப்படவெண்ணினானெனப்பொருடருதலா
னுமதுபொருளன்மை யுணர்க. இன்னுமுந்துநூல்கண்டு முறைப்படவெண்
ணியென்றதனானேமுதல்வன்வழிநூல்செய்யு மாற்றிற்கிலக்கணங் கூறிற்றில
னேனுமந்நூல்செய்தமுறைமைதானே பின்புவழிநூல்செய்வார்க்கிலக்கண
மாமென்பதுகருதி யிவ்வாசிரியர்செய்யுளியலினுமரபியலினுமந்நூல்செய்யு
மிலக்கணமு மதற்குறையுங் காண்டிகையுங் கூறுமிலக்கணமுங் கூறியவதனை
யேயீண்டுங்கூறினானென்றுணர்க. அவையவ்வோத்துக்களானுணர்க. *

யாற்றொழுக்கேதேரைப்பாய்வே,சியநோக்கேபருந்தின்வீழ்வென், று
வகைநான்கேகிடக்கைமுறையே. *

பொழிப்பேயகலநுட்பமெச்சமெனப், பழிப்பில்சூத்திரம்பன்னான்கே.

அவற்றுள்,

பாடங்கண்ணழிவுதாரணமென்றிவை, நாடித்திரிபிலவாகுதல்பொழிப்பே.

தன்னூன்மருங்கினுட்பிறநூன்மருங்கினுந், துன்னியகடாவின்புறந்தோ
ன்றுவிகற்பம், பன்னியவகலமென்மனார்புலவர். *

ஏதுவினாங்கவைதுடைத்தனுட்பம், *

துடைத்துக்கொள்பொருளையெச்சமென்ப. *

அப்புலமரிறபவறிந்துமுதனூற், பக்கப்போற்றும்பயன்றெரிந்துலகத்,
திட்பமுடையதெளிவரவுடையோ, னப்புலப்படைத்தற்கமையுமென்ப. *

சூத்திரமுரையென்றாயிருதிறத்தினும்; பாற்படத்தோற்றல்படைத்தலென்
ப, ஆற்பயனுணர்ந்தநுண்ணியோரே. இவற்றைவிரித்துரைக்க. *

(சிறப்புப்பாயிரமுற்றிற்று.)

உ

# தொல்காப்பியம்.

# எழுத்ததிகாரம்,

முதலாவது

## நூன்மரபு.

எழுத்தெனப்படுப, வகரமுதனகரவிறுவாய்முப்பஃதென்ப, சார்ந்துவரன்மரபின்மூன்றலங்கடையே. என்பது சூத்திரம். ※

இவ்வதிகாரமென்ன பெயர்த்தோவெனின் எழுத்துணர்த்தினமைகாரணத்தானெழுத்ததிகாரமென்றுபெயராயிற்று. எழுத்தையுணர்த்தியவதிகாரமென விரிக்க. அதிகாரம் - முறைமை. எழுத்துணர்த்துமிடத்தெனைத்துவகையானுணர்த்தினரோவெனின் எட்டுவகையானு மெட்டிறந்தபல்வகையானுமுணர்த்தினார். எட்டுவகையாவன - எழுத்திணைத்தென்றலுமின்னபெயரினவென்றலுமின்னமுறையினவென்றலுமின்னவளவினவென்றலுமின்னபிறப்பினவென்றலுமின்னபுணர்ச்சியினவென்றலுமின்னவடிவினவென்றலுமின்னதன்மையினவென்றலுமாம். இவற்றுட்டன்மையும்வடிவுநமக்குணர்த்தலாகாமையினாசிரியரீண்டுணர்த்திலர். ஏனையவிதனுட்பெறுதும். எழுத்திணைத்தென்றலைத்தொகைவகைவிரியானுணர்க. முப்பத்துமூன்றென்றல்தொகை. உயிர்பன்னிரண்டுமுடம்புபதினெட்டுஞ்சார்பிற்றோற்றமூன்றுமதன்வகை. அளபெடையேழுமுயிர்மெய்யிருநூற்றொருபத்தாறுமவற்றொடுகூட்டியிருநூற்றைம்பத்தாறென்றல்விரி. இனி எழுத்துகளதுபெயருமுறையுந்தொகையுமிச்சூத்திரத்தாற்பெற்றாம். வகை - ஔகாரவிறுவாயென்பதனானும், னகரவிறுவாயென்பதனானும், அவைதாங்குற்றியலிகரங்குற்றியலுகரமென்பதனானும், பெற்றாம். விரி - குன்றிசைமொழிவயினென்பதனானும், புள்ளியில்லாவென்பதனானும், பெற்றாம். அளவு - அவற்றுள்; அ - இ - உ - என்பதனானும், ஆ - ஈ - ஊ - என்பதனானும், மெய்யினளவேயென்பதனானும், அவ்வியனிலையுமென்பதனானும், பெற்றாம். பிறப்பு - பிறப்பியலுட்பெற்றாம். புணர்ச்சி - உயிரிறுசொன்முனென்பதனானும், அவற்றுணிறுத்தசொல்வி

னென்பதனானும், பிறவாற்றானும்பெற்றாம். இனி எட்டிறந்தபல்வகையாவன - எழுத்துக்களதுகுறைவுங்கூட்டமும்பிரிவுமயக்கமுமொழியாக்கமுநிலையுமினமுமொன்றுபலவாதலுந் திரிந்ததன் றிரிபதுவென்றலும் பிறிதென்றலுமதுவும் பிறிதுமென்றலுநிலையிற்றென்றலும் நிலையாதென்றலுநிலையிற்றுநிலையாதென்றலுமின்னோரன்னபலவுமாம். குறைவு - அரையளவுகுறுகல், ஓரளபாகு, மென்பனவற்றாற்பெற்றாம். கூட்டம் - மெய்யோடியையினும், புள்ளியில்லா, என்பனவற்றாற்பெற்றாம். பிரிவு - மெய்யுயிர்நீங்கி னென்பதனாற்பெற்றாம். மயக்கம் - டறலள என்பதுமுதலாகமெய்ந்நிலைசுட்டி னென்பதீறாகக்கிடந்தனவற்றாற்பெற்றாம். மொழியாக்கம் - ஓரெழுத்தொருமொழியென்பதனாற்பெற்றாம். நிலை - பன்னீருயிரும், உயிர்மெய்யல்லன, உயிரௌ, ஞணநமன, என்பனவற்றான்மொழிக்குமுதலாமெழுத்துமீறாமெழுத்தும்பெற்றாம். இனம் - வல்லெழுத்தென்ப, மெல்லெழுத்தென்ப, இடையெழுத்தென்ப, ஔகாரவிறுவாய், னகரவிறுவாய், என்பனவற்றாற்பெற்றாம். இவற்றானேயெழுத்துக்களுருவாதலும்பெற்றாம். இவ்வுருவாகியவோசைக்கிவ்வாசிரியர்வடிவுகூறாமையுணர்க. இனிவரிவடிவுகூறுங்கால்மெய்க்கேபெரும்பான்மையும்வடிவுகூறுமாறுணர்க. ஒன்றுபலவாதல் - எழுத்தோரன்ன, வென்பதனாற்பெற்றாம். திரிந்ததன்றிரிபதுவென்றல் - தகரம்வருவழியென்பதனானும்பிறாண்டும்பெற்றாம். பிறிதென்றல் - மகரவிறுதி, ணகாரவீறு என்பனவற்றாற்பெற்றாம். அதுவும்பிறிதுமென்றல் - ஆறனுருபினகரக்கிளவியென்பதனாற்பெற்றாம். நிலையிற்றென்றல் - நிறுத்தசொல்லினீறாகென்பதனாற்பெற்றாம். நிலையாதென்றல் - நிலைமொழியதீற்றுக்கண்ணின்றும்வருமொழியதுமுதற்கண்ணும்புணர்ச்சிதம்முளிலவாதல். அதுமருவின்றொகுதியென்பதனாற்பெற்றாம். நிலையிற்றுநிலையாதென்றல் - குறியதன்முன்னருமென்பதனாற்கூறியஅகரம் - இராவென்கிளவிக்கில்லையென்பதனாற்பெற்றாம். இக்கூறியவிலக்கணங்கள்கருவியுஞ்செய்கையுமெனவிருவகைய. அவற்றுட்கருவி - புறப்புறக்கருவியும்புறக்கருவியும் அகப்புறக்கருவியும் அகக்கருவியுமென நால்வகைத்து. நூன்மரபும்பிறப்பியலும்புறப்புறக்கருவி. மொழிமரபு - புறக்கருவி. புணரியல் - அகப்புறக்கருவி. எகர ஒகரம் பெயர்க்கீறாகாவென்றாற்போல்வன அகக்கருவி. இனிச்செய்கையும் - புறப்புறச்செய்கையும்புறச்செய்கையும்அகப்புறச்செய்கையும்அகச்செய்கையுமென நால்வகைத்து. எல்லாமொ

எகரவொகரம்பெயர்க்கீறுகாஎன்றற்போல்வன- புறப்புறச்செய்கை. லன வெனவரும்புள்ளிமுன்னர்என்றற்போல்வன- புறச்செய்கை. உகரமொடுபு ணரும்புள்ளியிறுதிஎன்றற்போல்வன - அகப்புறச்செய்கை. தொகைமரபு முதலியவோத்தினுள்ளின்னவீறுஇன்னவாறுமுடியுமெனச்செய்கை கூறுவன வெல்லாம்அகச்செய்கை.என இவ்விகற்பமெல்லாந்தொகையாகவுணர்க. *

இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின் இத்தொல்காப்பியமென்னுநூ ற்குமரபாந் துணைக்குவேண்டுவனவற்றைத்தொகுத் துணர்த்தினமையினூன் மரபென்னும் பெயர்த்தாயிற்று. நூலென்றது நூல்போறலினுப்பினுய தொராகுபெயராம். அவ்வொப்பாயவாறென்னையெனின் குற்றங்களைந்தெ ஃகினபன்னுனைப்பஞ்சுகளையெல்லாம் கைவன்மகடூஉத்தூய்மையு நுண்மை யுமுடையவாகவோரிழைப்படுத்தினாற்போலவினையினீங்கிவிளங்கியவறிவனு லேவழுக்களைந்தெஃகிய விலக்கணங்களையெல்லாமுதலுமுடிவுமாறுகோளி ன்றாகவுந்தொகையினும்வகையினும்பொருண்மைகாட்டியுமுறையுங்காண்டி கையு முண்ணின்றகலவுமீரைங்குற்றமுமின்றியீரைந்தழகுபெறமுப்பத்திர ண்டுவகைத்தந்திரவுத்தியோடுபுணரவ்.வொருபொருணுதலியசூத்திரத்தானு மினமொழிகிளந்த வோத்தினானும் பொதுமொழிகிளந்தபடலத்தானு மூ ன்றுறுப்படக்கியபிண்டத்தானு மொருநெறிப்படப்புணர்க்குந்தன்மையா னென்க. மரபு- இலக்கணம்- முறைமை- தன்மை- என்பனவொருபொருட் கிளவி. ஆயினூலென்றதுமூன்றதிகாரத்தினையுமன்றே. இவ்வோத்துமூன்றதி காரத்திற்குமிலக்கணமாயவாறென்னை யெனின்எழுத்துக்களது பெயருமு றையுமிவ்வதிகாரத்திற்குஞ்செய்யுளியற்குமொப்பக்கூறியது. ஈண்டுக்கூறி யமுப்பத்துமூன்றனைப் பதினைந்தாக்கியாண்டுத்தொகை கோடலிற்றொகை வேறாம். அளவுசெய்யுளியற்குமிவ்வதிகாரத்திற்குமொத்தவளவுமொவ்வாவ ளவுமுளவாகக்கூறியது. குறிற்குநெடிற்குங்கூறியமாத்திரையாண்டிடத்திற் குமொத்தவளவு ஆண்டுக்கூறுஞ்செய்யுட்கு அளவுகோடற்கீண்டைக்குப்ப யன்றாதவளபெடைகூறியதுவொவ்வாவளவு. அது அளபிறந்துயிர்த்தலுமெ ன்னுஞ் சூத்திரத்தோடுமாட்டெறியுமாற்றானுணர்க. இன்னுங்குறினெடி லு மூவகையினமுமாய்தமும் வண்ணத்திற்கும் இவ்வதிகாரத்திற்கு மொப்ப க்கூறியன. குறைவுமீண்டற்குமொக்கும். கூட்டமும்பிரிவுமயக்கமும்இவ் வதிகாரத்திற்கேயுரியனவாகக்கூறியன. அம்மூவாறுமென்னுஞ்சூத்திரமுத லியவற்றான். எழுத்துக்கள்கூடிச் சொல்லாமாறுகூறுகின்றமையிற் சொல்ல

திகாரத்திற்குமிலக்கணமீண்டுக்கூறினாராயிற்று. இங்ஙனமூன்றதிகாரத்திற்கு
மிலக்கணங்கூறுதலினிவ்வோத்து நூலினதிலக்கணங்கூறியதாயிற்று. நூலென்
றது தொல்காப்பியமென்னும்பிண்டத்தை. இவ்வோத்திலக்கணங்களாமெழு
த்துக்களது பெயருமுறையுந் தொகையுமளவுங் குறைவுங்கூட்டமுமினமுமை
யக்கமுமாம். எனையவிவ்வதிகாரத்துளேனையோத்துக்களுணர்த்தும். ✻

அந்நேலஃதாக - இத்தலைச்சூத்திர மெழுத்துக்களது பெயருமுறையுந்
தொகையுமுணர்த்துகின்றது. ✻

**எ**ழுத்தெனப்படுப- (எ-து) எழுத்தென்றுசிறப்பித்துச்சொல்லப்படுவ
ன — அகரமுதனகரவிறுவாய்முப்பஃதென்ப- (எ-து) அகரமுதல்னக
ரமீறாகக்கிடந்த முப்பதென்றுசொல்லுவராசிரியர் — சார்ந்துவரன்மரபி
ன்மூன்றலங்கடையே - (எ-து) சார்ந்துவருதலைத்தமக்கிலக்கணமாகவுடை
யமூன்றுமல்லாதவிடத்தென்றவாறு.— ✻

எனவேயம்மூன்றுங்கூடியவழிமுப்பத்துமூன்றென்ப. அ-ஆ-இ-ஈ-உ-ஊ-
எ-ஏ-ஐ-ஒ-ஓ-ஔ-க்-ங்-ச்-ஞ்-ட்-ண்-த்-ந்-ப்-ம்-ய்-ர்-ல்-வ்-ழ்-ள்-ற்-ன்-
எனவரும்-எனப்படுபவென்றுசிறப்பித்துணர்த்துதலான்அளபெடையுமுயிர்
மெய்யுமித்துணைச்சிறப்பில. ஓசையுணர்வார்க்குக்கருவியாகியவரிவடிவுஞ்சி
றப்பிலாவெழுத்தாகக்கொள்ளப்படும். அகரமுதலாதலாரியத்திற்குமொக்கு
மேனுமீண்டுத்தமிழெழுத்தேகூறுகின்றாரொன்பதுணர்தற்குனகரவிறுவாயெ
ன்றார். படுபவென்பது. படுத்தலோசையாற்றொழிற்பெயராகக்கூறப்படும். ப
கரமும்வகரமுமீண்டுநிற்றற்குத்தம்முளொத்தவுரிமையவேனுமெழுத்தென
ப்படுபவெனத்தாக்கற்று நிற்குஞ்சொற்சிரடிக்குப்படுபவென்பதின்றேசை
த்தாய்நிற்றலினீண்டுப்படுபவென்றேபாடமோதுக இது அன்பெறுதவகரவீ
ற்றுப்பலவறிசொல். அகரனகரமெனவேபெயருங்கூறினர். எழுத்துக்கட்கெ
ல்லாம்அகரமுதலாதற்குக்காரணம் - மெய்யினியக்கமகரமொடு சிவணுமெ
ன்பதனாற்கூறுப, வீடுபேற்றிற்குரியவாண் மகனையுணர்த்துஞ் சிறப்பான் -
னகரம்பின்வைத்தார் இனியேனையெழுத்துக்கட்குங்கிடக்கைமுறையாயின
வாறுகூறுதும். குற்றெழுத்துக்களை முன்னாகக் கூறியவற்றிற்கின மொத்த
நெட்டெழுத்துக்களை யவற்றின்பின்னாகக்கூறினர். ஒருமாத்திரைகூறியே
யிரண்டுமாத்திரைகூறவேண்டுதலின்) அன்றியிரண்டை முற்கூறினாலோவெ
னினாகாது-ஒன்றுநின்றதனோடு பின்னருமொன்றுகூடியே யிரண்டாவதன்

நியொன்டென்பதொன்றின்றுதலின்). இதனுன் ஒன்றுதான் பலகூடியேயெ
ண்விரிந்ததென்றுணர்க. இனி அகரத்தின்பின்னரிகரமெண்ணும் பிறப்பும்
பொருளுமொத்தலின் வைத்தார். இகரத்தின்பின்னர்உகரம்வைத்தார். பிறப்
பொவ்வாதேனும்- அ - இ - உ - அம்மூன்றுஞ்சுட்டெனச்சுட்டுப்பொருட்
டாய்நிற்கின்றவினங்கருதி) அவையைம் பாற்கண்ணும் பெரும் பான்மைவ
ருமாறுணர்க. எகரமதன்பின்வைத்தார். அகரஇகரங்களோடுபிறப்பொப்
புமைபற்றி) ஐகாரஔகாரங்கட் கினமாகிய குற்றெழுத்தின்றேனும்பிறப்
பொப்புமைபற்றிஎகார ஒகாரங்களின் பின்னர்ஐகார ஔகாரம் வைத்தார்.
ஒகரம் தொளன மெய்யோடு கூடிநின்றல்லது தானுக வோரெழுத் தொரு
மொழியாகாதசிறப்பின்மைநோக்கி ஐகாரத்தின்பின்வைத்தார். அ - இ - உ -
எ- என்னும்நான்கும். அக்கொற்றன். இக்கொற்றன். உக்கொற்றன். எக்
கொற்றன். எப்பொருளாயினும் என மெய்யொடு கூடாமற்று மிடைச்சொ
ல்லாய்நின்றுயினுமேல்வரும்பெயர்களோடுகூடிச்சுட்டுப்பொருளும் வினு
ப்பொரு ளுமுணர்த்தும். இது மெய்யோடுகூடியே தன்பொருளுணர்
த்துவதல்லது தானுகப்பொருளுணர்த்தாதென்றுணர்க. இன்னும் அ - ஆ
உ-ஊ-எஏ-ஒ-ஓ-ஔ- என்பனதம்முள்வடிவுமொக்கும். இ-ஈ-ஐ- தம்மு
ள்வடிவொவ்வா இன்னுமிவை யளபெடுக்குங் காலெட் டெழுத்தோடு குற்
றெழுத்திற்கோசையியையுமாற்றுனுமுணர்க இனிச்சுட்டுநீண்டுஆகாரஈகார
ஊகாரங்களாதலானும்பொருளொக்கும். புணர்ச்சியொப்புமை-யுயிர்மயங்
கியலுட்பெறுதும் இம்முறைவழுவாமல் மேலாளுமாறுணர்க இனிக்ககார
ஙகாரமும்- சகார ஞகாரமும்-டகார ணகாரமும்-தகார நகாரமும்
பகார்மகாரமும்- தமக்குப்பிறப்புஞ் செய்கையுமொத்தலின் வ
ல்லொற்றிடையேமெல்லொற்றுக்கலந்துவைத்தார். முதனுவுமுதலண்ணமு
மிடைவுநாமிடையண்ணமுநுனிநாவு நுனியண்ணமு மிதழியைதலுமாகிப்பி
றக்கின்றவிடத்தின்முறைமைநோக்கியவ்வெழுத்துக்களை - கசடதபஙஞண
நமனவெனவம்முறையேவைத்தார். பிறப்பொப்புமையானும்னகாரம்றகார
மாய்த் திரிதலானும்றகாரம் னகாரஞ் சேரவைத்தார்இவை தமிழெழுத்தெ
ன்பதறிவித்தற்குப்பின்னர்வைத்தார் இனிஇடையெழுத்துக்களில்யகாரமுன்
வைத்தார் அதுவுமுயிர்கள்போலமிடற்றுப்பிறந்தவளி அண்ணங்கண்ணுற்ற
டையப்பிறத்தலின் ) ரகாரமதனோடுபிறப்பொவ்வாதேனுஞ் செய்கையொ
த்தலின தன்பின்வைத்தார் லகாரமும் வகாரமுந்தம்மிற்பிறப்புஞ்செய்கையு

மொவ்வா வே னுங் கல்வலிது சொல் வலிது என்றாற் போலத் தம்மிற் சே
ர்ந்துவருஞ்சொற்கள் பெரும்பான்மையென்பதுபற்றிலகாரமும் வகாரமு
ஞ்சேரவைத்தார் ழகாரமும் ளகாரமுமொன்றானு மியைபிலவேனுமிடை
யெழுத்தென்பயரலவழளவென்றாற்சந்தவின்பத்திற்கியைபுடைமைகருதிச்
சேரவைத்தார்போலும். அகரம்உயிரகரமுமுயிர்மெய்யகரமுமெனவீரண்டு
இது ஏனையுயிர்கட்குமொக்கும். எனவேயோருயிர்பதினெட்டாயிற்று- இ
வ்வெழுத்தெனப்பட்டவோசையையருவென்பாரறியாதாரதனையுருவென்
றேகோடும். அதுசெறிப்பச்சேறலானுஞ்செறிப்பவருதலானுமிடையெறி
யப்படுதலானுஞ்செவிக்கட்சென்றுறுதலானுமின்பதுன்பத்தையாக்குதலா
னு முருவுமுருவுங் கூடிப்பிறத்தலானுந்தலையுமிடறுநெஞ்சுமென்னுமூன்றி
டத்துநிலைபெற்றுப்பல்லுமிதழுநாவு மூக்குமண்ணமு முறப்பிறக்குமென்
றமையானுமுருவேயாம். அருவேயாயி னிவ்விடத்திற்கூறியனவின்மையுண
ர்க. அல்லதூஉம் வன்மைமென்மைஇடைமையென்றோதினமையானுமுண
ர்க. உடம்பொடுபுணர்த்தலென்னு மிலக்கணத்தா னிவ்வோசையுருவாதனிலை
பெற்றதென்றுணர்க . அதற்குக்காரணமுமுன்னர்க்கூறினும் . இவ்வெழு
த்துக்களி னுருவிற்குவடிவுகூறாராயினார்அதுமுப்பத்திரண்டுவடிவினுளின்ன
வெழுத்திற்கின்னவடிவெனப்பிறர்க்குணர்த்துதற்கரிதென்பது கருதி) அவ்வ
டிவாராயுமிடத்துப்பெற்றபெற்றவடிவேதமக்குவடிவாம்.குழலகத்திற்கூறி
ற்குழல்வடிவுங்குடத்தகத்திற்கூறிற் குடவடிவும் வெள்ளிடையிற்கூறினெல்
லாத்திசையுநீர்த்தரங்கமும்போல ) எல்லாமெய்யுமுருவுருவாகியெனவும் , உ
ட்பெறுபுள்ளியுருவாகும்மே. எனவும், மெய்யினியற்கைபுள்ளியொடுநிலைய
ல்எனவுஞ்சிறுபான்மைவடிவுங்கூறுவர். அதுவட்டஞ்சதுரமுதலியமுப்பத்தி
ரண்டனுளொன்றையுணர்த்தும். மனத்தானுணருநுண்ணுணர்விலோருமு
ணர்தற்குஎழுத்துக்கட்குவேறுவேறுவடிவங்காட்டியெழுதப்பட்டுநடத்தலி
ற்கட்புலனாகியவரிவடிவுமுடையவாயின.பெரும்பான்மைமெய்க்கேவடிவுகூ
றினார் . உயிர்க்குவடிவின்மையின் எகரவொகரத்தியற்கையுமற்றேறெனச்சிறு
பான்மைகூறினார்.

*

அவைதாம்; குற்றியலிகரங்குற்றியலுகர, மாய்தமென்ற; முப்பாற்புள்ளி
யுமெழுத்தோரன்ன.

*

இதுமேற்சார்ந்துவருமென்ற மூன்றிற்கும்பெயருமுறையுமுணர்த்து

கின்றது. அவைதாம்- (எ-து) மேற்சார்ந்துவருமெனப்பட்டவைதாம்— குற்றியலிகரங்குற்றியலுகரமாய்தமென்றமுப்பாற்புள்ளியும்- (எ-து) குற்றியலிகரமுங் குற்றியலுகரமும்ஆய்தமென்று சொல்லப்பட்ட மூன்றுகூற்றதாகியபுள்ளிவடிவுமாம்.— எழுத்தோரன்ன - (எ-து) அவையுமுற்கூறிய முப்பதெழுத்தோடொருதன்மையவாய்வழங்கும்.— (எ-று)முற்கூறியவிரண்டும்உம்மைதொக்குநின்றன.இகர உகரங் குறுகிநின்றன. விகாரவகையாற் புணர்ச்சி வேறுபடுதலின்) இவற்றையிங்ஙனங் குறியிட்டாளுதலெல்லார்க்கு மொப்பமுடிந்தது.சந்தனக்கோல் குறுகினும்பிரப்பங்கோலாகாததுபோலவுயிராதுகுறுக்கமுமுயிரேயாம். இவற்றைப்புணர்ச்சிவேற்றுமையும்பொருள்வேற்றுமையும்பற்றி வேறோரெழுத்தாகவேண்டினார். இவற்றுட்குற்றியலுகரம்- நேர்பசையு நிரைபசையு மாக்கிச்சீர்களைப் பலவாக்குமாறுசெய்யுளியலுளுணர்க. ஆய்தமென்றவோசைதான்அடுப்புக்கூட்டுப்போலமூன்றுபுள்ளிவடிவிற்றென்பதுணர்தற்காய்தமென்றமுப்பாற்புள்ளியுமென்றார். அதனையிக்காலத்தார்நடுவுவாங்கியிட்டெழுதுப. இதற்குவடிவுகூறினார்.ஏனையொற்றுக்கள்போலவுயிரொருதோசைவிகாரமாய் நிற்பதொன்றாகலின்) எழுத்தியறழா வோசைகள்போலக் கொள்ளினுங்கொள்ளற்க. எழுத்தேயாமென்றற்கு) இதனைப் புள்ளிவடிவிற்றெனவே யேனையெழுத்துக்களெல்லாம்வரிவடிவினவாதல்பெற்றாம். முன்னின்றசூத்திரத்தாற் சார்ந்துவரன்மரபின்மூன்றலங்கடையே. எழுத்தெனப்படுப.முப்பஃதென்ப.வெனவேசார்ந்துவரன்மரபின்மூன்றுமேசிறந்தன. வேனையமுப்பதுமவ்வாறுசிறந்திலவெனவும் பொருடந்துநிற்றலின தனைவிலக்கிச் சிறந்தமுப்பதெழுத்தோடிவையு மொப்ப வழங்கு மென்றற் கெழுத்தோ ரன்ன வென்றார். இப்பெயர்களேபெயர். இம்முறையேமுறை. தொகையுமூன்றே. இம்மூன்றுபெயரும்பண்புத்தொகை. அவைதாம்; ஆய்தமென்ற; என்பன சொற்சிரடி. (உ)

அவற்றுள்; அ-இ-உ; எ-ஒ- என்னுமப்பாலைந்து மோரளபிசைக்குங் குற்றெழுத்தென்ப. ※

இது முற்கூறியவற்றுட்சிலவற்றிற்களவுங்குறியுங்கூறுகின்றது. அவற்றுள்- (எ-து) முற்கூறியமுப்பதெழுத்தினுள்—அ-இ-உ; எ-ஒ-என்னுமப்பாலைந்தும்-(எ-து)அ-இ-உ-எ-ஒ-என்றுகூறப்பட்டமேக்கூத்தைந்தும்—ஓரளபிசைக்குங்குற்றெழுத்தென்ப-(எ-து) ஒரோவொன்றோரளபாகவொலிக்குங்குற்

றெழுத்தென்னுங்குறியவென்று கூறுவர்புலவர். — (எ-று) இக்காரணப்பெயர்மேலாளுமாறாண்டுணர்க. தமக்கினமாயவற்றின்கணல்லது குறுமை நெடுமை கொள்ளப்படாமையி னளவிற்பட் டமைந்தனவாம். குற்றெழுத்திற்குறுகி மெய்யளா மாத்திரை பெற்றதேனுங் குற்றெழுத் தெனப்பெயர்பெறாதாயிற்று. ஒருமாத்திரைபெற்றமெய் தமக்கினமாகவின்மையின்) குற்றெழுத்தென்பது பண்புத்தொகை. இனியிசைப்பது மிசையும்வேறாகவுணர்க. அதுபொருட்டன்மை. அவற்றுள்; அ-இ-உ; என்பன சொற்சீரடி. (௩)

ஆ-ஈ-ஊ-எ-ஐ; -ஒ-ஔ- வென்னுமப்பாலேழு, மீரளபிசைக்குநெட்டெழுத்தென்ப. *

இதுவுமது- ஆ-ஈ-ஊ-எ-ஐ; ஒ-ஔவென்னுமப்பாலேழும்- (எ-து) ஆ-ஈ-ஊ-எ-ஐ-ஒ-ஔ-வென்றுகூறப்படுமக்கூற்றேழும்—ஈரளபிசைக்குநெட்டெழுத்தென்ப- (எ-து) ஒரோவொன்றிரண்டு மாத்திரையாகவொலிக்குநெட்டெழுத்தென்னுங்குறியவென்றுகூறுவராசிரியர்.—(எ-று)எனவே அளவுங்காரணக்குறியு மிங்ஙனமுணர்த்திமேலாளுப. ஐகார ஔகாரங்கள்குறியவெழுத்தினெடியவாதற்குக் குற்றெழுத்தாகியஇனந் தமக்கின்றேனுமாத்திரையொப்புமையானெட்டெழுத்தென்றார். ஆ-ஈ-ஊ-எ-ஐ; என்பனவற்றைச்சொற்சீரடியாக்குக. (௪)

மூவளபிசைத்தலோரெழுத்தின்றே. *

இது- ஐயமகற்றியது. ஒரெழுத்துமூவளபாயுமிசைக்குங்கொல்லோவென்னையப்படுதலின்) ஒரெழுத்துமூவளபிசைத்தலின்று. (எ-து)ஒரெழுத்தேநின்றுமூன்றுமாத்திரையாகவிசைத்தலின்று.எனவே பல்வெழுத்துக்கூடியவிடத்துமூன்றுமாத்திரையுநான்குமாத்திரையுமிசைக்கும்.—(எ-று) எனவே பெரும்பான்மை மூன்றுமாத்திரையே பெறுமென்றார். பலவெழுத்தெனவேநான்குமாத்திரையும்பெறுதல்பெற்றாம். (௫)

நீட்டம்வேண்டினவ்வளபுடைய, கூட்டியெழூஉதலென்மனார்புலவர். *

இது-மாத்திரை நீளுமாறுகூறுகின்றது. நீட்டம்வேண்டின்- (எ-து)வழக்கிடத்துஞ்செய்யுளிடத்துமோசையும்பொருளும்பெறுதல்காரணமாகவிரண்டுமாத்திரைபெற்றவெழுத்தம்மாத்திரையின் மிக்கொலித்தலை விரும்புவராயின்—அவ்வளபுடையகூட்டியெழூஉதலென்மனார்புலவர்- (எ-து) தாங்கருதி

யமாத்திரையைத்தருதற்குரிய வெழுத்துக்களைக் கூட்டியம்மாத்திரையை
யெழுப்புகவென்றுகூறுவராசிரியர். —(எ-று) இதுவும்-உயிர்க்குமுயிர்மெ
ய்க்கும்பொது. கூட்டியெழுப்புமாறுகுன்றிசைமொழி. ஐ- ஔ- வென்னு
ம் - என்பனவற்றுனெழுவகைத்தெனக்கூறுப. [ உதாரணம் ] ஆஅ- ஈஇ-
ஊஉ-ஏஎ-ஐஇ-ஓஒ-ஔஉ-எனவரும்- இவைமூன்றுமாத்திரைபெற்றன. இ
வைதாம்- நெட்டெழுத்தேழேயோரெழுத்தொருமொழியென்றவந்நெட்
டெழுத்துக்களேயளபெடுத்தவிற்சொல்லாதலெய்தின. இனி- அளபெடை
யசைநிலையாகலு முரித்தேஎன்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தானெழுத்தாந்த
ன்மையுமெய்திற்று. இதுநான்- இயற்கையளபெடையுஞ்செய்யுட்குப்புலவ
ர்செய்து கொண்ட செயற்கையளபெடையுமாய்ச் சொற்றன்மை யெய்திநி
ன்றலகுபெறுமாறுங்குற்றியலிகரக்குற்றியலுகரங்கள்போல வெழுத்தாந்த
ன்மையெய்தியலகுபெறாதுநிற்குமாறுமச்சூத்திரத்தானுணர்க. எனவேயெ
ழுத்தாந்தன்மையுமுடைமையினளபெடையோடுகூடியெழுத்துநாற்பதெ
ன்றலும்பொருந்திற்று.ஒற்றளபெடைசெய்யுட்கேவருதலினீண்டுக்கூறாரயி
னார். அவ்வளபுடையவெனப்பன்மையாகக்கூறியவதனானிவருநான்குமாத்தி
ரையுங்கொண்டார்.என்னை! இவ்வாசிரியரைமுந்துநூல்கண்டென்றாராகலின்)
மாபுராணத்து- செய்யுட்களோசைசிதையுங்காலீளபு - மையப்பாடின்றி
யணையுமா- மைதீரொற்-றின்றியுஞ்செய்யுட்கெடினொற்றையுண்டாக்கு-கு
ன்றுமேலொற்றளபுங்கொள்.என்றசூத்திரத்தானவர்கொண்டநான்குமாத்தி
ரையுமிவ்வாசிரியர்க்கோதல்வேண்டுதலின்) அது- சேரூஅ அய்வாழியநெஞ்
சு- தூஉஉத்தீம்புகைத்தொல்விசும்பு-பேஎஎர்த்துக்கொல்- இலாஅஅர்க்கில்
லைத்தமர்-விராஅஅய்ச்செய்யாமைநன்று-மரீஇஇப்பின்னைப்பிரிவு-எனச்சா
ன்றோர்செய்யுட்களெல்லாம்நான்குமாத்திரைபெற்றுநிற்றலின்) அன்றிமூ
ன்றுமாத்திரைபெற்றனவே வாசிரியத்தளைதட்டுச்செப்பலோசைகெடுமாயி
ற்று. இங்ஙனமளபெடாதுநின்றாசிரியத்தளைதட்டுநிற்பன கலிக்குறுப்பாகி
யகொச்சகவெண்பாக்களிவையல்லனவென்றுணர்க. கோட்டுநூறுமஞ்சளு
ங்கூடியகூட்டத்துப்பிறந்த செவ்வண்ணம்போல நெடிலுங்குறிலுங் கூடிய
கூட்டத்துப்பிறந்த பின்னர் அப்பிளவுபடாவோசையையளபெடையென்
றாசிரியர்வேண்டினார். இவைகூட்டிச்சொல்லியகாலத்தல்லதுபுலப்படா.எள்
ளாட்டியவழியல்லதெண்ணெய்புலப்படாவாறுபோலவென்றுணர்க. இனி

யளபெடை யல்லாதவோசைகளெல்லாமிசையோசை யாதலினவற்றையள
பிறந்துயிர்த்தலுமென்னுஞ்சூத்திரத்தாற்கூறுப. (௬)

கண்ணிமைநொடியெனவவ்வேமாத்திரை, நுண்ணிதினுணர்ந்தோர்
கண்டவாறே. *

இதுமாத்திரைக்குஅளவுகூறுகின்றது. கண்ணிமைநொடியென வவ்வேமா
த்திரை (எ-து) கண்ணிமையெனவுநொடியெனவு மவ்விரண்டேஎழுத்தி
ன்மாத்திரைக்களவு— நுண்ணிதினுணர்ந்தோர்கண்டவாறே-(எ-து) நுண்
ணிதாகநூலிலக்கணத்தையுணர்ந்தஆசிரியர்கண்டநெறி.— (எ-று) எனவெ
ண்பிரிந்துநின்றிரண்டிடத்துங்கூடிற்று. கண்ணிமைநொடியென்னும் பல
பொருளொருசொற்களீண்டுத்தொழின்மேலுமோசைமேலுமுறையேநின்
றன. ஆசிரியரெல்லாருமெழுத்திற்கிவையே அளவாகக்கூறலி னிவருங்கூறி
னார். இயற்கைமகன்றன்குறிப்பினன்றி இரண்டிமையுமொருகாற்கூடி நீங்கின
காலக்கழிவும்- அ எனப்பிறந்த வோசையது தோற்றக்கேட்டுக் காலக்கழிவு
மொக்கும். இக்கண்ணிமையினதுபாகமெய்க்குஞ்சார்பிற்றோற்றத்திற்குமி
தன்பாகமகரக்குறுக்கத்திற்குங்கொள்க. இனியளவைதான்-நிறுத்தளத்தல்
பெய்தளத்தல்- சார்த்தியளத்தல்- நீட்டியளத்தல்- தெறித்தளத்தல்-தேங்
கமுகந்தளத்தல் - எண்ணியளத்தல்எனஎழுவகைத்து- அவற்றுளிதுசார்த்தி
யளத்தலாம். கண்ணிமைக்கு நொடிக்குமளவு ஆராயின் வரம்பின்றியோடு
மென்றுகருதி நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறென்று முடிந்ததுகாட்ட
லென்னுமுத்திகூறினார். இது ஆணைகூறுதலுமாம். எனவேஎழுத்திற்கேயளவு
கூறிமாத்திரைக்களவுகூறிற்றிலர். நொடியிற்கண்ணிமைசிறப்புடைத்து. உள்
ளத்தானினைத்துநிகழாமையின். (௭)

ஔகாரவிறுவாய்ப்;பன்னீரெழுத்துமுயிரெனமொழிப. *

இது குறிலையுநெடிலையுந்தொகுத்துவேறோர்குறியீடுகூறுகின்றது. ஔகார
விறுவாய்ப்பன்னீரெழுத்தும்(எ-து) அகரமுதலாகஔகாரமீறாகக்கிடந்தப
ன்னிரண்டெழுத்தும்— உயிரெனமொழிப (எ-து) உயிரென்னுங்குறியினை
யுடையவென்றுகூறுவர்புலவர்.— (எ-று) இதுவும்ஆட்சியுங்காரணமுநோ
க்கியகுறி. மெய்ப்பதினெட்டினையுமியக்கித்தாம்அருவாய்வடிவின்றிநிற்றலின்
உயிராயின. இவைமெய்க்குயிராய்நின்றுமெய்களையியக்குமேலுயி ரெனவே
றோரெழுத்தின்றாம். பிறவெனின்மெய்யினிற்குமுயிருந்தனியேநிற்குமுயிரும்

வேறெனவுணர்க- அகரமுதலவென்புழிஅகரந்தனியுயிருமாய்க்ககரவொற்றுமுதலியவற்றிற் குயிருமாய்வேறுநிற்றலின்) அவ்வகரந் தனியே நிற்றலானும் பலமெய்க்கணின்றவ்வமெய்கட்கிசைந்தவோசைகளைப்பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலினொன்றேயாயும்பலவேயாயுநிற்பதோர்தன்மையையுடைத்தென்றுகோடும்-இறைவனொன்றேயாய்நிற்குந்தன்மையும்பல்லுயிர்க்குந்தானேயாயவற்றினுள்வாய்நிற்குந்தன்மையும்போல. அது-அஎன்றவழியும்உளரவெனவிளியேற்றவழியும் அகரமுதலவென்றவழியுமூவினங்களிலேநினவழியுமோசைவேறுபட்டவாற்றானுணர்க. இங்ஙனமிசைத்துழியுமாத்திரையொன்றேயாம்இதனையுயிர்கட்குமொக்கும்- ஔகாரவிறுவாயென்பது பண்புத்தொகை·உம்மை-முற்றும்மை- அகரமுதலெனமுற்கூறிப்போந்தமையினீண்டீறேகூறினார். (௮)

னகாரவிறுவாய்ப் ?பதினெண்ணெழுத்துமெய்யெனமொழிப. *

இது உயிரல்லனவற்றைத்தொகுத்தோர்குறியீடுகூறுகின்றது·னகாரவிறுவாய்ப், பதினெண்ணெழுத்தும் - ககரமுதனகரமீறாய்க்கிடந்தபதினெட்டெழுத்தும்— மெய்யெனமொழிப - மெய்யென்னுங்குறியினையுடையவென்றுகூறுவர்புலவர்·— (எ-று) இதுவும் ஆட்சியுங்காரணமுநோக்கியகுறி· பன்னீருயிர்க்குந்தானிடங்கொடுத்தவற்றானியங்குந்தன்மைபெறறஉடம்பாய்நிற்றலின்)னகரவிறுவாய்-என்பதுபண்புத்தொகை . உம்மைமுற்றும்மை-முன்னர்னகரவிறுவாயென்புழிமுப்பதெழுத்திற்குமீறுமென்றார்·ஈண்டுப்பதினெட்டெழுத்திற்குமீறுமென்றாராதலிற்கூறியதுகூறிற்றன்று· (௯)

மெய்யோடியையினுமுயிரியல்திரியா. *

இதுஉயிர்மெய்க்களபுகூறுகின்றது· உயிர்மெய்யோடியையினும்- பன்னீருயிரும்பதினெட்டுமெய்யோடுங்கூடிநின்றனவாயினுங் — இயல்திரியா· தம்மளபுங் குறியுமெண்ணுந் திரிந்துநில்லா. — (எ - று) இது புள்ளியில்லாவென்பதனைநோக்கிநிற்றலினெதிரதுபோற்றலாம்· உயிருமெய்யு மதிகாரப்படுதலினீண்டுவைத்தார்· அ என்புழிநின்றவளபுங்குறியுமொன்றென்னுமெண்ணும்- க எனநின்றவிடத்துமொக்கும். ஆவென்புழிநின்றவளபுங்குறியுமொன்றென்னுமெண்ணுங் காவெனநின்றவிடத்துமொக்கும் என்பதிதன்கருத்து பிறவுமன்ன- ஆயினொன் றரைமாத்திரையு மிரண் டரைமாத்திரை,

புமுடையன ஒருமாத்திரையுமிரண்டுமாத்திரையுமாயவாறென்னையெனின் நீர்தனித்தளந் தாழியுநாழியாய்நாழியுட்பிற்கலந்து ழியுநாழியாய்மிகாதவாறு போல்வதோர்பொருட்பெற்றியென்றுகொள்வதல்லதுகாரணங் கூறலாகாமையுணர்க. ஆசிரியனுணையென்பாருமுளர்-விளங்காய்திரட்டினாரில்லைக்களங்கனியைக்காரொனசசெய்தாருமில்லென்பதேகாட்டினருமாயாசிரியரும். ௰)

மெய்யினளபேயரையெனமொழிப. *

இது தனிமெய்க்களபுகூறுகின்றது - மெய்யினளபேயரையெனமொழிப - மெய்யினது மாத்திரையினையொரோவொன்றரைமாத்திரையுடையவென்று கூறுவர்புலவர்— அவ்வரைமாத்திரையுந்தனித்துக்கூறிக்காட்டலாகாது. நாச்சிறிதுபுடைபெயரும் துணையாய்நிற்றலின்) இனியதனைச்சிலமொழிமேற்பெய்து காக்கை கோங்கு கவ்வையெனக்காட்டுதும்மெய்யென்பதஃறிணையியற்பெயராதலின்மெய்யென்னுமொற்றுமைபற்றியரையென்றார். (௰௧)

அவ்வியனிலையுமேனைமூன்றே. *

இது சார்பிற்றோற்றத்துமூன்றற்குமளபுகூறுகின்றது. ஏனைமூன்று-சார்பிற்றோற்றத்துமூன்றும்— அவ்வியனிலையும்-முற்கூறிய அரைமாத்திரையாகிய வியல்பின்கண்ணேநிற்கும்.—(எ-று) கேண்மியா. நாகு. எஃகு. எனவரும். ௰௨

அரையளபுகுறுகன்மகரமுடைத்தே, யிசையிடனருகுந்தெரியுங்காலை.

இதுமெய்களுளொன்றற்கெய்தியதுவிலக்குதனுதலிற்று. இசையிடன்மகரமரையளபுகுறுகலுடைத்து- வேறோரெழுத்தினதோசையின்கண்மகரவொற்றுத்தன்னரைமாத்திரையிற்குறுகிக்கான்மாத்திரைபெறுதலையுடைத்து—தெரியுங்காலையருகும் - ஆராயுங்காலத்துத்தான் சிறுபான்மையாய்வரும். —(எ-று) [உ-ம்] போன்ம். வரும்வண்ணக்கன் எனஒருமொழிக்கண்ணுமிருமொழிக்கண்ணுங்கொள்க-இதுபிறன்கோட்கூறலென்னுமுத்தி. (௰௫)

உட்பெறுபுள்ளியுருவாகும்மே. *

இதுபகரத்தோடுமகரத்திற்குவரிவடிவுவேற்றுமைசெய்கின்றது-மகரமதிகாரப்பட்டுநிற்றலினீண்டுக்கூறினர். உட்பெறுபுள்ளி- புறத்துப்பெறும்புள்ளியோடுள்ளாற்பெறும்புள்ளி— உருவாகும். மகரத்திற்குவடிவாம்.—(எ-று) எனவே புறத்துப்பெறும்புள்ளியாவது மேற்குத்திரத்தான் மெய்கட்குக்கூ

அம்புள்ளி ஈண்டுருவென்றது காட்சிப்பொருளையுணர்த்தி நின்றது. [உ-ம]
கப்பி எனவரும். இதுஎதிரதுபோற்றல் (௰௪)

மெய்யினியற்கைபுள்ளியொடுநிலையல். *

இது தனிமெய்க்குமுயிர்மெய்க்குமொப்புமைமேல்வேற்றுமைசெய்தல்கூ
றுகின்றது உயிர்மெய்யான ககரஙகரங்கட்குந் தனிமெய்யான ககரஙகரங்க
ட்கும்வடி வொன்றாகவெழுதியவற்றையொற்றாக்குதற்குப்பின்புபுள்ளிபெறுக
வென்றலின்) மெய்யினியற்கைபுள்ளியொடுநிலையல் - பதினெட்டுமெ
ய்களின்றன்மையாவதுபுள்ளிபெற்று நிற்றலாம். —(எ-று) எனவே யுயிர்
மெய்கட்குப்புள்ளியின்றாயிற்று - க் - ங் - ற் - ன் - எனவரும் இவற்றைப் புள்ளியி
ட்டுக்காட்டவே புள்ளிபெறுவதற்குமுன் னகரமுடனின்றதோர் மெய்வடி
வேபெற்றுநின்றனவற்றைப்பின்னரப்புள்ளியிட்டுத்தனிமெய்யாக்கினாரென்
பதூஉம்பெறுதும்இதனானேககர - ஙகர - முதலியனபுள்ளிபெறுவதற்குமுன்
னரியல்பாக அகரம் பெற்றேநிற்குமென்பதூஉம் புள்ளிபெறுங்காலத்தவ்வ
கரநீங்குமென்பதூஉம் பின்னரப்புள்ளிநீங்கியுயிரோறுமிடத்துத் தன்கணகர
நீங்கியேபோகவருகின்றதோருயிர்யாதானுமொன்றேறிநிற்குமென்பதூஉ
ம்பெற்றாம் மெய்யினியக்கமகரமொடுசிவணுமென்னுஞ்சூத்திரத்தானுமிது
வேயிதற்குக்கருத்தாதலுணர்க. (௰௫)

எகரஒகரத்தியற்கையுமற்றே. *

இதுவுமது எகரஒகரத்தியற்கையுமற்றே- எகரஒகரங்களினதுதன்மையுமெ
ய்போலப்புள்ளிபெறுமியல்பிற்று.— (எ-று) எனவேஎகாரஒகாரங்கட்கு
ப்புள்ளியின்றாயிற்று எ - ஒ - எனவரும்இதுஉயிர்மெய்க்குமொக்கும்- மகர
மாராய்ச்சிப்பட்டதுகண்டுமகரத்திற்கு வடிவுவேற்றுமைசெய்தவ்வதிகாரத்
தான்மெய்யின்றன்மைகூறியதன்பின்மாட்டேற்றலினெகரவொகரத்தையுங்
கூறினார். (௰௬)

புள்ளியில்லாவெல்லாமெய்யு, முருவுருவாகியகரமோடுயிர்த்தலு, மே
னையுயிரோடுருவுதிரிந் துயிர்த்தலு, மாயீரியலவுயிர்த்தலாறே. *

இது மெய்யுமுயிருங்கூடுமாறும் ஆண்டவைதிரியாதுந்திரிந்தும்நிற்குமாறு
ங்கூறுகின்றது - புள்ளியில்லா வெல்லாமெய்யும் — உயிரேற்பெறுதற்கு
ப்புள்ளியைப்போக்கினவெல்லாமெய்களும்— உருவுருவாகியகரமோடுயிர்

த்தலும் - புள்ளி பெறுகின்ற காலத் தியல்பாகிய அகர நீங்கிய வடிவே தமக்
குவடிவாக நின்று பின்னரோதிய அகரத்தோடு கூடியொலித்தலும் — ஏனையு
யிரோடுருவு திரிந்துயிர்த் தலும் - ஒழிந்த பதினோருயிருங்கூடியவ்வ
டிவுதிரிந்தொலித்தலும் — ஆயீரியலவுயிர்த்தலாறே - என வவ்விரண்
டியல்பினையுடைய - அவையொலிக்குமுறைமை. — (எ-று) புள்ளியில்லா
மெய்யெனவே முன்பெற்றுநின்ற புள்ளியை யுயிரேற்றுதற்குப் போக்கினை
மைபெறுதும். உருவுருவாகியெனவே புள்ளிபெறுதற்காக வியல்பாகியவக
ர-நீங்கியவடிவே பின்னரகரம்பெறுதற்கும் வடிவாமென்பதுகூறினார். க-ங-
ய-எனவரும் - உருவு திரிந் துயிர்த்தலாவது மேலுங்கீழும் விலங்குபெற்று
ங்கோடுபெற்றும் புள்ளிபெற்றும் புள்ளியுங்கோடுமுடன்பெற்று முயிர்த்த
லாம். கிகீமுதலியன மேல்விலங்குபெற்றன குகூமுதலியன கீழ்விலங்குபெற்ற
ன. கெகேமுதலியன கோடுபெற்றன காஙா முதலியன புள்ளிபெற்றன அருகே
பெற்றபுள்ளியைப் பிற்காலத்தார் காலாக வெழுதினார் மகரமுமிரண்டு புள்ளியு
ளுட்பெறு புள்ளியை வளைத்தெழுதினார் கொகோஙொஙோ முதலியன புள்ளி
யுங்கோடுமுடன்பெற்றன. இங்ஙனந் திரிந்தொலிப்பவே உயிர்மெய்பன்னி
ருபதினெட்டிருநூற்றொருபத்தாறாயிற்று. ஆகவே உயிர்மெய்க்குவடிவம் ஒரு
வாற்றாற்கூறினாராயிற்று. இதனானே மெய்தனக்கியல்பாகிய அகரத்தைநீங்கிநி
ற்பதோர் தன்மையும் பிறிதோருயிரை யேற்குந் தன்மையுமுடையதென்ப
தூஉம் உயிர்மெய்யின் கட்புலப் படா தியல்பாகிய வகரமாய் நிற்குந்தன்மை
யுமெய்புள்ளி பெற்றழிந்த வழியவற்றிற்குத் தக்க வுயிராய்ப் புலப்பட்டுவரு
ந்தன்மையுமுடைய தென்பதூஉப் பெற்றும். உயிர்மெய் யென்பதும்மைத்
தொகை. (௰௭)

மெய்யின்வழிய துயிர்தோன்று நிலையே. *

இது மெய்யுமுயிருங்கூடிய வழியவற்றினோசை நிற்குமுறைமை கூறுகின்றது
மெய்யின்வழியது. - மெய்யினதோசைதோன்றிய பின்னர்தாம் — உயி
ர்தோன்றுநிலையே - உயிரினதோசைதோன்றுநிலை. — (எ-று) முன்னி
ன்றசூத்திரத்தான் மெய்முன்னர் நிற்பவுயிர்பின் வந்தேறுமென்றார் அம்முறை
யேயோசையும்பிறக்குமென்றார் இதனால்மாத்திரைகொள்ளுங்காலுப்பு நீரு
ம்போல வொன்றேயாய் நிற்றலும் வேறுபடுத்துக்காணுங்கால் விரலும்விரலு

ஞ்சேர நின்றாற்போலவேறாய் நிற்றலும்பெற்றும் · நீருப்பின்குணமாயவாறு போல உயிர்- மெய்யின்குணமேயாய் வன்மை மென்மை யிடைமை யெய்தி நிற்றல்கொள்க · க- ங - ய- எனக்கூட்டமும் பிரிவு மூவகை யோசை யுங் காண்க· (௰௮)

வல்லெழுத்தென்ப கசடதபற· *

இது தனிமெய்களுட்சிலவற்றிற்குவேறோர்குறியீடுகூறுகின்றது· கசடதப ற - க-ச-ட-த-ப-ற-வென்னுந்தனிமெய்களை—வல்லெழுத்தென்ப- வல்லெழுத்தென்னுங்குறியினையுடையவென்றுகூறுவராசிரியர்· —(எ-று) இது ஆட்சியுங்காரணமுநோக்கியகுறி·ஒழிந்தமெல்லெழுத்தையும்இடையெழுத்தையுநோக்கித்தாம்வல்லென்றிசைத்தலானும் வல்லென்றதலைவளியாற்பிறத்தலானும்- வல்லெழுத்தாயிற்று. (௰௯)

மெல்லெழுத்தென்ப ஙஞண நமன· *

இதுவுமது· ஙஞணநமன - ங-ஞ-ண-ந-ம-ன-வென்னுந்தனிமெய்களை—மெல்லெழுத்தென்ப·-மெல்லெழுத்தென்னுங்குறியினையுடையவென்றுகூறுவராசிரியர்·—(எ-று)இதுவும் ஆட்சியுங்காரணமுநோக்கியகுறி·மெல்லென்றிசைத்தலானு மெல்லென்றமூக்கின்வளியாற்பிறத்தலானு மெல்லெழுத்தாயிற்று· (௨௰)

இடையெழுத்தென்ப யரலவழள· *

இதுவுமது· யரலவழள - ய-ர-ல-வ-ழ-ள-வென்னுந் தனிமெய்களை இடையெழுத்தென்ப-இடையெழுத்தென்னுங் குறியவென்றுகூறுவராசிரியர்·—(எ-று)இதுவும்ஆட்சியுங்காரணமுநோக்கியகுறி· இடைநிகரவாயொலித்தலானும் இடைநிகர்த்தாயமிடற்றுவளியாற் பிறத்தலானுமிடையெழுத்தாயிற்று· -வல்லினத்துக்-க-ச-த-ப-வென்னுநான்கு மெல்லினத்து-ஞ-ந-ம- வென்னுமூன்றும்இடையினத்து-ய-வ-வென்னுமிரண்டுமொழிக்குமுதலாதனோக்கியிம்முறையேவைத்தார்· இப்பெயரானேயெழுத்தென்னுமோசைகளுருவாயின · உயிர்க்குங் குறுமைநெடுமைகூறவினவையுமுருவாயின · இதுசார்பிற்றோற்றத்திற்குமொக்கும்· (௨௧)

அம்மூவாறும்வழங்கியன்மருங்கின், மெய்ம்மயங்குடனிலைதெரியுங்காலை·

இது தனிமெய் பிறமெய் யோடுந் தன்மெய்யோடு மயங்குமயக்கமும்உயிர்

மெய் உயிர்மெய்யோடுந் தனிமெய்யோடு மயங்குமயக்கமுங்கூறுகின்றது. அம்மூவாறும் - அங்ஙனமூன்றுகூறாகப்பகுத்தபதினெட்டுமெய்யும்— வழங்கியன்மருங்கின் - வழக்கிடத்துஞ்செய்யுளிடத்துமெழுத்துக்களைக்கூட்டிமொழிப்படுத்துவழங்குதலுளதாமிடத்து — மெய்ம்மயங்குடனிலை - தனிமெய்தன்பின்னர்நின்றபிறமெய்யோடுந்தன்மெய்யோடுமயங்குநிலையும்— உடன்மயங்குநிலை - அப்பதினெட்டுமுயிருடனேநின்றுதன்பின்னர்நின்றஉயிர்மெய்யோடுந்தனிமெய்யோடுமயங்குநிலையுமெனவிரண்டாம்— தெரியுங்காலை - அவைமயங்குமொழியாந்தன்மையாராயுங்காலத்து:— (எ-று) எனவே தனித்துநின்ற வெழுத்துடன் முன் னின்ற வெழுத்துக் கடாங்கூடுமாறுகூறினாராயிற்று. கட்க என்றால் இடைநின்றதனிமெய்பின்னர்நின்றதன்னின்வேறாயககரவொற்றோடுமயங்கிற்று. காக்கை என்றால் இடை நின்ற ககரவொற்றுப்பின்னர்நின்றதன்னொற்றோடுமயங்கிற்று. கருவெனவீரெழுத்தொருமொழியும் கருதவென மூவெழுத்தொருமொழியும் உயிர்மெய் நின்றுதன்பின்னர்நின்றஉயிர்மெய்யோடுமயங்கிற்று. துணங்கையெனவுயிர்மெய்நின்றுதன்பின்னர்நின்றதனிமெய்யோடுமயங்கிற்று. கல்,வில்என்பனஉயிர்மெய்நின்றுதனிமெய்யோடுமயங்கிற்று. தெரியுங்காலையென்றதனான் - உயிர்முன்னருயிர்மெய்ம்மயக்கமும்உயிர்முன்னர்த்தனிமெய்மயக்கமுங்கொள்க. அவை - அளை - ஆம்பலென்றாற்போல்வன: இம்மயக்கங்களுட்டனிமெய்முன்னர்ப்பிறமெய்நின்றுமயங்குதல்பலவாதலிற் பலசூத்திரத்தாற்கூறித்தன்முன்னர்த்தான்வந்துமயங்குதலையொருசூத்திரத்தாற்கூறுப. அவைமயங்குங்கால் - வல்லினத்தில்டகரமும் றகரமும் மெல்லினமாறுமிடையினமாறும்பிறமெய்யோடுமயங்குமென்றும்வல்லினத்திற்கசதபக்கள் - தன்மெய்யோடன்றிப்பிறமெய்யோடுமயங்காவென்றுமுய்த்துணரக்கூறுமாறுமுணர்க. மூவாறுமென்னுமும்மைமுற்றும்மை. இச்சூத்திரமுதலாகமெய்ந்நிலைசுட்டீறாகமேற் கூறுமொழி மரபிற்குப் பொருந்திய கருவி கூறுகின்றதென்றுணர்க. எழுத்துக்கடம்மிற்கூடுமாறுகூறுதலின்.) (௨௨)

டறலள வென்னும்புள்ளிமுன்னர்க், கசபவென்னுமூவெழுத்துரிய. *

இது தனிமெய்பிறமெய்யோடுமயங்குமயக்கமுணர்த்துகின்றது. டறலள-வென்னும்புள்ளிமுன்னர் - மொழியிடையினின்ற-ட-ற-ல-ள-வென்றுகூறு

•ப்படுநான்குபுள்ளிகளின்முன்னர் — கசப வென்னுமூவெழுத்துரிய- க-ச-ப - வென்றுகூறப்படுமூன்றெழுத்தும்வந்துமயங்குதற்குரிய. — (எ-று) [உ-ம்] கட்க கட்சி கட்ப எனவும் - கற்க முயற்சி கற்ப எனவும் - செல்க வல்சி செல்ப எனவும் - கொள்க நீள்சினை கொள்ப எனவும் - தனிமெய் பிறமெய்யோடுமயங்கியவாறுகாண்க. கட்சிறுர் கற்சிறுர் என்பனஇருமொழிப் புணர்ச்சியாகவினீண்டைக்காகா. (உரு)

அவற்றுள்; லளஃகான்முன்னர்யவவுந்தோன்றும். *

இதுவுமது. அவற்றுள் - முற்கூறியநான்கனுள் — லளஃகான்முன்னர் - லகார ளகாரமாகியபுள்ளிகளின்முன்னர் — யவவுந்தோன்றும் - கசதபக்களேயன்றி யகரவகரங்களும்வந்துமயங்கும். — (எ-று) கொல்யானை செல்வம் வெள்யாறு கள்வன் எனவரும். இவற்றுள் வினைத்தொகையும் பண்புத்தொகையுநிலைமொழிவருமொழிசெய்வதற்கியையாமையின்மருவின்பாத்தியவென்றுகூறுவராதலினிவ்வாசிரியரிவற்றைபொருமொழியாகக் கொள்வரென்றுணர்க. இக்கருத்தானேமேலும் வினைத்தொகையும் பண்புத்தொகையு மொருமொழியாகக்கொண்டுதாரணங்காட்டுதும். அன்றியிவ்வாசிரியர்நூல்செய்கின்றகாலத்துவினைத்தொகைக்கண்ணும்பண்புத்தொகைக்கண்ணுமன்றியொருமொழிக்கண்ணேமயங்குவனவுமுளவாதலினவற்றைக்கண்டிலக்கணங்கூறினர். அவை பின்னிறந்தன வென்றுதாரணமில்லனவற்றிற்குதாரணம்காட்டாமற்போதலேநன்றென்றுகூறலுமொன்றும். (உச)

ஙஞணநமன வெனும் புள்ளிமுன்னர்த், தத்தமிசைகளொத்தனநிலையே. *

இதுவுமது. ஙஞணநமன வெனும்புள்ளிமுன்னர் - ங-ஞ-ண-ந-ம-ன - வென்றுகூறப்படும் புள்ளிகளின் முன்னர் — தத்தமிசைகள் - தமக்கினமாய்முன்னின்ற க-ச-ட-த-ப-றக்கள் — ஒத்தனநிலையே - பின்னிற்றற்குப் பொருந்தின. மயங்கிநிற்றற்கணென்றவாறு. — [உ-ம்] கங்கன் கஞ்சன் கண்டன் கந்தன் கம்பன் மன்றன் எனவரும். தெங்கு பிஞ்சு வண்டு பந்து கம்பு கன்று எனக்குற்றுகரமுங்காட்டுக. (உரு)

அவற்றுள்; ணனகான்முன்னர்க்; கசஞபமயவவ்வேழுமுரிய. *

இதுவுமது. அவற்றுள் - மேற்கூறியமெல்லொற்றாறனுள் — ணனகான்முன்

ஙர்-ணகார னகாரங்களின்முன்னர் — க ச ஞ ப ம ய வவேழுமுரிய- டறக்க ளேயன்றிக்--க-ச-ஞ-ப-ம-ய-வ-வென்னும்மெழுத்தும்பின்வந்துமயங் குதற்குரிய.— (எ-று) [உ-ம்] எங்கு வெஞ்சாந்து வெண்ஞாண் பண்பு வண்மை மண்யாறு எண்வட்டு எனவும் - புன்கு புன்செய் மென்ஞாண் அன்பு வன்மை இன்யாழ் புன்வரகு எனவும்வரும். எண்வட்டு வினைத்தொகை எங்கு புன்கு பெயர். (உசு)

ஞ ந ம வ வென்னும்புள்ளிமுன்னர், யஃகா னிற்றன்மெய்பெற்றன்றே. ✻

இதுவுமது. ஞநமவவென்னும்புள்ளிமுன்னர்- ஞ-ந-ம-வ-வென்றுகூறப் படும்புள்ளிகளின்முன்னர் —யஃகானிற்றன்மெய்பெற்றன்றே-யஃகானிற்ற ல்பொருண்மைபெற்றது.— (எ-று) இங்ஙனமாசிரியர்சூத்திரஞ்செய்தலின் அக்காலத் தொருமொழியாக வழங்கிய சொற்களுளவென்பது பெற்றாம். அவைஇக்காலத்திறந்தன. இனிஉரையாசிரியர் உரிஞ்யாது பொருந்யாது திரும்யாது தெவ்யாது என விருமொழிக்கண்வருவன உதாரணமாகக்காட் டினராலெனின் ஆசிரியனொருமொழியாமா றீண்டுக்கூறியிருமொழிபுணர்த் தற்குப் புணரியலென்று வேறோர் இயலுங் கூறி யதன்கண் மெய் யிறுசொன் முன்மெய்வருவழியுமென்றுகூறினார். கூறிப்பின்னுமுகரமொடுபுணரும்புள் ளியிறுதியென்றும் பிறண்டுமீறுகடோறு மெடுத்தோதிப் புணர்ப்பாராதலி னீண் டிருமொழிப்புணர்ச்சிகாட்டிற்கூறியதுகூறலென்னுங்குற்றமாம்அத னால்அவைகாட்டுதல் பொருந்தாமையுணர்க. (உஎ)

மஃகான்புள்ளிமுன், வவ்வுந்தோன்றும். ✻

இதுவுமது. மஃகான்புள்ளிமுன்- முற்கூறியவற்றுண்மகரமாகியபுள்ளிமுன் னர்—வவ்வுந்தோன்றும்-பகர யகரமேயன்றிவகரமும்வந்துமயங்கும். — (எ-று) இதற்குமுதாரணமிக்காலத்திறந்தது. அன்றிவரும்வண்ணக்கனென் றூற் போல் வன காட்டின் வகார மிசையு மகாரங் குறுகு மென்ற விதி வேண் டாவாம். (உஅ)

யரழவென்னும்புள்ளிமுன்னர், முதலாகெழுத் துஙகரமொடுதோன்றும். ✻

இதுவுமது. யரழவென்னும்புள்ளிமுன்னர் - யரழவென்றுகூறப்படுமூன்று புள்ளிகளின்முன்னர் — முதலாகெழுத்தும்- மொழிக்குமுதலாமெனமே ற்கூறுமொன்பதெழுத்துக்களுமும்மையான்மொழிக்குமுதலாகாதபிறவெ

ழுத்துக்களும்—ஙகரமொடுதோன்றும்-ஙகாரமும்வந்துமயங்கும்.—(எ-று) [உ-ம்] ஆய்க- ஆர்க-ஆழ்க-ஆய்தல்- ஆர்தல்-ஆழ்தல்-ஆய்நர்-ஆர்நர்-ஆழ்நர்-ஆய்பவை-ஆர்பவை-ஆழ்பவை-வாய்மை-நேர்மை-கீழ்மை- எய்சிலை போர்செய்-வாழ்சேரி-தெய்வம்-சேர்வது-வாழ்வது-பாய்ஞெகிழி- நேர்ஞெகிழி- வாழ்ஞெண்டு- போர்யானை- வீழ்யானை- எனமொழிக்குமுதலாமொன்பதும்வந்துமயங்கின· செய்யாறெனயகரத்துமுன்னர்யகரம்வந்தது தன்முன்னர்த்தான்வந்ததாம். இனியும்மையாற்கொண்டமொழிக்குமுதலாகாதவற்றின்கண்ணுஞ்சிலகாட்டுதும். ஒய்வு·சோர்வு-வாழ்வு-ஒய்வோர். சோர்வோர்-வாழ்வோர்- ஆய்ஞர்-சேர்ஞர்-ஆழ்ஞர்- எனவரும். பிறவெழுத்துக்களோடுவருவனவுளவேனும்வழக்குஞ்செய்யுளுநோக்கிக்கூறிக்கொள்க. - இனி ! வேய்ஙனம் - வேர்ஙனம் - வேழ்ஙனம் - என மொழிக்குமுதலாகாத ஙகரமிடைவந்த சொற்களக்காலத்துவழங்கின வென்றுணர்க. ஆசிரியரோதுதலின்) இதனைஙகரமொடுதோன்றுமெனப்பிரித்தோதினாரக்காலத்துமரிதாகவழங்கலின்) இனி வேய்கடிது-வேர்கடிது-வீழ்கடிது-சிறிது-தீது பெரிது-ஞான்றது-நீண்டது-மாண்டது-யாது-வலிது- என்பனகாட்டின் அவையிருமொழியாக்கி நிலைமொழிவருமொழிசெய்து மேற்புணர்க்கின்றன வீண்டைக்காகாவென மறுக்க. (உசு)

மெய்ந்நிலைசுட்டினெல்லாவெழுத்துந், தம்முற்றாம்வரூஉம்ரழவலங்கடையே. *

இது நிறுத்தமுறையானே தனிமெய்தன்னொற்றோடுமயங்குமாறுகூறுகின்றது. மெய்ந்நிலைசுட்டின் - பொருணிலைமையைக்கருதின்— எல்லாவெழுத்தும்- பதினெட்டுமெய்யும்— தம்முற்றாம்வரூஉம்- தம்முன்னேதாம்வந்துமயங்கும்— ரழவலங்கடையே- ரகாரழகாரங்களல்லாதவிடத்து.—(எ-று) [உ-ம்] காக்கை-எங்ஙனம்- பச்சை-மஞ்ஞை-பட்டை- மண்ணை-தத்தை-வெந்நெய்-அப்பு-அம்மை-வெய்யர்-எல்லி-எவ்வி-கள்ளி-தொற்றி-கன்னி-எனவரும். சுட்டினென்றதனாற் றனிமெய் முன்ன ருயிர்மெய் வருமென்று கொள்க. எல்லாமென்றதுரகாரழகாரங்களையொழிந்தனவற்றைத்தழுவிற்று.

அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு. *

இது குற்றெழுத்தென்றவற்றுட் சிலவற்றிற்குவேறோர்குறியீடுகூறுகின்றது.

அஇஉஅம்மூன்றுஞ்சுட்டு - அ-இ-உ- என்றுகூறிய அம்மூன்றுஞ் சுட்டென்னுங்குறிய.—(எ-று) இதுவும்ஆட்சியுங்காரணமுநோக்கியகுறி. சுட்டியறியப்படும்பொருளையுணர்த்தலின்) தன்னினமுடித்தலென்பதனான் - எகரம்வினாப்பொருளுணர்த்தலுங்கொள்க. [உ-ம்] அக்கொற்றன் - இக்கொற்றன் - உக்கொற்றன் - எப்பொருள் - எனவரும்-என இவைபெயரைச்சார்ந்து தத்தங்குறிப்பிற்பொருள்செய்தவிடைச்சொல். இச்சூத்திரமொருதலையென்னுமுத்தி இதுவுமேலைச்சூத்திரமுமெழுத்தாந்தன்மையன்றி மொழிநிலைமைப்பட்டுவேறோர்குறிபெற்றுநிற்றலின்மொழிமரபினைச்சேரவைத்தார். (௩௧)

ஆ எ ஒ அ ம்மூ ன் றும் வி னா. *

இது நெட்டெழுத்தென்றவற்றுட் சிலவற்றிற்குவேறோர்குறியீடுகூறுகின்றது: ஆஎஒஅம்மூன்றும்வினா - ஆ எ ஒ என்றுகூறப்பட்டஅம்மூன்றும்வினாவென்னுங்குறிய.— (எ-று) இதுவும் ஆட்சியுங்காரணமுநோக்கியகுறி. வினாப்பொருளுணர்த்தலின்) [உ-ம்] உண்கா-உண்கே-உண்கோ-எனவரும். இவற்றுள். ஆகாரமும்-ஏகாரமுமிக்காலத்துவினாவாய்வருதலரிது. நீயேஎன்பதுஇக்காலத்துவரும். இவற்றுள் எ-ஒ என்பன இடைச்சொல்லோத்தினுள்ளுங்கூறினர். ஏகார ஓகாரங்கடரும்பொருட்டொகைபற்றி) இதுமொழித்தபொருளோடொன்றவவ்வயின்மொழியாததனைமுட்டின்றுமுடித்தலென்னுமுத்திக்கினமாம். யகரவாகாரமும்வினாவாய்வருதலின். (௩௨)

அளபிறந் துயிர்த்தலுமொற்றிசைநீடலு, முளவெனமொழிபவிசை யொடுசிவணிய, நரம்பின்மறையவென்மனார்புலவர். *

இது பிறன்கோட்கூறலென்னுமுத்திபற்றி யிசைநூற்குவருவதோரிலக்கணமாமாறுகூறி யவ்விலக்கணமிந்நூற்குங்கொள்கின்றது. அளபிறந்துயிர்த்தலுமொற்றிசைநீடலு நரம்பின்மறையவென்மனார்புலவர் - முற்கூறியஉயிருமுயிர்மெய்யுமாத்திரையை யிறந்தொலித்தலு மொற்றெழுத்துக்க ளரைமாத்திரையினீண்டொலித்தலும்யாழ்நூலிடத்தனவென்றுகூறுவர்புலவர்.— இசையொடு சிவணிய வுளவென மொழிப- அங்ஙன மளபிறந்து நீண்டுமிசைத்தலோசையோடுபொருந்தியநால்வகைச்செய்யுட்களுக்குமுளவென்றுகூறுவராசிரியர்.—(எ-று)எழுத்துக்கள்முற்கூறியமாத்திரையையிறந்தொலிக்குமாறுகண்டஃதிறந்தொலிக்குமிடங்கூறினர். எழுத்துஞ்சொல்லும்பொருளுங்

டெக்குமிடஞ்செய்யுளிடமாதலின்) அது மிக்கொலித்தலைச்செய்யுளியலின்க
ண்-மாத்திரையெழுத்தியலசைவகையெனாஅவெனவிருபத்தாறுறுப்பிற்குஞ்
சிறப்புறுப்பாகமுற்கூறிப்பின்னர் — மாத்திரையளவுமெழுத்தியல்வகையு
மேற்கிளந்தன்னவென்மனார்புலவர்· என இச்சூத்திரத்தோடுமாட்டெறிந்துபி
ன்னும்-எழுத்தளபெஞ்சினுஞ்சீர்நிலைதானே குன்றலுமிகுதலுமில்லென்மொ
ழிப என்றுங்கூறினார்: இதுஎதிரதுபோற்றலென்னுமுத்தியுங்கூறிற்று· [உ-ம்]
வருவர்கொல்வயங்கிழாஅய்வலிப்பல்யான்கேளினி - என்புழி ழகர ஆகார
மும்ககரஎகாரமுமாத்திரையிறந்தொலித்தவாறுணர்க·பிடியூட்டிப்பின்னுண்
ணுங்களிறெனவுமுரைத்தனரே- என்புழிஙகரவொற்றுஅளபிறந்தவாறுகா
ண்க· ஒழிந்தமூவகைச்செய்யுட்குமிவ்வாறேதத்தமக்குரியபாவென்னுமுறு
ப்பினைநடாத்தியளவுமிகுமாறுகாண்க:சிவணியவென்பதுதொழிற்பெயர்·இ
சையொடுசிவணியவெனவேசெய்யுளாதல்பெற்றாம்- நரம்பென்றதாகுபெ
யராயாழினையுணர்த்திற்று. மறையென்றதுநூலை· மொழிபவென்றும்என்ம
னார்புலவரென்றுமிருகாற்கூறியவதனாலிங்ஙனம்பொருள்கூறலேயாசிரியர்க்
குக்கருத்தாயிற்று· அல்லாக்காற்செய்யுளியலுட்கூறியமாத்திரையளவுமென்
னுஞ்சூத்திரத்தின்மேற்கிளந்தன்னவென்னுமாட்டேற்றிற்கிவ்வோத்தினுள்
வேறோர்சூத்திரங் கூறல் வேண்டுமெனவுணர்க · இவ்விலக்கணங்கூறாக்கால்
செய்யுட்குப்பாவென்னுமுறுப்புநிகழாது அவைஉரைச்செய்யுட்போனிற்ற
லினிவ்விலக்கணங்கூறவேவேண்டுமென்றுணர்க . சூத்திரத்துப்பொருளன்றி
யும்யாப்புற,வின்றியமையாதியைபவையெல்லா,மொன்றவுரைப்பதுரையெ
னப்படுமேஎன்னுமரபியற்சூத்திரத்தானேயிவ்வாறே சூத்திரங்களை நலிந்து
பொருளுரைப்பனவெல்லாங்கொள்க· (௩௩)

முதலாவது, நூன்மரபு முற்றிற்று·

# இரண்டாவது;

# மொழிமரபு.

குற்றியலிகரநிற்றல்வேண்டும்,யாவென்சினைமிசையுரையசைக்கிளவிக்; காவயின்வரூஉமகரமூர்ந்தே. *

மேலெழுத்துணர்த்திப் பின்னர் அவைதம்முட்டொடருமாறு முணர்த்தியவ்வெழுத்தானு மொழியது மரபுணர்த்துகின்றமையினிவ்வோத்துமொழிமரபெனக்காரணப்பெயர்த்தாயிற்று· இச்சூத்திரமுன்னர்ச் சார்ந்துவருமென்ற மூன்றனுட்குற்றியலிகரத்திற் கிடனும் பற்றுக்கோடுங்கூறுகின்றது. உரையசைக்கிளவிக்குவரூஉம்- தான் கூறும்பொருளைக் கோடற்கொருவனையெதிர்முகமாக்குஞ்சொல்லிற்குப்பொருந்தவரும்— ஆவயின்- அம்மியாவென்னுமிடைச்சொல்லைச்சொல்லுமிடத்து— யாவென்சினைமிசைமகரமூர்ந்து-யாவென்னுமுறுப்பின்மேலதாய்முதலாய்நின்றமகரவொற்றினையேறி — குற்றியலிகர நிற்றல் வேண்டும் - குற்றியலிகரம் நிற்றலை விரும்பு மாசிரியன். —(எ-று) [உ-ம்] கேண்மியா- சென்மியா- எனவரும் - கேளென்றதுரையசைக்கிளவி · அதனைச்சார்ந்துதமக்கியல்பின்றிநின்றது மியாவென்னுமிடைச்சொல். அவ்விடைச்சொல்முதலுமதனிற்பிரியும்யா அதற்குறுப்புமாமென்றுகருதியாவென்சினையென்றார் · மியாவிடம் · மகரம்பற்றுக்கோடு · யாவுமிகரமரைமாத்திரையாதற்குச்சார்பு · இவ்விடைச்சொற்றனித்து நிற்கலாகாமையிற் கேளென்பதனோடு சார்ந்தொரு சொல்லாயேநின்றுழி யிடைநின்றவிகரமொருமொழியிடத்துக் குற்றியலிகரமாய் வருதலானும் ஆண்டுணர்த்துதற்குச்சிறப்பின்மையானுமீண்டுப்போர்ந்துகூறினார்·ஊர்ந்தெனவேகுற்றியலிகரமுமுயிரொன்பதுபெற்றும்உயிர்க்கல்லதேறுதலின்மையின். (௩)

புணரியனிலையிடைக்குறுகலுமுரித்தே, யுணரக்கூறின்முன்னர்த்தோன்றும். *

இதுகுற்றியலிகரம்புணர்மொழியிடத்தும்வருமென்கின்றது·புணரியனிலையிடைக்குறுகலுமுரித்தே- அக்குற்றியலிகரமொருமொழிக்கணன்றியிருமொழிதம்மிற்புணர்தலியன்றநிலைமைக்கண்ணுங்குறுகுதலுரித்து — உணரக்கூறின்முன்னர்த்தோன்றும்- அதற்கிடமும்பற்றுக்கோடுமுணரக்கூறத்தொடங்கின்அவைகுற்றியலுகரப்புணரியலுள்ளேகூறப்படும்.— (எ-று) குறுகலு

மென்னுமிடத்தும்மையை நிலையிடையுமெனமாறிக்கூட்டுக· யகரம்வரும் வழியென்னுஞ் சூத்திரத்து யகரமிடமுகரஞ்சார்ந்தவல்லெழுத்துப்பற்றுக்கோடு· [உ-ம்] நாகியாது-வரகியாது-தெள்கியாது-எஃகியாது-கொக்கியாது-குரங்கியாது-எனவரும். இது மொழிவாமென்னுமுத்தி· (௨)

நெட்டெழுத்திம்பருந்தொடர்மொழியீற்றுங் , குற்றியலுகரம்வல்லாறூர்ந்தே· *

இது ஒருமொழிக்குற்றியலுகரத்திற்கிடமும் பற்றுக்கோடுமுணர்த்துகின்றது· குற்றியலுகரம்வல்லாறூர்ந்தே-குற்றியலுகரம்வல்லெழுத்துக்களாறினையுமூர்ந்து — நெட்டெழுத்திம்பருந்தொடர்மொழியீற்றும் - நெட்டெழுத்தின்பின்னுமைவகைத்தொடர்மொழியினிறுதியினு நிற்றல்வேண்டுமாசிரியன்.— (எ-று) நெட்டெழுத்தினதுபின்றொடர்மொழியினதீறென நிலத்ததகலம்போலவொன்றியத்கிழமைப்பட்டுநின்றது·அம்மொழியிற்றீர்ந்துகுற்றியலுகரநில்லாமையின் ) வல்லாறுபண்புத்தொகை· முற்றும்மைதொக்குநின்றது· அதிகாரமுறைமையென்னுமுத்தியானிற்றல்வேண்டுமென்பதுவருவிக்க [உ-ம்] நாகு-வர்கு-தெள்கு-எஃகு-கொக்கு-குரங்கு-எனவரும்· இவ்வறுவகையுமிடம்· வல்லெழுத்துப்பற்றுக்கோடு· எனவேமொழிக்கீறுதலும்பெற்றும்·பெருமூசு-திருமூசு-என்பன இருமொழிக்கண்வந்தகுற்றுகரம்· பரசு இங்கு-வது- என்பனமுற்றுகரவீறாகியவடமொழிச்சிதைவு·தருக்கு-அணுக்கு- என்பனவினைக்கண்வந்தமுற்றுகரம்· குற்றுகரத்திற்குமுன்னர்வந்தவழியோதிமுடிய அரைமாத்திரையாய் நிற்றலுமுற்றுகரத்திற்கு முன்னர்வந்தவழியோதிமுடியாமையுந்தம்முள்வேற்றுமை· (௫)

இடைப்படிற்குறுகுமிடனுமாருண்டே,கடப்பாடறிந்தபுணரியலான. *

இது குற்றியலுகரம்புணர்மொழிக்கட்டன்னமாத்திரையிற்குறுகிவருமென்கின்றது·இடைப்படிற்குறுகுமிடனுமாருண்டே-அவ்வுகரமொருமொழியுளன்றிப் புணர்மொழியிடைப்படிற் றன்னமாத்திரையினுங்குறுகுமிடனுமுண்டு—கடப்பாட்டறிந்தபுணரியலான-அதற்கிடனும்பற்றுக்கோடும்யாண்டுப்பெறுவதெனின்அதன்புணர்ச்சிமுறைமையறியுங்குற்றியலுகரப்புணரியலுள்.— (எ-று) வல்லொற்றுத்தொடர்மொழியென்பதனுள் வல்லெழுத்துத்தொடர்மொழியும்·வல்லெழுத்துவரும்வழியுமிடம்· ஈற்றுவல்லெழுத்

துப்பநூறுக்கோடு. [உ-ம்] செக்குக்கணை - சுக்குக்கோடு - எனவரும். இவை அரைமாத்திரையிற்குறுகியவாறேனையவற்றொடுபடுத்துணர்க. இடனுமென வேயிதுசிறுபான்மையாயிற்று. (௪)

குறியதன்முன்னராய்தப்புள்ளி, யுயிரொடுபுணர்ந்தவல்லாறன்மிசைத்தே.

இது நிறுத்தமுறையானேஆய்தமொருமொழியுள்வருமாறுகூறுகின்றது. ஆய்தப்புள்ளி- ஆய்தமாகியவொற்று — குறியதன்முன்னருயிரொடுபுணர்ந்தவல்லாறன்மிசைத்து - குற்றெழுத்தின்முன்னர்த்தாயுயிரொடுகூடியவல்லெழுத்தாறின்மேலிடத்ததாய்வரும், — (எ-று) வல்லாறன்மிசைத்தென்றதனானுமீண்டுப்புள்ளியென்றதனானுமாய் தத்தொடர்மொழியெனமேற்கூறுதலானுமுயிரென்றதீண்டுப்பெரும்பான்மையுங்குற்றுகரமேயாம். சிறுபான்மையேனையுயிர்களையுங்கொள்க. [உ-ம்] எஃகு - கஃசு - கஃடு - கஃது - கஃபு - கஃறு - அஃது - இஃது - உஃது - எனவரும், கஃறீது - முஃடீது - என்பனவற்றைமெய்ப்பிறிதாகியபுணர்ச்சியென்றதனானும் ஈண்டுப்புள்ளியென்றதனானும்ஆய்தமுமெய்யாயிற்று. அஃகாமை - வெஃகாமை - அஃகி - வெஃகி - அஃகம் - எனப்பிறவுயிர்களோடும்வந்தது. கஃசியாதெனத்திரிந்ததுவுங்குற்றியலுகரத்தோடுபுணர்ந்ததாம். (௫)

ஈறியன்மருங்கினுமிசைமைதோன்றும். *

இது அவ்வாய்தம்புணர்மொழியகத்தும் வருமாறுகூறுகின்றது. ஈறியன்மருங்கினும் - நிலைமொழியீறுவருமொழிமுதலோடுபுணர்ந்துநடக்குமிடத்தும் — இசைமைதோன்றும் - தன்னரைமாத்திரையேயிசைக்குந்தன்மைதோன்றும். — (எ-று) [உ-ம்] கஃறீது - முஃடீது - எனவரும். இவ்வீறியலுமாறுபுள்ளிமயங்கியலுட்பெறுதும். ஈண்டுமிடம்குற்றெழுத்துமேல்வரும்வல்லெழுத்து. (௬)

உருவினுமிசையினுமருகித்தோன்று, மொழிக்குறிப்பெல்லாமெழுத்தினியலா, வாய்தமஃகாக்காலையான. *

இது எதிரதுபோற்றலென்னுமுத்தியாற்செய்யுளியலைநோக்கி யாய்தத்திற்கெய்தியதோரிலக்கணமுணர்த்துகின்றது. உருவினுமிசையினுமருகித்தோன்றுங்குறிப்புமொழியும் - நிறத்தின்கண்ணு மோசையின்கண்ணுஞ் சிறுபான்மையாய்த் தோன்றும்பொருள் குறித்தலையுடையசொல்லும் — எல்லா

மொழியும் - அவையொழிந்தஎல்லாமொழிகளும் — எழுத்தினியலா - ஒற்றெழுத்துக்கள்போல வரைமாத்திரையின்மிக்குநடந்து — ஆய்தமஃகாக்காலையான - ஆய்தஞ்சுருங்காதவிடத்தான சொற்களாம். — (எ-று) எனவே யீண்டாராய்ச்சியின்றேனுஞ் செய்யுளியலிற்கூறும் ஒற்றளபெடுப்பினும்மற்றெனமொழிப என்னுஞ்சூத்திரத்துக் - கண்ண்டண்ணெனக் கண்டுங்கேட்டு மென்புழிக்கண்ண் ணென்பதுசீர்நிலையெய்தினாற்போலக் கஃஃறென்னுங்கல்லதரத்தமெனநிறத்தின்கண்ணும் - சுஃஃ றென்னுந்தண்டோட்டுப்பெண்ணையெனவிசையின்கண்ணும் - வந்தவாய்தமொருமாத்திரை பெற்றுச் சீர்நிலையெய்துங் காலாண்டுப் பெறுகின்றவொருமாத்திரைக் கீண்டெதிரதுபோற்றிவிதிகூறினார். ஆய்தமதிகாரப்பட்டமைகண்டு) எஃஃகிலங்கியகையராயின்னுயிர்வெஃஃகுவார்க்கில்லைவீடு. என்றேனையிடத்தும்வந்தன. ஒற்றளபெடுக்குமாறு இவ்வதிகாரத்துக்கூறிற்றிலர். அதுவுமுயிரளபெடைபோலச்சீர்நிலையெய்தலுமசைநிலையாந்தன்மையுமுடையவாய்ச்செய்யுட்கேவருதலின்) இதனானேஒற்றளபெடையுமொருமாத்திரைபெறுமென்பதுபெற்றாம். எழுத்தினென்றஇன்உவமப்பொருள். இயலாவென்றதுசெய்யாவென்னும் வினையெச்சம். இவ்வாறன்றிக்குறிப்புச்சொற்களாய்தமிரண்டிட்டெழுதப்படாவென்று பொருள்கூறிச் செய்யுளியலோடுமாறுபட்டுமாறுகொளக்கூறலென்னுங்குற்றந்தங்குமென்றுணர்க. (எ)

குன்றிசைமொழிவயினின்றிசைநிறைக்கு, நெட்டெழுத்திம்பரொத்த குற்றெழுத்தே. *

இது எதிரதுபோற்றலென்னுமுத்திபற்றிச்செய்யுளியலைநோக்கிநீட்டம்வேண்டினெனமுற்கூறியவளபெடையாமாறுகூறுகின்றது. குன்றிசைமொழிவயினின்றிசைநிறைக்கும் - அளபெடுத்துக்கூறுக்காற்குன்றுவதானவோசையையுடையஅவ்வளபெடைச்சொற்கண்ணே நின்றவ்வோசையைநிறைக்கும் அவையாவையெனின் — நெட்டெழுத்திம்பரொத்தகுற்றெழுத்தே - நெட்டெழுத்துகளின்பின்னாகத்தமக்கினமொத்தகுற்றெழுத்துக்கள். — (எ-று) [உ-ம்] ஆஅ-ஈஇ-ஊஉ-ஏஎ-ஓஒ-எனவரும். குன்றிசைமொழியென்றதற்கிசைகுன்றுமொழியென்றுமாம். இனமொத்தலாவதுபிறப்பும்புணர்ச்சியும் ஓசையும்வடிவும்ஒத்தல். ஈண்டுமொழியென்றதுஅளபெடையசைநிலையென்

னுஞ்செய்யுளியற்சூத்திரத்தெட்டியற்சீரின்பாற்படுகின்றனஃவகையளபெடைச்சொற்களையும் ) அவை-ஆஅ-கடாஅ-ஆஅழி-படாஅகை-ஆஅங்கு-ஆஅவது-புகாஅர்த்து-விராஅய்து-என்பனவாம். கட்டளைதொள்ளாவாசிரியரிவற்றைத்தனிநிலை முதனிலையிடைநிலையிறுதிநிலையென்றுமடக்குப. இனிமொழியென்றதற்குத்தனிநிலை யேழனையுமேகொள்ளினொழிந்தவியற்சீர்ப்பாற்படுமளபெடைகோடற்கிடமின்மையுமுணர்க. (௮)

ஐஔ வென்னுமாயீரெழுத்திற், கிகரவுகரமிசைநிறைவாகும். *

இது ஒத்தகுற்றெழுத்தில்லாதன அளபெடுக்குமாறுகூறுகின்றது. இதுவுமெதிரதுபோற்றல். ஐஔவென்னுமாயீரெழுத்திற்கு. தமக்கினமில்லாதஐகார ஔகாரமென்றுகூறப்படுமிவ்விரண்டெழுத்திற்கும் — இகரவுகரமிசைநிறைவாகும். ஈகார ஊகாரங்கட்கினமாகிய இகரஉகரங்களைச்சார்த்திக்கூறஅக்குன்றிசைமொழிக்கணின்றோசையைநிறைப்பனவாம்.—(எ-று) ஐஇ-ஔஉ-என நிரனிறையாகக்கொள்க. இவற்றைமுற்கூறியஇயற்சீரொட்டிற்குமேற்பனவற்றோடுதாரணங்காட்டிக்கொள்க. இத்துணையுநூன்மரபினொழிபு. (௯)

நெட்டெழுத்தேழேயோரெழுத்தொருமொழி. *

இது ஓரெழுத்தொருமொழியுணர்த்தலுற்றவற்று ணெட்டெழுத்தானுமொழியாக்கங் கூறுகின்றது. நெட்டெழுத்தேழே- நெட்டெழுத்தாகிய உயிர்களேழும் — ஓரெழுத்தொருமொழி - ஓரெழுத்தானுமொருமொழி.— (எ-று)முற்றும்மைதொகுத்தீற்றசையேகாரம்விரித்தார். [உ-ம்] ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-எனவரும். ஔகாரமுயிர்மெய்க்கண்ணல்லதுவாராது. ஔவென்பது தசை. இது உயிர்க்குமுயிர்மெய்க்கும்விதி. கா-தீ-பூ-சே-தை-கோ-வௌ-எனவரும். இவைதம்மையுணரநின்றவழியெழுத்தாம். இடைநின்றுபொருளுணர்த்தியவழிச்சொல்லாம். நெட்டெழுத்தேறியமெய் நெட்டெழுத்தாயுங் குற்றெழுத்தேறியமெய் குற்றெழுத்தாயு நிற்றலேயன்றி மெய்க்குநெடுமையுங்குறுமையுமின்மையுணர்க. (௰)

குற்றெழுத்தைந்துமொழிநிறைபிலவே. *

இது குற்றெழுத்தைந்து மொழியாகா. அவற்றுட்சிலமொழியாகுமென்பதுணர்த்துகின்றது. குற்றெழுத்தைந்தும் - குற்றெழுத்தாகியவுயிரைந்தும்— மொழிநிறைபிலவே-தாமேநிறைந்துநின்றுமொழியாதலில. சிலமெய்

யொடுகூடிநிறைந்துநின்றுமொழியாம்.— (எ-று) [உ-ம்] து-நொ-
எனவரும். இவை யுயிர்மெய்க்கண்ணல்லது வாராமையானும் உயிர்க்கண்ணு
மேனை அகரமும்- எகரமும்- அஃதொற்றன்- எப்பொருள்எனத்தனித்துநி
ன்றுணர்த்தலாற்று திடைச்சொல்லாய்ப் பெயரைச்சார்ந்து நின்று சுட்டுப்
பொருளும்வினாப்பொருளுமுணர்த்தலானுநிறைபிலவென்றார். முற்றும்மை
யீண்டெச்சப்பட்டுநின்றதென்றுணர்க. (௰௧)

ஓரெழுத்தொருமொழியீரெழுத்தொருமொழி, யிரண்டிறந்திசைக்குந்
தொடர்மொழியுளப்பட, மூன்றேமொழிநிலைதோன்றியநெறியே. *

முன்னர்மெய்ம்மயக்க முடனிலைமயக்கங் கூறலானுமீண்டு நெட்டெழுத்தே
ழேயென்பதனானும் எழுத்தினான்மொழியாமாறுகூறினாரம்மொழிக்கிச்சூத்
திரத்தாற்பெயருமுறையுந்தொகையுங்கூறுகின்றார். ஓரெழுத்தொருமொழி
யீரெழுத்தொருமொழி யிரண்டிறந்திசைக்குந் தொடர்மொழியுளப்பட - ஓ
ரெழுத்தானாகுமொருமொழியுமிரண்டெழுத்தானாகுமொருமொழியுமிரண்
டினையிறந் துபலவாற்றானிசைக்குந்தொடர்மொழியுடனேகூட — மொழிநி
லைமூன்றே- மொழிகளினிலைமைமூன்றேயாம்— தோன்றியநெறியே- அ
வைதோன்றியவழக்குநெறிக்கண்.— (எ-று) [உ-ம்] ஆ - கா-ஓரெழுத்தொ
ருமொழி. மணி- வரகு- கொற்றன்- ஈரெழுத்தொருமொழி. குரவு - அரவு-
மூவெழுத்தொருமொழி. கணவிரி- நாலெழுத்தொருமொழி. அகத்தியனா
ர்- ஐயெழுத்தொருமொழி. திருச்சிற்றம்பலம் - ஆறெழுத்தொருமொழி.
பெரும்பற்றப்புலியூர்-ஏழெழுத்தொருமொழி. ஓரெழுத்தொருமொழியுந்
தொடர்மொழியுமென்னாதீரெழுத்தொருமொழியுமோதினார்.சிலபலவெ
ன்னுந்தமிழ்வழக்குநோக்கி ) ஆசிரியரொற்றுங்குற்றுகரமுமெழுத்தென்ற
துகொண்டுமா -கா- என நின்றசொற்கள்மால்- கால்எனஒற்றடுத்துழியொற்
றினான்வேறுபொருடந்து நிற்றலினிவற்றைப் யீரெழுத்தொருமொழியென்
றும். நாகு- வரகு - என்னுங்குற்றுகரவீற்றுச்சொற்களிற்குற்றுகரங்கள்சொ
ல்லோடுகூடிப் பொருடந்து நிற்றலி னிவற்றையு மீரெழுத்தொருமொழிமூ
வெழுத்தொருமொழி யென்றுங்கோடுமென்பார்க் காசிரியர்பொருளைக்கரு
தா துமாத்திரை குறைந்தமைபற்றியுயிரிலெழுத்துமெண்ணப்படா. குறிலே
நெடிலேகுறிலிணை யென்னுஞ் செய்யுளியற் சூத்திரங்களாலவற்றையெழுத்

தெண்ணவுமலகிடவும் பெறுமென்றுவிலக்குவராதலி னிவற்றானீண்டெழுத்தொருமொழியு மூவெழுத்தொருமொழியுங் கொள்ளின்மாறு கொளக் கூறலென்னுங்குற்றந்தங்குமென்றுமறுக்க. இனிநெட்டெழுத்தேழேயோரெழுத்தொருமொழி. குற்றெழுத்தைந்துமொழிநிறைபிலவே. என்பனவற்றான் மெய்க்குக் குறுமை நெடுமையின்மையா னுயிருமுயிர்மெய்யுமாகிய நெடிலுங்குறிலுமேமொழியாமென்று கூறிமீட்டுமதனையே யிச்சூத்திரத்தா னோரெழுத்தொருமொழியென் றெடுத்ததனோடே யீரெழுத்தையுமீண்டிறந்ததனையுங் கூட்டிமொழியாக்கோடலின் ஒற்றினைக்கூட்டியெழுத்தாகக்கோடலாசிரியர்க்குக்கருத்தன்மையுணர்க. அன்றியு மொழிப்படுத்திசைப்பினு மென்னுஞ் சூத்திரத்திற்கூறுகின்றவாற்றானுமுணர்க. அகரமுதனகரவிறுவாய் முப்பஃதென்பவெனவொற்றினையுமெழுத்தென்றதெழுத்தின்றன்மைகூறிற்று. ஈண்டுமொழியாந்தன்மைகூறிற்று. (௰௨)

மெய்யினியக்கமகரமொடுசிவணும். *

இது தனிமெய்களையியக்குமாறுகூறுகின்றது. மெய்யினியக்கம்- தனிமெய்களினதுநடப்பு—அகரமொடுசிவணும்- அகரத்தோடுபொருந்திநடக்கும்.— (எ-று) என வேஒருவன்தனிமெய்களைநாவாற்கருத்துப்பொருளாகியஉருவாகவியக்குமியக்கமுங்கையாற் காட்சிப்பொருளாகிய வரிவடிவாகவியக்குமியக்கமும் அகரத்தோடுகூடியேயியக்கப்படும். — (எ-று) [உ-ம்] வல்லெழுத்தென்ப கசட தபற- ககார ஙகார முதனுவண்ணம் என்றாற் போல்வன நாவாலியக்கியுவாறுகாண்க. எழுதிக்காட்டுமிடத்துக் ககர முதலியன வுயிர் பெற்றுநின்ற வடிவாகவே யெழுதிப்பின்னர்த் தனிமெய் யாக்குதற்குப் புள்ளியிட்டுக்காட்டுகின்றவாற்றான் வடிவையியக்குமிடத்தும் அகரங்கலந்துநின்றவாறுகாண்க. இங்ஙனமெய்க்கண் அகரங்கலந்துநிற்குமாறு கூறினாற்போலப்பதினோருயிர்க்கண்ணும் அகரங்கலந்துநிற்குமென்பதாசிரியர் கூறாராயினர். அந் நிலைமைதமக்கே புலப்படுதலானும் பிறர்க்கிவ்வா றுணர்த்துத லரிதாகலானுமென்றுணர்க. இறைவனியங்குதிணைக்கண்ணு நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணு மவற்றின்றன்மையாய் நிற்குமாறெல்லார்க்குமொப்ப முடிந்தாற்போல அகரமுயிர்க்கண்ணுந் தனிமெய்க்கண்ணுங்கலந்தவற்றின் றன்மையாயேநிற்குமென்பது சான்றோர்க்கெல்லாமொப்பமுடிந்தது. அகரமுதலு

வென்னுங்குறளான் அகரமாகிய முதலையுடைய வெழுத் துக்க ளெல்லா மது போலவிறைவனாகிய முதலையுடைத்துலகமென வள்ளுவனாருவமைகூறியவாற்றானுங்கண்ணனெழுத்துக்களிலகரமாகின்றேன் யானேயெனக்கூறியவாற்றானும்பிறநூல்களானுமுணர்க. இதனானுண்மைத்தன்மையுஞ்சிறிது கூறினாராயிற்று. இதனை நூன்மரபிற்கூறாதீண்டுக்கூறினார். வல்லெழுத்தென்ப க ச ட த ப ற - வென்றவிடத்துத்தானிடைநின்றுற்றுறென்ப தோர் பொருளையுணர்த்திமொழியாந்தன்மையெய்திநிற்றலின்.) (௰௫)

தம்மியல்கிளப்பினெல்லாவெழுத்து,மெய்ந்நிலைமயக்கமானமில்லை. *

இது மெய்க்கணுயிர்நின்றவாறுகூறியவ்வுயிர்மெய்க்கணேறியுயிர்மெய்யாய் நின்றகாலத்தம்மெய்யாற்பெயர்பெறுமென்கின்றது. எல்லாவெழுத்தும்- பன்னீருயிரையும் — மெய்ந்நிலைதம்மியுன்மயக்கங்கிளப்பின்- மெய்யின்றன்மையிலேதம்முடையதன்மைமயங்கிற்றாகப்பெயர்கூறின் — மானமில்லை- குற்றமில்லை.— (எ-று) மெய்யின்றன்மையாவது வன்மை- மென்மை- யிடைமை- தம்மியலாவதுயிர்த்தன்மைஎன்றது. வல்லெழுத்துமெல்லெழுத்துஇடையெழுத்தெனஉயிர்மெய்க்கும்பெயரிட்டாளுதல்கூறிற்று. அவைவல்லெழுத்தியையினவ்வெழுத்துமிகுமேஎனவும்- மெல்லெழுத்தியையினிறுதியோடுறழும்எனவும்—இடையெழுத்தென்ப ய ர ல வ ழ ள எனவும்-பிறுண்டுமாள்ப:எழுத்தைவன்மை மென்மை இடைமை யெனவிசேடித்தற்சிறப்பானிப்பெயர்கூறினார். இஃதன்றிப்பதினெட்டுமெய்யுந்தன்மைகூறுமிடத்துமெய்ம்மயக்கங்கூறியவகையானன்றிவேண்டியவாறுமயங்குமென்றுகூறிஅவற்றுள் ல ள ஃ கான்முன்ன ரென்பதனைக் காட்டி லஃதிருமொழிக்கண்ணதெனமறுக்க. (௰௪)

ய ர ழ வென்னுமென்றுமொற்றக், க ச த ப ங ஞ ந மவீரொற்றாகும். *

இது ஈரொற்றுடனிலையாமாறுகூறுகின்றது. ய ர ழ வென்னுமூன்றுமொற்ற- ய ர ழ வென்றுகூறப்படுமூன்றுபுள்ளியுமொற்றாய்நிற்ப— க ச த ப ங ஞ ந ம வீரொற்றாகும்- க ச த பக்களும். ங ஞ ந மக்களும் - வந்தீரொற்றாய்நிற்கும்.— (எ-று) [உ-ம்] வேய்க்க- வாய்ச்சி - பாய்த்தல் - வாய்ப்பு- எ-ம். பீர்க்கு- நேர்ச்சி- வார்த்தல்- ஆர்ப்பு- எ-ம். வாழ்க்கை- தாழ்ச்சி- தாழ்த்தல்- தாழ்ப்பு- எ-ம். காய்ங்கனி- தேய்ஞ்சது- காய்ந்தனம்- காய்ம்

புறம்-எ-ம். நேர்ங்கல்-நேர்ஞ்சிலை-நேர்ந்திலை-நேர்ம்புறம்-எனவும்வரும். ழகாரத்திற்குவாழ்ந்தனம் என இக்காலத்துநகரவொற்றுவரும் ஏனைய மூன்றுமிக்காலத்துவழங்குமேனுமுணர்க. இனித்தாழ்ங்குலை-தாழ்ஞ்சினை-வீழ்ம்படை - என அக்காலத்துவழங்குமென்றித்தொகைச்சொற்கள் காட்டலு மொன்று. உரையாசிரியரிருமொழிக்கட்காட்டியவற்றிற் கவ்வீறுகடோறுங் கூறுகின்றசூத்திரங்கள்பின்னர்வேண்டாமையுணர்க. இது ஈரொற்றுடனிலையாதலினீண்டுவைத்தார். இனிநெடிற்கீழேயன்றிப்பலவெழுத்துந்தொடர்ந்து நின்றதன்பின்னுமீரொற்றுவருதல்கொள்க . வேந்தர்க்கு- அன்னுய்க்கு - என்றாற்போல்வனவாம். (௰௫)

அவற்றுள்; ரகார ழகார ங்குற்றொற்றாகா. ※

இது எய்தியதொருமருங்குமறுத்தல்கூறுகின்றது. அவற்றுள் - முற்கூறிய மூன்றனுள்— ரகார ழகாரம் - ரகாரமும்ழகாரமும்— குற்றொற்றாகா - குறிற்கீழொற்றாகா நெடிற்கீழொற்றாம் அவை குறிற்கீழுயிர்மெய்யாம்.— (எ-று) கீழென்னுமுருபுதொகுத்துக்கூறினர். ஆகாதவற்றிற்குதாரணமின்று] சார்-வீழ்-எனநெடிற்கீழொற்றாய்வந்தன. கரு-மழு-குறிற்கீழுயிர்மெய்யாய்வந்தன இவற்றை விலக்கவேயகரம் பொய்எனவும் நோய்எனவும்இரண்டிடத்தும்ஒற்றாய்வருதல்பெற்றாம் . புகர் - புகழ் - என்றாற்போல்வன வோவெனின் மொழிக்குமுதலாமெழுத்தினைச்சேர்வனவற்றிற்கேயீண்டாராய்ச்சியால்இவைவேண்டியவாறேவருமென்றுணர்க. அன்றியுங்குற்றொற்றென்றேசூத்திரஞ் செய்தலிற் குறிலிணை யொற்றினைக் காட்டிக் கடாவலாகாமையுணர்க. இத்துணையறையின்றியுயிர்மெய்யோடுதனிமெய்மயங்குவனவற்றிற்சிலவொற்றிற்குவரையறையீண்டுக்கூறியது. (௰௬)

குறுமையுநெடுமையுமளவிற்கோடலிற், றொடர்மொழியெல்லாநெட்டெழுத்தியல. ※

இஃதளபிறந்துயிர்த்தலுமென்னுநூன்மரபிற்சூத்திரத்திற்குப்புறநடையாய தன்கணிகழ்வதோரையமறுத்தல்கூறுகின்றது. என்னைஉயிருமுயிர்மெய்யும் அளபிறந்திசைக்குங்கால் குறிலோநெடிலோவிசைப்ப தெனமாணாக்கர்க்கு நிகழ்வதோரையமறுத்தலின்.) குறுமையுநெடுமையும்- எழுத்துக்களதுகுறியதன்மையுநெடியதன்மையும்—அளவிற்கோடலின்-மாத்திரையென்னும்

உறுப்பினைச் செவிகருவியாக அளக்கின்ற அளவுதொழிலாலே செய்யுட்குக்
கொள்ளப்படுதலின் — .தொடர்மொழியெல்லாம் - அம்மாத்திரைதம்முட்
டொடர்ந்துநிற்கின்றசொற்களெல்லாம்—நெட்டெழுத்தியல - நெட்டெழு
த்துமாத்திரைமிக்குநடக்கும்படியாகத்தொடர்ந்தசொல்லாம். — [உ-ம்]
வருவர்கொல்வயங்கிழாஅய் எ - ம். கடியவேகனங்குழாஅய எ - ம். குற்
றெழுத்துக்களெல்லாம்நெட்டெழுத்தினைமாத்திரைமிகுத்தற்குக் கூடியவா
றுணர்க. ஏனைச்செய்யுட்களையுமிவ்வாறேகாண்க. எனவேமாத்திரையளக்கு
ங்கால்நெட்டெழுத்தே மாத்திரைமிக்குநிற்பதென்றமையானெதிரதுபோ
ற்றலென்னுமுத்திபற்றிச்செய்யுளியலைநோக்கிக்கூறியதாயிற்று. ஈண்டுக்கூ
றினார். நெட்டெழுத்திரண்டுமாத்திரையினிகந்து வருமென்பதறிவித்தற்கு)
அளபென்று பகரவுகரமாக மாத்திரையைக்கூறுது அளவென்வகரவுகரமாக்
கூறுத்திரஞ்செய்தமையான்அள்வுதொழின்மேனின்றது . அது செய்யுளிய
லுள்மாத்திரையள்வுமென்றதனானுமுணர்க . இயலவென்றதனைச் செயவெ
னெச்சமாகப்படுத்தலோசையாற்கூறுக . இனித்தன்னினமுடித்தலென்பத
னுன்ஒற்றிற்குமிவ்வாறேகொள்க . குாங்குளைப்பொலிந்தகொய்சுவற்புரவி
ன்றகுறுஞ்சீர்வண்ணத்திற்குரிய குற்றெழுத்துக்களெல்லாம் இடையினின்ற
வொற்றெழுத்தைமாத்திரைமிகுத்தற்குக்கூடிநின்றவாறுணர்க . எனவேகுற்
றெழுத்துக்களெல்லாமொற்றெழுத்துக்களோடு நெட்டெழுத்துக்களோடு
ங்கூடியவற்றையோசைமிகுத்து நிற்குமென்றவாறாயிற்று. இதனானேஒற்றி
சைநீடுமென்றஒற்றிசைநீளுங்காற்குற்றெழுத்தாய்நீளுமென்றார் . இனிஉ
ரையாசிரியர் புகர் - புகழ் - எனக்குறிலிணைக்கீழ் - ரகாரழகாரம்வந்ததொ
டர்மொழிகளெல்லாம் தார் - தாழ் - என்றாற்போல்ஓசையொத்துநெட்டெ
ழுத்தின்றன்மையவாமென்றாராலெனின் புகர்-புகழ்- என்பனவற்றைநெட்
டெழுத்தென்றேயெவ்விடத்தும் ஆளாமையானுநெட்டெழுத்தாகக்கூறிய
விலக்கணத்தா லொருபயன்கொள்ளாமையானுஞ் செய்யுளியலுளிவற்றைக்
குறிலிணையொற்றடுத்தநிரையசையாகவுந் தார்-தாழ்-என்பனவற்றைநெட்
டெழுத்தொற்றடுத்துவந்த நேரசையாகவுங் கோடலானு மதுபொருளன்
மையுணர்க. (டுன)

செய்யுளிறுதிப்போலிமொழிவயின், னகாரமகாரமீரொற்ருகும். *

இது செய்யுட்கணீரொற்றிலக்கணமாமாறுகூறுகின்றது. செய்யுட்போலி மொழியிறுதிவயின் - செய்யுட்கட்போலுமென்னுஞ்சொல்லினிறுதிக்கண்— னகாரமகார மீரொற்ருகும்- னகாரமுமகாரமும்வந்தீரொற்றுடனிலையாய் நிற்கும்.— (எ-று) [உ-ம்] அந்நூலைமுன்னூலாக்கொள்வானும்போன்ம். எனவரும் போன்மஎனச்செய்யுமென்னும்பெயரொச்சமீற்றுமிசையுகரமெய்யொழித்துக்கெட்டுலகாரந்திரிந்துநின்றது. இது பெயரொச்சமாகியஉவமவுருபு. (மஅ)

னகாரமுன்னர்மகாரங்குறுகும். *

இதுஅரையளபுகுறுகுமென்றமகாரத்திற்குக்குறுகுமிடமிதுவென்கின்றது. னகாரமுன்னர்மகாரங்குறுகும் - முற்கூறிய னகாரத்துமுன்வந்த மகாரந் தன்னரைமாத்திரையிற்குறுகிநிற்கும்.— (எ-று) போன்ம் - எனமுன்னர்க் காட்டினும். னகாரமெனஇடைச்சொல்லீறுதிரிந்துநின்றது. இனி தன்னினமுடித்தலென்பதனு ணகாரவொற்றின்முன்னு மகாரங்குறுகுதல்கொள்க. மருளினுமெல்லாமருண்ம்எனவரும். (மகூ)

மொழிப்படுத்திசைப்பினுந்தெரிந்துவேறிசைப்பினு, மெழுத்தியறிரியாவென்மனூர்புலவர். *

இது ஒற்றுங்குற்றுகரமுமீண்டெழுத்துக்களோடுகூட்டியெண்ணப்பட்டுநிற்குமென்பதூஉஞ்செய்யுளியலுளெண்ணப்படாது நிற்குமென்பதூங்கூறுகின்றது. தெரிந்து - ஒற்றுங்குற்றுகரமும் பொருடருநிலைமையையாராய்ந்து—மொழிப்படுத்திசைப்பினும்-சொல்லாகச்சேர்த்துச்சொல்லினும்— வேறிசைப்பினும்- செய்யுளியலுளொற்றுங்குற்றுகரமும்பொருடருமேனுமாத்திரைகுறைந்துநிற்குநிலைமையைநோக்கிஎழுத்தெண்ணப்படாவென்று ஆண்டைக்குவேருகக்கூறினும்—எழுத்தியறிரியாவென்மனூர்புலவர் - அவ்வீரண்டிடத்து மரைமாத்திரைபெற்று நிற்குமொற்றுங் குற்றுகரமு முற்கூறியவெழுத்தாந்தன்மைதிரியாவென்றுகூறுவர்புலவர்.— (எ-று) இதனனொற்றுங்குற்றுகரமுமெழுத்தாகிநின்றுபொருடந்தும் எழுத்தெண்ணவும்அலகிடவும்பெருவென்பதுங்கூறினூராயிற்று. தெரிந்துவேறிசைத்தல்குற்றுகரத்திற்கின்ருதலினேற்புழிக்கோடலானொற்றிற்குமாய்தத்திற்கும்கொள்க.

[உ-ம்] அல்-இல்-உண்-எண்-ஒல்- எ-ட்‌. கல்-வில்-முள்-செல்-சொல்- எ-ம். ஆல்-ஈர்-ஊர்-ஏர்-ஓர்- எ-ம். கால்-சீர்-சூல்-தேன்-கோன்- எ-ம். உயிருமுயிர்மெய்யுமாகியகுற்றெழுத்தைந்தும். நெட்டெழுத்தைந்துமொற்றெழுத்துக்களடுத்துநின்றுபொருடந்தவாறு காண்க. கடம்-கடாம்-உடையான்-திருவாரூர்-அகத்தியனூர்- எனவீரெழுத்தையு மூவெழுத்தையு-நாலெழுத்தையும்- ஐயெழுத்தையு மிறுதியினுமிடையினும்ஒற்றடுத்துநின்றுபொருடந்தவாறுகாண்க. எஃகு-தெள்கு-கொக்கு-குரங்கு- என்பனவும் எழுத்தெண்ணவும் அலகிடவும் பெறுத குற்றுகரமடுத்து நின்றுபொருடந்தவாறுகாண்க. உயிரிலெழுத்துமெண்ணப்படா. உயிர்த்திறமியுக்கமின்மையான்.) என்பதெழுத்தெண்ணப்பெறுமைக்குவிதி. இனியிச்சூத்திரத்திற் கெழுத்துக்களைச் சொல்லாக்கிக் கூறினும் பிறிதாகக் கூறினுமாத்திரை திரியாதென்று பொருள்கூறி அகரமென்புழியும் அ-என்புழியும் ஆலம்-என்புழியும் ஆ என்புழியுங் ககரம்என்புழியும் க- என்புழியும்-காலம்என்புழியும்- கா-என்புழியும்- ஓசையொத்துநிற்குமென்றால் துமுன்னர்க்கூறிய இலக்கணங்களாற்பெறப்படுதலிற்பயமில்கூறலாமென்க. (உ௰)

அகரஇகரமைகாரமாகும். *

இது சிலவெழுத்துக்கள்கூடிச்சிலவெழுத்துக்கள்போல விசைக்குமெனவெழுத்துப்போலிகூறுகின்றது. அகரவிகரமைகாரமாகும்- அகரமுமிகரமுங்கூட்டிச்சொல்லஐகாரம்போலவிசைக்கும்அதுகொள்ளற்க. — (எ-று) போலவென்றது தொக்கது [உ-ம்] ஐவனம்-அஇவனம்- எனவரும். ஆகுமென்றதனானிஃதிலக்கணமன்றாயிற்று. (உக)

அகரஉகரமௌகாரமாகும். *

இதுவமது. அகரமும்உகரமுங்கூட்டிச்சொல்லஔகாரம்போலவிசைக்கும்-அதுகொள்ளற்க. — (எ-று) போலவென்றது தொக்குநின்றது [உ-ம்] ஔவை-அஉவை- எனவரும். (உஉ)

அகரத்திம்பர்யகரப்புள்ளியு, மையெனெடுஞ்சினைமெய்பெறத்தோன்றும். *

இதுவமது. அகரத்திம்பர்யகரப்புள்ளியும்-அகரத்தின்பின்இகரமேயன்றியகரமாகியபுள்ளிவந்தாலும்—ஐயெனெடுஞ்சினைமெய்பெறத்தோன்றும்-ஐ

யெனப்பட்டநெட்டெழுத்தின்வடிவுபெறத்தோன்றும்.—(எ-று) [உ-ம்] ஐவனம்-அய்வனம்- எனவரும். மெய்பெறவென்றதனான் அகரத்தின்பின்னருகரமேயன்றிவகரப்புள்ளியு மௌகாரம் போலவருமென்றுகொள்க. ஔவை அவ்வை-எனவரும். (உரு)

ஓரளபாகுமிடனுமாருண்டே, தேருங்காலைமொழிவயினான. *

இது அதிகாரத்தான் ஐகாரத்திற்கு மௌகாரத்திற்கு மெதிரதுபோற்றலென்பதனாற்செய்யுளியலைநோக்கிமாத்திரைச்சுருக்கங்கூறுகின்றது. மொழிவயினான - ஒருசொல்லிடத்தேநின்றஐகாரஔகாரங்கள் — தேருங்காலை - ஆராயுமிடத்து— ஓரளபாகுமிடனுமாருண்டே- ஒருமாத்திரையாய்நிற்குமிடமுமுண்டென்றவாறு.— உம்மையானிரண்டுமாத்திரைபெறுதலேவலியுடைத்தாயிற்று. இடனுமென்றதொருசொல்லின்முதலிடைகடையென்னுமூன்றிடத்துங்குறுகும் அதுசெய்யுட்கணோசையிடர்ப்பட்டொலிக்குமிடத்துக்குறுகும்என்றற்கு)உரையிற்கோடல்என்பதனால்ஐகாரமுதலிடைகடையெனமூன்றிடத்துங்குறுகும்.ஔகாரமுதற்கண்குறுகும் [உ-ம்] ஐப்பசி-கைப்பை-இடையன்-குவளை- எனவரும். அடைப்பையாய்கோறுஎனவும். புனையிளங்கொங்கையாய்வரும்எனவும். பிறவாறும்வருவனசெய்யுளியலுட்காண்க. ஔவை-கௌவை- எனவரும். ஔகாரம்கௌவைநீர்வேலிகூற்றுஎனத்தொடைநோக்கிக்குறுகினவாறுங்காண்க. தேருங்காலையென்றதனான்ஓரெழுத்தொருமொழியுங்குறுகும். கை - பை - எனவரும். (உச)

இகரயகரமிறுதிவிரவும். *

இதுவும்போலிகூறுகின்றது. இகரயகரமிறுதிவிரவும்- இகரமும்யகரமுமொருமொழியினிறுதிக்கணோசைவிரவிவரும்- அவ்விகாரங்கொள்ளற்க.—(எ-று) நாய்-நாஇ-எனவரும். (உரு)

பன்னீருயிருமொழிமுதலாகும். *

இதுமேல்எழுத்திரைன்மொழியாமாறுணர்த்தியம்மொழிக்குமுதலாமெழுத்திவையென்பதுணர்த்துகின்றது. பன்னீருயிரும்- பன்னிரண்டுயிரெழுத்தும்— மொழிமுதலாகும்- மொழிக்குமுதலாம்.— (எ-று)[உ-ம்] அடை- ஆடை- இலை-ஈயம்-உளை-ஊர்தி-எழு-ஏணி-ஐவனம். ஒளி- ஓடம்- ஔவியம்-எனவரும். (உசா)

உயிர்மெய்யல்லனமொழிமுதலாகா. *

இது உயிர்மெய்மொழிக்குமுதலாமென்கின்றது. உயிர்மெய்யல்லனமொழிமுதலாகா - உயிரோடுகூடியமெய்யல்லாதனவாகியதனிமெய்கள்மொழிக்குமுதலாகா. — எனவேயுயிரோடுகூடியமெய்களே மொழிக்குமுதலாவன (எ-று) ஈண்டுயிர்மெய்யென்றது வேற்றுமைநயங்கருதிற்று. ஒற்றுமைநயங்கருதின் மேலைச்சூத்திரத்துயிரோடுகூடியாமென்றல்பயனின்றாம். (உஎ)

கதநபமவெனுமாவைந்தெழுத்து, மெல்லாவுயிரொடுஞ்செல்லுமார்முதலே. *

இது மேற்பொதுவகையானெய்துவித்த இருநூற்றெருபத்தாறெழுத்துக்களைச்சிறப்புவகையான்வரையறுத்தெய்துவிக்கின்றது. கதநபமவெனுமாவைந்தெழுத்தும்-கதநபமவென்றுகூறப்பட்டஅவ்வைந்துதனிமெய்யும் — எல்லாவுயிரொடுஞ்செல்லுமார்முதலே - பன்னிரண்டுயிரோடுமொழிக்குமுதலாதற்குச்செல்லும்.— (எ-று) [உ-ம்] கலை- கார்-கிளி-கீரி- குடி-கூடு- கெண்டை-கேழல்-கைதை-கொண்டல்-கோடை-கௌவை- எனவும். தத்தை- தார் - தித்தி - தீமை- துனி- தூணி- தெற்றி- தேன்- தையல்- தொண்டை-தோடு-தௌவை-எனவும். நந்து-நாரை-நிலம்-நீத்து- நுகம் - நூல்-நெய்தல்-நேயம்-நைவளம்-நொச்சி-நோக்கம்- நௌவி- எனவும். படை-பால்-பிடி-பீடு-புகழ்- பூழி- பெடை-பேதை- பைதல்- பொன்-போது-பௌவம்- எனவும். மடி- மாலை- மிடறு- மீளி- முயற்சி- மூப்பு- மெலிவு-மேனி-மையல்-மொழி-மோத்தை-மௌவல்-எனவும்வரும். (உஅ)

சகரக்கிளவியுமவற்றோரற்றே, அஐஔவெனுமூன்றலங்கடையே. *

இதுவுமது. சகரக்கிளவியுமவற்றோரற்றே - சகரமாகிய மெய்யுமுற்கூறியவைபோலவெல்லாவுயிரோடுங்கூடிமொழிக்குமுதலாம்.— அஐஔவெனுமூன்றலங்கடையே- அகரஐகாரஔகாரமென்றுசொல்லப்பட்டமூன்றுமிரும் அல்லாதவிடத்தில்— (எ-று) [உ-ம்] சாந்து-சிற்றில்-சீற்றம்-சுனை-சூரல்-செக்கு-சேவல்-சொல்-சோறு-என்வரும். சட்டி-சமழ்ப்பு- என்றாற்போலிவ்வன கடிசொவில்லையென்பதனாற்கொள்க. சையம்-சௌரியம்-என்பனவற்றைவட்சொல்லென மறுக்க. (உக)

உஊ ஒஓ வென்னுநான்குயிர், வ என்னெழுத்தொடுவருதலில்லை. ※

இதுவுமது. உஊ ஒஓ என்னுநான்குயிர் - உஊஒஓ என்றுசொல்லப்பட்டநான்குயிரும் — வ என்னெழுத்தொடுவருதலில்லை - வ என்றுசொல்லப்படுந்தனிமெய்யெழுத்தோடுகூடி மொழிக்குமுதலாய்வருதலில்லை. எனவே ஒழிந்தனமொழிக்குமுதலாமென்றவாறாயிற்று. — [உ-ம்] வளை - வாளி - விளரி - வீடு - வெள்ளி - வேட்கை - வையம் - வெளவுதல் - எனவரும். (௫௰)

ஆ எ, ஒ எனுமூவுயிர்ஞகாரத்துரிய. ※

இதுவுமது. ஆஎஒஎனுமூவுயிர் - ஆஎஒஎன்றுகூறப்பட்டமூன்றுயிரும் — ஞகாரத்துரிய - ஞகாரவொற்றோடுகூடிமொழிக்குமுதலாதற்குரிய. — (எ-று) [உ-ம்] ஞாலம் - ஞெண்டு - ஞொள்கிற்று - எனவும். ஞமலிதந்தமனவுச்சூலுடும்பு என்பதிசைச்சொல். ஞழியிற்றென்றாற்போல்வன இழிவழக்கு. (௫௧)

ஆவோடல்லது யகரமுதலாது. ※

இதுவுமது. ஆவோடல்லது யகரமுதலாது - ஆகாரத்தோடுகூடியல்லது யகரவொற்றுமொழிக்குமுதலாகாது. — (எ-று) [உ-ம்] யானை - யாடு - எனவரும். யவனர் - யுத்தி - யூபம் - யோகம் - யௌவனம் - என்பனவடசொல்லென மறுக்க. (௫௨)

முதலாவென தம்பெயர்முதலும். ※

இது மொழிக்குமுதலாகாதனவுமோரோவழியாமென்கின்றது. முதலாவும் - மொழிக்குமுதலாகாவென்றவொன்பதுமெய்யும் — எனவும் - மொழிக்குமுதலாமென்றவொன்பதுமெய்யும்பன்னிரண்டுயிரும் — தம்பெயர்முதலும் - தத்தம்பெயர்கூறுதற்குமுதலாம். — (எ-று) முதலாவும்எனவும் என்ற உம்மைகள்தொக்குநின்றன. ஙகரமும் - டகரமும் - ணகரமும் - ரகரமும் - லகரமும் - ழகரமும் - ளகரமும் - றகரமும் - னகரமும் - எனமொழிக்குமுதலாகாதவொன்பதுமுதலாமாறு. ஙக்களைந்தார் - டப்பெரிது - ணந்நன்று - என இவ்வாறேயேனையவற்றையுமோட்டுக. இனிஎனவென்றதனான். கக்களைந்தார் - தப்பெரிது - அக்குறிது - ஆநெடிது - எனமொழிக்குமுதலாமவற்றையுந்தம்பெயர்கூறுதற்குமுதலாமாறொட்டிக்கொள்க. வரையறுக்கப்பட்டுமொழிக்குமுதலாகாதுநின்றமெய்க்குமிவ்விதிகொள்க. அவைசகரத்துமூன்றும் - வகரத்துநான்கும் - ஞகரத்தொன்பதும் - யகரத்துப்பதினொன்றுமாம். (௫௫)

குற்றியலுகரமுறைப்பெயர்மருங்கின், ஒற்றியநகரமிசைநகரமொடு முதலும். *

இது எழுத்துக்களைமொழிக்குமுதலாமாறுகூறிமுறையேகுற்றியலுகரமொழிக்குமுதலாமாறுகூறுகின்றது· குற்றியலுகரமுறைப்பெயர்மருங்கின் - குற்றியலுகரமானதுமுன்னிலைமுறைப்பெயரிடத்து— ஒற்றியநகரமிசைநகரமொடுமுதலும்- தனிமெய்யாய்நின்றநகரத்துமேனின்றநகரத்தோடுகூடிமொழிக்குமுதலாம்·— (எ-று) நுந்தைஎனவரும். இதனானேமுறைப்பெயரிடமும்நகரம்பற்றுக்கோடுமாயிற்று · ஈண்டுக்குற்றியலுகரமெய்ப்பின்னர்நின்றதேனுமொற்றுமைநயத்தான்மொழிக்குமுதலென்றார்· இதுசெய்யுளியலைநோக்கிக்கூறியதாயிற்று. (ருச)

முற்றியலுகரமொடுபொருள்வேறுபடாஅ, தப்பெயர்மருங்கினிலையியலான. *

இதுமேலதற்கோர்புறநடைகூறுகின்றது·அப்பெயர்மருங்கினிலையியலான - அம்முறைப்பெயரிடத்தேநிற்றவிலக்கணமானகுற்றியலுகரம்— முற்றியலுகரமொடுபொருள்வேறுபடாஅது - இதழ்குவித்துக்கூறும்வழிவருமுற்றுகரத்தோடவ்விடத்துக் குற்றுகரம் பொருள் வேறுபடுமாறு போல வீண்டுப்பொருள்வேறுபட்டுநில்லாது·—(எ-று)காது-கட்டு-கத்து-முருக்கு-தெருட்டு- என்பனமுற்றுகரமுங் குற்றுகரமுமாய்ப்பொருள்வேறுபட்டுநின்றாற்போலநுந்தையென்றிதழ்குவித்துமுற்றக்கூறியவிடத்துமிதழ்குவியாமற்குறையக்கூறியவிடத்துமொருபொருளேதந்தவாறுகாண்க · நுந்தாயென்பதோவெனினஃதிதழ்குவித்தேகூறவேண்டுதலிற்குற்றுகரமன்று·இயலென்றதனானிடமும்பற்றுக்கோடுமீண்டிற்கும்வேறுபாடின்றென்றுகொள்க· இதனானேமொழிக்குமுதலாமெழுத்துத்தொண்ணூற்றுநான்கென்றுணர்க· )

உயிர்ஔவெஞ்சியவிறுதியாகும்· *

இது உயிர்மொழிக்கீறுமாறுகூறுகின்றது · உயிர்ஔவெஞ்சியவிறுதியாகும்- உயிர்களுள்ஔகாரமொழிந்தனவெல்லாமொழிக்கீறாம்·— (எ-று) எனவேஔகாரவுயிரீறாகாதாயிற்று. இது உயிர்க்குமுயிர்மெய்க்கும்பொது· ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-எனஇவைதாமேயீறாயின· ஆஅ-ஈஇ-ஊஉ-ஏஎ-ஓஒ-எனக்குறிலைந்துமளபெடைக்கணீறாயின·கா-தீ-பூ-சே-கை-கோ-எனவும்·விள-

கிளி-மழு-எனவும்வரும் · எகரஒகரமேலேவிலக்குப · அளபெடைமிகூஉமிகரவிறுபெயர்என்பராதலின் அளபெடைப்பின்வந்த குற்றெழுத்துங்கொள்வராசிரியரென்றுணர்க · நெட்டெழுத்தேழுமுதன்மொழியாமென்னுந் துணையேமுன்னுணர்த்தலினீண்டு அவையீறுமென்றுமுணர்த்தினார்· (ருசு)

கவவோடியையினௌவுமாகும். *

இது ஈறாகாதென்றஔகாரம்இன்னுழியாமென்கின்றது· ஔவும்-முன்னீறாகாதென்றஔகாரமும்— கவவோடியையின்- ககரவகரத்தோடியைந்தவழியீறாம்.— (எ-று) [உ-ம்] கௌ-வௌ-எனவரும்· எனவேயொழிந்தவுயிரெல்லாந்தாமேநின்றும் பதினெட்டுமெய்களோடுங்கூடி நின்றுமீறாதலிதனாற்பெற்றாம்· இதனானேஔகாரமேனைமெய்க்கண்வாராதெனவிலக்குதலும் பெற்றாம்· உயிர்நகரமோடுகூடிமொழிக்கீறுமென்பதிதனாலெய்திற்றேனும் அது மொழிக்கீறாகாமைதந்துபுணர்ந்துரைத்தலா னுணர்க· இது வரையறை கூறிற்று· (ருஎ)

எ எனவருமுயிர்மெய்யீறாகாது· *

இது எகரந்தானேநின்றவழியன்றி மெய்யோடுகூடினவீறாகாதெனவிலக்குகின்றது· எ எனவருமுயிர்மெய்யீறாகாது- எ என்றுகூறப்படுமுயிர்தானேயீறாவதன்றிமெய்களோடியைந்தீறாகாது·— (எ-று) (ருஅ)

ஒவ்வுமற்றேநவ்வலங்கடையே· *

இது விலக்கும்வரையறையுங்கூறுகின்றது· ஒவ்வுமற்று- ஒகரமுமுன்சொன்னஎகரம்போலத்தானேயீறாவதன்றிமெய்களோடியைந்தீறாகாது.—நவ்வலங்கடையே - நகரவொற்றல்லாதவிடத்தில் — (எ-று) [உ-ம்] நொ அலையனின்னாட்டைநீ-எனவரும்· (ருகூ)

எ ஒ எனுமுயிர்ஞகாரத்தில்லை· *

இதுசிலவுயிர்சிலவுடலோடேறிமுடியாதெனவிலக்குகின்றது· எஒஎன்னுமுயிர்ஞகாரத்தில்லை- எ ஒஎன்றுகூறப்பட்டஇரண்டுயிருந்தாமேநின்றும்பிறமெய்களோடுநின்றுமீறாதலன்றிஞகாரத்தோடீறாதலில்லை.—(எ-று)எனவேஏனையுயிர்கள்ஞகாரத்தோடீறாமென்றாராயிற்று· [உ-ம்] உரிஞ-உரிஞா-உரிஞி-உரிஞீ-உரிஞு-உரிஞூ-இவையெச்சமும்வினைப்பெயரும்பற்றிவரும் · அஞ்ஞை-மஞ்ஞை- இவைபெயர்-ஏனையைந்தும்விலக்கப்பட்டன·உரிஞோவென்பதுகடிசொல்லில்லையென்பதனாற்கொள்க· (சுய)

உ ஊ கார நவவொடுநவிலா. ※

இதுவுமது. உ ஊ காரம் - உகரஊகாரங்கடாமேநின்றும்பிறமெய்களோடு நின்றும்பயில்வதன்றி — நவவொடுநவிலா - நகரவொற்றோடும்வகரவொற்றோடும்பயிலா. — (எ-று) எனவேவனையுயிர்கள் நகரவகரங்களோடுவருமாயின. [உ-ம்] நகரம் - பொருந - எனவினைப்பெயராகியும் - நா - நீ - நே - எனப்பெயராகியும் நை - நொ - நோ - என்வியங்கோளாகியும்வரும். பொருநைஎன்றுங்காட்டுப. வகரம் - உவ - வே - எனவியங்கோளாயும் - உவா - செவ்வி - வீ - வை - எனப்பெயராயும்வரும் - ஒருவ - ஒருவா - ஒருவி - ஒருவீ - ஔவை - என்றுங்காட்டுப. ஈண்டுவிலக்காதவனையுயிர்களோடு வந்த நகரவகரங்களக்காலத்துவழங்கினவென்றுகோடும். இவ்விதியால்இனிநவிலாவென்றதனானேவகரவுகரம் - கதவு - தாவு - புணர்வு - குலவு - நொவ்வு - நுகர்வு - எனப்பயின்றுவருதலுங்கொள்க. (சக)

உச்சகாரமிருமொழிக்குரித்தே. ※

இது பலசொற்கேற்வாரா திருசொற்றேமென்றுவரையறை கூறுகின்றது. உச்சகாரம் - உகரத்தோடுகூடியசகாரம் — இருமொழிக்கேயுரித்து - இரண்டுமொழிக்கேயீறும். — எனவேபன்மொழிக்கேகாதென்றவாறாயிற்று. உரித்தேயென்னுமேகாரமொழிக்கேயெனக்கூட்டுக. [உ-ம்] உசு - இதுஉளுவின்பெயர். முசு - இதுகுரங்கினுளொருசாதி - பசுவென்பதோவெனின் அதுஆரியச்சிதைவு - கச்சு - குச்சு - என்றாற்போல்வனகுற்றுகரம். உகரமேறியசகரமிருமொழிக்கேமென வே யேனையுயிர்களேறிய சகரம்பன்மொழிக்கேமாறாயிற்று. உச - உசா - விசி - சே - கச்சை - சோ - எனப்பெயராயும். துஞ்ச - எஞ்சா எஞ்சி - மூசி - மூகு - எனவெச்சமாயும்வரும். அச்சோவெனவியப்பாயும்வரும் இன்னுமிவைவழக்கின்கட்பலவாமாறுமுணர்க. (சஉ)

உப்பகாரமொன்றெனமொழிப,விருவயினிலையும்பொருட்டாகும்மே. ※

இதுஒருசொல்வரையறையும் ஓசைவேற்றுமையாலிருபொருடருமெனவுங்கூறுகின்றது. உப்பகாரமொன்றெனமொழிப - உகரத்தோடுகூடியபகரமொருமொழிக்கல்லதுபன்மொழிக்கேகாதென்றுகூறுவர்புலவர் — இருவயினிலையும்பொருட்டாகும்மே - அதுதான் தன்வினைபிறவினையென்னுமிரண்டிடத்துநிலைபெறும்பொருண்மைத்தாம். — (எ-று) [உ-ம்] தபு - எனவரும்.

இதுபடுத்துக்கூறவே நீ சாவெனத்தன்வினையாம்.எடுத்துக்கூறவே நீயொன்
றனைச்சாவப்பண்ணெனப்பிறவினையாம். உப்பு-கப்பு-என்றாற்போல்வனகு
ற்றுகரம்.உகரத்தோடுகூடியபகரமொன்றெனவேயேனையுயிர்களோடுகூடி
யபகரம்பன்மொழிக்கீறாய்ப்பலபொருடருமென்றாராயிற்று. மறந்தப-து
ப்பா-எனவெச்சமாயும்-நம்பி-செம்பூ-பே-பெதும்பை- எனப்பெயராயும்
போவெனவேவலாயும்வரும். இவற்றைப்பிறசொற்களோடுமொட்டுக. ஏனையீ
கார பகரம்இடக்கராய்வழங்கும். (௬௫)

எஞ்சியவெல்லாமெஞ்சுதலிலவே. *

இது முன்னர்மொழிக்கீறுமென்றவற்றுளெஞ்சிநின்றன மொழிக்கீறுமாறு
மொழிக்கீறுகாவென்றவைதம்பெயர்கூறுங்கால்.மொழிக்கீறுமாறுங்கூறுகி
ன்றது.எஞ்சியவுமெஞ்சுதலில - கவவோடியையின்என்னுஞ்சூத்திரத்தாற்ப
திரேனுருமிரும்பதினெட்டுமெய்க்கண்ணும்வந்து மொழிக்கீறுமென்றபொ
து விதியினைப்பின்னைவிசேடித்துக்கூறியவற்றையொழிந்தனவு மொழிக்கீறு
தற்கொழிவில —எல்லாமெஞ்சுதலில- மொழிக்கீறுதாதென்றவுயிர்மெய்களு
ந்தம்பெயர்கூறும்வழியீறுதற்கொழிவில.— (எ-று)எல்லாமென்றதுசொல்
லினெச்சம்சொல்லியாங்குணர்த்தலென்னுமுத்தி. உம்மைவிரிக்க. ஈண்டெ
ஞ்சியவென்றதுமுன்னருதாரணங்காட்டிய ஞகரமும்-நகரமும்-வகரமும்-
சகரமும்-பகரமும்- ஒருமொழிக்குமீறுகாதஙகரமுமொழிந்தபன்னிரண்டு
மெய்க்கண்ணும்- எகரமும்-ஒகரமும்-ஔகாரமும்- ஒழிந்தஒன்பதுயிருமே
றிமொழிக்கீறுய்வருவனவற்றையென்றுணர்க. [உ-ம்] வருக- புகா-வீக்கி-
புகீ-செகு- புகூ- ஈங்கே- மங்கை- எங்கோ- எனவும்- கட்ட- கடா - மடி-
மடீ- மடு-படு- படை- இதற்குஎகாரஒகாரங்களேறிவருவனவுளவேற்கண்டு
கொள்க. மண்ண-எண்ணு-கண்ணி-உண்ணீ-கணு-நண்ணூ-பண்ணே- இத
ற்கும்எகாரவோகாரங்களேறிவருவனவுளவேற்கொள்க. அத-புதா- பதி-வ
தீ-அது-கைது-தந்தை-அந்தோ-இதற்கேகாரமேறிவருவனவுளவேற்கொ
ள்க. கம-நென்மா-அம்மி-மீ-செம்மு- கொண்மூ- யாமை- காத்தும்வம்
மோ- இதற்கேகாரமேறிவருவனவுளவேற்கொள்க. செய- காயா- கொ
ய்யூ- ஐயை- ஐயோ- இதற்கிகரவீகாரவுகரவேகாரங்களேறிவருவனவுளவே
ற்கொள்க.வர-தாரா-பரி-குரீ-கரு- வெரூ- நாரை-இதற்கேகாரவோகார

மேறிவருவனவுளவேற்கொள்க. சில-பலா-வலி-வலீ-வலு-கொல்லூ-வல்லே கலை- இதற்கோகாரமேறிவருவனவுளவேற்கொள்க. தொழ-விழா- நாழி- வழீ - மழு - எழூ - தாழை - இதற்கேகாரவோகாரமேறி வருவனவுளவேற்கொள்க. உள-உள்ளா-வெள்ளி-குளீ-உளு-எள்ளூ-களை- இதற்கேகாரவோகாரங்களேறிவருவனவுளவேற்கொள்க. கற்ற-கற்றா-உறி-உறீ-மறு-உறூ-கற்றை-எற்றோ- இதற்கேகாரமேறிவருவனவுள்வேற்கொள்க. நன-கனா-வன்னி- துனீ- முன்னு - துன்னூ - என்னே - அன்னை - அன்னோ -எனவரும் . இவற்றுட்பெயராயும்வினையாயும்வருவனவுணர்க. இவற்றுட்ககரனகரங்கள் விலக்காதவொன்பதும்வந்தன . ஆகஅறுநூற்றுநாற்பத்துமூன்றும் உதாரணமில்லாத பதினெட்டும் ஆக நூற்றறுபத்தொன்று. ஙகரமொழிக்கீறாகாதென்பதுபெரும்பான்மையாதலிற்கூறிற்றிலர். இனிஙகரமும்ஔகாரமேறாதமெய்பதினைந்தும். எகரமும்-ஒகரமும்-ஏகாரமும்-ஓகாரமும்-உகரமும் ஊகாரமும்- ஏறாதமெய்களுந்தம்பெயர்கூறுங்கான்மொழிக்கீறாமாறு. ஙப்பெரிது- சப்பெரிது - சௌஅழகிது - ஞௌதீது - என ஏனையவற்றோடுமொட்டுக. கெக்குறைந்தது-கொத்தீது-ஞெவ்வழகிது- ஞொத்தீது-நுந்நன்று-நூப்பெரிது- வுச்சிறிது- வூப்பெரிது- எனஎல்லாவற்றையுமிவ்வாறேயோட்டுக. இன்னுமெல்லாமென்றதனானே கந்நன்று- ஆநன்று-எனமொழிக்கீறாவனவுந்தம்பெயர்கூறும்வழியாமென்றுகொள்க. (௪௪)

ஞணநமனயரலவழளவென்னு, மப்பதினொன்றேபுள்ளியிறுதி. *

இதுமுன்னர் உயிரீறாமாறுணர்த்திப்புள்ளிகளுளீறாவன இவையென்கின்றது. ஞணநமனயரலவழளவென்னுமப்பதினொன்றேபுள்ளியிறுதி- ஞணநமனயரலவழளவென்று கூறப்பட்ட பதினொன்றுமே புள்ளிகளின் மொழிக்கீறாவன.— (எ-று) [உ-ம்] உரிஞ்-மண்-பொருந்-திரும்-பொன்-வேய்-வேர்- வேல்- தெவ்- வீழ்- வேள்- எனவரும் . னகரம்ஈற்றுவையாதுமகரத்தோடுவைத்ததுவழக்குப்பயிற்சியுமயக்கவியையுநோக்கி. (௪௫)

உச்சகாரமொடுநகாரஞ்சிவணும். *

இதுமேற்பொதுவகையானீறாவனவற்றுள்வரையறைப்படுவதிதுவென்கின்றது. உச்சகாரமொடுநகாரஞ்சிவணும்- உகரத்தோடுகூடியசகரமிருமொழிக்கீறாயவாறுபோலநகரவொற்றுமிருமொழிக்கல்லதீறாகாது.— (எ-று) [உ-ம்]

பொருந் - வெரிந் - எனவரும். (௪௬)

இதுவுமது. உப்பகாரமொடுஞகாரையுமற்றே, யப்பொருளிரட்டாதிவணையான. ※

உப்பகாரமோடுஞகாரையுமற்றே - உகரத்தோடுகூடியபகரத்தோடுஞகாரமுமொத்தொருமொழிக்கீறும். — இவணையானவப்பொருளிரட்டாது - இவ்விடத்துஞகாரத்தின்கண்ணுனவப்பொருள்பகரம்போலவிருபொருட்படாது. — (எ-று) [உ-ம்] உரிஞ் - எனவரும். ஞகாரமொருமொழிக்கீறுதலின் நகரத்தின்பின்கூறினர். இவணையென்னுமைகாரம்அசை. (௪௭)

வகரக்கிளவிநான்மொழியீற்றது. ※

இதுவுமது. வகரக்கிளவிநான்மொழியீற்றது - வகரமாகியஎழுத்துநான்குமொழியினீற்றதாம். — (எ-று) [உ-ம்] அவ் - இவ் - உவ் - தெவ் - எனவரும். கிளவிஆகுபெயர் எழுத்துக்கிளவியாதற்குரித்தாமாதலின். (௪௮)

மகரத்தொடர்மொழிமயங்குதல்வரைந்த, னகரத்தொடர்மொழியொன்பஃதென்ப, புகரறக்கிளந்தவஃறிணைமேன. ※

இதுவுமது. வரையறைகூறுதலின்) புகரறக்கிளந்தவஃறிணைமேன - குற்றமறச்சொல்லப்பட்டவஃறிணைப்பெயரிடத்து — மகரத்தொடர்மொழிமயங்குதல்வரைந்தனகரத்தொடர்மொழியொன்பஃதென்ப - மகரவீற்றுத்தொடர்மொழியோடுமயங்காதென்று வரையறைப்பட்டனகரவீற்றுத் தொடர்மொழியொன்பதென்றுகூறுவராசிரியர். — (எ-று) ஆய்தம் - விகாரம். [உ-ம்] எகின் - செகின் - விழன் - பயின் - குயின் - அழன் - புழன் - கடான் - வயான் - எனவரும். எகின் - எகினம் - என்றாற்போலவேறோர்பெயராய்த்திரிவனவும்சந்தியாற்றிரிவனவுமா யிவற்றுள்திரிபுடையன களைந்து ஒன்பதும்வரும்மேற்கண்டுகொள்க. நிலம் - நிலன் - பிலம் - பிலன் - கலம் - கலன் - வலம் - வலன் - உலம் - உலன் - குலம் - குலன் - கடம் - கடன் - பொலம் - பொலன் - புலம் - புலன் - நலம் - நலன் - குளம் - குளன் - வளம் - வளன் - என இத்தொடக்கத்தன தம்முண் மயங்குவன. வட்டம் - குட்டம் - ஓடம் - பாடம் - இவைபோல்வனமயங்காதன - வரையறை னகரத்தின்மேற்செல்லும் - மயங்காவெனவே மயக்கமும் பெற்றும். (௪௯)

இரண்டாவது, மொழிமரபு - முற்றிற்று.

# மூன்றாவது,

# பிறப்பியல்.

உந்திமுதலாமுந்துவளிதோன்றித், தலையினுமிடற்றினுநெஞ்சினுநிலைஇப், பல்லுமிதழுநாவுமூக்கு, மண்ணமுமுளப்படவெண்முறைநிலையா, னுறுப்புற்றமையநெறிப்படநாடி, யெல்லாவெழுத்துஞ்சொல்லுங்காலைப், பிறப்பினாக்கம்வேறுவேறியல, திறப்படத்தெரியுங்காட்சியான. *

இவ்வோத்து எழுத்துக்களதுபிறப்புணர்த்துதலிற்பிறப்பியலென்னும் பெயர்த்தாயிற்று · சார்பிற்றோற்றத்தெழுத்துந்தனிமெய்யுமொழியினன்றியுணர்த்தலாகாமையின் அவைபிறக்குமொழியை மொழிமரபிடையுணர்த்திப்பிறப்புணர்த்தவேண்டுதலின் நூன்மரபின்பின்னர் வையாதிதனை மொழிமரபின்பின்னர்வைத்தார் · இச்சூத்திரமெழுத்துக்களது பொதுப்பிறவியித்துணைநிலைக்களத்துநின்றுபுலப்படுமென்கின்றது· எல்லாவெழுத்தும்பிறப்பினாக்கஞ்சொல்லுங்காலை- தமிழெழுத்தெல்லாவற்றிற்குமாசிரியர் கூறியபிறப்பினது தோற்றரவையாங்கூறுமிடத்து—உந்திமுதலாகத்தோன்றிமுந்துவளி- கொப்பூழடியாகத்தோன்றிமுந்துகின்றவுதானனென்னுங்காற்று—தலையினுமிடற்றினுநெஞ்சினுநிலைஇ - தலையின்கண்ணுமிடற்றின்கண்ணுநெஞ்சின்கண்ணுநிலைபெற்று — பல்லுமிதழுநாவுமூக்குமண்ணமு முளப்படவெண்முறைநிலையானுறுப்புற்று - பல்லுமிதழுநாவுமூக்குமண்ணமு மென்றவைத்துடனேயக்காற்றுநின்றதலையுமிடறுநெஞ்சுங்கூடவெட்டாகியமுறையை யுடையதன்மையோடுகூடியவுறுப்புக்களோடொன்றுற்று— அமைய - இங்ஙனமமைதலாலே—வேறுவேறியல - அவ்வெழுத்துக்களதுதோற்றரவுவேறுவேறுபுலப்படவழங்குதலையுடைய—காட்சியானநாடிநெறிப்பட-அதனையறிவாளராய்ந்தவற்றின்வழியிலேமனம்பட— திறப்படத்தெரியும்- அப்பிறப்புவேறுபாடுகளெல்லாங்கூறுபடவிளங்கும்·—(எ-று) சொல்லுங்காலைவளிநிலைபெற்றுறுப்புக்களுற்றிங்ஙனமமைதலாலே யவைவழங்குதலையுடையவவற்றின்வழக்கமவற்றின்வழிப்படத்தெரியுமென்க. இங்ஙனங்கூறவேமுயற்சியுமுயலுங்கருத்தாவுமுண்மைபெற்றாம். (௧)

அவ்வழி ; பன்னீருயிருந்தந்நிலைதிரியா, மிடற்றுப்பிறந்தவளியினிசைக்கும். *

இது உயிரெழுத்திற்குப்பொதுப்பிறவிகூறுகின்றது. பன்னீருயிருந்தந்நிலைதிரியா - பன்னிரண்டுயிருந்தத்தமாத்திரைதிரியாவாய் — அவ்வழிப்பிறந்த - அவ்வுந்தியிடத்துப்பிறந்த — மிடற்றுவளியினிசைக்கும் - மிடற்றின்கணிலைபெற்றகாற்றாலொலிக்கும். — (எ-று) எனவேகுற்றியலிகரக்குற்றியலுகரந்தந்நிலைதிரியுமாறாயிற்று அவ்வெழுத்துக்களைக்கூறியுணர்க. (௨)

அவற்றுள்; அ ஆ ஆயிரண்டங்காந்தியலும். *

இது அவ்வுயிர்களுட்சிலவற்றிற்குச்சிறப்புப்பிறவிகூறுகின்றது. அவற்றுள் - முற்கூறியபன்னிரண்டுயிர்களுள் — அ ஆ ஆயிரண்டு - அகரஆகாரங்களாகியவிரண்டும் — அங்காந்தியலும் - அங்காந்துகூறுமுயற்சியாற்பிறக்கும். — (எ-று) முயற்சி-யுயிர்க்கிழவன்கண்ணது. அ-ஆவெனவிவற்றின்வேறுபாடுணர்க. (௩)

இ ஈ எ ஏ ஐ யெனவிசைக்கு, மப்பாலைந்துமவற்றோரன்ன, வவைதாம்; மண்பன்முதனாவிளிம்புறலுடைய. *

இதுவுமது. இ ஈ எ ஏ ஐ யெனவிசைக்குமப்பாலைந்தும் - இ ஈ எ ஏ ஐ என்றுகூறப்படுமக்கூற்றைந்தும் — அவற்றோரன்ன - அகரவாகாரங்கள்போலவங்காந்துகூறுமுயற்சியாற்பிறக்கும் — அவைதாம்; மண்பன்முதனாவிளிம்புறலுடைய - அவைதாம் அங்ஙனம்பிறக்குமாயினு மண்பல்லுமடிநாவிளிம்புமுறப்பிறக்கும்வேறுபாடுடைய. — (எ-று) அண்பல்லென்பதுவினைத்தொகை. எனவே நாவிளிம்புஅணுகுதற்குக்காரணமானபல்லென்றதற்கோர்பெயராயிற்று. இ ஈ எ ஏ ஐ எனவிவற்றின்வேறுபாடுமுணர்க. (௪)

உ ஊ ஒ ஓ ஔ வெனவிசைக்கு, மப்பாலைந்துமிதழ்குவிந்தியலும். *

இதுவுமது. உ ஊ ஒ ஓ ஔ வெனவிசைக்குமப்பாலைந்தும் - உ ஊ ஒ ஓ ஔ வென்றுசொல்லப்படுமக்கூற்றைந்தும் — இதழ்குவிந்தியலும் - இதழ்குவித்துக்கூறப்பிறக்கும். — (எ-று) உ ஊ ஒ ஓ ஔ வெனவிவற்றின்வேறுபாடுமுணர்க. (௫)

தத்தந்திரிபேசிறியவென்ப. *

இது முற்கூறியவுயிர்க்குமேற்கூறுமெய்க்கும்பொதுவிதியாய்ச்சிங்கநோக்காக்கிடந்தது. தத்தந்திரிபேசிறியவென்ப. உயிர்களுமெய்களுமொவ்வொருதானங்களுட்பிறப்பனவற்றைக்கூட்டிக்கூறினேமாயினு நுண்ணுணர்வா

ஞாயுமிடத்துத் தம்முடைய தம்முடைய வேறுபாடுகள் சிறியவாகவுடைய வென்றுகூறுவர்புலவரென்றவாறு.— அவை - எடுத்தல் - படுத்தல் - நலிதல் - விலங்கல் - என்றவாற்றானுந் தலைவளி - நெஞ்சுவளி - மிடற்றுவளி - மூக்குவளி - யென்றவாற்றானும் பிறவாற்றானும் வேறுபடுமாறு நுண்ணுணர்வுடையோர் கூறியுணர்க. ஐவிலங்கலுடையது. வல்லினந்தலைவளியுடைய. மெல்லினமூக்குவளியுடைய. இடையினமிடற்றுவளியுடைய. எனையவுங்கூறிக்கண்டுணர்க. (௬)

ககாரஙகாரமுதனாவண்ணம். *

இது மெய்களுட்சிலவற்றிற்குப்பிறப்புக்கூறுகின்றது. ககாரஙகாரமுதனாவண்ணம் - ககாரமுஙகாரமுமுதனாவுமுதலண்ணமுமுறப்பிறக்குமென்றவாறு.— உயிர்மெய்யாகச்சூத்திரத்துக்கூறினுந்தனிமெய்யாகக்கூறிக்காண்க. முதலையிரண்டிற்குங்கூட்டுக. க - ங எனவிவற்றின்வேறுபாடுமுணர்க. (௭)

சகாரஞகாரமிடைநாவண்ணம். *

இதுவுமது. சகாரஞகாரமிடைநாவண்ணம் - சகாரமுஞகாரமுமிடைநாவுமிடையண்ணமுமுறப்பிறக்குமென்றவாறு.— இடையையிரண்டிற்குங்கூட்டுக. ச - ஞ எனவிவற்றின்வேறுபாடுமுணர்க. (௮)

டகாரணகாரநுனிநாவண்ணம். *

இதுவுமது. டகாரணகாரநுனிநாவண்ணம் - டகாரமுணகாரமுநுனிநாவுநுனியண்ணமுமுறப்பிறக்குமென்றவாறு. — நுனியையிரண்டிற்குங்கூட்டுக. ட - ண வெனவிவற்றின்வேறுபாடுமுணர்க. (௯)

அவ்வாறெழுத்துமூவகைப்பிறப்பின. *

இது மேலனவற்றிற்கோரையமகற்றியது. அவ்வாறெழுத்துமூவகைப்பிறப்பின - அக்கூறப்பட்டவாறெழுத்துமூவகையாகிய பிறப்பினையுடையவென்றவாறு.— எனவேயவை - ககாரமுதனாவினுஙகாரமுதலண்ணத்தினும்பிறக்குமென்றிவ்வாறேநிரனிறைவகையானறுவகைப்பிறப்பினவல்லவென்றார். (௰)

அண்ணநண்ணியபன்முதன்மருங்கி, னாநுனிபரந்துமெய்யுறவொற்றத், தாமினிதுபிறக்குந்தகாரநகாரம். *

இது மெய்களுட்சிலவற்றிற்குப்பிறவிகூறுகின்றது. அண்ணநண்ணியபன்முதன்மருங்கின் - அண்ணத்தைச்சேர்ந்தபல்லினதடியாகியவிடத்தே— நாநுனிபரந்துமெய்யுறவொற்ற - நாவினதுநுனிபரந்துசென்றுதன்வடிவுமிக

வுமுறும்படிசேர— தகாரநகாரந்தாமினிதுபிறக்கும்- தகாரநகாரமென்ற வைதாமினிதாகப்பிறக்கும்.—(எ-று)த-ந எனவிவற்றின்வேறுபாடுமுணர்க. முன்னருறுப்புற்றமைய வென்றுகூறியீண்டுமெய்யுறவொற்றவென்றார் சிறிதொற்றவும்வருடவும்பிறப்பனவுளவாகலின். (௰௧)

அணரிநுனிநாவண்ணமொற்ற, றஃகானஃகானுயிரண்டும்பிறக்கும். *

இதுவுமது. நுனிநாவணரியண்ணமொற்ற- நாவினதுநுனிமேனோக்கிச்சென்றண்ணத்தைத்தீண்ட— றஃகானஃகானுயிரண்டும்பிறக்கும்- றகாரனகாரமாகியவிரண்டும்பிறக்கும்.—(எ-று)இதுமுதலாகநெடுங்கணக்குமுறையன்றிநாவதிகாரம்பற்றிக்கூறுகின்றார். ற-ன எனவிவற்றின்வேறுபாடுமுணர்க௰௨

நுனிநாவணரியண்ணம்வருட, ரகாரழகாரமாயிரண்டும்பிறக்கும். *

இதுவுமது. நுனிநாவணரியண்ணம்வருட - நாவினதுநுனிமேனோக்கிச்சென்றண்ணத்தைத்தடவ—ரகாரழகாரமாயிரண்டும்பிறக்கும்-ரகாரழகாரமாகியவிரண்டும்பிறக்கும்.—(எ-று)ர-ழ எனவிவற்றின்வேறுபாடுமுணர்க. (௰௩)

நாவிளிம்புவீங்கியண்பன்முதலுற, வாவயினண்ணமொற்றவும்வருடவும், லகாரளகாரமாயிரண்டும்பிறக்கும். *

இதுவுமது. நாவீங்கிவிளிம்பண்பன்முதலுற - நாமேனோக்கிச்சென்றுதன்விளிம்பண்பல்லினடியிலேயுறுநிற்க — ஆவயினண்ணமொற்றலகாரமுமாய்- அவ்விடத்தவ்வண்ணத்தையந்நாத்தீண்டலகாரமுமாய்— ஆவயினண்ணம்வருடளகாரமுமாய் - அவ்விடத்தவ்வண்ணத்தையந்நாத்தடவளகாரமுமாய்— இரண்டும்பிறக்கும்- இரண்டெழுத்தும்பிறக்குமென்றவாறு.— லளஎனவிவற்றின்வேறுபாடுமுணர்க. இத்துணையுநாவதிகாரங்கூறிற்று. (௰௪)

இதழியைந்துபிறக்கும்பகாரமகாரம். *

இதுவுமது. மேலிதழுங்கீழிதழுந்தம்மிற்கூடப்பகாரமுமகாரமும்பிறக்கும்.— ப-ம எனவிவற்றின்வேறுபாடுமுணர்க. (௰௫)

பல்லிதழியையவகாரம்பிறக்கும். *

இது வகாரம்பிறக்குமாறுகூறுகின்றது. மேற்பல்லுங்கீழிதழுங்கூடவகாரமானதுபிறக்கும்.—(எ-று)வ-எனவரும் இதற்குமிதழியைதலின்மகரத்தின்பின்னர்வைத்தார். (௰௬)

அண்ணஞ்சேர்ந்தமிடற்றெழுவளியிசை, கண்ணுற்றடையயகாரம்பிறக்கும். *

இது யகாரம்பிறக்குமாறுகூறுகின்றது. எழுவளிமிடற்றுச்சேர்ந்தவிசை- உந்தியிலெழுந்தகாற்றுமிடற்றிடத்துச்சேர்ந்தவதனாற்பிறந்தவோசை— அண்ணங்கண்ணுற்றடைய - அண்ணத்தையணைநாலாணியிட்டாற்போலச்செறிய— யகாரம்பிறக்கும்- யகரவொற்றுப்பிறக்கும்.— (எ-று) ஆணிமரம்.யஎனவரும். (௰௭)

மெல்லெழுத்தாறும்பிறப்பினுக்கஞ், சொல்லியபள்ளிநிலையினவாயினு, மூக்கின்வளியிசையாப்புறத்தோன்றும். *

இது மெல்லெழுத்திற்குச்சிறப்புவிதிகூறுகின்றது. மெல்லெழுத்தாறும்பிறப்பினுக்கஞ்சொல்லியபள்ளிநிலையினவாயினும்- மெல்லெழுத்துக்களாறுந்தத்தம்பிறப்பினதாக்கஞ்சொல்லியவிடத்தேநிலைபெற்றனவாயினும் — மூக்கின்வளியிசையாப்புறத்தோன்றும்- ஓசைகூறுங்கான்மூக்கின்கணுளதாகியவளியினிசையான்யாப்புறத்தோன்றும்.— (எ-று) அவையங்ஙனமாதல்கூறிக்காண்க. யாப்புறவென்றதனானிடையினத்திற்குமிடற்றுவளியும் வல்லினத்திற்குத்தலைவளியுங்கொள்க. (௰௮)

சார்ந்துவரினல்லதுதமக்கியல்பிலவெனத், தேர்ந்துவெளிப்படுத்தவேனைமூன்றும், தத்தஞ்சார்பிற்பிறப்பொடுசிவணி, யொத்தகாட்சியிற்றம்மியல்பியலும். *

இது சார்பிற்றோற்றங்கள்பிறக்குமாறுகூறுகின்றது.சார்ந்துவரினல்லது-சிலவெழுத்துக்களைச்சார்ந்துதோன்றினல்லது— தமக்கியல்பிலவென- தமக்கெனத்தோன்றுதற்கோரியல்பிலவென்று—தேர்ந்துவெளிப்படுத்ததம்மியல்புமூன்றும்- ஆராய்ந்துவெளிப்படுக்கப்பட்டவெழுத்துக்கள் தம்முடையபிறப்பியல்புமூன்றினையுங்கூறுங்கால் — தத்தஞ்சார்பிற்பிறப்பொடுசிவணியியலும் - தத்தமக்குச்சார்பாகியமெய்களதுபிறப்பிடத்தேபிறத்தலோடுபொருந்திநடக்கும் — எனையொத்தகாட்சியினியலும்- ஒழிந்தஆய்தந்தமக்குப்பொருந்தினநெஞ்சுவளியாற்பிறக்கும்.— (எ-று) காட்சியென்றது நெஞ்சினை. கேண்மியா - நாகு- நுந்தை-எனவும். எஃகுஎனவும்வரும். ஆய்தத்திற்குச்சார்பிடங்குறியதன்முன்னரொன்பதனாற்கூறினர். இனிஆய்தந்த

லைவளியானுமிடற்றுவளியானும்பிறக்குமென்பாருமுளர். மொழிந்தபொரு ளோடொன்றவவ்வயின் மொழியாததனை முட்டின்றி முடித்தலென்பதனான் அளபெடையுமுயிர்மெய்யுந்தம்மையாக்கிய வெழுத்துக்களதுபிறப்பிடமே யிடமாகவருமென்றுணர்க. (௱௨)

எல்லாவெழுத்தும்வெளிப்படக்கிளந்து, சொல்லியபள்ளியெழுதருவ ளியிற், பிறப்பொடுவிடுவழியுறழ்ச்சிவாரத், தகத்தெழுவளியிசையரிறபநா டி, யளபிற்கோடலந்தணர்மறைத்தே, யஃதிவணுவலாதெழுந்துபுறத்திசை க்கு, மெய்தெரிவளியிசையளபுநுவன்றிசினே. *

இது எழுத்துக்கடம்பிறப்பிற்குப்புறநடைகூறுகின்றது. எல்லாவெழுத்துங் கிளந்துவெளிப்பட - ஆசிரியரெல்லாவெழுத்துக்களும்பிறக்குமாறுமுந்து நூற்கண்ணேகூறிவெளிப்படுக்கையினாலே — சொல்லியபள்ளிபிறப்பொடு விடுவழி - யானுமவ்வாறேகூறியவெண்வகைநிலத்தும்பிறக்கின்றபிறப்போ டேயவ்வெழுத்துக்களைகூறுமிடத்து— எழுதருவளியினுறழ்ச்சிவாரத்தினள புகோடல் - யான்கூறியவாறன்றியுந்தியிற்றோன்றுங்காற்றின துதிரிதருங்கூற் றின்கண்ணேமாத்திரைகூறிக்கோடலும்—அகத்தெழுவளியிசையரிறபநாடிக் கோடல் - மூலாதாரத்தி லெழுகின்றகாற்றி னோசையைக்குற்றமறநாடிக் கோடலும் — அந்தணர்மறைத்தே - பார்ப்பாரதுவேதத்துளதேயந்நிலை மையாண்டுணர்க—அஃதிவணுவலாது - அங்ஙனங்கோடலையீண்டுக்கூறலாகா மையினிந்நூற்கட்கூறாதே— எழுந்துபுறத்திசைக்கும் - உந்தியிற்றோன்றிப் புறத்தேபுலப்பட்டொலிக்கும்— மெய்தெரிவளியிசையளபுநுவன்றிசினே - பொருடெரியுங்காற்றினது துணிவிற்கேயான்மாத்திரைகூறினேனவற்றின துமாத்திரையையுணர்க.—(எ-று) இதனையிரண்டுசூத்திரமாக்கியுரைப்ப. இதுபிறன்கோட்கூறலென்னுமுத்திக்கினம். என்னைஉந்தியிலெழுந்தகாற்றி னைக்கூறுபடுத்தி மாத்திரைகாட்டிக்கோடலு மூலாதாரமுதலாகக் காற்றெழு மாறுகூறலும்வேதத்திற்குளதென் றிவ்வாசிரியர் கூறியம்மதம்பற்றி யவர் கொள்வதோர்பயனின்றாதலின்) உந்தியிலெழுந்தகாற்றுமுன்னர்த்தலைக்கட் சென்றுபின்னர் மிடற்றிலேவந்துபின்னர் நெஞ்சிலே நிற்றலை யுறழ்ச்சி வார மென்றார். அகத்தெழுவளியெனவேமூலாதாரமென்பதுபெற்றாம். இன்சா ரியையத்துச்சாரியையோடுகூட்டுக. ஏகாரந்தேற்றம். மெய்தெரிவளியெ

ணவேபொருடெரியாமுற்கும்விளையுமுயற்சியானுமெனினும் பொருடெரியாமையின் அவைகூடியப்பட்டன. எனவே சொல்லப்பிறந்துசொற்குறுப்பாமோசையைஇவ்வெழுத்தென்றுவேண்டுவனெனவுணர்க. நிலையும்வளியுமுயற்சியுமூன்றுமியலநடப்பதெழுத்தெனப்படுமேஎன்றாராகலின். (௨௰)

மூன்றாவது, பிறப்பியல் - முற்றிற்று. ஆக-சூ-௱௨.

## நான்காவது,

# புணரியல்.

மூன்றுதலையிட்டமுப்பதிற்றெழுத்தி , னிரண்டுதலையிட்டமுதலாகிரு பஃது, தறுநான்கீறொடுநெறிநின்றியலு, மெல்லாமொழிக்குமிறுதியுமுதலு, மெய்யேயுயிரென்றாயீரியல. ✻

மொழிமரபிற்கூறியமொழிகளைப்பொதுவகையாற்புணர்க்குமுறைமையுணர்த்தினமையிற் புணரியலென்றிவ்வோத்திற்குப் பெயராயிற்று. ஈண்டுமுறைமையென்றது மேற்செய்கையோத்துக்களுட் புணர்தற்குரிய வாகவீண்டுக்கூறியகருவிகளை) இச்சூத்திரத்தின்கருத்து மொழிமரபிற்கூறியமொழிக்குமுதலாமெழுத்து மொழிக்கீறாமெழுத்துமித்துணை யென்றலு மெல்லாமொழிக்குமீறுமுதலுமெய்யுமுயிருமல்லதில்லையென்றுவரையறுத்தலுமீறுமுதலுமாகவெழுத்து நாற்பத்தாறுளவோவென்றையுற்றார்க்கெழுத்துமுப்பத்துமூன்றுமேயங்ஙனமீறுமுதலுமாய் நிற்பதென்றையமறுத்தலுமாம். முதலிரண்டுதலையிட்டவிருபஃதீறுஅறுநான்காகுமூன்றுதலையிட்டமுப்பதிற்றெழுத்தினொடு - மொழிக்குமுதலாமெழுத்திரண்டைமுடியிலேயிட்டவிருபஃதுமொழிக்கீறாமெழுத்து இருபத்துநான்குமாகின்றமூன்றைமுடியிலேயிட்டமுப்பதாகியவெழுத்துக்களோடே — நெறிநின்றியலுமெல்லாமொழிக்கும்- வழக்குநெறிக்கணின்றுநடக்குமூவகைமொழிக்கும் — மெய்யேயுயிரென்றாயீரியலவிறுதியுமுதலும் - மெய்யுமுயிருமென்றுகூறப்பட்டவவ்விரண்டியல்பினையுடையவெழுத்துக்களேயீறுமுதலுமாவன. —(எ-று) இருபத்திரண்டுமுதலாவன பன்னிருயிருமொன்பதுயிர்மெய்யுமொழிமுதற்குற்

றியலுகரமுமாம். இருபத்துநான்கீறாவனபன்னீருயிரும்பதினொருபுள்ளியுமீற்றுக்குற்றியலுகரமுமாம். மெய்முற்கூறினார் நால்வகைப்புணர்ச்சியுமெய்க்கணிகழுமாறுயிர்க்கணிகழாவென்றற்கு. [உ-ம்] மரம் - எனமெய்முதலுமெய்யீறும். இலை - எனஉயிர்முதலுமுயிரீறும். ஆல் - எனஉயிர்முதலுமெய்யீறும். விளவெனமெய்முதலுமுயிரீறுமாம். மொழியாக்கமியல்பும்விகாரமுமெனவிரண்டாம். உயிர்தாமேநின்றுமுதலுமீறுமாதலியல்பு. அவைமெய்யோடுகூடிநின்றங்ஙனமாதல்விகாரம். (௧)

அவற்றுண்; மெய்யீறெல்லாம்புள்ளியொடுநிலையல். *

இது முற்கூறியவாற்றாற்றனிமெய்முதலாவான்சென்றதனைவிலக்கலினெய்தியதுவிலக்கிற்று. அவற்றுள் - முற்கூறியமெய்யுமுயிருமென்றவிரண்டனுள் — மெய்யீறெல்லாம்புள்ளியொடுநிலையல் - மெய்மொழிக்கீறாயவையெல்லாம்புள்ளிபெற்றுநிற்கும். — (எ-று) எனவேமொழிக்குமுதலாயினவையெல்லாம்புள்ளியிழந்துயிரேறிநிற்குமென்றாயிற்று. இன்னுமீற்றுமெய்புள்ளிபெற்றுநிற்குமென்றதனானேயுயிர்முதன்மொழிதம்மேல்வந்தாலவையுயிரேறவிடங்கொடுத்துநிற்குமென்பதுங்கூறினாராயிற்று. இவ்விதிமுற்கூறியதன்றோவெனின் ஆண்டுத்தனிமெய்பதினெட்டும் புள்ளிபெற்றுநிற்குமென்றுமவைதாமுயிரேறுங்காற்புள்ளியிழந்துநிற்குமென்றுங்கூறினார். ஈண்டுமெய்முதன்மெய்யீறெனப்பொருளுணர்க்கவேண்டினமையின் மொழிமுதன்மெய்களும்புள்ளிபெறுமோவென்றையுற்றவையமகற்றக்கூறினானென்றுணர்க. மரம் - எனப்புள்ளிபெற்றுநின்றது. அரிதெனவந்துழிமரமரிதென்றேறிமுடிந்தவாறுகாண்க. (௨)

குற்றியலுகரமுமற்றெனமொழிப. *

இது முன்னர்ப்புள்ளியீற்றுமுன்னுயிர்தனித்தியலாதென்று மெய்க்கெய்துவிக்கின்றகருவியையெதிரதுபோற்றி யுயிர்க்குமெய்துவிக்கின்றகருவிச்சூத்திரம். குற்றியலுகரமுமற்றெனமொழிப - ஈற்றுக்குற்றியலுகரமும்புள்ளியீறுபோலவுயிரேறவிடங்கொடுக்குமென்றுகூறுவர்புலவர். — (எ-று)இம்மாட்டேறொருபுடைச்சேறல்புள்ளிபெறாமையின்) அங்ஙனமுயிரேறுங்காற் குற்றுகரங்கெட்டுப்போக நின்றவொற்றின்மேலுயிரேறிற்றென்று கொள்ளற்க. நாகரிதென்புழி - முன்னர்க்குற்றுகரவோசையும்பின்னருயிரோசையும்பெற்

ரவ்விரண்டுங்கூடி நின்றல்லதப்பொருளுணர்த்தலாகாமையின். இதுஉயிரோடு ங்கூடி நிற்குமென்றார். (ஈ)

உயிர்மெய்யீறுமுயிரீற்றியற்றே. *

இது மெய்யேயுயிரொன்றாயீரியல வென்றவுயிர்க்கணிகழ்வதோராயமக்த்தியது. உயிர்மெய்யென்பதோரீறுண்டேனுமதுபுணர்க்கப்படாததவுமுயிரா யேயடங்குமென்றலின்.) உயிர்மெய்யீறும் - உயிர்மெய்மொழியினதீற்றின் கணின்றதும்— உயிரீற்றியற்றே- உயிரீற்றினியல்பையுடைத்து. உம்மையா னிடைநின்றவுயிர்மெய்யுமுயிரீற்றினியல்பையுடைத்து. — (எ-று) உம்மை எச்சவும்மை. ஈற்றினுமிடையினுநின்றனவுயிருளடங்குமெனவே முதனின்ற னமெய்யுளடங்குமென்றார். இதனானே மேல் விள வென்றாற்போலுமுயிர் மெய்களெல்லாம் அகரவீறென்று புணர்க்குமாறுணர்க. வரகு - இதனைமே லுயிர்த்தொடர்மொழியென்ப. முன்னர் மெய்யின்வழியதென்றதோரொழு த்திற்கென்றுணர்க. இத்துணையுமொழிமரபினொழிவுகூறிற்று. (ச)

உயிரிறுசொன்முனுயிர்வருவழியு, முயிரிறுசொன்முன்மெய்வருவழியு, மெய்யிறுசொன்முனுயிர்வருவழியு, மெய்யிறுசொன்முன்மெய்வருவழியுமென், றிவ்வெனவறியக்கிளக்குங்காலை, நிறுத்தசொல்லேகுறித்துவருகிளவியென், றாயீரியலபுணர்நிலைச்சுட்டே. *

இது மேற்கூறும்புணர்ச்சிகளெல்லாமிருமொழிப் புணர்ச்சியல்ல தில்லையென்பதூஉமஃதெழுத்துவகையானன்காமென்பதூஉமுணர்த்துகின்றது. உயிரிறுசொன்முனுயிர்வருவழியும் - உயிர் தனக்கீறாகவிறுஞ்சொல்லின் முன் னுயிர்முதலாகிய மொழிவருமிடமும் — உயிரிறுசொன்முன் மெய்வருவழியும் - உயிர்தனக்கீறாகவிறுஞ்சொல்லின்முன்னர் மெய்முதலாகியமொழிவருமிடமும் — மெய்யிறுசொன்முனுயிர்வருவழியும் - மெய் தனக்கீறாகவிறுஞ் சொல்லின்முன்னருயிர்முதலாகிய மொழிவருமிடமும் — மெய்யிறுசொன் முன்மெய்வருவழியும்- மெய்தனக்கீறாகவிறுஞ்சொல்லின்முன்னர்மெய்முதலாகியமொழிவருமிடமும்— என்றுபுணர்நிலைச்சுட்டு - என்றுசொல்லப்பட்டவொன்றினோடொன்றுகூடுநிலைமையாகியகருத்தின்கண் — இவ்வெனவறியக்கிளக்குங்காலை - அவற்றையித்துணையெனவரையறையையெல்லாருமறியயாங்கூறுங்காலத்து— நிறுத்தசொல்லேகுறித்துவருகிளவியென்றாயீரியல-

முன்னர்நிறுத்தப்பட்டசொல்லுமதனை முடித்தலைக்குறித்துவருஞ் சொல்லும்என்றுசொல்லப்பட்டவவ்விரண்டியல்பினையுடைய.—(எ-று) எனவேநான்குவகையானுங்கூடுங்கா லிருமொழியல்லது புணர்ச்சியின் றென்றாராயிற்று. [உ-ம்] ஆவுண்டு- ஆவலிது- ஆவிலை - ஆல்வீழ்ந்தது - எனமுறையேகாண்க. விளவினைக் குறைத்தான் என்ற வழிச்சாரியையு முருபுநிலை மொழியாயே நிற்குமென்பதுநோக்கி யதனைநிறுத்தசொல்லென்றுமுடிக்குஞ்சொல்லைக்குறித்துவருகிளவியென்றுங்கூறினார். இதனானேநிலைமொழியும்வருமொழியுங்கூறினார். முன்னர்மெய்யேயுயிரொன்றதொருமொழிக்கு. இஃதிருமொழிக்கென்றுணர்க. (ரு)

அவற்று; ணிறுத்தசொல்லினீறாகெழுத்தொடு, குறித்துவருகிளவிமுதலெழுத்தியையப், பெயரொடுபெயரைப்புணர்க்குங்காலும், பெயரொடுதொழிலைப்புணர்க்குங்காலுந், தொழிலொடுபெயரைப்புணர்க்குங்காலுந், தொழிலொடுதொழிலைப்புணர்க்குங்காலு, மூன்றேதிரிபிடனொன்றேயியல்பென வாங்கநான்கேமொழிபுணரியல்பே. ※

இது முன்னர்எழுத்துவகையானான்குபுணர்ச்சியெய்திய விருவகைச்சொல்லுஞ்சொல்வகையானுநான்காகுமென்பதூம் அங்ஙனம்புணர்வது சொல்லுஞ்சொல்லுமன்றுஎழுத்துமெழுத்துமென்பதூமுணர்த்துகின்றது. அவற்றுள் - நிலைமொழிவருமொழியென்றவற்றுள் — நிறுத்தசொல்லினீறாகெழுத்தொடுகுறித்துவருகிளவிமுதலெழுத்தியைய - முன்னர் நிறுத்தப்பட்டசொல்லினதீறாகின்ற எழுத்தோடே யதனைமுடிக்கக் கருதிவருகின்றசொல்லினதுமுதலெழுத்துப்பொருந்த—பெயரொடுபெயரைப்புணர்க்குங்காலும்- பெயர்ச்சொல்லோடுபெயர்ச்சொல்லைக்கூட்டுமிடத்தும்— பெயரொடுதொழிலைப்புணர்க்குங்காலும்- பெயர்ச்சொல்லோடுதொழிற்சொல்லைக்கூடடுமிடத்தும்—தொழிலொடுபெயரைப்புணர்க்குங்காலும் - தொழிற்சொல்லோடுபெயர்ச்சொல்லைக்கூட்டுமிடத்தும்— தொழிலொடுதொழிலைப்புணர்க்குங்காலும்- தொழிற்சொல்லோடுதொழிற்சொல்லைக்கூட்டுமிடத்தும்— மூன்றேதிரிபிடனொன்றே யியல்பெனவாங்கநான்கே - திரியுமிடமூன்றுஇயல்பொன்றுஎன்றுமுந்துநூலிற்கூறியவந்நான்கிலக்கணமுமே— மொழிபுணரியல்பு - ஈண்டுமொழிகடம்முட்கூடுமிலக்கணம்.—(எ-று) [உ-ம்]

சாத்தன்கை - சாத்தனுண்டான் - வந்தான்சாத்தன் - வந்தான்போயினான் - என
முறையேகாண்க. இவைநான்கிலக்கணத்தோடுங்கூடப்படுதிறனும். இடையுமு
ரியுந்தாமாகநில்லாமையிற்பெயர்வினையேகூறினார். இடைச்சொல்லு முரிச்
சொல்லும்புணர்க்குஞ்செய்கைப்பட்டுழிப்புணர்ப்புச்சிறுபான்மை. பெயர்
ப்பெயரும்ஒட்டுப்பெயருமெனவிரண்டுவகைப்படும்பெயர். தெரிநிலைவினை
யுங்குறிப்புவினையுமெனவிருவகைத்துவினை. நிலைமொழியதீற்றெழுத்துமுன்
னர்ப்பிறந்துகெட்டுப்போகவருமொழியின்முதலெழுத்துப்பின்பிறந்துகெ
ட்டமையான்முறையேபிறந்துகெடுவனவொருங்குநின்றுபுணருமாறின்மை
யிற்புணர்ச்சி யென்பதொன்றின்றாம் பிறவெனின் அச்சொற்களைக் கூறுகின்
றாருங்கேட்கின்றாரும்அவ்வோசையையிடையறவுபடாமை யுள்ளத்தின்க
ண்ணே யுணர்வாராதலின் அவ்வோசைகேடின்றி யுள்ளத்தின்கணிலைபெற்றுப்
புணர்ந்தனவேயாம். ஆகவேபின்னர்க்கன்கூடாகப்புணர்க்கின்றபுணர்ச்சியு
முடிந்தனவேயாமென்றுணர்க. இனிமுயற்கோடுண்டென்றால்அதுகுறித்துவ
ிளவியன்மையிற்புணர்க்கப்படாது. இதுதான்இன்றென்றாற்புணர்க்கப்படு
மென்றுணர்க. (௬)

அவைதா; மெய்பிறிதாதன்மிகுதல்குன்றலென் , றிவ்வெனமொழிபதி
ரியுமாறே. *

இதுமுற்கூறியமூன்றுதிரிபுமாமாறுகூறுகின்றது. அவைதாந்திரியுமாறு - மு
ன்னர்த்திரிபென்றுகூறியவவைதாந்திரிந்துபுணருநெறியை — மெய்பிறிதா
தாதன்மிகுதல்குன்றலென்றிவ்வெனமொழிப - மெய்வேறுபடுதல்மிகுதல்கு
ன்றலென்று கூறப்படுமிம்மூன்று கூற்றையுடைய வென்று கூறுவராசிரி
யர். — (எ-று) இம்மூன்றுமல்லாதியல்பாமென்றுணர்க. இவைவிகற்பிக்
கப்படுதிறனுதாரணமாம். மட்குடம் - மலைத்தலை - மரவேர் - இவைபெயரொடு
பெயர்புணர்ந்தமூன்றுதிரிபு. மண்மலை - யென்பதியல்பு. சொற்கேட்டான் -
பலாக்குறைத்தான் - மரநட்டான் - இவை பெயரொடு தொழிலடணர்ந்த
மூன்றுதிரிபு. கொற்றன்வந்தான் - இஃதியல்பு. வந்தானற்சாத்தன் - கொடா
ப்பொருள் - ஓடுநாகம் - இவை தொழிலோடுபெயர்புணர்ந்தமூன்றுதிரிபு.
வந்தான்சாத்தன் - இஃதியல்பு. வந்தாற்கொள்ளும் - பாடப்போயினான் -
சாநின்றான் - இவைதொழிலோடுதொழில்புணர்ந்தமூன்றுதிரிபு. வந்தான் -

கொண்டான்- இஃதியல்பு. எனமூன்றுதிரிபென்னாதிடனென்றதனானொருபுணர்ச்சிக்கண்மூன்றுமொருங்கே வரப்பெறுமென்றுணர்க . மகத்தாற்கொண்டான்- இது அங்ஙனம்வந்தவாறுமகரவீற்றுநாட்பெயர்க்கிளவியென்னுஞ்சூத்திரத்தானுணர்க. ஈண்டுவருவனவுங்காண்க. (எ)

நிறுத்தசொல்லுங்குறித்துவருகிளவியு , மடையொடுதோன்றினும்புணர்நிலைக்குரிய. *

இது நிலைமொழியடையடுத்தும்வருமொழியடையடுத்துமிவ்விருமொழியுமடையடுத்தும் புணருமென வெய்திய தன்மேற் சிறப்புவிதிகூறுகின்றது . நிறுத்தசொல்லுங்குறித்துவருகிளவியும் - நிலைமொழியாகநிறுத்தினசொல்லும் அதனைக்குறித்துவருசொல்லும் — அடையொடுதோன்றினும்புணர்நிலைக்குரிய -தாமேபுணராதோரோவோர்சொல்லடையடுத்துவரினுமீரண்டடையடுத்துவரினும்புணர்நிலைமைக்குரிய.—(எ-று) அடையாவன·உம்மைத்தொகையும்இருபெயரொட்டுப்பண்புத்தொகையுமாம்.[உ-ம்] பதினாயிரத்தொன்று-ஆயிரத்தொருபஃது-பதினாயிரத்திருபஃது-எனவரும். இவ்வடைகள்ஒருசொல்லேயாம். வேற்றுமைத்தொகையு முவமத்தொகையுமுடியப்பண்புத்தொகையும்வினைத்தொகையும் பிளந்துமுடியாமையின்ஒருசொல்லேயாம். அன்மொழித்தொகையுந் தனக்குவேறோர் முடிபின்மையின்ஒருசொல்லேயாம் . இத்தொகைச்சொற்களெல்லாம் அடையாய்வருங்காலத்தொருசொல்லாய்வருமென்றுணர்க . உண்டசாத்தன்வந்தான்- உண்டுவந்தான்சாத்தன்- என்பனவும்ஒருசொல்லேயாம். (அ)

மருவின்றொகுதிமயங்கியன்மொழியு , முரியவையுளவேபுணர்நிலைச்சுட்டே. *

இது மரூஉச்சொற்களும் புணர்ச்சிபெறுமென்பதூஉம் நிறுத்தசொல்லுங்குறித்துவருகிளவியுமாய்ப் பொருளியைபில்லனவும் புணர்ச்சிபெற்றாற்போலநிற்குமென்பதூஉமுணர்த்துகின்றது. மருமொழியும்- இருவகையாகிமருவியசொற்களும்— இன்றொகுதிமயங்கியன்மொழியும் - செவிக்கினிதாகச்சொற்றிரளிடத்து நிறுத்தசொல்லுங் குறித்துவரு கிளவியுமா யொட்டினாற்போலநின்று பொருளுணர்த்தாது பிரிந்துபின்னர்ச்சென்றொட்டிப்பொருளுணர்த்தமயங்குதலியன்றசொற்களும் — புணர்நிலைச்சுட்டுரியவையுள -

புணருநிலைமைக்கருத்தின்கணுரியனவுள· —(எ-று) மொழியுமென்பதனைமருவென்பதனோடுங்கூட்டுக· இன்றொருகுதியென்றார் · பாவென்னுமுறப்புதிகழப்பொருளொட்டாமற்சான்றோர்சொற்களைச்சேர்த்தவிஃ·)[உ-ம்]முன்றில்- மீகண்- இவைஇலக்கணத்தோடுபொருந்தியமரூ. இலக்கணமல்லாமருவழங்கியன்மருங்கின்மருவொடுதிரிநவுமென்புழிக்காட்டுதும்· இனிஇரும்புதிரித்தன்னமாயிருமருப்பிற் பரலவல்லடையவிலைதெறிப்ப வென்புழிமருப்பினிலையென்றொட்டியாண்டாவதன்றொகையாய்ப்பொருடந்து புள்ளியீற்றுமுன்னுயிர்தனித்தியலாதென்றுயிரோடுமுடிந்துமயங்கிநின்றது. ஆயின்மருப்பிற்பரலென்றுமெய்பிறிதாயொட்டிநின்றவாறென்னையெனின்மருப்பினையுடையபரலெனவேற்றுமைத்தொகைப்பொருளுணர்த்தாமையின்அஃதச்செய்யுட்கின்னோசைநிகழ்தற்குப்பகரத்தின்முன்னர் நின்றனகரம் றகரமாத்திரிந்துநின்றதுணையேயாய்ப்புணர்ச்சிப்பயனின்றிநின்றது · இங்ஙனம்புணர்ச்சியெய்தினாற்போல மாட்டிலக்கணத்தின்கண்ணு மொழிமாற்றின்கண்ணுநிற்றல்சொற்கியல்பென்றற்கன்றேஆசிரியர்இன்றொருகுதியென்றதென்றுணர்க · கருங்கா லோமைக் காண்பின் பெருஞ்சினையென்புழி ஓமைச்சினையென்றொட்டிஓமையினதுசினையெனப்பொருடருகின்றதின் னோசைதருதற்குக்ககரவொற்றுமிக்குக்காண்பினென்பதனோடு மொட்டினாற்போலநின்றது· தெய்வமால்வரைத்திரு முனியருளாலென்புழித்தெய்வவரையென்றொட்டித்தெய்வத்தன்மையையுடையவரையெனப்பொருடருகின்றதின்னோசைதருதற்குமாலென்பதனோடுமொட்டினாற்போலக்குறைந்துநின்றது·எனமூன்றுதிரிபும்வந்தவாறுகாண்க·இனியெச்சத்தின்கண்ணும்எயிறுபடையாகவெயிற்கதவிடாபொன்னோடைப்புகரணிநுதற்றுன்னருந்திறற்கமழ்கடாத்துக்கயிறுபிணிக்கொண்டகவிழ்மணிமருங்கிற் பெருங்கையானையிரும்பிடர்த்தலையிருந்து மருந்தில்கூற்றத்தருந்தொழில்சாவாவெனமாட்டாயொட்டிநின்றதுகயிறுபிணிக்கொண்ட என்பதனோடு மொட்டினாற்போல நின்றொற்றடுத்தது·இன்னோசைபெறுதற்கு)பிறசான்றோர்செய்யுட்கண்இவ்வாறும்பிறவாறும்புணர்ச்சியில் வழிப்புணர்ச்சிபெற்றாற்போல நிற்பனவெல்லாவற்றிற்குமிதுவேயோத்தாகக்கொள்க· (கூ)

வேற்றுமைகுறித்தபுணர்மொழிநிலையும் , வேற்றுமையல்வழிப்புணர்

மொழிநிலையு, மெழுத்தேசாரியையாயிருபண் பினெழுக்கல்வலிய புணருங்
காலை. *

இது மூவகைத்திரிபினுள் மிக்குப்புணரும் புணர்ச்சியிருவகைத்தென்கின்ற
து· புணருங்காலை - நால்வகைப்புணர்ச்சியுண்மிக்கபுணர்ச்சி புணருங்காலத்
து— வேற்றுமைகுறித்தபுணர்மொழிநிலையும் - வேற்றுமைப்பொருண்மை
யினைக்குறித்தப்புணர்மொழியினதுதன்மையும் — வேற்றுமையல்வழிப்புண
ர்மொழிநிலையும் - வேற்றுமையல்லாதவல்வழியிடத்துப்புணருமொழியின
துதன்மையும்— எழுத்தேசாரியையாயிருபண்பினெழுக்கல்வலிய - எழுத்
துமிகுதலுஞ் சாரியைமிகுதலுமாகிய விரண்டுகுணத்தினானுஞ் சொல்லுத
லைத்தமக்குவலியாகவுடைய · — (எ - று) எனவேயேனைப்புணர்ச்சிகளுக்கி
த்துணை வேறுபாடின்றெனவுணர்க · [உ-ம்] விளங்கோடு - இதுஎழுத்துப்
பெற்றது· மகவின்கை- இதுசாரியைபெற்றது· இனியல்வழிக்கண் விளக்கு
றிது- இதுஎழுத்துப்பெற்றது· பனையின்குறை- இதுசாரியைபெற்றது·
இதற்குப்பனைகுறைந்ததென்பதுபொருளாம் · இதுஅளவுப்பெயர் · இனி
யொழுக்கல்வலியவென்றதனானிக்கூறிய விரண்டுமெழுத்துஞ்சாரியையுமுட
ன் பெறுதலுங்கொள்க · அவற்றுக்கோடென்பது வேற்றுமைக்கணிரண்டு
ம்பெற்றது· கலத்துக்குறையென்பதல்வழிக்கணிரண்டும்பெற்றது· இதற்கு
க்கலங்குறைந்ததென்பது பொருளாம் . இயல்புகணத்துக்கண் இவ்விரண்டு
முடன்பெறுதலின்று · அல்வழிமுற்கூறாததுவேற்றுமையல்லாததல்வழியெ
னவேவேண்டுதலின்) எழுத்துப்பேறுயாப்புடைமையானுமெழுத்தினாற்சா
ரியையாதலானுமெழுத்துமுற்கூறினார்·வேற்றுமைமேலைச்சூத்திரத்தேகூறு
கின்றார்· அல்வழியாவன அவ்வுருபுகடொக்கும்விரிந்துநில்லாதுபுணர்வன·அ
வையெழுவாய்வேற்றுமையாறு பயனிலையோடும்புணர்ந்தபுணர்ச்சியும்- வி
ளிவேற்றுமைதல் பொருளோடுபுணர்ந்தபுணர்ச்சியும்- முற்று -பெயரோடு
ம்வினையோடும்புணர்ந்தபுணர்ச்சியும்- பெயரெச்சமும்வினையெச்சமும்பெ
யரோடும் வினையோடும் புணர்ந்தபுணர்ச்சியும் உவமத்தொகையும்உம்மைத்
தொகையும் இருபெயரொட்டுப்பண்புத்தொகையும் இடைச்சொல்லுமுரிச்
சொல்லும் பெயரோடும் வினையோடும் புணர்ந்தபுணர்ச்சியும் அன்மொழித்
தொகைபொருளோடுபுணர்ந்தபுணர்ச்சியும் - பண்புத்தொகையும் வினைத்

தொகையும்விரிந்துநின்றவழிப்புணர்ந்தபுணர்ச்சியுமெனவுணர்க. (௰)

ஐஒடுகுஇன்அதுகண்ணென்னு,மவ்வாறென்பவேற்றுமையுருபே. *

இது மேல்வேற்றுமையெனப்பட்டவவற்றதுபெயருமுறையுந்தொகையும் உணர்த்துகின்றது. வேற்றுமையுருபு - முற்கூறியவேற்றுமைச்சொற்களை — ஐஒடுகுஇன்அதுகண்ணென்னுமவ்வாறென்ப - ஐ - ஒடு - கு - இன் - அது - கண் - என்றுசொல்லப்படும் அவ்வாறுருபுமென்றுசொல்வராசிரியர். — (எ - று) மேற்சொல்லதிகாரத்தெழுவாயையும்விளியையுங்கூட்டிவேற்றுமையெட்டென்பாராலெனின் ஐமுதலியவேற்றுமையாறுந்தொக்கும் விரிந்தும்பெரும்பான்மையும் புலப்பட்டுநின்றுபெயர்ப்பொருளைச்செயப்படு பொருண்முதலியனவாக வேறுபாடுசெய்துபுணர்ச்சியெய்துவிக்குமென்றற் கீண்டாறேயென்றார். ஆண்டெழுவாயும்விளியுஞ்செயப்படுபொருண்முதலியவற்றினின்றுந் தம்மைவேறுபடுத்துப் பொருண்மாத்திரமுணர்த்திநின்றும் விளியாயெதிர்முகமாக்கிநின்று மிங்ஙனஞ்சிறுபான்மையாய்ப் புலப்படநில்லா வேறுபாடுடையவேனுமவையுமொருவாற்றான்வேற்றுமையாயினவென்றற்காண் டெட்டென்றானெனவுணர்க. (௰௧)

வல்லெழுத்துமுதலியவேற்றுமையுருபிற், கொல்வழியொற்றிடைமிகுதல்வேண்டும். *

இது நான்காவதற்குமேழாவதற்குமுருபியலைநோக்கியதோர்கருவிகூறுகின்றது. வல்லெழுத்துமுதலியவேற்றுமையுருபிற்கு - வல்லெழுத்தடியாய்நின்றநான்காவதற்குமேழாவதற்கும் — ஒல்வழியொற்றிடைமிகுதல்வேண்டும் - பொருந்தியவழிவல்லொற்றாயினு மெல்லொற்றாயினுமிடைக்கண்மிக்குப்புணர்தலைவிரும்புமாசிரியன். — (எ - று) வரையாதொற்றெனவேவல்லொற்றுமெல்லொற்றும்பெற்றாம். [உ - ம்] மணிக்கு - மணிக்கண் - தீக்கு - தீக்கண் - மனைக்கு - மனைக்கண் - எனவும். வேய்க்கு - வேய்க்கண் - ஊர்க்கு - ஊர்க்கண் - பூழ்க்கு - பூழ்க்கண் - எனவுயிரீறுமொன்றினும்புள்ளியீறுமொன்றினும்பெரும்பான்மைவல்லொற்றுமிக்குவரும். தங்கண் - நங்கண் - நுங்கண் - எங்கண் - எனமெல்லொற்றுமிக்கது. இவற்றிற்குநிலைமொழிமகரக்கேடுருபியலிற்கூறுப. ஆங்கண் - ஈங்கண் - ஊங்கண் - என்பனசுட்டெழுத்துநீண்டுநின்றன. இவற்றிற்கொற்றுக்கேடுகூறுதற்கொற்றின்று. இனிநான்கனுருபிற்குமெல்லொ

ற்றுமிகாதென்றுணர்க. இனியொல்வழியென்றதனான் ஏழாமுருபின்கண் - நம்பிகண் என இகரவீற்றின்கண்ணும் நங்கைகண்என ஐகாரவீற்றின்கண்ணும் தாய்கண் என யகரவீற்றின்கண்ணும் அரசர்கண் என ரகரவீற்றின்கண்ணும் - ஒற்றுமிகாமைகொள்க. இனி மெய்ப்பிறிதாதலுமுன்னேகூறுதுமிகுதலை முற்கூறியவதனானே பொற்கு-பொற்கண் - வேற்கு-வேற்கண் - வாட்கு-வாட்கண் - எனத்திரிந்துமுடிவனவுங்கொள்க. இதனானே அவன்கண் - அவள்கண் - எனவுயர்திணைப்பெயர்க்கண் ஏழனுருபு இயல்பாய்வருதலுங்கொள்க. இவற்றிற்குன்றியபுணர்ச்சிவருமேனுங்கொள்க. கொற்றிக்கு - கொற்றிகண் - கோதைக்கு - கோதைகண் - எனவிரவுப்பெயர்க்குமிதனானேகொள்க. ௱௨

ஆறனுருபினகரக்கிளவி, யீறுககரமுனைக்கெடுதல்வேண்டும். *

இது ஆறாவதற்குத்தொகைமரபைநோக்கியதோர்கருவிகூறுகின்றது. ஆறனுருபினகரக்கிளவி - அதுவென்னுமாறனுருபின்கணின்றஅகரமாகியவெழுத்து — ஈறுககரமுனைக்கெடுதல்வேண்டும் - நெடுமுதல்குறுகுமொழிகட்கீறுகுபுள்ளி யகரமொடுநிலையுமென விதித்ததனுளதாகிய அகரத்தின்முன்னர்த்தான்கெடுதலைவிரும்புமாசிரியன்.— (எ-று) தமது - நமது - எமது - நுமது - தனது - எனது - நினது - எனவரும். இது நிலைமொழிக்கோரகரம்பெறுமெனவிதியாதுருபகரமேறிமுடியுமெனவிதித்தால்வருங்குற்றமுண்டோவெனின். நின்றகூறுவலெனவகேண்மதியென்றாற்போலவாறாவதற்குரியஅகரவுருபின்முன்னருமோரகரவெழுத்துப்பேறுநிலைமொழிக்கண் வருதலுளதாகக்கருதினராதலினாறனுருபிற்குநான்கனுருபிற்கும்பொதுவாகநிலைமொழிக்கணகரப்பேறுவிதித்து அதுவென்னுமொருமையுருபுவந்தாலாண்டுப்பெற்றுநின்றஅகரத்தின்முன்னரதுவென்பதன்கண்அகரங்கெடுகவென்றீண்டுக்கூறினராதலினதற்குக்குற்றமுண்டென்றுணர்க. (௱௩)

வேற்றுமைவழியபெயர்புணர்நிலையே. *

இது வேற்றுமைபெயர்க்கணிற்குமாறுகூறுகின்றது. வேற்றுமைபெயர்வழிய - வேற்றுமைகள்பெயரின்பின்னிடத்தனவாம் — புணர்மொழிநிலை - அவற்றோடுபுணருநிலைமைக்கண்.— (எ-று) [உ-ம்] சாத்தனை - சாத்தனொடு - சாத்தற்கு - சாத்தனின் - சாத்தனது - சாத்தன்கண் - எனவரும். மற்றிது - கூறிய முறையினென்னும் வேற்றுமை யோத்திற் சூத்திரத்தாற் பெறுது மெனின் .

பெயரொடுபெயரைப்புணர்த்தன்முதலிய நால்வகைப்புணர்ச்சியினையும்வே
ற்றுமையல்வழியென விரண்டாகவடக்குதலிற்றெழிற்பின்னு முருபுவருமெ
னவெய்தியதனைவிலக்குதற்கீண்டுக்கூறினர். ஆயினிவ்விலக்குதல் வினையியன்
முதற்சூத்திரத்தாற்பெறுதுமெனின் அது முதனிலையைக் கூறிற்றென்பதா
ண்டுணர்க. (௰௪)

உயர்திணைப்பெயரோயஃறிணைப்பெயரொன், றாயிரண்டென்பபெயர்நி
லைச்சுட்டே. ✻

இது முற்கூறியபெயர்கட்குப்பெயருமுறையுந்தொகையுங்கூறுகின்றது.
சுட்டுநிலைப்பெயர் - பொருளையொருவர்கருதற்குக்காரணமான நிலைமையை
யுடையபெயர்களை — உயர்திணைப்பெயரோயஃறிணைப்பெயரொன்றாயிரண்
டென்ப - உயர்திணைப்பொருளையொருவன்கருதுதற்குக்காரணமான பெய
ரும்அஃறிணைப்பொருளையொருவன்கருதுதற்குக்காரணமானபெயரும்என்
னுமவ்விரண்டென்றுகூறுவராசிரியர்.—(எ-று) பெயரியலுள் அவன் இவன்
உவன் என்பதுமுதலாகவுயர்திணைப்பெயரும் அது இது உது வென்பதுமுத
லாகஅஃறிணைப்பெயருமாமாறவற்றிற்கிலக்கணங்கூறுகின்றாரீண்டுக்குறியிட்
டார்டன்மாத்திரையேகூறினரென்றுணர்க. இனி-கொற்றன்- கொற்றி- என்
றாற்போலும்விரவுப்பெயரும்- கொற்றன்குறியன்- கொற்றிகுறியள்-கொற்
றன்குளம்பு-கொற்றிகுறிது-எனப்பின்வருவனவற்றாற்றிணைதெரிதலி னிருதி
ணைப்பெயரின்கண் அடங்கும்.கொற்றன்செவி- கொற்றிசெவிஎன்பனவும்பி
ன்னர்வருகின்றவினைகளாற்றிணைவிளங்கியடங்குமாறுணர்க. இனிஅஃறிணை
விரவுப் பெயரியல்பு மாருளவே என்றாற்போலப் பிறண்டுமோதுதல்பற்றிநி
லையென்றதனுன்விரவுப்பெயர்கோடலுமொன்றும். (௰௫)

அவற்றுவழிமருங்கிற்சாரியைவருமே. ✻

இது சாரியைவருமிடங்கூறுகின்றது. அவற்றுவழிமருங்கின் - அச்சொல்
லப்பட்டவிருவகைப்பெயர்களின்பின்னாகியவிடத்தே — சாரியைவரும் -
சாரியைச்சொற்கள்வரும்.—(எ-று) [உ-ம்] ஆடூஉவின்கை-மகடூஉவின்கை-
பலவற்றுக்கோடுஎனப்புணரியனிலையிடைப்பொருணிலைக்குதவிவந்தன. சாரி
யையென்றதன் பொருள்வேறாகிநின்ற விருமொழியுந் தம்மிற்சார்தற்பொரு
ட்டியைந்துநின்றது. (௰௬)

அவைதா; மின்னேவற்றேயத்தேயம்மே, யொன்னேயானேயக்கேயிக்கே,யன்னென்கிளவியுளப்படப்பிறவு,மன்னவென்பசாரியைமொழியே.*

இது அச்சாரியைகட்குப்பெயருமுறையுந்தொகையுமுணர்த்துகின்றது. அவைதாம் - முன்னர்ச்சாரியையெனப்பட்டஅவைதாம் — இன்னே வற்றேயத்தேயம்மே யொன்னேயானே யக்கேயிக்கே யன்னென்கிளவியுளப்படவன்னவென்ப- இன்னும். வற்றும்-அத்தும்-அம்மும்-ஒன்னும்-ஆனும்-அக்கும்-இக்கும்- அன்னென்னுஞ்சொல்லோடுகூடவொன்பதாகியஅத்தன்மையையுடையனவும் — பிறவுஞ்சாரியைமொழியென்ப- அவ்வொழிந்தனவுஞ்சாரியைச்சொல்லாமென்பராசிரியர். — (எ-று) பிறவாவன - தம்-நம்-நும்-உம்: ஞான்று-கெழு-எ-ஐ- என்பனவாம். இவற்றுள்ஞான்றொழிந்தனவெடுத்தோதுவராசிரியர். எடுத்தநறவின்குலையலங்காந்தள் இது வினைத்தொகை. சாரியையன்று. இன்சாரியைவழக்குப்பயிற்சியும்பலகாலெடுத்தோதப்படுதலும்பொதுவகையானேறியவழித்தானே சேறலுமாகிய சிறப்புநோக்கி முன்வைத்தார். வற்றும்-அத்தும்-இன்போலமுதறிரியுமாகலானுஞ்செய்கையொப்புமையானும்அதன்பின்வைத்தார். அம்மீறுதிரியுமாதலிற்றிரிபுபற்றியதன்பின்வைத்தார். ஒன்னீறுதிரியுமேனும்வழக்குப்பயிற்சியின்றிநான்காமுருபின்கட்டிரிதலினதன்பின்வைத்தார். ஆன்பொருட்புணர்ச்சிக்குமுருபுபுணர்ச்சிக்கும்வருமென்றுஅதன்பின்வைத்தார். அக்கீறுதிரியுமேனுமுருபு புணர்ச்சிக்கண்வாராமையினதன்பின்வைத்தார். இக்குமுதறிரியுமேனுஞ்சிறுபான்மைபற்றியதன்பின்வைத்தார். அன் - இன்போலச்சிறத்தலிற்பின்வைத்தார். ஆனுருபிற்குமான்சாரியைக்கும்இன்னுருபிற்குமின்சாரியைக்கும் வேற்றுமையாதெனின் அவைசாரியையானவிடத்தியாதானுமோருருபேற்றுமுடியும். உருபாயினவிடத்துவேற்றுருபினையேலாதென்றுணர்க. இனிமகத்திக்கை யென்புழித்தகரவொற்றுந் தகரஉகரமும் வருமென்றுகோடுமெனின் இருளத்துக்கொண்டானென்றால் அத்துவேண்டுதலினுண்டும் அத்துநின்றுகெட்டதென்றுகோடும் - அக்கு இக்கு என்பனவும்பிரித்துக்கூட்டிக்கிடக்கும் தாழ்க்கோலென அக்குப்பெற்று நிற்றலானும் ஆடிக்குஎன்புழிக் குகரநான்கனுருபாகாமையானும் இவை சாரியையாமாறுணர்க.

(௰௭)

அவற்றுள்; இன்னினிகரமாவினிறுதி, முன்னர்க்கெடுதலுரித்துமாகும். *

இதுமுற்கூறியவற்றுளின்சாரியைமுதறிரியுமாறுகூறுகின்றது. அவற்றுள் - முற்கூறியசாரியைகளுள் — இன்னினிகரம் - இன்சாரியையதிகரம் — ஆவினிறுதிமுன்னர் - ஆவென்னுமோரெழுத்தொருமொழிமுன்னர் — கெடுதலுரித்துமாகும் - கெட்டுமுடியவும்பெறும். — (எ-று) உரித்துமாகுமென்றதனாற்கெடாது முடியவும்பெறும். இது ஒப்பக்கூறலென்னுமுத்தி. [உ-ம்] ஆனை - ஆவினை - ஆனொடு - ஆவினொடு - ஆற்கு - ஆவிற்கு - ஆனின் - ஆவினின் - ஆனது - ஆவினது - ஆன்கண் - ஆவின்கண் என வரும். இனி முன்னரென்றதனானே மாவிற்குமிவ்வாறேகொள்க. மானை - மாவினை - மானொடு - மாவினொடு - மாற்கு - மாவிற்கு - எனவொட்டுக - ஆகாரவீறென்னாதாவினிறுதியென்றோதினமையின் - மா - இலேசினாற்கொள்ளப்பட்டது. இனி ஆன்கோடு - ஆவின்கோடு - மான்கோடு - மாவின்கோடு - என உருபிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றுழியுங்கொள்க. (௰அ)

அளவாகுமொழிமுதனிலைஇயவுயிர்மிசை, னஃகான்றஃகானாகியநிலைத்தே. *

இது அவ்வின்சாரியை யீறு திரியுமாறுகூறுகின்றது. அளவாகுமொழி - அளவுப்பெயராய்ப் பின்னிற்குமொழிக்கு — முதனிலைஇயவுயிர்மிசைனஃகான் - முன்னர்நின்றவெண்ணுப்பெயர்களினீற்றுநின்ற குற்றுகரத்தின்மேல் வந்த வின்சாரியையதனகரம் — றஃகானாகியநிலைத்து - றகரமாய்த்திரியுநிலைமையையுடைத்து. — (எ-று) பதிற்றகல் - பதிற்றுழக்கு. இவற்றைப்பத்தெனநிறுத்திநிறையுமளவுமென்னுஞ்சூத்திரத்தால் இன்சாரியைகொடுத்துக்குற்றியலுகரமெய்யொடுங் கெடுமேயென்றதனாற் குற்றுகர மெய்யோடுங் கெடுத்துவேண்டுஞ்செய்கைசெய்துமுற்றவின்வருமென்பதனானொற்றிரட்டித்துமுடிக்க. நிலைஇயவென்றதனாற்பிறவழியும்இன்னினகரம்றகரமாதல்கொள்க. பதிற்றெழுத்து - பதிற்றடுக்கு - ஒன்பதிற்றெழுத்து - பதிற்றொன்று - பதிற்றிரண்டு - பதிற்றொன்பது எனஎல்லாவற்றோடுமொட்டிக்கொள்க. அச்சூத்திரத்திற்குறையாதாகுமென்றதனாற் பொருட்பெயர்க்கும் எண்ணுப்பெயர்க்கும்இன்கொடுக்க. (௰௧)

வஃகான்மெய்கெடச்சுட்டுமுதலைம்மு, னஃகானிற்றலாகியபண்பே. *

இதுவற்றுமுதறிரியுமாறுகூறுகின்றது. சுட்டுமுதலைம்முன்- சுட்டெழுத்தினைமுதலாகவுடைய ஐகாரவீற்றுச்சொன்முன் வற்றுவருங்காலை— வஃகான் மெய்கெட அஃகானிற்றலாகியபண்பு- அவ்வற்றுச்சாரியையின துவகரமாகி யவொற்றுக்கெடஆண்டேறியஅகரநிற்றலதற்குளதாகியகுணம்.— (எ-று) [உ-ம்] அவையற்றை-இவையற்றை-உவையற்றை-எனவரும். இன்னுமிவற்றைஅவை யிவை உவை யெனநிறுத்திச்சுட்டுமுதலாகி யவையெனிறுதியென்றதனானவற்றுமுருபுங்கொடுத்து வேண்டுஞ்செய்கைசெய்க இவ்வாறேயெல்லாவுருபிற்குமொட்டுக. அவையற்றுக்கோடெனவுருபிற்குச் சென்றசாரியைபொருட்கட்சென்றவழியுங்கொள்க. ஆகியபண்பென்றதனானே எவனென்பதுபடுத்தலோசையாற்பெயராயவழி எவன் எனநிறுத்திவற்றுமுருபுங்கொடுத்துவற்றுமிசையொற்றென்றுனகரங்கெடுத்து அகரவுயிர்முன்னர்வற்றின்வகரங்கெடுமெனக்கெடுத்துஎவற்றைஎவற்றொடென்னமுடிக்க. (உ௰)

னஃகான் றஃகானான்கனுருபிற்கு. ※

இது இன் ஒன் ஆன் அன்னென்னானகரவீறுநான்குந்திரியுமாறுகூறுகின்றது. னஃகானான்கனுருபிற்குறஃகான்-னகாரவீற்றுநான்குசாரியையினகரமும்நான்காமுருபிற்குறகாரமாய்த்திரியும்.—(எ-று) [உ-ம்] விளவிற்கு-கோஒற்கு-ஒருபாற்கு - அதற்கு-எனவரும். இதனையளவாகு மொழிமுதலென்பதன்பின்வையாதீண்டுவைத்தது. னகரவீறுகளெல்லாமுடன்றிரியுமென்றற்(கு) ஆண்டுவைப்பினின்சாரியையேதிரியுமென்பதுபடும். ஒன்றுமுதலாகப்பத்தூர்ந்து வரூஉ மெல்லாவெண்ணுமென்பதனா னொருபாற்கென்பதனைமுடிக்க. (உக)

ஆனினகரமுமதனோற்றே,நாண்முன்வரூஉம்வன்முதற்றொழிற்கே. ※

இதுஆனீறுபொருட்புணர்ச்சிக்கட்டிரியுமென்கின்றது. நாண்முன்வரூஉம் வன்முதற்றொழிற்கு - நாட்பெயர்முன்னர்வரும் வல்லெழுத்தைமுதலாகவுடையதொழிற்சொற்கிடையேவரும்—ஆனினகரமுமதனோற்று-ஆன்சாரியையினகரமுநான்கனுருபின்கண் வருமான்சாரியைபோல றகாரமாத்திரியும்.—(எ-று) [உ-ம்] பாணியாற்கொண்டான்-சென்றான்-தந்தான்-போயினான்-எனவரும். நாண்முற்றோன்றுமுதனிலைக்கிளவிக்கென்றதனான் ஆன்சாரியைகொடுத்துச்செய்கைசெய்க. இனி யும்மையையிறந்ததுதழீஇயதாக்கி

நாளல்லவற்றுமுன்வரும்வன்முதற்றொழிற்கண் இன்னினகரமுமதனோடொக்குமெனப்பொருளுரைத்துப்பாணியிற்கொண்டான்வழியிற்கொண்டான் என இன்னினகரமும்றகரமாதல்கொள்க. இனிஞாபகத்தாற்றொழிற்கண்இன்னினகரந்திரியுமெனவேபெயர்க்கண் இன்னினகரந்திரிதலுந்திரியாமையுங்கொள்க. குறும்பிற்கொற்றன் - பறம்பிற்பாரி - எனத்திரிந்துவந்தன. குருகின்கால் - எருத்தின்புறம் - எனத்திரியாதுவந்தன. (௨௨)

அத்தினகரமகரமுனையில்லை. *

இது அத்துமுதறிரியுமாறுகூறுகின்றது. அத்தினகரம் - அத்துச்சாரியையின் அகரம் — அகரமுனையில்லை - அகரவீற்றுச்சொன்முன்னரில்லையாம். — (எ-று) அத்தவண்வரினும்வரைநிலையின்றே யென்பதனுன்மகப்பெயர் அத்துப்பெற்றுநின்றது - மகத்துக்கையென அகரங்கெட்டுநின்றது. விளவத்துக்கண்ணென்புழிக்கெடாதுநிற்றல் அத்தேவற்றே யென்பதனுள்தெற்றென்றற்றேயென்பதனுற்கூறுப். (௨௩)

இக்கினிகரமிகரமுனையற்றே. *

இது இக்குமுதறிரியுமாறுகூறுகின்றது. இக்கினிகரம் - இக்குச்சாரியையினதுஇகரம் — இகரமுனையற்று - இகரவீற்றுசசொன்முன்னர்முற்கூறியஅத்துப்போலக்கெடும். — (எ-று) திங்கண்முன்வருமென்பதனுற்பெற்றவிக்கு ஆடிக்குக்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினன் - என இகரங்கெட்டு நின்றது. இதுஇடப்பொருட்டு. (௨௪)

ஐயின்முன்னருமவ்வியனிலையும். *

இதுவுமது. ஐயின்முன்னருமவ்வியனிலையும் - இக்கினிகரம்இகரவீற்றுச்சொன்முன்னான்றிஐகாரவீற்றுச்சொன்முன்னருமேற்கூறிய கெடுதலியல்பின்லை நிற்கும். — (எ-று) திங்களுநாளுமுந்துகிளந்தன்ன என்பதனுற்சித்திரைக்குக்கொண்டான். என்புழிப்பெற்றவிக்குஐகாரத்தின்முன்னர்க்கெட்டவாறு காண்க. (௨௫)

எப்பெயர்முன்னரும் வல்லெழுத்துவருவழி,யக்கினுதிமெய்ம் மிசையொடுங்கெடுமே, குற்றியலுகரமுற்றத்தோன்றுது. *

இது அக்குமுதலொழியவேனையகெடுமாறுகூறுகின்றது. எப்பெயர்முன்னரும் - எவ்வகைப்பட்டபெயர்ச்சொன்முன்னரும் — வல்லெழுத்துவருவழி.

வல்லெழுத்துவருமொழியாய்வருமிடத்து— அக்கினிறுதிக்குற்றியலுகரமு
ற்றத்தோன்றாது - இடைநின்றஅக்குச்சாரியையினிறுதிநின்ற குற்றியலுகர
முடியத்தோன்றாது—மெய்ம்மிசையொடுங்கெடும் - அக்குற்றுகரமேறிநி
ன்றவல்லொற்றுத்தனக்குமேனின்றவல்லொற்றோடுங்கெடும்.— (எ-று) ஒற்
றுநிலைதிரியாதக்கொடுவருமென்றதனாற் குட்பெற்ற குன்றக்கூகை - மன்ற
ப்பெண்ணை - என்பனவும் வேற்றுமையாயினேனையிரண்டு மென்பதனா
க்குட்பெற்ற-ஈமக்குடம்- கும்மக்குடம் - என்பனவும் தமிழென்கிளவியெ
ன்பதனானக்குப்பெற்ற- தமிழக்கூத்தென்பதுவும் அக்கீறுகெட்டவாறுகா
ண்க. இங்ஙனம்வருதலினப்பெயரொன்றாற். முற்றவென்பதனான்வன்கணம
ன்றியேனையவற்றிற்குமிவ்விதிகொள்க. தமிழநூல் - தமிழயாழ் - தமிழவரை
யர்-எனவரும். இன்னுமிதனானேதமக்கேற்றவிடைப்புவல்லெழுத்துக்கொடுத்
துமுடித்துக்கொள்க. அன்றிக்கேட்டோதியககரவொற்றுநிற்குமெனின் சகர
ம்தகரம்பகரம்வந்தவற்றிற்குக்ககரவொற்றாகாமையுமுணர்க. (உசு)

அம்மினிறுதிகசதக்காலை, தன்மெய்திரிந்துஙஞநவாகும். *

இது அம்மீறுதிரியுமாறுகூறுகின்றது. அம்மினிறுதி - அம்முச்சாரியையி
றுதியாகியமகரவொற்று— கசதக்காலை- கசதக்கள்வருமொழியாய்வருங்கா
லத்து—தன்மெய்திரிந்துஙஞநவாகும்- தன்வடிவுதிரிந்துஙஞநக்களாம்.—
(எ-று) [உ-ம்] புளியங்கோடு- செதிள்- தோல்-எனவரும். இதுபுளிமரக்கி
ளவிக்கென்பதனானம்முப்பெற்றது. கசதக்காலைதிரியுமெனவேபகரத்தின்க
ட்டிரிபின்றாயிற்று. மெய்திரிந்தென்றது தன்னென்றதனான் அம்மின்மகர
மேயன்றி தம்-நம்- நும்-உம்- என்னுஞ்சாரியைமகரமுந்திரிதல்கொள்க.
எல்லார்தங்கையும்-எல்லார்நங்கையும்- எல்லீர்நுங்கையும்-வானவரிவில்லுந்
திங்களும் - எனவரும். துறைகேழூரன்- வளங்கேழூரன்- எனக்கெழுவெ
ன்னுஞ் சாரியையதுகரக்கேடும் எகரநீட்சியுஞ் செய்யுண்முடிபென்று
கொள்க.
(உஎ)

மென்மையு மிடைமையும் வரூஉங்காலை, யின்மைவேண்டு மென்மனார்
புலவர்
*

இது இயல்புகணத்துமுன்னர்அம்மீறுகெடுமென்கின்றது. மென்மையுமி
டைமையும்வரூஉங்காலை-மென்கணமுமிடைக்கணமும்வருமொழியாய்வரு

ங்காலத்து— இன்மைவேண்டுமென்மனார்புலவர் - அம்முச்சாரியையிறுதி மகரமின்றிமுடிதலைவேண்டுமென்றுகூறுவர்புலவர்.—(எ-று)[உ-ம்]புளியஞெரி-நுனி-முரி-யாழ்-வட்டு-எனவரும். உரையிற்கோடலென்பதனாற்புளியவிலையெனவுயிர்வருவழியீறுகெடுதலும்புளியிலையெனஅம்முமுழுவதுஉங்கெடுதலுங்கொள்க. புளியவிலையென்றதொட்டுதற்கொழுகியவழக்கன்று; மென்கணமுமிடைக்கணமுமுயிர்க்கணமுந் தம்முளொக்குமேனும் அம்மு முழுவதுங்கெட்டுவருதலினுயிரையெடுத்தோதாராயினர். புளிங்காய்என்பதுமருமுடிபு. (௨௮)

இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற், கின்னென் சாரியை யின்மை வேண்டும். *

இது இன்சாரியை ஐந்தாமுருபின்கண் முழுவதுங்கெடுமென்கின்றது. இன்னெனவரூஉம்வேற்றுமையுருபிற்கு-இன்னென்றுசொல்லவருகின்றவேற்றுமையுருபிற்கு— இன்னென்சாரியையின்மைவேண்டும் - இன்னென்னுஞ்சாரியைதானின்றிமுடிதலைவிரும்பும்ஆசிரியன்(எ-று) [உ-ம்] விளவின்-பலாவின்-கடுவின்-தழூஉவின்-சேவின்-வெளவின்-எனவரும்- இவற்றுளீற் பழமெனவும் நீங்கினனெனவும் கொடுத்துமுடிவுணர்க. உரிஞினீங்கினான் எனவனையவற்றோடுமொட்டுக. இனிஅவற்றுளின்னிகரமென்றதன்பின்னிதனைவையாதமுறையின்றிகூற்றினானின்சாரியைக்கெடாதுவழக்கின்கண்ணுஞ்செய்யுட்கண்ணுநிற்றல்கொள்க. பாம்பினிற்கடிதுதேள்- கற்பினின் வழாஅநற்பலவுதவி- அகடுசேர்புபொருந்தியளவினிற்றிரியாது - எனவரும். இனி இன்மையும்வேண்டுமென்னுமும்மைதொக்குநின்றதாக்கியதனானிவைகோடலுமொன்றும். (௨௯)

பெயருந்தொழிலும்பிரிந்தொருங்கிசைப்ப, வேற்றுமையுருபுநிலைபெறுவழியுந், தோற்றம்வேண்டாத்தொகுதிக்கண்ணும், மொட்டுதற்கொழுகியவழக்கொடுசிவணிச், சொற்சிதர்மருங்கின்வழிவந்துவிளங்கா, திடைநின்றியலுஞ்சாரியையியற்கை, யுடைமையுமின்மையுமொடுவயினொக்கும். *

இது முற்கூறியசாரியைகளெல்லாம்புணர்மொழியுள்ளேவருமென்பதூஉம் அம்மொழிதாமிவையென்பதூஉம்அவைவாராதமொழிகளுமுளவென்பதூஉங்கூறுகின்றது. பெயருந்தொழிலும் - பெயர்ச்சொல்லுந்தொழிற்சொல்

னும்— பிரிந்திசைப்பவொருங்கிசைப்ப - பெயருந்தொழிலுமாகப்பிரிந்தி
சைப்பப்பெயரும்பெயருமாக்கூடியிசைப்ப—வேற்றுமையுருபுநிலைபெறு
வழியும்-வேற்றுமைசெய்யுமுருபுகளொகாதுநிலைபெற்றவிடத்தும்—தோ
ற்றம்வேண்டாத்தொகுதிக்கண்ணும் - அவ்வேற்றுமையுருபுகடோற்றுதல்
வேண்டாதுதொக்கவிடத்தும்—ஒட்டுதற்கொழுகியவழக்கொடுசிவணி-தாம்
பொருந்துதற்கேற்பநடந்தவழக்கோடேபொருந்தி— சொற்சிதர்மருங்கி
ன் - சாரியைபெறும்புணர்மொழிகளைப்பிரித்துகாணுமிடத்து— சாரியையி
யற்கைவழிவந்துவிளங்காதிடைநின்றியலும்- அச்சாரியையினதுதன்மையச்
சொற்களின்பின்னேவந்துவிளங்காதுநடுவேநின்றுநடக்கும் — உடைமை
யுமின்மையுமொடுவயினொக்கும் - அச்சாரியையுண்டாதலுமில்லையாதலு
மொடுவுருபினிடத்தொத்துவரும்.— (எ-று) ஒடுவிற்கொக்கும் எனவேவ
னையவொவ்வாவாயின. [உ-ம்]விளவினைக்குறைத்தான் - கூழிற்குக்குற்றே
வல்செய்யும் - இவைபிரிந்திசைத்துருபுநிலைபெற்றன. அன்னென்சாரியை
யென்பதனைக்குற்றியலுகரந்திறுதியென்பதனைச்சேரவைத்ததனால்இன்சா
ரியைவருதல்கொள்க. இவ்விரண்டுருபுஞ்சாரியைநிற்பப்பெரும்பான்மையு
ந்தொகாவென்றுணர்க. விளவினைக்குறைத்தவன் - கடிகுத்திரத்திற்குப்பொ
ன் - இவையொருங்கிசைப்பவுருபுநிலைபெற்றன. வானத்தின்வழுக்கி - வான
த்துவழுக்கி - யெனச்சாரியைபெற்றுப்பிரிந்திசைத்தைந்தாமுருபுநிலைபெ
ற்றும்நிலைபெறாதும்வந்தது. வானத்தின்வழுக்கல் - வானத்துவழுக்கல்- இ
வைமெல்லெழுத் துறழுமென்னுஞ்சூத்திரத்து வழக்கத்தானவென்பதனான்
அத்துக்கொடுத்துமகரங்கெடுக்க-ஒருங்கிசைத்தன. விளவினதுகோடு-விளவி
ன்கோடென வொருங்கிசைத்துச்சாரியைபெற்றவழியாறனுருபுதொகாதுந்
தொக்குநின்றது. இதற்குப்பிரிந்திசைத்தலின்று. மரத்துக்கட்கட்டினான் - ம
ரத்துக்கட்டினான் - எனப்பிரிந்திசைத்தவழியும் - மரத்துக்கட்குரங்கு-மரத்
துக்குரங்கு. என ஒருங்கிசைத்தவழியுஞ்சாரியைநின்றவழியேழனுருபுதொகா
துந்தொக்குநின்றது. கிளைப்பெயரெல்லாமென்றதனுட்கொள்ள வென்றத
னான்ணகாரம் டகாரமாயிற்று . நிலாவென் கிளவியத்தொடுசிவணும் எனவி
தித்த அத்து நிலாக்கதிர் நிலாமுற்றமென் றவழிப்பெறாதாயிற்று. அஃதொ
ட்டுதற்கொழுகியவழக்கன்மையின்)நிலாத்துக்கொண்டான் - நிலாத்துக்கொ

ண்டவ்ன் என்பனவுருபுதொக்குழியிருவழியும்பெற்றன. எல்லார்தம்மையும்எனசசாரியையீற்றின்கண்ணும் வருதலினிடைநிற்றலபெரும்பான்மையென்றற்கியலுமென்றார். பூவினொடுவிரிந்தகூந்தல் பூவொடுவிரிந்த கூந்தல் எனவுமுடைமையுமின்மையுமொடுவயினொத்தது. இனியியற்கையென்றதனானொடுவுருபின்கட்பெற்றும் பெறாமையும் வருதலன்றிப்பெற்றேவருதலுங் கொள்க. பலவற்றொடுஎனவரும். (௫௰)

அத்தேவற்றேயாயிருமொழிமே ; லொற்றுமெய்கெடுதறெற்றென்
றற்றே,யவற்றுமுன் வரூஉம்வல்லெழுத் துமிகுமே. *

இது அத்துவற்றுஎன்பனவற்றிற்கு நிலைமொழியொற்றுக்கேடும் வருமொழிவன்கணத்துக்கண்ணொற்றுப்பேறுமாகியசெய்கைகூறுகின்றது. அத்தேவற்றேயாயிருமொழிமேலொற்று - அத்தும் வற்றுமாகியவவ்விரண்டுசாரியைமேனின்றவொற்று— மெய்கெடுதறெற்றென்றற்று - தன்வடிவுகெடுதறெளியப்பட்டது — அவற்றுமுன்வரூஉம் வல்லெழுத்துமிகுமே- அவ்விருசாரியைமுன்னும்வரும்வல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று) [உ-ம்]கலத்துக்குறை- அவற்றுக்கோடு- எனவரும். அத்திடைவரூஉங்கலமென்னளவே சுட்டுமுதல்வகரமையுமெய்யு மென்பனவற்றான் அத்தும் வற்றும்பெற்றுவருமகரவகரவீறுகட்குஈற்றுவல்லெழுத்துவிதியின்மையின் அவற்றுமுன்வரூஉம்வல்லெழுத்துமிகுமென்றுசாரியைவல்லெழுத்துவிதித்தார். வல்லெழுத்தின்றித் திரிந்துமுடிவன ணகாரமும் னகாரமும் லகாரமும் ளகாரமும் மகரவீற்றிற்கத்தும் வகரவீற்றிற்குவற்றும் வருமென்பதச்சூத்திரங்களாற் பெறும். வற்றேயத்தேயென்னுதமுறையன்றிக்கூற்றினற்புள்ளியீற்றின் முன்னர் அத்தின்மிசையொற்றுக்கெடாதுநிற்றலுங்கொள்க. [உ-ம்] விண்ணத்துக்கொட்கும்- வெயிலத்துச்சென்றார் - இருளத்துக்கொண்டான் - எனவரும். மெய்யென்றதனைத்தினகரம் அகரமுன்னரோயன்றிப்பிறவுயிர் முன்னருங்கெடுமோரோவிடத்தென்றுகொள்க. அண்ணாத்தேரி - திட்டாத்துக்குளம்- எனஆகாரத்தின்முன்னரும்அத்தினகரங்கெட்டது. இவற்றையகரவீறாக்கியுமுடிப்ப. இனி தெற்றென்றற்றேயென்றதனான் அத்தினகரந்தெற்றெனக்கெடாது நிற்குமிடமுங்கொள்க. அதவத்துக்கண் -விளவத்துக்கண்- எனவரும். (௫௧)

காரமுங்கரமுங்கானொடுசிவணி, நேரத்தோன்றுமெழுத்தின்சாரியை.

இது மொழிச்சாரியைவிட்டெழுத்துச்சாரியைகட்குவரும்பெயருமுறையுந்தொகையுமுணர்த்துகின்றது. காரமுங்கரமுங்கானொடுசிவணி - காரமுங்கரமுங்கானொடுபொருந்தி — எழுத்தின்சாரியை நேரத்தோன்றும் - "எழுத்தின்கண்வருஞ்சாரியையாதற்கு எல்லாவாசிரியரானுமுடம் படத்தோன்றும்.— (எ-று) காரமுங்கரமும்அடுத்துச்சொல்லியவழி யினிதிசைத்தலானும் வழக்குப்பயிற்சி யுடைமையானும் வடவெழுத்திற்குரிய வாதலானுஞ் சேரக்கூறினர். கான்அத்தன்மையில்லாததனாற்பின்வைத்தார். நேரத்தோன்றுமெனவேநேரத்தோன்றாதனவும்உளவாயின. அவை ஆனம்- ஏனம்- ஓனம்- எனவிவைசிதைந்தவழக்கேனுங்கடியலாகாவாயின. (௫௨)

அவற்றுள்; கரமுங்கானுநெட்டெழுத்திலவே. *

இது அவற்றுட்சிலசாரியைசிலவெழுத்தோடுவாராவெனவெய்தியதுவிலக்கிற்று. அவற்றுள்- மேற்சொல்லப்பட்டவற்றுள் — கரமுங்கானுநெட்டெழுத்தில- கரமுங்கானுநெட்டெழுத்திற்குவருதலின்று.— (எ-று) எனவே நெட்டெழுத்திற்குக்காரம்வருமாயிற்று. ஆகாரம்-ஈகாரம்-எனஒட்டுக. ஐகாரம்-ஔகாரமெனச்சூத்திரங்களுள்வருமாறுகாண்க. (௫௩)

வரன்முறைமூன்றுங்குற்றெழுத்துடைய. *

இது ஐயமகற்றியது. என்னைநெட்டெழுத்திற்குச்சிலசாரியைவிலக்கினாற்போலக்குற்றெழுத்திற்கும்விலக்கற்பாடுண்டோவெனஐயநிகழ்தலின்) வரன்முறைமூன்றும் - வரலாற்றுமுறைமையையுடையமூன்றுசாரியையும்— குற்றெழுத்துடைய - குற்றெழுத்துப்பெற்றுவருதலையுடைய.—(எ-று) அகாரம்-அகரம்-அஃகான்- எனவொட்டுக. வகாரமிசையும்-அகரஇகரம்-வஃகான் மெய்கெட- எனப்பிறவுஞ்சூத்திரங்களுட்காண்க. இஃகான்- ஒஃகான்- என்பனபெருவழக்கின்று. வரன்முறையென்றதனான் அஃகானென்புழியாய்தம்பெறுதல்கொள்க. இதுகுறியதன்முன்னராய்தப்புள்ளி யென்பதனாற்பெறுதாயிற்று. மொழியாய்நில்லாமையின்.) (௫௪)

ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும். *

இது அவற்றுட்கரமுங்கானுமென்பதற்கோர்புறநடைகூறுகின்றது. ஐகார ஔகாரங்கானொடுந்தோன்றும்- நெட்டெழுத்துக்களுள்ஐகாரஔகாரங்கள்

முன்விலக்கப்பட்டகாவெனடுந்தோன்றும்.—(எ-று)ஐகான்-ஔகான்-எனவ ரும். உம்மையிறந்ததுதழீஇயிற்று·காரத்தைக்கருதுதலின்.) (ருரு)

புள்ளியீற்றுமுனுயிர்தனித்தியலாது, மெய்யொடுஞ்சிவணு மவ்வியல்கெடுத்தே. ※

இது புள்ளியீற்றுமுன்உயிர்முதன்மொழிவந்தகாலத்துப்புணருமுறைமைகூறுகின்றது. புள்ளியீற்றுமுன்னுயிர்தனித்தியலாது- புள்ளியீற்றுச்சொல்முன்னர்வந்தவுயிர்முதன்மொழியினுயிர்தனித்துநடவாது — மெய்யொடுஞ்சிவணும்- அப்புள்ளியோடுங்கூடும்— அவ்வியல்கெடுத்து- தான்றனித்துநின்றவவ்வியல்பினைக்கெடுத்து.—(எ-று) எனவேநீரொடுகூடியபால்போலநின்றதென்றாற்றுமைகூறினார். ஈண்டுஇதனானேயுயிர்மெய்யெனப்பெயர்பெற்றது. [உ-ம்] பாலரிது-பாலாழி-ஆவிலை-பொருளீட்டம்-வானுலகு-வானாடு-வேலெறிந்தான்-வேலேற்றான்-பொருளையம்-பொருளொன்று-நாணொடிற்று-சொல்லௌவியம்-எனவரும். ஒன்றினமுடித்தலென்பதனானியல்பல்லாதபுள்ளிமுன்னருயிர்வந்தாலுமிவ்விதிகொள்க. அதனை- அதனொடு-நாடுரி-எனவரும் . இவற்றைச்சுட்டுமுதலுகரமன்னொடு உரிவருகாலைநாழிக்கிளவிஎன்பனவற்றான்முடிக்க . புள்ளியீற்றுமுன்னுமெனவும்மையைமாறியெச்சவும்மையாக்கிக்குற்றியலுகரத்தின்முன்னருமெனவவ்விதிகொள்க. எனவேகுற்றியலுகரமுமற்றென்றதனொடும்பொருந்திற்றும். நாகரிது-வரகரிது-எனவரும். (ருசா)

மெய்யுயிர்நீங்கிற்றன்னுருவாகும். ※

இதுஉயிர்மெய்புணர்ச்சிக்கணுயிர்நீங்கியவழிப்படுவதோர் விதிகூறுகின்றது. மெய்யுயிர்நீங்கின்- மெய்தன்னோடுகூடிநின்றவுயிர் புணர்ச்சியிடத்துப்பிரிந்துவேறுநின்றதாயின்— தன்னுருவாகும்- தான்முன்னர்ப்பெற்றுநின்றபுள்ளிவடிவுபெறும்.— (எ-று) ஆல்-இலை-அதன்-ஐ-எனவரும். உயிரின்னவடிவிற்றென்றாசிரியர்கூறாமையினுயிர்க்கணாராய்ச்சியின்று. இனிஎகரஒகரங்களைப்புள்ளியான்வேற்றுமைசெய்தவிற்றென்றுதொட்டுவழங்கின வடி வுடையவென்றுகோடலுமாம் . புணர்ச்சியுளுயிர்மெய்யினைப்பிரிப்பாராதலினிதுகூறுக்காற்குன்றக்கூறலாமென்றுணர்க. (ருசு)

எல்லாமொழிக்குமுயிர் வருவழியே, யுடம்படுமெய்யினுருபு

கொளல்வரையார். *

இது உயிரீறுமுயிர்முதல்மொழியும்புணரும்வழிநிகழ்வதோர் கருவிகூறுகி
ன்றது. எல்லாமொழிக்கும் - நிலைமொழியும்வருமொழியுமாய்ப்புணருமெல்லா
வகைமொழிக்கும்— உயிர்வருவழி-உயிர்முதல்மொழிவருமிடத்து— உடம்ப
டுமெய்யினுருபுகொளல்வரையார் - உடம்படுமெய்யினதுவடிவையுயிரீறு
கோடலைநீக்கார்கொள்வராசிரியர்.— (எ-று) அவையகரமும்வகரமுமெ
ன்பதுமுதனூல்பற்றிக்கோடும். உடம்படுமெய்யேயகாரவகாரமுயிர்முதன்
மொழிவரூஉங்காலையான. எனவும் இறுதியுமுதலும்உயிர்நிலைபெறினே யுறு
மெனமொழிபவுடம்படுமெய்யேஎனவுங்கூறினாராகலின்) உயிர்களுள்இகர
ஈகாரஐகாரவீறுயகரவுடம்படுமெய் கொள்ளும். ஏகாரம்யகாரமும்வகாரமுங்
கொள்ளும். அல்லனவெல்லாம்வகரவுடம்படுமெய்கொள்ளுமென்றுணர்க.
[உ-ம்] கிளியழகிது - குரீஇயோப்புவாள் - வரையரமகளிர் - எனவும்விளவழ
கிது-பலாவழகிது-கடுவழகிது-பூவழகிது-கோவழகிது-கௌவடைந்தது.
எனவுமொட்டுக. ஏஎயிவளொருத்திபேடியோவென்றார் - ஏவாடல்காண்க.
என ஏகாரத்திற்கிரண்டும்வந்தன. ஒன்றினமுடித்தலென்பதனான்விகாரப்பட்
டமொழிக்கண்ணும்உடம்படுமெய்கொள்க. மரவடி - ஆயிருதிணை - எனவரும்.
வரையாரென்றதனானுடம்படுமெய்கோடலொருதலையன்று. கிளி-அரிது-
மூங்கா-இல்லையெனவரும். ஒன்றினமுடித்தலென்பதனால்விண்வத்துக்கொட்
குமெனச்சிறுபான்மைபுள்ளியீற்றினும்வரும். செல்வுழி-உண்புழி- யென்ப
னவினைத்தொகையெனமறுக்க. (௫௮)

எழுத்தோரன்னபொருடெரிபுணர்ச்சி, யிசையிற்றிரிதனிலையிய
பண்பே. *

இது எழுத்துக்களொன்றுபலவாமெனவெய்தாததெய்துவிக்கின்றது. எழுத்
தோரன்னபொருடெரிபுணர்ச்சி-எழுத்தொருதன்மைத்தாயபொருள்விளங்
கநிற்கும்புணர்மொழிகள்— இசையிற்றிரிதனிலையியபண்பு-எடுத்தல்படுத்த
னலிதலென்கின்றவோசைவேற்றுமையாற் புணர்ச்சிவேறுபடுதனிலைபெற்ற
குணம்.—(எ-று) [உ-ம்] செம்பொன்பதின்றொடி- செம்பருத்தி-குறு
ம்பரம்பு - நாகன்றேவன்போத்து - குன்றேறுமா - எனஇவையிசையிற்றி
ரிந்தன.
(௫௯)

அவைதா;முன்னப்பொருளபுணர்ச்சிவாயி,னின்னவென்றுமெழுத்துக்கடனிலவே. *

இது மேலதற்கோர்புறநடைகூறுகின்றது. அவைதாம் - பலபொருட்குப் பொதுவென்றபுணர்மொழிகடாம்— முன்னப்பொருள - குறிப்பானுணரும்பொருண்மையினையுடைய — புணர்ச்சிவாயினின்னவென்றுமெழுத்துக்கடனில - புணர்ச்சியிடத்தித்தன்மையவென்றுமெழுத்துமுறைமையையுடையவல்ல.—(எ-று) செம்பொன்பதின்றொடி - யென்றுழிப்பொன்னராய்ச்சியுளவழிப்பொன்னெனவுஞ்செம்பாராய்ச்சியுளவழிச்செம்பெனவுங்குறிப்பானுணரப்பட்டது. இசையிற்றிரிதலென்ற தொல்லெழுத்திற்கெனவும் எழுத்துக்கடனிலவென்றதுவரிவடிவிற்கெனவுங்கொள்க. (௪௰)

நான்காவது, புணரியல்- முற்றிற்று.

(ஆசூத்திரம். ௱௪௨)

# ஐந்தாவது,

# தொகைமரபு.

கசதபமுதலியமொழிமேற்றோன்றும், மெல்லெழுத்தியற்கைசொல்லியமுறையான், ஙஞநமவென்னுமொற்றாகும்மே, யன்னமரபின்மொழிவயினான. *

இது உயிரீறும் புள்ளியீறுமேலே அகத்தோத்தினுண்முடிக்கும் வழியீறுகடோறும் விரித்துமுடிப்பனவற்றை யீண்டொரோர்சூத்திரங்களாற்றொகுத்துமுடிபுகூறினமையி னிவ்வோத்துத்தொகைமரபென்னும் பெயர்த்தாயிற்று. மேன்மூவகைமொழியுநால்வகையாற்புணர்வுழிமூன்றுதிரிபுமோரியல்புமெய்திவேற்றுமையல்வழியென விருபகுதியவாகிபெழுத்துஞ்சாரியையுமிக்குப்புணருமாறிதுவென்றுணர்த்தியவைதாம் விரிந்தருத்திரட்பொருளவன்றிதொக்குப் புணருமாறுகூறுதலி னிவ்வோத்துப் புணரியலோடியைபுடைத்தாயிற்று. இதன்றலைச்சூத்திரமுயிர்மயங்கியலையும்புள்ளிமயங்கி

யலையுநோக்கியநோர்வருமொழிக்கருவிகூறுகின்றது. க ச த ப முதலியமொழிமேற்றோன்றுமியற்கைமெல்லெழுத்து- உயிரீறும்புள்ளியீறுமுன்னர் நிற்பக் க ச த பக்களைமுதலாகவுடையமொழிகள்வந்தாலவற்றிற்குமேலேதோன்றிநிற்குமியல்பாகியமெல்லெழுத்துக்கள்யாவையெனின் — சொல்லியமுறையான்ஙஞநமவென்னுமொற்றாகும்- நெடுங்கணக்கிற்பொருந்தக்கூறியமுறையானே க ச த பக்களுக்குஙஞநமவென்னுமொற்றுக்கணிரனிறைவகையானும்— அன்னமரபின் மொழிவயினான- அத்தன்மைத்தாகியமுறைமையினையுடையமொழிகளிடத்து.—(எ-று) [உ-ம்]விளங்கோடு-செதிள்-தோல்-பூ-எனவரும்.இதுமரப்பெயர்க்கிளவியென்பதனுன்மெல்லெழுத்துப்பெற்றது. மரங்குறிது-சிறிது-தீது-பெரிது - என அல்வழிக்கட்டிரியுமாறல்வழியெல்லாமென்பதனுற்பெறுமேனுமீண்டுத்தோன்றுமென்றதனு னிலைமொழிக்கடதோன்றிநின்றவொற்றுத்திரிதல்கொள்க . அன்னமரபின்மொழியன்மையின் -விளக்குறுமை-விளக்குறைத்தான்-என்புழிமெல்லெழுத்துப்பெறுவாயின. இவை எழாவது மிரண்டாவதுந்திரிதலின் இங்ஙனமெழுத்துப்பெறுவனவெல்லாம்வருமொழியேபற்றிவருமென்றுணர்க. (க)

ஞநமயவவெனுமுதலாகுமொழியு, முயிர்முதலாகியமொழியுமுளப்ப
ட,வன்றியனைத்துமெல்லாவழியு, நின்றசொன்முனியல்பாகும்மே. ✻

இது முற்கூறியநால்வகைப்புணர்ச்சியுளியல்புபுணருங்கால்இக்கூறியபதினேழெழுத்தும் வருமொழியாவந்தவிடத் திருபத்து நான்கீற்றின் முன்னரும்வேற்றுமையிலும் அல்வழியிலும் வருமொழி யியல்பாய் முடிகவென் கின்றது .ஞநமயவவெனுமுதலாகுமொழியும்-ஞநமயவவென்றுசொல்லப்படுமெழுத்துக்கள்முதலாய்நிற்குஞ்சொற்களும் — உயிர்முதலாகியமொழியுமுளப்பட - உயிரெழுத்துமுதலாய்நின்றசொற்களும்தம்மிற்கூட — அன்றியனைத்தும்- அப்பதினேழாகியவருமொழிகளும் — எல்லாவழியும்- வேற்றுமையுமல்வழியுமாகியஎல்லாவிடத்தும் —நின்றசொன்முன் - இருபத்துநான்கீற்றவாய்நின்றபெயர்ச்சொன்முன்னர்—இயல்பாகும்-திரிபின்றியியல்புபுணர்ச்சியாய்நிற்கும்.— (எ-று) உயிரீற்றின்கண்எகரஒகரமொழிந்தனகொள்க.[உ-ம்] விள-பலா-கிளி-குரீ-கடு-பூ-சே-கை-சோ-கௌ-என நிறுத்தி.ஞான்றது - நீண்டது-மாண்டது-யாது-வலிது- நந்தையது-எனமெய்ம்முதன்மொழி

வருவித்துப்பொருடருதற்கேற்பனவறிந்துகூட்டுக.சோவென்பது அரண்.அத
ற்குச்சோஞான்கிற்றெனக்கொள்க.கௌவென்பதற்குக்கௌஞெகிழ்ந்தது
நீடிற்றென்க இனிஇவற்றின்முன்னர்உயிர்முதன்மொழிவருங்கால் அழகிது-
ஆயிற்று-இல்லை-ஈண்டிற்று-உண்டு-ஊறிற்று-எழுந்தது-எய்ந்தது-ஐது-
ஒன்று-ஓங்கிற்று-ஔவியத்தது-எனவரும்.இவற்றுள்சோவுக்கு-இடிந்தது-
ஈண்டையது-உள்ளது-ஊறிற்று-ஔவியத்தது-என்பனவற்றோடுமுற்கூறி
யவற்றையுமொட்டுக. கௌவுக்கு-ஈண்டையது-ஊக்கத்தது-என்பனவற்
றோடுமுற்கூறியவற்றையுமொட்டுக - இனிவேற்றுமைக்கண்விளமுதலியவற்
றைநிறுத்தி-ஞாற்சி-நீட்சி-மாட்சி-யாப்பு-வன்மை-அழகு-ஆக்கம்-இள
மை-ஈட்டம்-உயர்வு-ஊற்றம்-எழுச்சி-ஏற்றம்-ஐயம்-ஒழிவு-ஓக்கம்-ஔ
வியம்எனவொட்டுக.எலாதனவற்றிற்குமுற்கூறியவாறுபோலவேற்பனகொ
ணர்ந்தொட்டுக. இனிப்புள்ளியீற்றுணகாரமும்னகாரமுமேற்கூறுப.ஏனைய
வீண்டுக்கூறுதும்.[உ-ம்]உரிஞ்-வெரிந்-எனநிறுத்திஞெகிழ்ந்தது- நீடிற்று
அழகிது-ஆயிற்று-எனவும். ஞெகிழ்ச்சி-நீட்டிப்பு- அடைவு - ஆக்கம்-என
வும். வருவித்தெல்லாவற்றோடுமொட்டுக.மரம்-வேய்-வேர்-யாழ்-எனநிறுத்
திஞான்றது-நீண்டது-மாண்டது-யாது-வலிது-நந்தையது-அழகிதுஆயி
ற்றுஎனவும். ஞாற்சி-நீட்சி-மாட்சி-யாப்பு-வன்மை-அடைவு-ஆக்கம்-என
வும்வருவித்தெல்லாவற்றோடுமொட்டுக.இவற்றுண்மகரவீறுவேற்றுமைக்கட்
கெடுதல்துவரவென்றதனாற்கொள்க.அல்வழிக்கட்கெடுதலல்வழியெல்லாமெ
ன்றதனாற்கொள்க. நிலைமொழித்திரிபீண்டுக்கொள்ளாமையுணர்க. யகரவீறு
யகரத்தின்முன்னரிரண்டிடத்துங் கெடுதலீண்டெல்லாமென்றதனாற் கொள்
க. வேல்-தெவ்-கோள்- எனநிறுத்திஏற்பனகொணர்ந்திருவழியுமொட்டுக.
ணகாரலகாரளகாரனகாரங்களின்முன்னர்நகரம்வருமொழியாகவந்துழியந்
நகரந்திரிதலின்அத்திரிந்தவுதாரணங்களீண்டுக்கொள்ளற்க.இவற்றுட்டிரிந்
துவருவனவுள - அவையெடுத்தோத்தானுமிலேசானுமேனையோத்துக்களு
ண்முடிக்கின்றவாற்றானுணர்க.இனிஎல்லாவழியுமென்றதனான்உயிர்க்கணமா
யினொற்றிரட்டியுமுடம்படுமெய் பெற்றுமுயிரேறியுமுடியுங்கருவித்திரிபுக
ள்திரிபெனப்படா.அவ்வியல்பின்கணென்றுணர்க.வரகுஞான்றது-வரகுஞா
ற்சி எனக்குற்றுகரத்தின் கண்ணுமிவ்வாறே கொள்க. இருபத்துநான்கீற்றித்

கும்வேற்றுமைக்கும்அல்வழிக்கும்அசத்தோத்தினுற்பத்தெட்டுச்சூத்திரங் களான் முடிவனவற்றை யொருசூத்திரத்தாற் றொகுத்துமுடித்தார்மேலுமிவ் வாறேகூறுப. இவ்வியல்புவருமொழிநோக்கிக்கூறியதென் றுணர்க. இவ்வியல் புபுணர்ச்சிமெய்க்கணிகழுமா றுயிர்க்கணிகழாமையின் மெய்முற்கூறினர். உ)

அவற்றுண்; மெல்லெழுத்தியற்கையுறழினும்வரையார், சொல்லியதொ டர்மொழியிறுதியான. *

இது முற்கூறியமுடிபிற்சிலவற்றிற்கு அம்முடிபுவிலக்கிப் பிறிதுவிதியெய் துவித்தது. அவற்றுள் - முற்கூறியமூன்றுகணத்தினுள்— மெல்லெழுத்திய ற்கையுறழினும்வரையார் - மெல்லெழுத்தினதியல்பியல்பாதலேயன்றியுறழ் ந்துமுடியினுநீக்கார் — சொல்லியதொடர்மொழியிறுதியான - சொ ல்லப்பட்டதொடர்மொழியீற்றுக்கண்.—(எ-று) உம்மையெதிர்மறை. என வேயுறழாமைவலியுடைத்தாயிற்று. கதிர்ஞெரி - கதிர்ஞ்ஞெரி - நுனி - முரி - எனவும். இதழ்ஞெரி - இதழ்ஞ்ஞெரி - நுனி - முரி - எனவும்வரும். வருமொ ழிமுற்கூறியவதனு லோரொழுத்தொருமொழி யீரொழுத்தொருமொழிகளுள் ளுஞ்சிலவுறழ்ச்சிபெற்றுமுடிதல்கொள்க. பூஞெரி - பூஞ்ஞெரி - நுனி - முரி - காய்ஞெரி - காய்ஞ்ஞெரி - நுனி - முரி - எனவரும். சொல்லியவென்றதனுனே ரொழுத்தொருமொழிகளுட்சிலமிக்குமுடிதல்கொள்க. கைஞ்ஞெரித்தார் - நீட்டினூர் - மறித்தார் - எனவரும். இன்னுமிதனுனேஈரொழுத்தொருமொழிக் கண், மெய்ஞ்ஞானம் - நூல் - மறந்தார் - எனவரும். இவற்றைநலிந்துகூறப்பிற த்தலுமியல்பென்பாருமுளர். பூஞாற்றினர் - என்றாற்போல்வனமிகாதன. ரு)

ணனவென்புள்ளிமுன்யாவுஞாவும், வினையோரனைய வென்மனூர் புலவர். *

இது யகரஞகரமுதன்மொழிவந்தால்நிகழ்வதோர்தன்மை கூறுகின்றது. இதுவும்புணரியலொழிபாய்க்கருவிப்பாற்படும். ணனவென்புள்ளிமுன்யா வுஞாவும் - ணகாரனகாரமென்றுகூறப்படும் புள்ளிகளின்முன்னர்வந்தயா வுஞாவுமுதலாகியவினைச்சொற்கள் — வினையோரனையவென்மனூர்புலவர் - ஒருவினைவந்ததன்மையையொக்குமென்றுசொல்லுவர்புலவர். —(எ-று) [உ-ம்] மண்யாத்தகோட்டமழகளிறுதோன்றுமே - மண்ஞாத்தகோட்டம ழகளிறுதோன்றுமேனவும் - பொன்யாத்ததார்ப்புரவிபரிக்குமே - பொன்

ஞாத்ததார்ப்புாவி [illegible] மே · எனவும்வரும் · வினைக்கண் ணெனவேமண்யாமை - மண்ஞால [illegible] - எனப்பெயர்க்கண்வாராவாயிற்று · ஞாமுற்கூறாது யாமுற்கூறியவதனால் ஞாச்சென்றவழி யாச்செல்லாது யாச்சென்றவழிஞாச்செல்லுமென்றுகொள்க · மண்ஞான்றது என்றவழிமண்யான்றது - என்றுவாராமையுணர்க. (சு)

மொழிமுதலாகுமெல்லாவெழுத்தும் , வருவழிநின்றவாயிருபுள்ளியும்,வேற்றுமையல்வழித்திரிபிடனிலவே· ※

இது ணகாரவீறும்னகாரவீறும்அல்வழிக்கணியல்பாமுடியுமென்கின்றது · மொழிமுதலாகுமெல்லாவெழுத்தும்வருவழி - மொழிக்குமுதலாமென்ப்பட்டஇருபத்திரண்டெழுத்தும்வருமொழியாகவருமிடத்து — நின்றவாயிருபுள்ளியும் - முன்னர்க்கூறிநின்ற ணகாரமும் னகாரமும் — வேற்றுமையல்வழித்திரிபிடனிலவே - வேற்றுமையல்லாதவிடத்துத்திரியுமிடமில·— (எ-று) மண்- பொன்-எனநிறுத்தி கடிது-சிறிது-தீது- பெரிது-ஞெகிழ்ந்தது- நீண்டது- மாண்டது-யாது- வலிது- நுந்தையது- அடைந்தது-ஆயிற்று-இல்லை-ஈண்டிற்று- உண்டு- ஊட்டிற்று- எவ்விடத்தது-ஏறிற்று-ஐது-ஒழுகிற்று-ஓங்கிற்று-ஔவையது-எனஒட்டுக. வருமொழிமுற்கூறியவதனால்ணகாரத்திற்குச்சிறுபான்மைதிரிபுமுண்டென்றுகொள்க. சாட்கோல்-எனவரும்·இதற்குச்சாணுகியகோலென்க· இவை நின்றசொன்முனியல்பாகுமென்றவழியடங்காவாயின· அது வருமொழிபற்றித்திரியாமைகூறியதாதலின்·) (ரு)

வேற்றுமைக்கண்ணும்வல்லெழுத்தல்வழி,மேற்கூறியற்கையாவயினான· ※

இதுமுற்கூறியவாற்றான்வேற்றுமைக்கட்டிரிபெய்திநின்றவற்றை மீண்டுவேற்றுமைக்கண்ணும் வல்லெழுத்தல்வழித்திரியாவெனவெய்தியது விலக்கிற்று ஆவயினான -அல்வழிக்கண்ணங்ஙனந்திரியாதுநின்றஅவ்வொற்றுக்கள்—வேற்றுமைக்கண்ணும்-வேற்றுமைப்பொருட்புணர்ச்சியிடத்தும்— வல்லெழுத்தல்வழிமேற்கூறியற்கை- வல்லெழுத்தல்லாதவிடத்துமேற்கூறியவியல்புமுடிபாம்·— (எ-று) எனவேவல்லெழுத்துவந்துழித்திரியுமென்றாயிற்று [உ-ம்] மண் - பொன் - எனநிறுத்திஞெகிழ்ச்சி - நீட்சி - மாட்சி - யாப்பு-வன்மை- நுந்தையது- அழகு- ஆக்கம்- இன்மை - எனஏற்பன கொணர்ந்

தொட்டுக. இதுவும் செய்கைச்சூத்திரம். மேனான்குசூத்திரத்தாற்கூறுப.
இவை வல்லெழுத்துவந்துழித்திரியுமாறு தத்தமீற்றுட்கூறுதும். (௬)

லனவெனவரூஉம்புள்ளிமுன்னர்த்,தநவெனவரிற்றனவாகும்மே. *

இது புள்ளிமயங்கியலை நோக்கியதோர் வருமொழிக் கருவிகூறுகின்றது.
லனவெனவரூஉம்புள்ளிமுன்னர் - லகார னகார மென்றுசொல்லவருகின்ற
புள்ளிகளின்முன்னர் — தநவெனவரின் - தகாரமும் நகாரமு முதலென்று
சொல்லும்படியாகச்சிலசொற்கள்வரின் — றனவாகும் - நிரனிறைவகையா
னேயவை றகார னகாரங்களாகத்திரியும். — (எ-று) [உ-ம்] கஃறீது-கன்ன
ன்று-பொன்றீது- பொன்னன்று- எனவரும். நிலைமொழித்திரிபுதத்தமீற்
றுட்கூறுதும். (௭)

ணளவென்புள்ளிமுன்டணவெனத்தோன்றும். *

இதுவுமது. ணளவென்புள்ளிமுன் - ணகார ளகார மென்றுசொல்லப்படும்பு
ள்ளிகளின்முன்னர் அதிகாரத்தால்தகாரநகாரங்கள்வருமெனின் — டணவெ
னத்தோன்றும் - அவைநிரனிறைவகையால்டகாரணகாரங்களாத்திரிந்து தோ
ன்றும். — (எ-று) மண்டீது-மண்ணன்று-முஃடீது-முண்ணன்று- எனவ
ரும் நிலைமொழித்திரிபுதத்தமீற்றுட்கூறுதும். (௮)

உயிரீறாகியமுன்னிலைக்கிளவியும்,புள்ளியிறுதிமுன்னிலைக்கிளவியு,மியல்
பாகுனவுமுறழாகுனவுமென்,றாயீரியலவல்லெழுத்துவரினே. *

இதுமுன்னிலைவினைச்சொல்வன்கணத்துக்கண்முடியுமாறுகூறுகின்றது. உயி
ரீறாகியமுன்னிலைக்கிளவியும் - உயிரீறாய்வந்தமுன்னிலைவினைச்சொற்களும் —
புள்ளியிறுதிமுன்னிலைக்கிளவியும் - புள்ளியீறாய்வந்தமுன்னிலைவினைச்சொ
ற்களும் — வல்லெழுத்துவரின் - வல்லெழுத்துமுதலாகியமொழிவரின் —
இயல்பாகுனவு முறழாகுனவுமென்றாயீரியல - இயல்பாய்முடிவனவும் உற
ழ்ந்து முடிவனவுமெனவவ்விரண்டியல்பினையுடைய. — (எ-று) [உ-ம்]
எறிகொற்றா - கொணாகொற்றா - உண்கொற்றா - தின்கொற்றா - சாத்தா -
தேவா - பூதா - என இவையியல்பு. நடகொற்றா - நடக்கொற்றா - ஈர்கொ
ற்றா - ஈர்க்கொற்றா - சாத்தா - தேவா - பூதா - என விவையுறழ்ச்சி. ஈறென்
றோதினமையின்வினைச்சொல்லேகொள்க. இவை முன்னின்றான்றொழிலுண
ர்த்துவனவும் அவனைத்தொழிற்படுத்துவனவுமெனவிருவகைய. இஐ ஆய்

ஞமுதலியன தொழிலுணர்த்துவன · நட - வா முதலியன உயிரீறும் புள்ளியீறும் தொழிற்படுத்துவன · நில்கொற்றா - நிற்கொற்றா - எனத்திரிந்துறழ்ந்தனவும் உறழாகுனவுமென்னும் பொதுவகையான்முடிக்க. இயல்புமுறழ்வுமென்றிரண்டியல்பின வென்னாதாகுனவுமென்றதனான் - துக்கொற்றா - நொக்கொற்றா - ஞெள்ளா நர்கா - மாடா வடுகா - எனவோரெழுத்தொருமொழி முன்னிலைவினைச்சொன்மிக்கேமுடிதலுங்கொள்க. (கூ)

ஔவென வரூஉமுயிரிறுசொல்லும், ஞநமவவென்னும்புள்ளியிறுதியுங், குற்றியலுகரத்திறுதியுமுளப்பட, முற்றத்தோன்றாமுன்னிலைமொழிக்கே. *

இது எய்தியதுவிலக்கிற்று முற்கூறியவற்றுட் சிலவாராதனவற்றை வரைந்துணர்த்தலின்)ஔவென வரூஉமுயிரிறுசொல்லும் - ஔவென வருகின்றவுயிரீற்றுச்சொல்லும் — ஞநமவவென்னும்புள்ளியிறுதியும் - ஞநமவவென்றுசொல்லப்படும் புள்ளியீற்றுச்சொல்லும் —குற்றியலுகரத்திறுதியும்-குற்றியலுகரத்தையிறுதியிலேயுடையசொல்லும்— முன்னிலைமொழிக்குளப்படமுற்றத்தோன்றா- முன்னர்முன்னிலைமொழிக்குப் பொருந்தக்கூறியவியல்புமுறழ்ச்சியுமாகியமுடிபிற்கு முற்றத்தோன்றா· — (எ-று) முற்றவென்றதனானிலைமொழியுகரம்பெற்றுறழ்ந்துமுடிதல்கொள்க. [உ-ம்] கௌவுகொற்றா - கௌவுக்கொற்றா - வௌவுகொற்றா - வௌவுக்கொற்றா - உரிஞுகொற்றா - உரிஞுக்கொற்றா - பொருநுகொற்றா - பொருநுக்கொற்றா - திருமுகொற்றா - திருமுக்கொற்றா - தெவ்வுகொற்றா - தெவ்வுக்கொற்றா - கூட்டுகொற்றா - கூட்டுக்கொற்றா - எனவரும். (ம)

உயிரீறாகியவுயர்திணைப்பெயரும், புள்ளியிறுதியுயர்திணைப்பெயரு, மெல்லாவழியுமியல்பெனமொழிப. *

இது உயர்திணைப்பெயர் வன்கண மென்கண மிடைக்கண முயிர்க்கணமென்னுநான்குகணத்தினுமிருவழியுமுடியுமாறுகூறுகின்றது. உயிரீறாகியவுயர்திணைப்பெயரும் - உயிரீறாய்வந்தவுயர்திணைப்பெயர்களும்— புள்ளியிறுதியுயர்திணைப்பெயரும்-புள்ளியீற்றினையுடையவுயர்திணைப்பெயர்களும் —எல்லாவழியும் - நான்குகணத்து அல்வழியும் வேற்றுமையுமாகியஎல்லாவிடத்தும்— இயல்பெனமொழிப - இயல்பாய்முடியுமென்றுகூறுவர்புலவர்· — (எ-று)வன்கணமொழிந்தகணங்களை ஞ ந ம ய வ வென்பதனான்முடிப்பாரு

றாளர். அதுபொருந்தாதுஇவ்வாசிரியருயர்திணைப்பெயரும்விரவுப்பெயரு
ம்எடுத்தோதியேமுடிப்பாராதலின்) [உ-ம்] நம்பி-. அவன் - எனவும். நங்
கை - அவள் - எனவும்நிறுத்திஅல்வழிக்கண்குறியன் - சிறியன் - தீயன் - பெரிய
ன் - எனவும். குறியள் - சிறியள் - தீயள் - பெரியள் - எனவும். ஞான்றான் - நீண்
டான் - மாண்டான் - எனவும். ஞான்றாள் - நீண்டாள் - மாண்டாள் - எனவும்.
யாவன் - வலியன் - எனவும். யாவள் - வலியள் - எனவும். அடைந்தான் - ஆயினா
ன் - ஔவியத்தான் - எனவும். அழகியள் - ஆடினாள் - ஔவியத்தாள் - எனவும்
ஒட்டுக. இனிவேற்றுமைக் கண் கை செவி தலை புறம்எனவும். ஞாற்சி - நீட்சி -
மாட்சி - எனவும் யாப்பு - வன்மை - எனவும் அழகு - ஔவியம் - எனவும்ஒட்டுக.
ஒருவேன்எனத்தனித்தன்மைப்பெயர்க்கண்ணும்குறியேன் - சிறியேன் - தீ
யேன் - பெரியேன் - எனவும். கை - செவி - தலை - புறம் - எனவும்எல்லாவற்றோடு
மொட்டுக. முன்னிலைவிரவுப்பெயராதலின்ஈண்டைக்காகா. இனிஉயிரீறுபுள்
ளியிறுதி யென்றமிகையானே உயர்திணைப்பெயர் திரிந்து முடிதலுங்கொள்
க. கபிலபரணர் - இறைவநெடுவேட்டுவர் - மருத்துவமாணிக்கர் - எனஈறுகெட்
டியல்பாய்முடிந்தன. ஆசீவகப்பள்ளி - நிக்கந்தக்கோட்டம் - எனவிவையவ்
வொற்றுக்கெட்டுமிக்குமுடிந்தன. ஈழவக்கத்தி - வாணிகத்தெரு - அரசக்கன்
னி - கோலிகக்கருவி - எனவிவைஒருமையீறும்பன்மையீறுங்கெட்டுமிக்குமுடி
ந்தன. குமரகோட்டம் - குமரக்கோட்டம் - பிரமகோட்டம் - பிரமக்கோட்ட
ம் - எனவிவையீறுகெட்டுவல்லெழுத்துறழ்ந்தன. வண்ணாப்பெண்டிர் - எனமி
க்குமுடிந்தது. பல்சங்கத்தார் - பல்சான்றோர் - பல்லரசர் - என்றாற்போல்வன
ரகரவீறும்அதன்முன்னின்றஅகரமுங்கெட்டுப்பிறசெய்கைகளும்பெற்றுமு
டிந்தன. இனி யெல்லாவழியுமென்றதனான்உயர்திணைவினைச்சொல்லியல்பா
யுந்திரிந்துமுடிவனவெல்லாங்கொள்க. உண்கு - உண்டு - வருது - சேறு - உண்
பல் - உண்டேன் - உண்பேன் - என்னும்தன்மைவினைகளை - கொற்றா - சாத்தா -
தேவா - பூதா - என்பனவற்றோடொட்டுக. உண்டீர் - சான்றீர் - பார்ப்பீர் -
எனமுன்னிலைக்கண்ணும் - உண்ப - உண்டார் - சான்றார் - பார்ப்பார் - எனப்
படர்க்கைக்கண்ணுமொட்டுக. இவையியல்பு. உண்டனெஞ்சான்றேம் உண்
டேநாம்என்றாற்போல்வனதிரிந்துமுடிந்தன. பிறவுமன்னை. (யக)

அவற்றுள்; இகரவிறுபெயர்திரிபிடனுடைத்தே. ※

இது உயர்திணைப்பெயருட்சிலவற்றிற் கெய்தாததெய்துவித்தது. அவற்றுளி கரவிறுபெயர் - முற்கூறியவுயர்திணைப் பெயர்களுளிகரவீற்றுப்பெயர் — திரிபிடனுடைத்து- இருவழியுந்திரிந்து முடியுமிடனுடைத்து. — (எ-று) எட்டிப்பூ- காவிதிப்பூ- நம்பிப்பேறு- எனவிவ்வுயர்திணைப்பெயர்கள் வேற்றுமைக்கண் மிக்குமுடிந்தன. எட்டி - காவிதி - என்பன தேயவழக்காகியசிறப்புப்பெயர். எட்டி - மரம்அன்று. அது - எட்டிக்குமரனிருந்தோன்றன்னையென்பதனானுணர்க. இவைஎட்டியதுபூ- எட்டிக்குப்பூ -எனவிரியும். இனிநம்பிக்கொல்லன்- நம்பிச்சான்றான்- நம்பித்துணை - நம்பிப்பிள்ளை - எனவும். செட்டிக்கூத்தன் - சாத்தன்- தேவன் - பூதனெனவும் அல்வழிக்கணுயர்திணைப்பெயர்மிக்குமுடிந்தன. இடனுடைத்தென்றதனானிகரவீறல்லாதனவுமீறுதிரியாது நின்றுவல்லெழுத்துப்பெறுதல்கொள்க. நங்கைப்பெண் -நங்கைச்சானி -என அல்வழிக்கட்சிறுபான்மை ஐகாரவீறுமிக்கன. இவ்வீற்றஃறிணைப்பெயர் மிக்குமுடிதலுயிர்மயங்கியலுட்கூறுப. (௰௨)

அஃறிணை விரவுப்பெய, ரியல்புமாருளவே. *

இது விரவுப்பெயருளியல்பாய்முடிவனவுமுளவென்கின்றது. அஃறிணைவிரவுப்பெயர் - உயர்திணைப்பெயரோடஃறிணை விரவியவிரவுப்பெயர் — இயல்புமாருள - இயல்பாய் முடிவனவுமுள. உம்மையானியல்பின்றிமுடிவனவுமுள. — (எ-று) உயர்திணைப்பெயரோடஃறிணைசென்று விரவிற்றென்றதென்னை- சொல்லதிகாரத் திருதிணைச்சொற்குமோரன்னவுரிமையவென்றுசூத்திரஞ்செய்வாராதலின் அதுவும்பொருந்துமாறுகூறுதும். சாத்தன்- சாத்தி- முடவன்- முடத்தி- எனவரும். விரவுப்பெயர்க்கண்ணுயர் திணைக்குரித்தாகவோதியவாண்பாலும் பெண்பாலுமுணர்த்திநின்ற வீற்றெழுத்துக்களேயஃறிணையாண்பெண்ணுணர்த்திற்றென்றல் வேண்டும் என்னை அஃறிணைக் கொருமைப்பாலும் பன்மைப்பாலுமுணர்த்துமீறன்றியாண்பாலும் பெண்பாலுமுணர்த்துமீறுகளுளவாகவாசிரியரோதாமையின்) அங்ஙனமுயர்திணையிருபாலுமுணர்த்துமீறுகள்நின்றேயஃறிணையாண்பாலையும் பெண்பாலையுமுணர்த்துதலின்ஃறிணையுயர்திணையோடுசென்றுவிரவிற்றென்றவற்றினுண்மைத் தன்மைத்தோற்றங்கூறுவானீண்டுக்கூறினார். இவ்வாறே விளிமரபின்கட் கிளந்தவிறுதியஃறிணைவிரவுப்

பெயரென்புழிப்புமாசிரியருயர்திணையோடஃறிணைவிரவிய விரவுப்பெயரொனவாண்டுமுன்மைத்தன்மைத்தோற்றங்கூறுவர் மாணாக்கனினிதுணர்தற்கு இவ்வாறுவிரவுப் பெயரின துண்மைத் தன்மைத்தோற்றமிரண்டதிகாரத் துங்கூறியவ்விரவுப்பெயர் வழக்கின்க ணிருதிணைப் பொருளு முணர்த்தி யிருதிணைச்சொல்லாய் நிற்றற்கு மொத்த வுரிமையவா மெனப்புலப்பட நிற்குமாறுகூறினுரென்றுணர்க. இனியவை அல்வழிக்கணியல்பாய்நிற்குமாறு - சாத்தன்- கொற்றன்-சாத்தி- கொற்றி-என நிறுத்தி. குறியன் - சிறியன்-தீயன்-பெரியன்-எனவும்-குறியள்-சிறியள்- தீயள்- பெரியள்- எனவும். ஞான்றுன் - நீண்டான்-மாண்டான்-யாவன்-வலியன்- ஞான்றுள்- நீண்டாள்-மாண்டாள்-யாவள்-வலியள் -எனவும். அடைந்தான்- ஔவித்தான்- அடைந்தாள்-ஔவித்தாள்-எனவும் நான்குகணத்தோடுமொட்டுக . இனி வேற்றுமைக்கண்-கை-செவி- தலை-புறம்-எனவும். ஞாற்சி - நீட்சி-மாட்சி-யாப்பு-வன்மை-அழகு-ஔவியம்-எனவுமொட்டுக. இவற்றுள்; ணகரநிற்பத்தகரநகரம்வந்துழித்திரியுமுதாரணம்ஈண்டுக்கொள்ளற்க- இனிசாத்தன்குறிது-சாத்திகுறிதுஎன வஃறிணைமுடிபேற்பனவுங்கொள்க. இவறெருடுவினைச்சொற்றலைப்பெய்யவிவையிருதிணைக்குமுரியவாம்ஆண்டுநாற்பத்தெட்டுச் சூத்திரங்கரான்முடிவதனைஈண்டுத்தொகுத்தார். இதுஉயர்திணைக்குமொக்கும். உம்மையானியல்பின்றிமுடிவனணகாரவீற்றுட்காட்டுதும். (௰௩)

புள்ளியிறுதியுமுயிரிறுகிளவியும் , வல்லெழுத்துமிகுதி சொல்லியமுறையாற், றம்மினுகிய தொழிற்சொன்முன்வரின் , மெய்ம்மையாதலுமுறழத்தோன்றலு , மம்முறையிரண்டுமுரியவையுளவே , வேற்றுமைமருங்கிற் போற்றல்வேண்டும். *

இது மேலுயிரீற்றிற்கும் புள்ளியீற்றிற்கும் வேற்றுமைக்கட் கூறுமுடிபு பெறுதுநிற்குமூன்றும்வேற்றுமைமுடிபுகூறுகின்றது. தம்மினுகியதொழிற்சொல் - மூன்றுவதற்குரியவினைமுதற் பொருளானுளவாகிய தொழிற்சொல்— புள்ளியிறுதிமுன்னுமுயிரிறுகிளவிமுன்னும்வரின் -புள்ளியீற்றுச்சொன்முன்னருமுயிரீற்றுச்சொன்முன்னரும்வருமாயின்— மெய்ம்மையாதலுமுறழத்தோன்றலுமம்முறையிரண்டு முரியவையுள - அவற்றுள்இயல்பாகலுமுறழத் தோன்றுதலுமாகிய வம்முறையிரண்டும்பெறுதற்குரிய வுளவாதலால்

வேற்றுமைமருங்கிற்சொல்லியமுறையான்வேண்டும் வல்லெழுத்துமிகுதி- உயிர்மயங்கியலுள்ளும்புள்ளிமயங்கியலுள்ளும் வேற்றுமைப்புணர்ச்சிக்குச்சொல்லியமுறையான்விரும்பும்வல்லெழுத்துமிகுதியை — போற்றல்- ஈண்டுக்கொள்ளற்க. — (எ-று) மெய்ம்மைபட்டாங்காதலினியல்பாம் [உ-ம்] நாய்- புலி- எனநிறுத்தி-கோட்பட்டான்-சாரப்பட்டான் - தீண்டப்பட்டான்- பாயப்பட்டான்- எனவருவித்து· இயல்பாயவாறுகாண்க சூர்கோட்பட்டான்- சூர்க்கோட்பட்டான் - வளிகோட்பட்டான் - வளிக்கோட்பட்டான்-சாரப்பட்டான்-தீண்டப்பட்டான்-பாயப்பட்டானென விவையுறழ்ந்தன - இவைநாற்பத்தெட்டுச்சூத்திரங்களான்முடிவனவற்றைத் தொகுத்தார்.புள்ளியிறுதியுயிரிறுகிளவிஎன்றதனாற்பேஎய்கோட்பட்டான்- பேஎய்க்கோட்பட்டான்- என எகரப்பேறு உறழ்ச்சிக்குங்கொடுக்க-அம்முறையிரண்டுமுரியவையுளவேயென்றதனான் பாம்புகோட்பட்டான்-பாம்புக்கோட்பட்டான் -என்னுமுறழ்ச்சியுணிலைமொழி யொற்றுத்திரி தலுங் கொள்க இவ்வீறுகள் நாய்க்கால்- தேர்க்கால்- கிளிக்கால்- என ஆண்டு வேற்றுமைக்கண் வல்லெழுத்துமிகுமாறுகொள்க· (௰௪)

மெல்லெழுத்துமிகுவழிவலிப்பொடுதோன்றலும்,வல்லெழுத்துமிகுவழி மெலிப்பொடுதோன்றலு ,மியற்கைமருங்கின் மிகற்கைதோன்றலு, முயிர்மிகவருவழி யுயிர்கெடவருதலுஞ் , சாரியையுளவழிச் சாரியைகெடுதலுஞ், சாரியையுளவழித்தன்னுருபுநிலையலும் , சாரியையியற்கை யுறழத் தோன்றலு; முயர்திணைமருங்கினொழியாதுவருதலு , மஃறிணைவிரவுப்பெயர்க்கவ்வியனிலையலு, மெய்பிறிதாகிடத் தியற்கையாதலு , மன்னபிறவுந் தன்னியன்மருங்கின், மெய்பெறக்கிளந்துபொருள்வரைந்திசைக்கு,மைகாரவேற்றுமைத் திரிபெனமொழிப· ※

இதுஇரண்டாம்வேற்றுமைத்திரிபுதொகுத்துணர்த்துகின்றது· மெல்லெழுத்துமிகுவழிவலிப்பொடுதோன்றலும்- மரப்பெயர்க்கிளவிமெல்லெழுத்துமிகுமேஎன்றதனான்விளங்குறைத்தானென மெல்லெழுத்துமிகுமிடத்துவிளக்குறைத்தானெனவல்லெழுத்துத்தோன்றுதலும்— வல்லெழுத்துமிகுவழிமெலிப்பொடுதோன்றலும்-மகரவிறுதியென்பதனான்மரக்குறைத்தானென வல்லெழுத்துமிகுமிடத்துமரங்குறைத்தானென மெல்லெழுத்துத்தோன்

றுதலும்— இயற்கைமருங்கின்மிகற்கைதோன்றலும்- தாயென்கிளவியாகும் என்றவழிதாய்கொலை எனஇயல்பாய் வருமிடத்துத்தாய்க் கொலையென மிகுதிதோன்றலும்— உயிர்மிகவருவழியுயிர்கெடவருதலும் - குறியதன்முன்னரும் எனவும் குற்றெழுத்திம்பருமெனவும் எயெனிறுதிக்கெனவும்கூறியவாற்றானுயிர்மிக்குவருமிடத்து- பலாக்குறைத்தான்• தழுக்குண்ணர்ந்தான் எக்கட்டினுன்எனஉயிர்கெடவருதலும் — சாரியையுளவழிசசாரியைகெடுதலும்- வண்டும்பெண்டுமென்பதனுற்சாரியைப்பேறுள்ளவிடத்துவண்டுகொணர்ந்தான் எனச்சாரியைகெட்டுநிற்றலும் — சாரியையுளவழித்தன்னுருபுநிலையலும்- வண்டும்பெண்டும்என்பதனுற்சாரியைப்பேறுள்ளவிடத்துவண்டினைக்கொணர்ந்தான்எனத்தன்னுருபுநிற்றலும் இதற்குவல்லெழுத்துப்பேறுஈற்றுவகையாற்கொள்க— சாரியையியற்கையுறழத்தோன்றலும்-புளிமரக்கிளவிக்கெனவும்பனையுமரையும் எனவும்பூல்வேலென்றுஎனவும்பெற்றசாரியைபெறுதியல்பாய்நின்று·புளிகுறைத்தான்- புளிக்குறைத்தான்பனைதடிந்தான்-பனைத்தடிந்தான்-பூல்குறைத்தான் பூற்குறைத்தான் என மிக்குந்திரிந்துமுறழ்ச்சியாகத்தோன்றலும் — உயர்திணைமருங்கி னொழியாதுவருதலும்-உயிரீறுகியஉயர்திணைப்பெயரொன்பதனுன் வேற்றுமைக்கணியல்பாய்வருமென்றமையின்நம்பியைக்கொணர்ந்தான் - நங்கையைக்கொணர்ந்தான்என்றவழியாண்டனுருபுதொகாதேநிற்றலும்- ஒழியாதென்றதனுன்மகற்பெற்றுன் - மகட்பெற்றுன்எனவும்- ஆடூஉவறிசொல்-மழவரோட்டிய-அவர்க்கண்டெம்முள் - எனவும்ஒழிந்துவருமென்றுங்கொள்க.அஃறிணைவிரவுப்பெயர்க்கவ்வியனிலையலும்-உயர்திணையோடஃறிணைவிரவும்பெயர்க்கு- கொற்றனைக்கொணர்ந்தானெனவுருபுதொகாதேநிற்றலும் அவ்வியனிலையலும்என்றதனுனேமகப்பெற்றேனென விரவுப்பெயர்க்கண்ணும்தொகுதல்கொள்க• உருபியலுள் - தேருங்காலை யென்றவிலேசானிதற்குமுன்னையதற்கும் வல்லெழுத்துப்பேறுங்கொள்க • மெய்பிறிதா கிடத்தியற்கையாதலும் - புள்ளிமயங்கியலுள் ணகாரனகாரவிறுதிவல்லெழுத்தியையின் மெய்பிறிதாமென்றவிடத்துமெய்பிறிதாகாது பொன்கொணர்ந்தான் மண்கொணர்ந்தான் எனவியற்கையாய்வருதலும்— அன்னபிறவும் அவைபோல்வனபிறவுமாவன ஏக்கண்டுபெயருங்காலையாழ் நின்கற்கெழுசிறுகுடி எனவும்தப்புணர்வில்லா

நயனில்லோர்நட்பெனவும்வருவழி எக்கண்டு நப்புணர்வென்னுந் தொடக்கங்குறுகுமுயர்திணைப்பெயர்கள் மெல்லெழுத்துப்பெறுதற் குரியன வல்லெழுத்துப் பெறுதல்கொள்க. இன்னும் திணைபிளந்தான்- மயிர்குறைத்தான்- நற்கொண்டான்-செறுத்தான்-புகழ்ந்தான்-எனவும்வரும். தன்னியன்மருங்கின்- தன்னையேநோக்கித்திரிபுநடக்குமிடத்து—மெய்ப்பெறக்கிளந்து பொருள்வரைந்திசைக்கும்- பொருள்பெறவெடுத்தோதப்பட்டுவனவே ற்றுமைப்பொருட்புணர்ச்சியதுபொதுமுடிபினைத்தானீக்கி வேறுமுடிபிற்றாய்நின்றொலிக்கும்.— ஐகாரவேற்றுமைத்திரிபெனமொழிப.- இரண்டாம்வேற்றுமையதுவேறுபட்டபுணர்ச்சியென்றுகூறுவராசிரியர்:— (எ-று) மெய்ப்பெறவென்றதனானே சாரியையுளவழித்தன்னுருபுநில்லாது செய்யுட்கண்வருவனவும்பிறவற்றின்கணுறழ்ந்துமுடிவனவுங்கொள்க. மறங்கடிந்தவருங்கற்பினெனவும்.- சிலசொல்விற்பல்கூந்தலெனவும்.- ஆயிருதிணையினிசைக்குமன்னெனவும்.- பிறண்டும்பெரும்பான்மையும்வருமென்றுகொள்க. மைகொணர்ந்தான்-மைக்கொணர்ந்தான்- வில்கொள்- விற்கொள்-எனவரும். இனி யிவ்வாறுதிரியாது அகத்தோத்திற்கூறியபொதுமுடிபேதனக்குமுடிபாகவருவனவுங்கொள்க. அவை- கடுக்குறைத்தான்-செப்புக்கொணர்ந்தான்-என்றாற்போல்வன. தம்மினாகியதொழிற்சொன்முன்வரினே- என்றவதிகாரத்தான்வினைவந்துழியே இங்ஙனம்பெரும்பான்மைதிரிவதென்றுணர்க. இனித்தன்னினமுடித்தலென்பதனானேழாவதற்கும் வினையோடுமுடிவுழித்திரிதல்கொள்க. வரைபாய்வருடை- புலப்புக்கன்னே- புல்லணற்காளை-யென்றாற்போல்வரும். (௰௬)

வேற்றுமையல்வழி இ ஐ யென்னும், மீற்றுப்பெயர்க்கிளவிமூவகை
நிலைய, வவைதாம்; மியல்பாகுனவும்வல்லெழுத்துமிகுனவும், முறழாகுன
வுமென்மனார்புலவர்.

இது இகரவீற்றுப்பெயர்க்கும் ஐகாரவீற்றுப்பெயர்க்கும்அல்வழிமுடிபுகூறுகின்றது. வேற்றுமையல்வழி-வேற்றுமையல்லாவிடத்து— இ ஐ யென்னுமீற்றுப்பெயர்க்கிளவிமூவகைநிலைய- இஐயென்னுமீற்றையுடையபெயர்ச்சொற்கள்மூவகையாகியமுடிபுநிலையையுடைய.— அவைதாம்-அம்முடிபுகடாம்—இயல்பாகுனவும்- இயல்பாய்முடிவனவும்—வல்லெழுத்துமிகுன

வும்-வல்லெழுத்துமிக்குமுடிவனவும்—உறழாகுனவும்-உறழ்ச்சியாய்முடிவனவும்— என்மனார்புலவர்- எனவிவையென்றுகூறுவர்புலவர்.— (எ-று) [உ-ம்]பருத்திகுறிது- காரைகுறிது- சிறிது- தீது-பெரிது-எனவிவைஇயல்பு. மாசித்திங்கள்- சித்திரைத்திங்கள்-அலிக்கொற்றன்- புலைக்கொற்றன்-காவிக்கண்- குவளைக்கண் - எனவிவை மிகுதி. கிளிகுறிது - கிளிக்குறிது-தினைகுறிது - தினைக்குறிது - எனவிவையுறழ்ச்சி . பெயர்க்கிளவிமூவகைநிலையவெனவே பெயரல்லாதவிாண்டீற்றுவினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமியல்புமிகுதியுமாகியவிருவகைநிலையவாம். ஒல்லைக்கொண்டான்என்பது ஐகாரவீற்றுவினைச்சொன்மிகுதி. இனியணியென்பதன்கணிகரவீற்றுவினையெச்சமெடுத்தோதுப. இவற்றிற்கியல்புவந்துழிக்காண்க. சென்மதிபாக இது இகரவீற்றிடைச்சொல்லியல்பு. மிகுதிவந்துழிக்காண்க. தில்லைச்சொல்லே இதுஐகாரவீற்றிடைச்சொன்மிகுதி வந்தது. இயல்புவந்துழிக்காண்க. கடிகா இது இகரவீற்றுரிச்சொல்லியல்பு. மிகுதிவந்துழிக்காண்க. பணைத்தோள்- இது ஐகாரவீற்றுரிச்சொன்மிகுதி. இயல்புவந்துழிக்காண்க. (௰௬)

சுட்டுமுதலாகியவிகரவிறுதியு, மெகரமுதல்வினாவினிகரவிறுதியுஞ், சுட்டுச்சினைநீடியவையெனிறுதியும், யாவென்வினாவினையெனிறுதியும், வல்லெழுத்துமிகுனவுமுறழாகுனவுஞ், சொல்லியன்மருங்கினுளவெனமொழிப.*

இதுஎழாம்வேற்றுமைஇடப்பொருளுணர்த்திநின்றவிகரவைகாரவீற்றிடைச்சொன்முடிபுகூறுகின்றது. சொல்லியன்மருங்கின்- இகரஐகாரங்கட்குமுன்னர்க்கூறியமூவகைஇலக்கணங்களுளியல்பைநீக்கி—சுட்டுமுதலாகியவிகரவிறுதியும்- சுட்டெழுத்தினைமுதலாகவுடைய அவ்விகரவீற்றிடைச்சொல்லும்—எகரவினாவின்முதலிகரவிறுதியும் -எகரமாகியவினாவினைமுதலாகவுடையவவ்விகரவீற்றிடைச்சொல்லும் — சுட்டுச்சினைநீடியவையெனிறுதியும் -சுட்டாகியவுறுப்பெழுத்துநீண்டவ்வைகாரவீற்றிடைச்சொல்லும்— யாவென்வினாவினையெனிறுதியும்- யாவென்வினாவினைமுதற்கணுடையவ்வைகாரவீற்றிடைச்சொல்லும்— வல்லெழுத்துமிகுனவும்- வல்லெழுத்துமிக்குமுடிவனவும்— உறழாகுனவும் - உறழ்ச்சியாய் முடிவனவும் — உள வெனமொழிப-உளவென்றுகூறுவர்புலவர்.— (எ-று) [உ-ம்] அதோளிக்

கொண்டான் - இதோளிக்கொண்டான் - உதோளிக்கொண்டான் - எதோளிக்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - எனவும் ஆண்டைக்கொண்டான் - ஈண்டைக்கொண்டான் - ஊண்டைக்கொண்டான் - யாண்டைக்கொண்டான் - எனவும் இவைமிக்கன. அதோளியவ்விடமென்னும்பொருட்டு. அவ்வழிகொண்டான் - அவ்வழிக்கொண்டான் - இவ்வழிகொண்டான் - இவ்வழிக்கொண்டான் - உவ்வழிகொண்டான் - உவ்வழிக்கொண்டான் - எவ்வழிகொண்டான் - எவ்வழிக்கொண்டான் - என உறழ்ந்தன. சுட்டுச்சினை நீண்டதற்கும் யாவினாவிற்கும் வரும் ஐகாரவீற்றுக்குதாரணம் அக்காலத்து ஆயிடைகொண்டான் - ஆயிடைக்கொண்டான் - என்றாற்போல ஏனையவற்றிற்கும் வழங்கிற்றுப் போலும். இனி ஆங்கவைகொண்டான் - ஆங்கவைக்கொண்டான் - என்பனகாட்டுவாருமுளர். அவைதிரிபுடையனவாம். சொல்லியவென்றதனானே பிறவைகாரவீறுமிக்குமுடிவனகொள்க. அன்றைக்கூத்தர் - பண்டைச்சான்றோன வும்ஒருதிங்களைக்குழவி - ஒருநாளைக்குழவி - எனவும்வரும். (௱௭)

நெடியதன்முன்னொற்றுமெய்கெடுதலும், குறியதன்முன்னர்த்தன் னுருபிரட்டலு, மறியத்தோன்றியநெறியியலென்ப. *

இது புள்ளிமயங்கியலைநோக்கியதோர் நிலைமொழிக்கருவிகூறுகின்றது. நெடியதன்முன்னொற்றுமெய்கெடுதலும் - நெட்டெழுத்தின்முன்னின்றவொற்றுத்தன்வடிவுகெடுதலும் — குறியதன்முன்னர்த்தன்னுருபிரட்டலும் - குற்றெழுத்தின்முன்னின்றவொற்றுத்தன்வடிவிரட்டித்தலும் — அறியத்தோன்றியநெறியியலென்ப - அறியும்படிவந்தவடிப்பாட்டியலென்றுகூறுவராசிரியர்.— (எ-று) இங்ஙனநெடியதன்முன்னொற்றுக்கெடுவன ணகாரமும் னகாரமும்மகாரமும்லகாரமும்ளகாரமும்எனஐவகையவாம் [உ-ம்] கோணிமிர்ந்தது - தானல்லன் - தாநல்லர் வேனன்று தோணன்று எனநகரம் வருமொழியாதற்க ணெடியதன்முன்னொற்றுக்கெட்டது. கோறீது - வேறீது - எனத்தகரம் வருமொழியாதற்கண்லகாரவொற்றுக்கெட்டது. ஏனையவற்றுழிக்காண்க. இவற்றை - லனவென வரூஉம் ணளவென்புள்ளிமுனென்பனவற்றான்முடித்துக்கெடுமாறுகாண்க. ஒற்றிரட்டுவனஞகாரநகாரழகாரமொழிந்தன. கண்ணழகிது - பொன்னகல் - தம்மாடை - சொல்லழகிது - எள்ளழகிது - நெய்யகல் - தெவ்வலன் - எனக் குறியதன்முன்னர்த்தன்னுருவி

ட்டின. மேலைச்சூத்திரத்து நான்கனுருபிற்கூறியவதனான் ஒற்றிரட்டுதலுயிர் முதன்மொழிக்கண்ணதென்றுணர்க. குறியதுபிற்கூறியமுறையன்றிக்கூற்றி னுற்றம்மைஎம்மைநின்னை எனநெடியனகுறுகிநின்றவழியுங்குறியதன் முன்னரொற்றுமிகாட்டுதலும்விரனன்று- குறணிமிர்ந்தது எனக்குறிலிணையின் முன்னர்வந்தஒற்றுக்கெடுதலும்- வராதீது-நன்று- எனக்குறினெடிற்கணி ன்றஒற்றுக்கெடுதலும்- அதுகோரூழிஎனவும்குருசிறீயன்எனவும்தொடர் மொழியீற்றுநின்றவொற்றுக்கெடுதலும்இடைச்சொல்லோடொட்டுப்பட்டு நிற்றலும்-கற்றீதளனவும்விற்றீதுஎனவொற்றுநிற்றலுங்கொள்க. இனியறிய வென்றதனல்தேன்றீது- நாண்டீதுஎன்றாற்போல்வனகெடாமைநிற்றலும் கெடுதலுந்தகர நகரங்கள்வந்துழியென்பதூஉங்கொள்க. நெறியியலென்றத னற்சுட்டின் முன்னுயிர்முதன்மொழிவந்துழி இடையினவகரவொற்றில்வழி யுமிரட்டுதல்கொள்க. அவ்வடை- அவ்வாடை- எனவரும். (௰௮)

ஆறனுருபினு நான்கனுருபினுங், கூறியகுற்றொற்றிரட்டலில்லை. யீறா குபுள்ளியகரமொடுநிலையு, நெடுமுதல்குறுகுமொழிமுன்னான. *

இது உருபியலைநோக்கியதோர்நிலைமொழிக்கருவிகூறுகின்றது. நெடுமுதல் குறுகுமொழிமுன்னான - நெடிதாகியமுதலெழுத்துக்குறுகிமுடியுமாறுவ கைப்பட்டமொழிகளின்முன்னர்வந்த— ஆறனுருபினுநான்கனுருபினும்- ஆறாம்வேற்றுமைக்கண்ணும்நான்காம்வேற்றுமைக்கண்ணும்— கூறியகுற் றொற்றிரட்டலில்லை - முன்னர்நிலைமொழிக்கிரட்டுமென்றகுற்றொற்றிரட்டி வருதலில்லை — ஈறாகுபுள்ளியகரமொடுநிலையும்- நிலைமொழியீற்றுக்கணின் றவொற்றுக்களகரம்பெற்றுநிற்கும்.— (எ-று) உருபியலில்நீயெனொருபெ யரெனவும்- தாம்நாம்என்னும்எனவும் யாமெனிறுதிஎனவும் தான்யானெ ன்னுமெனவும் கூறியவற்றுக்குறுகியொற்றிரட்டித்தம்மை நம்மை- எம்மை- தன்னை- நின்னை - என்னை - எனவருவன. இதனானேதமது - நமது- எமது- தனது- நினது- எனது- எனவும் தமக்கு- நமக்கு- எமக்கு- தனக்கு-நினக்கு-எனக்கு- எனவும் ஒற்றிரட்டாதகரம்பெற்றுவந்தன . நான்காவதற்கொற்றுமிகுதல்வல்லெழுத்துமுதலியவென்பதனாற்கொள்க. ஆறனுருபாகியஅகரமேறிமுடியாமைக்குக்காரணம் ஆறனுருபினகரக்கிளவி - யென்புழிக்கூறினார். ஒற்றிரட்டாதகரம்பெற்ற இரண்டற்கு மொத்த.விதி

யென்றுணர்க. கூறியவென்றதனு னெடுமுதல்குறுகாத - தம் - நம் - நும் - எனவருஞ்சாரியைகட்கு மிவ்விருவிதியுங்கொள்க. எல்லார்தமக்கும் - எல்லாநமக்கும் - எல்லீர்நுமக்கும் - எல்லார்தமதும் - எல்லாநமதும் - எல்லீர்நுமதும் - எனவரும். (மகூ)

நும்மெ னிறுதியு மந்நிலை திரியாது. *

இது நெடுமுதல்குறுகாத நும்மென்கின்றதுமவ் விதிபெறுமென்கின்றது. நும்மெனிறுதியும் - நெடுமுதல் குறுகா நும்மென்னுமகரவீறும் — அந்நிலை திரியாது - முற்கூறிய துற்றொற்றிரட்டாமையுமீறு துபுள்ளியகரமொடுநிலையலுமெய்தும்.—(எ - று) [உ - ம்] நமது - நுமக்கு - எனவரும். (உம)

உகரமொடுபுணரும்புள்ளியிறுதி, யகரமுமுயிரும்வருவழியியற்கை. *

இது புள்ளிமயங்கியலைநோக்கியதோர் நிலைமொழிச்செய்கைகூறுகின்றது. உகரமொடுபுணரும்புள்ளியிறுதி - உகரப்பேற்றோடுபுணரும்புள்ளியீறுகள் — யகரமுமுயிரும்வருவழியியற்கை - யகரமுமுயிரும்வருமொழியாய்வருமிடத்தவ்வுகரம்பெறாதியல்பாய்முடியும்.—(எ - று) அவ்வீறுகளாவனபுள்ளிமயங்கியலுளுகரம்பெறுமென்றுவிதிக்கும்பலவீறுகளுமென்றுகொள்க. உரிஞ்யானு - உரிஞ்அனந்தா - ஆதா - இகலா - ஈந்தா - உழுந்தா - ஊரா - எயினு - ஏறு - ஐயா - ஒழுக்கா - ஓதா - ஔவியா - எனஒட்டுக. உரிஞ்யாது - உரிஞ்அழகு - எனவுமொட்டுக. ஏனைப்புள்ளிகளோடுமேற்பனவறிந்தொட்டுக. ஞகாரையொற்றியவென்றதனானும்ஞநமவவியையினுமென்றதனானும் யகரமுமுயிரும்வந்தாலுகரம்பெறாதியல்பாமென்பதுபெறுதலினீண்டுவிலக்கல்வேண்டாவெனின் எடுத்தோத்தில்வழியேயுய்த்துணர்ச்சியென்றுகொள்க. இதுமுதலாக அல்வழிகூறுகின்றார். (உக)

உயிரும்புள்ளியுமிறுதியாகி, யளவுநிறையுமெண்ணுஞ்சுட்டி,யுளவெனப்பட்டவெல்லாச்சொல்லுந், தத்தங்கிளவிதம்மகப்பட்ட,முத்தைவரூஉங் காலந்தோன்றி,னொத்ததென்பவேயென்சாரியை. *

இது அளவுநிறையுமெண்ணுமாகியபெயர்கடம்மிற் புணருமாறுகூறுகின்றது. உயிரும்புள்ளியுமிறுதியாகி - உயிரும்புள்ளியுந்தமக்கீறாய்—அளவுநிறையுமெண்ணுஞ்சுட்டியுளவெனப்பட்டவெல்லாச்சொல்லும் - அளவையுநிறையையு மெண்ணையுங் கருதிவருவனவுளவென்றாசிரியர்கூறப்பட்ட வெல்லாச்

சொற்களும்—தத்தங்கிளவிதம்மகப்பட்ட - தத்தமக்கினமாகியசொற்களா ய்த்தம்மிற்குறைந்தசொற்கள்—முத்தைவரூஉங்காலந்தோன்றின் - தம்முன் னேவருங்காலந்தோன்றுமாயின்—எயென்சாரியையொத்ததென்ப - தாமெ யென்சாரியைபெற்றுமுடிதலைப்பொருந்திற்றென்பாராசிரியர்.— (எ-று) முந்தைமுத்தையெனவிகாரம். நாழியேயாழாக்கு - உழக்கேயாழாக்கு. கல னேபதக்கு - என அளவுப்பெயரோகாரம்பெற்றுத் தம்முன்னர்த்தம்மிற்கு றைந்தனவந்தன. தொடியேகஃசு - கழஞ்சேகுன்றி - கொள்ளேயையவி - என நிறைப்பெயரோகாரம்பெற்றுத்தம்முன்னர்தம்மிற்குறைந்தனவந்தன. ஒன் றேகால் - காலேகாணி - காணியேமுந்திரிகை - என எண்ணுப்பெயரோகாரம் பெற்றுதம்முன்னர்த்தம்மிற்குறைந்தனவந்தன. அதிகாரப்பட்ட புள்ளியீறு முற்கூறுதலானே குறுணிநானாழி - ஐந்நாழியுழக்கு - எனஏகாரமின்றிவரு வனவுங்கொள்க. (உஉ)

அளவெனவரூஉம்பால்வளைகிளவிக்குப், புணரவதன்றாற் சாரியையிய ற்கை. *

இதுஎய்தியதுவிலக்கிற்று. அளவெனவரூஉம்பால்வளைகிளவிக்கு - அம்மூவ கைச்சொன்முன்னர்வரும் அரையென்றுசொல்லவருகின்றபொருட்கூற்றை யுணரநின்றசொல்லிற்கு —சாரியையியற்கைபுணரவதன்று - எயென்சாரியை பெறாந்தன்மைபொருந்துவதன்று.—(எ-று)ஆல் அசை[உ-ம்]உழக்கரை - செவிட்டரை - மூவுழக்கரை (எ-ம்) கஃசரை - கழஞ்சரை - தொடியரை - கொ ள்ளரை(எ-ம்)ஒன்றரை - பத்தரை (எ-ம்)இவைஎயென்சாரியைபெறுவாய்வ ந்தன. புணரவதன்றென்றதனால் கலவரையென்பதனை யொற்றுக்கெடுத்துச் செய்கைசெய்துமுடிக்க. இதனானேசெவிட்டரையென்புழிடகரவொற்றுமி குதலுங்கொள்க. ஒட்டுதற்கொழுகிய வழக்கன்மையிற் சாரியைபெறுவாயி னவென்றுவோவெனின் அவைபெற்றும் பெறுதும்வருவனவற்றிற்குக்கூறி யதாகலானுமிதுதம் மகப்பட்ட வெனவனைந்தோதினமையானும் விலக்கல் வேண்டிற்று. (உ௩)

குறையென்கிளவிமுன்வருகாலை, நிறையத்தோன்றும்வேற்றுமையிய ற்கை. *

இதுஎய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது. எயென்சாரியைவிலக்கிவேற்

றுமைமுடிபினேடுமொட்டெறிதலின்) குறையெனகிளவிமுன்வருகாலை - குறையென்னுஞ்சொல் அளவுப்பெயர் முதலியவற்றின் முன்வருங்காலத்திற்கு— வேற்றுமையியற்கை - வேற்றுமைப்புணர்ச்சிமுடிபிற்குரித்தாகக்கூறுந்தன்மை— நிறையத்தோன்றும் - நிரம்பத்தோன்றும்.—(எ-று) [உ-ம்] உரிக்குறை - உரியநெல்லுங்குறைநெல்லுமென்க. கலக்குறை - (எ-ம்) தொடிக்குறை கொட்குறை (எ-ம்) காணிக்குறை - காற்குறை (எ-ம்) வரும். வேற்றுமையியற்கையெனவேஇவைவேற்றுமையன்றாயின; எனவேஉரிக்குறையென்பதற்கு உரியுமுழக்குமெனப்பொருளாயிற்று. ஏனையவுமன்ன. முன்வருகாலையென்றதனனே - கலப்பயறு - கலப்பாகுஎன்றாற்போலபொருட்பெயரோடுபுணரும் வழியுமிவ்வேற்றுமைமுடிபெய்துவிக்க. பாலெசன்றதுபாக்கினை. நிறையவென்றதனனே உரிக்கூறு - தொடிக்கூறு - காணிக்கூறு - எனக்கூறென்றதற்கும் இம்முடிபெய்துவிக்க. (உச)

குற்றிய லுகரக் கின்னே சாரியை. *

இது வேற்றுமைமுடிபுவிலக்கியின்வகுத்தலினெய்தியது விலக்கிப்பிறிதுவிதி கூறிற்று. குற்றியலுகரக்குச்சாரியை குற்றியலுகரவீற்றளவுப்பெயர்முதலிய வற்றிற்குக்குறையென்பதனேடுபுணரும்வழி வருஞ்சாரியை— இன்னே - இன்சாரியையேயாம். —(எ-று) குற்றியலுகரக்குஇதற்குஅத்துவிதித்துமுடிக்க. குற்றியலுகரத்தின்னேயென்பதுஉம்பாடம். உழக்கின்குறை - ஆழாக்கின் குறை (எ-ம்) கழஞ்சின்குறை - கஃசின்குறை (எ-ம்) ஒன்றின்குறை - பத்தின் குறை - (எ-ம்) வரும். இதற்கு உழக்குங்குறையுமென்பதுபொருள். இதுவேற்றுமைக்கண்ணாயின் உழக்கிற்குறையெனநிற்கும். (உரு)

அத்திடைவரூஉங்கலமெனளவே. *

இதுவு மெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. வேற்றுமைவிதிவிலக்கியத்தவகுத்தலின்) கலமெனளவே - கலமென்னுமளவுப்பெயர்குறையொடுபுணருமிடத்து — அத்திடைவரூஉம் - அத்துச்சாரியையிடைவந்துபுணரும். (எ-று) கலத்துக்குறை - இதனை அத்தேவற்றேயென்பதனன் முடிக்க - இதற்குக்கலமுங்குறையுமென்பதுபொருள். சாரியைமுற்கூறியவதனனேமுன்இன்சாரியைபெற்றவழிவல்லெழுத்துவீழ்க்க. (உசா)

பனையெனளவுங்காவெனிறையு, நினையுங்காலையின்னொடுசிவணும். *

இதுவுமது.(வேற்றுமைவிதிவிலக்கிஇன்வகுத்தலின்:) பனையெனளவுங்காவெ ன்னிறையும் - பனையென்னுமளவுப்பெயருங்காவென்னு நிறைப்பெயரும் குறையென்பதனோடுபுணருமிடத்து— நினையுங்காலையின்னொடுசிவணும்- ஆராயுங்காலத்துஇன்சாரியைபெற்றுப்புணரும்.—(எ-று)பனையின்குறை- காவின்குறை- இவையுமும்மைத்தொகை. நினையுங்காலை யென்பதனான்வே ற்றுமைக்குரியவிதியெய்திவல்லெழுத்துப் பெறுதலுஞ்சிறுபான்மை கொ ள்க.பனைக்குறை- காக்குறை-எனவரும். இத்துணையுமல்வழிமுடிபு. இவற் றை வேற்றுமையல்வழிஇஐயென்னுஞ் சூத்திரத்திற்கூறுதிலவையளவுநிறையு மெண்ணுமாதலின்வேறோதினார். (உஎ)

அளவிற்குநிறையிற்குமொழிமுதலாகி, யுளவெனப்பட்டவொன்பதிற் றெழுத்தே, யவைதாங்;கசதபவென்றாநமவவென்றா, வகரவுகரமோடவை யெனமொழிப. *

இது முற்கூறியமூன்றனுள்ளவிற்குநிறைக்குமொழிக்குமுதலாமெழுத்தினை த்தென்கின்றது. அளவிற்குநிறையிற்கு மொழிமுதலாகி யுளவெனப்பட்ட வொன்பதிற்றெழுத்தே - அளவுப்பெயர்க்குநிறைப்பெயர்க்குமொழிக்கு முதலாயுள்ளவென்றுகூறப்பட்டனவொன்பதெழுத்துக்கள்—அவைதாங் க சதபவென்றாநமவவென்றா வகரவுகரமோடவையெனமொழிப - அவ்வெழு த்துக்கடாங் கசதபக்களும் நமவக்களும் அகரஉகரமுமாகியவவையென்று கூறுவர்புலவர்.—(எ-று- [உ-ம்] கலம்-சாடி-தூதை-பானை-நாழி-மண் டை-வட்டி-அகல்-உழக்கு-இவையளவு: கழஞ்சு-சிரகம்-தொடி-பலம்-நி றை- மா-வரை- அந்தம்- இவைநிறை. இந்நிறைக்கு உகரமுதலியபெயர் வந்துழிக்காண்க.இனியுளவெனப்பட்டவென்பதனானே உளவெனப்படாத னவுமுள.அவைஇம்மி-ஒரடை-இடா-எனவரையறைகூறுதனவுங்கொள்க. இன்னுமிதனானே தேயவழக்காய்ஒருஞார் ஒருதுவலி-என்பனவுங் கொள்க. இங்ஙனம்வரையறைகூறினார். அகத்தோத்தினுண்முடிபுகூறியவழியதிகாரத் தான்வன்கணத்தின்மேற்செல்லாதொழிந்தகணத்தினுஞ் செல்லுமென்றற் கு)எண்ணுப்பெயர்வரையறையின்மையிற்கூறாரயினார். (உஅ)

ஈறியன்மருங்கினிவையிவற்றியல்பெனக்கூறியகிளவிப்பல்லாறெல்லாமெ ய்த்தலைப்பட்டவழக்கொடுசிவணி,யொத்தவையுரியபுணர்மொழிநிலையே. *

•இது இவ்வோத்திற்குப்புறநடை. யெடுத்தோத்தானுமிலேசானுமுடியாதனவற்றிற்கிதுவேயோத்தாகலின்) கூறியன்மருங்கின் - உயிரும்புள்ளியுமிறுதியாகியசொற்கள்வருமொழியோடுகூடிநடக்குமிடத்து—இவற்றியல்பிவையெனக்கூறியகிளவிப்பல்லாறெல்லாம் - இம்மொழிகளின்முடிபிவையெனக்கூறிமுடிக்கப்பட்டசொற்களினதவ்வாற்றான்முடியாதுநின்றபலவகைமுடிபுகளெல்லாம்—மெய்த்தலைப்பட்டவழக்கொடுசிவணி-உண்மையைத்தலைப்பட்டவழக்கோடுகூடி—புணர்மொழிநிலையொத்தவையுரிய -புணருமொழிகளினிலைமைக்கட்பொருந்தினவையுரியவாம்.— (எ-று) [உ-ம்] நடஙொள்ளா-எனஉயிரீறாகியமுன்னிலைக்கிளவிமென்கணத்தோடியல்பாமுடிந்தது. மண்ணுகொற்று- மண்ணுக்கொற்று-மன்னுகொற்று- மன்னுக்கொற்று-உள்ளுகொற்று-உள்ளுக்கொற்று-கொல்லுகொற்று- கொல்லுக்கொற்று என்பனபுள்ளியிறுதிமுன்னிலைக்கிளவி யுகரம்பெற்றுமுறழ்ந்துமுடிந்தன. உரிஞுஞொள்ளா.இதுஒளவெனவரூஉமென்பதனுழிபு.பதக்கநானுழி-பதக்கமுந்நாழி- எனவிவையேயென்சாரியைபெறுதக்குப்பெற்றதனிறுதிமெய்ம்மிசையொடுங்கெட்டுப்புணர்ந்தன. வாட்டானை-நோற்றண்டை-என்பனதகரம்வந்துழித்திரிந்துநெடியதன்முன்னொற்றுக்கெடாதுநின்றன.சிர்கானென்பதனைச்சிர்கம் அனையெனநிறுத்திக் ககரவொற்றின்மேலேறினஅகரத்தையுமகரவொற்றையுங்கெடுத்து அனையென்பதனகரத்தையேற்றிமுடிக்க.இதுநிறைப்பெயர். ஒருமாவனையென்பதனைஒருமா அனையெனநிறுத்திவருமொழிஅகரங்கெடுத்துஒருமா னையெனமுடிக்க. கலவனையென்பதனைகலனைஎனமுடிக்க. அகரமகரங்கெடுத்துநாகணையெனப்பிறவும்வருவனவெல்லாமிச்சூத்திரத்தான்முடிக்க. (உகூ)

பலரறிசொன்முன்யாவரென்னும், பெயரிடைவகரங்கெடுதலுமேனை, யொன்றறிசொன்முன்யாதென்வினவிடை, யொன்றியவகரம்வருதலுமிரண்டு,மருவின்பாத்தியிற்றிரியுமன்பயின்றே. *

இது மரூஉச்சொன்முடிபுகூறுகின்றது. பலரறிசொன்முன்யாவரென்னும்பெயரிடைவகரங்கெடுதலும்-பலரையறியுமவரென்னுஞ்சொல்வின்முன்னர்வருகின்றயாவரென்னும்பெயரிடையில்வகரங்கெடுதலும்— ஏனையொன்றறிசொன்முன்யாதென்வினவிடையொன்றியவகரம்வருதலும் - ஒழிந்தஒன்

றனையறியும் அதுவென்னுஞ்சொல்லின்முன்னர்வருகின்ற யாதென்னும்வினாச்சொல்லிடையிலேயுயிரோடுபொருந்தியவகரம்வருதலும்— இரண்டும்- ஆகியவவையிரண்டும்—மருவின்பாத்தியின்மன்பயின்றுதிரியும்-மருமுடிபின்பகுதியிடத்துமிகவும்பயின்றுதிரியும்.— (எ-று) [உ-ம்] அவர்யார்-ஞனவும். அதுயாவது-எனவும்வரும். அவர்யாவரென்பதுவகரங்கெட்டுஅவர்யாரெனநின்றவழி யாஅரென்னும்வினாவின்கிளவியென்றுவினையியலுட் கூறும்வினைக்குறிப்புச்சொல்லாம். பிறவெனினாகாது. அவ்வகரங்கெட்டாலுமீண்டு யாவரென்னும் பெயர்த்தன்மையாயேநிற்றலின்) அதுபெற்றவாறென்னையெனின் ஈண்டுப்பலரறிசொன்முன்வந்தயாவரென்பதன்வகரங்கெடுமெனவே ஏனை அவன் அவள்என்னுமிருபான்முன்னும்யாவரென்பது வாராதென்றும துதிரிந்துமருவாய்நிற்குமென்றுங்கூறுதலானும்யாவரென்னும்பெயரிடையென்பதனானும்பெற்றாம். இதனானே அவன்யாவர் - அவள்யாவர்என்றாற்போலவழுவாமென்பதுபெற்றாம்.இதனையாவன்யாவள்யாவர்என்னும்ஆவயின் மூன்றுடனப்பெயராகவோதியவாற்றானுணர்க. அன்றியும்யாரென்னும்வினாவின்கிளவிமுப்பாற்குமுரித்தென்றுயாரென்னும்வினாவினைக்குறிப்பினைஅவன்யார் அவள்யார் அவர்யார் என முப்பாற்குமொப்பவுரிமைகூறுதலானும்அதுவேறென்பதுபெற்றாம். அதுவினையியலுளோதினமையானும் வினாவிற்கேற்றலெனப்பயநிலையாக வோதினமையானும்வேறாயிற்று. இனி யார்பார்க்கண்டேயுவப்பரெனப்பலரறிசொன்முன்னரன்றி யியல்பாகவந்த யாரென்பதுபாண்டடங்குமெனின் அதுவும்யாரையாரைக்கண்டெனவுருபு விரிதலின்யாவரைஎன்னும்வகரங்கெட்டபெயரேயாம். அங்ஙனம் நிலைமொழிவருமொழியாய்நிற்றல்பயின்றென்றதனாற்கொள்க.இதனானேயாவதுநன்றெனவுணரார்மாட்டுமெனவேனையொன்றறிசொல்லும் நிலைமொழியாய்நிற்றல்கொள்க.இன்னுமிதனானே யாரவர் யாவதது எனவிவ்விருசொல்லும்வருமொழியாய்வருதல்கொள்க. (௩௰)

ஐந்தாவது, தொகைமரபு-முற்றிற்று.

ஆகசூத்திரம். (௱௭௨)

# ஆறுவது,

# உருபியல்.

அஆஉஊஎஔவென்னு, மப்பாலாற னிலைமொழிமுன்னர், வேற்று
மையுருபிற்கின்னேசாரியை. *

இது உருபுகளோடுபெயர்புணரு மியல்புணர்த்தினமையி னிவ்வோத்துரு பியலென் னும்பெயர்த்தாயிற்று. மேற்றொகுத்துப்புணர்த்ததனை ஈண்டுவி ரித்துப் புணர்க்கின்ற ராகலின் இவ்வோத்துத் தொகைமரபோடியையபு டைத்தாயிற்று. இச்சூத்திரம் அகரமுதலிய வீற்றுன்வருமாறீற்றுச்சொற் கணின்றின் பெற்றுருபினொடு புணருமாறுகூறுகின்றது. உருபின்பொரு ள்படவரும்புணர்ச்சிமேற்கூறுப. அஆஉஊ எஔவென்னுமப்பாலாறனி லைமொழிமுன்னர் - அஆஉஊஎஔ என்றுசொல்லப்படுகின்றவக்கூற்றுறி னையுமீறாகவுடைய நிலைமொழிகளின்முன்னர்வருகின்ற — வேற்றுமையுருபி ற்கின்னேசாரியை - வேற்றுமையுருபுகட் கிடையேவருஞ்சாரியை இன்சாரி யை.—(எ - று) [உ - ம்] விளவினை - விளவினொடு விளவிற்கு - விளவின து - விளவின்கண் - (எ-ம்) பலாவினை - பலாவினொடு - பலாவிற்கு - பலாவின து - பலாவின்கண் - (எ - ம்) கடுவினை - கடுவினொடு - கடுவிற்கு - கடுவினது - கடுவி ன்கண் - (எ-ம்) தழூஉவினை - தழூஉவினொடு - தழூஉவிற்கு - தழூஉவினது - தழூ உவின்கண் - (எ-ம்) சேவினை - சேவினொடு - சேவிற்கு - சேவினது - சேவின்க ண் - (எ-ம்) வெளவினை - வெளவினொடு - வெளவிற்கு - வெளவினது - வெளவின் கண் - (எ-ம்) செய்கையறிந்தியய்வாறேயொட்டுக. இன்னெனவரூஉம்வேற்று மையுருபிற்கின்னெனன்சாரியைவாராதெனவே பேனையவின்பெறுமென்றவி ல். ஞநமயவவென்பதனு னியல்பென்பதுவிலக்கினும். (க)

பல்லவைநுதலியவகரவிறுபெயர், வற்றொடுசிவணலெச்சமின்றே. *

இது இன்சாரியைவிலக்கிவற்றுவருத்தலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகு க்கின்றது. பலவவைநுதலியபெயரிறுவகரம் - பன்மைப்பொருளைக்கருதி னபெயர்களினிறுதிநின்றவகரம் — வற்றொடுசிவணலெச்சமின்று - வற்றுச் சாரியையொடு பொருந்துதலையொழிதலில்லை.—(எ-று) [உ-ம்] பல்லவற் றை - பல்லவற்றொடு - பலவற்றை - பலவற்றொடு - சில்லவற்றை - சில்லவற்றொடு - சிலவற்றை - சிலவற்றொடு - உள்ளவற்றை - உள்ளவற்றொடு - இல்லவற்றை - இல்ல

வற்றொடு-எனவொட்டுக. எச்சமின்றென்றதனானேமேவின்பெற்றனபிறசாரியையும்பெறுதல்கொள்க. நிலாத்தை-துலாத்தை-மகத்தை-எனவரும். இன்னுமிதனானேபல்லவைநுதலியவற்றின்கண்மூன்றுமுருபுவற்றுப்பெற்றேமுடிதல்கொள்க. (௨)

யாவென்வினாவுமாயியல்திரியாது. *

இது ஆகாரவீற்றுள்ளொன்றற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. யாவென்வினாவும்-யாவென்றுசொல்லப்படும்ஆகாரவீற்றுவினாப்பெயரும்— ஆயியல்திரியாது - முற்கூறியவற்றுப்பேற்றிற்றிரியாது.—(எ-று) யாவற்றை-யாவற்றொடு-எனவரும். (௩)

சுட்டுமுதலுகரமன்னொடுசிவணி, யொட்டியமெய் யொழித் துகரங் கெடுமே. *

இது உகரவீற்றிற்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தது. சுட்டுமுதலுகரமன்னொடுசிவணி - சுட்டெழுத்தினைமுதலாக வுடைய உகரவீற்றுச்சொல் அன்சாரியையோடுபொருந்தி —ஒட்டியமெய்யொழித்துகரங்கெடும் - தான்பொருந்தியமெய்யைநிறுத்தியுகரங்கெடும்.—(எ-று) அதனை- அதனொடு-இதனை-இதனொடு-உதனை-உதனொடு- எனவரும். அதினை-அதினொடு-என்றாற்போல்வனமருமுடிப்புழிமுடிந்தன. ஒட்டியவென்றதனாற்சுட்டுமுதலுகரமன்றிப்பிறவுகரமும்உயிர்வருவழிக்கெடுவனகொள்க. அவை கதவு-களவு-கனவு-எனநிறுத்தி. அழகிது-இல்லை-எனவருவித்துஉகரங்கெடுத்துமுடிக்க. இவற்றைவகர வீறாக்கியுகரம்பெற்றன வென்றுகோடுமெனின் வழக்கின்கண்ணுஞ்செய்யுட்கண்ணும் பயின்றுவரும்வகரவீறுகளையொழித்தாசிரியர்வகரக்கிளவிநான்மொழியீற்றதென்றாற்போலவரைந்தோதல்குன்றக்கூறலாம். ஆதலின்அவையுகரவீறென்றுணர்க. அவை செலவு-வரவு-தரவு-உணவு-கனவு-எனவழக்கின்கண்ணும் புன்கண்ணுடைத்தாற்புணர்வு பாடறியாதானையிரவு கண்ணாரக்காணக்கதவு எனச்செய்யுட்கண்ணும்வருமாறுணர்க. (௪)

சுட்டுமுதலாகியவையெனிறுதிவற்றொடுசிவணிநிற்றலுமுரித்தே. *

இது ஐகாரவீற்றிற்குமுடிபுகூறுகின்றது. சுட்டுமுதலாகியவையெனிறுதி-சுட்டெழுத்தினைமுதலாகவுடையவைகாரவீற்றுச்சொல் — வற்றொடுசிவணிநிற்றலுமுரித்து - வற்றுச்சாரியையோடுபொருந்திநிற்றலுமுரித்து. உம்மையான்வற்றோடுசில உருபின்கண் இன்சாரியைபெற்று நிற்றலும் உரித்து.—

(எ-று) அவையற்றை - அவையற்றொடு - இவையற்றை - இவையற்றொடு - உவையற்றை - உவையற்றொடு - எனவொட்டுக. இங்ஙனம் ஐகாரம் நிற்கவற்றுவந் துழி வஃகான்மெய்கெடவென்பதனுன்முடிக்க. இனியும்மையான் அவையற்றிற்கு அவையற்றின்கண் என நான்காவதும் ஏழாவதும் வற்றுமின்னும் பெற்றுவந்தவாறுகாண்க. இனியொன்றினமுடித்த லென்பனுற்பல்லவை நுதலிய அகரவீற்றிற்குமிவ்விரண்டுருபின்கண் வற்றுமின்னுங்கொடுத்துப் பலவற்றிற்கு - பலவற்றின்கண் எனமுடிக்க. இதுமேல்வருவனவற்றிற்குமொக்கும். (௫)

யாவென்வினுவி னையெனிறுதியு, மாயியறிரியாதென்மனுர்புலவ, ராவயின்வகரமையொடுங்கெடுமே. ※

இதுவுமது. யாவென்வினுவினையெனிறுதியும் - யாவென்னும் வினுவினையுடையவைகாரவீற்றுச்சொல்லும் — ஆயியறிரியாது - முற்கூறியசுட்டுமுதலைகாரம்போலவற்றுப் பெறுமவ்வியல்பிற்றிரியாதென்று சொல்லுவாராசிரியர் — ஆவயின்வகரமையொடுங்கெடும் - அவ்விடத்துவகரமைகாரத்தோடுகூடக்கெடும். —(எ-று) யாவற்றை - யாவற்றொடு - எனவொட்டுக. வகரம்வற்றுமிசையொற்றென்றுகெடுவதனைக்கேட்போதியமிகையானே பிறவைகாரமும்வற்றுப்பெறுதல்கொள்க. கரியவற்றை - கரியவற்றொடு - நெடியவற்றை - நெடியவற்றொடு - குறியவற்றை - குறியவற்றொடு - எனஎல்லாவற்றொடு மொட்டுக. இது கருமை - நெடுமை - குறுமை - யென்னும்பண்புப்பெயரான்றிக்கரியவை - நெடியவை - குறியவை - யெனப்பண்புகொள்பெயராய்நிற்றலின்வகரவைகாரங்கெடுத்துவற்றுச் சாரியைகொடுத்து முடிக்கப்பட்டன. இவையைம்பாலறியும்பண்புதொகுமொழியன்மையுணர்க. (௬)

நீயெனொருபெயர்நெடுமுதல்குறுகுமாவயினகரமொற்றாகும்மே ※

இது ஈகாரவீற்றின்னவாறுபுணருமென்கின்றது. நீயெனொருபெயர்நெடுமுதல்குறுகும் - நீயென்னுமொருபெயர் தன்மேனின்றநெடியதாகியஈகாரங்குறுகியிகரமாம் — ஆவயினகரமொற்றாகும் - அவ்விடத்துவருநகரமொற்றாய்நிற்கும். —(எ-று)[உ-ம்] நின்னை - நின்னொடு - நினக்கு - எனச்செய்கையறிந்தொட்டுக. நினக்கு என்பதற்கு ஆறனுருபினுநான்கனுருபினும் - வல்லெழுத்துமுதலியவென்பனகொணர்ந்துமுடிக்க. நின்தென்பதற்கு ஆறனுருபினகரமென்பதனுன்முடிக்க. நின்னென்பதுவேறொருபெயரோ வெனக்கருதுதலைவிலக்குதற்கொருபெயரென்றுர். பெயர்குறுகுமென்னுதுமு

தல்குறுகுமென்றநட்பெயரினெழுத்தின்கண்ணதுகுறுக்கமென்றற்கு) நெடுமுதலெனவேறகரங்குறுகுதலைவிலக்கிற்று. உயிர்மெய்யொற்றுடைபற்றிநெடியதுமுதலாயிற்று. உடைமையுமின்மையுமொடுவயினொக்கு மென்றதனைநோக்கி யொடுவிடத்துச்சாரியைபெற்றேவந்த அதிகாரத்தைமாற்றுதற்குச்சாரியைப்பேற்றிடையெழுத்துப்பேறுகூறினர். (எ)

ஒகாரவிறுதிக்கொன்னேசாரியை. ※

இதுஒகாரவீறின்னவாறுபுணருமென்கின்றது. ஒகாரவிறுதிக்கொன்னேசாரியை - ஒகாரவீற்றிற்கிடைவருஞ்சாரியைஒன்சாரியை.—(எ-று) கோஒனே-கோஒனொடு- எனவொட்டுக. ஒன்னேயென்றஎகாரத்தாற்பெரும்பான்மையாகவருஞ்சாரியைஒன்னே. சிறுபான்மையின்சாரியைவருமென்றுகொள்க. ஒன்றாகநின்றகோவினையடர்க்கவந்தவெனவும்கோவினே-கோவினொடு-சோவினே-சோவினொடு- ஓவினே-ஓவினொடு-எனவும்வரும். ஓவென்பதுமதகுநீர்தாங்கும் பலகை. (அ)

அஆவென்னுமரப்பெயர்க்கிளவிக்,கத்தொடுஞ்சிவணுமேழனுருபே. ※

இதுஅகரஆகாரவீற்றிற்கெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது. அஆவென்னுமரப்பெயர்க்கிளவிக்கு- அஆவென்றுசொல்லப்படுமரத்தையுணர்த்துகின்றபெயராகியசொல்லிற்கு—ஏழனுருபத்தொடுஞ்சிவணும்- ஏழாமுருபில்லோடன்னியத்தொடுப்பொருந்தும்.—(எ-று) [உ-ம்]விளவத்துக்கண்-பலாவத்துக்கண்-எனவரும். வல்லெழுத்துமுதலியவென்பதனான்வல்லெழுத்துக்கொடுத்துத் தெற்றென்றற் றென்பதனு னத்தினகரமகரமுனைக்கெடாமைசெய்கைசெய்துமுடிக்க. (கூ)

ஞநவென்புள்ளிக்கின்னேசாரியை. ※

இது புள்ளியீற்றுள்ஞகாரவீறுநகாரவீறுமுடியுமாறுகூறுகின்றது. ஞநவென்புள்ளிக்கின்னேசாரியை - ஞநவென்றுசொல்லப்படுகின்ற புள்ளியீறுகட்குவருஞ்சாரியையின்சாரியை.—(எ-று) [உ-ம்]உரிஞினே- உரிஞினொடு பொருநினே-பொருநினொடு-எனவொட்டுக. (ய)

சுட்டுமுதல்வகரமையுமெய்யுங்கெட்டவிறுதியியற்றிரிபின்றே. ※

இது நான்குமொழிக்கீறும்வகரவீற்றுட்சுட்டுமுதல்வகரவீற்றிற்குமுடிபுகூறுகின்றது. சுட்டுமுதல்வகரம்- அவ்-இவ்-உவ்-என்னுஞ்சுட்டெழுத்தினைமுதலாகவுடையவகரவீற்றுச்சொல் — ஐயுமெய்யுங்கெட்டவிறுதியியற்றிரிபின்

து - ஐகாரமுமைகாரந்தானூரப்பட்டமெய்யுங்கெட்டுவற்றுப்பெற்றுமுடிந்த யாவையென்னுமைகாரவீற்றுச் சொல்லியல்பிற்றிரிபின்றிவற்றுப் பெற்றுமுடியும்.—(எ-று) [உ-ம்] அவற்றை-அவற்றொடு-இவற்றை-இவற்றொடு-உவற்றை-உவற்றொடு-எனவொட்டுக. (௰௧)

ஏனவகரமின்னொடுசிவணும். ※

இது எய்தாததெய்துவித்தது.(பெயர்க்கேயன்றியுரிச்சொல்வகரத்திற்குமுடிபுகூறுதலின்) ஏனவகரமின்னொடுசிவணும் - ஒழிந்தஉரிச்சொல் வகரமின் சாரியையோடுபொருந்திமுடியும்.—(எ-று)தெவ்வினை-தெவ்வினொடு- என ஒட்டுக. இதுஉரிச்சொல்லாயினும்படுத்தலோசையாற்பெயராயிற்று. (௰௨)

மஃகான்புள்ளிமுனத்தேசாரியை. ※

இது மகரவீறுபுணருமாறுகூறுகின்றது;மஃகான்புள்ளிமுனத்தேசாரியை-மகரமாகிய புள்ளியீற்றுச்சொன்முன் வருஞ்சாரியை யத்துச்சாரியை .—(எ-று)[உ-ம்] மரத்தை-மரத்தொடு-நுகத்தைநுகத்தொடு-என வொட்டுக. அத்தேவற்றேஅத்தி னகரமென்பவர்றூன்முடிக்க. (௰௩)

இன்னிடைவரூஉமொழியுமாருளவே. ※

இது மகரவீற்றிற்சிலவற்றிற்கெய்தியது விலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது. இன்னிடைவரூஉமொழியுமாருள - மகரவீற்றுச்சொற்களுள் அத்தேயன்றி இன்சாரியை இடையேவந்துமுடியுஞ்சொற்களுமுள.—(எ-று) மார் அசை. [உ-ம்]உருமினை-உருமினொடு-திருமினை-திருமினொடு-எனவொட்டுக. (௰௪)

நும்மெனிறுதியியற்கையாகும். ※

இது மகரவீற்றுளொன்றற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது. நும்மெனிறுதியியற்கையாகும்- நும்மென்னுமகரவீறு மேற்கூறியவத்துமின்னும்பெறாதியல்பாகமுடியும்.—(எ-று) [உ-ம்] நும்மை- நும்மொடு-நுமக்கு-நும்மின்-நுமது-நுங்கண்-எனவரும். நுமக்கு- நுமதுஎன்பனவற்றிற்கு-ஆறனுருபினுநான்கனுருபினும் நும்மெனிறுதியுமந்நிலை வல்லெழுத்துமுதலிய ஆறனுருபினகரக்கிளவி யென்பனகொணர்ந்துமுடிக்க. நுங்கணென்பதற்குமேலைச்சூத்திரத்துமெய்யென்றதனுன்மகரவொற்றுக்கெடுத்துவல்லெழுத்துமுதலிய வென்பதனுன்மெல்லொற்றுக்கொடுக்க.இயற்கையென்றூர்.சாரியைபெறுமைகருதி. (௰௫)

தா தா மென்னு மகரவிறுதியும்,யா மெனிறுதியுமதனோரன்ன, ஆவ

யாகும்யாமெனிறுதி, யாவயினகரமெய்கெடுதல்வேண்டு, மேனையிரண்டு நெடுமுதல்குறுகும். ✻

இது மகரவீற்றின்முற்கூறியமுடிபொவ்வாதனவற்றிற்குமுடிபுகூறுகின்றது. தாநாமென்னுமகரவிறுதியும்யாமெனிறுதியுமதனோரன்ன - தாம்நாமென்றுகூறப்படுமகரவீறும்யாமென்னுமகரவீறும்நும்மென்னுமகரவீறுபோலவத்துமின்னும்பெறுதுமுடிதலையுடைய — யாமெனிறுதிஆஎஆகும் - யாமென்னுமகரவீற்றுச்சொல்லில்ஆகாரம்எகாரமாம் —ஆவயினகரமெய்கெடுதல்வேண்டும் - அவ்விடத்துநின்றயகரமாகியமெய்கெடுதலைவிரும்புமாசிரியன் — ஏனையிரண்டுநெடுமுதல்குறுகும் - ஒழிந்ததாம்நாமென்னுமிரண்டுநெடியவாகியமுதல்குறுகித்தம்நம்எனநிற்கும்.—(எ-று) [உ-ம்]தம்மை- தம்மொடு-நம்மை-நம்மொடு-எம்மை- எம்மொடு-என ஆறுருபோடுமொட்டுக. ஆறனுருபிற்குநான்கனுருபிற்குங்கருவியறிந்துமுடிக்க.மெய்யென்றதனாற்பிறவயின்மெய்யுங்கெடுக்க. தங்கண் -நங்கண்-எங்கண்-எனஏழனுருபின்கண்மகரங்கெடுத்துவல்லெழுத்துமுதலிய வென்பதனான்மெல்லெழுத்துக்கொடுக்க. (௰௬)

எல்லாமென்னுமிறுதிமுன்னர்,வற்றென்சாரியைமுற்றத்தோன்று, மும்மைநிலையுமிறுதியான. ✻

இதுமகரவீற்றுளொன்றற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது. எல்லாமென்னுமிறுதிமுன்னர்வற்றென்சாரியைமுற்றத்தோன்றும்- எல்லாமென்னுமகரவீற்றுச்சொன்முன்னரத்துமின்னுமன்றிவற்றென்னுஞ்சாரியைமுடியத்தோன்றிமுடியும்— உம்மைநிலையுமிறுதியான - ஆண்டும்மென்னுஞ்சாரியையிறுதிக்கணிலைபெறும்.—(எ-று)மகரம்வற்றின்மிசையொற்றெனக்கெடுக்க.எல்லாவற்றையும்- எல்லாவற்றினும்- எல்லாவற்றுக்கண்ணும்- எனவரும். முற்றவென்றதனானேனைமுற்றுகரத்திற்கு மும்மினுகரங்கெடுத்துக்கொள்க. எல்லாவற்றொடும்-எல்லாவற்றுக்கும்- எல்லாவற்றதும்-எனவரும். முற்றுகரமாதலினேறிமுடியா. (௰௭)

உயர்திணையாயினம்மிடைவருமே. ✻

இது எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது. உயர்திணையாயின் -எல்லாமெனநின்றமகரவீற்றுவிரவுப்பெயருயர்திணைப்பெயராமெனின்— நம்மிடைவரும்-நம்மென்னுஞ்சாரியையிடைநின்றுபுணரும்.— (எ-று) மகரவீ

னைமேலவற்றின்மிசை யொற்றெனக்கெடுத்தவதிகாரத்தாற்கெடுக்க. எல்லா நம்மையுமெல்லா நம்மினுமெல்லா நங்கணும் என உகரம்பெற்றுமெல்லா நம்மொடும்- எல்லா நமக்கும்-எல்லா நமதும் - எனவுகரங்கெட்டுமகர நிற்கும். இவற்றிற்கெல்லாரையும்-எல்லாரொடும்- என்பதுபொருளாகவொட்டுக. இதற்குநம்முவகுத்ததேவேறுபாடு ஈருகுபுள்ளியகரமொடுநிற்றல்தான்காவதற்குமாறுவதற்குங்கொள்க. (௰௮)

எல்லாருமென்னும்படர்க்கையிறுதியு, மெல்லீருமென்னுமுன்னிலையிறுதியு, மொற்றுமுகரமுங்கெடுமெனமொழிப, நிற்றல்வேண்டும்ரகரப்புள்ளி, யும்மைநிலையுமிறுதியான, தம்மிடைவரூஉம்படர்க்கைமேன, நும்மிடைவரூஉமுன்னிலைமொழிக்கே. *

இது மகரவீற்றுயர்திணைப்பெயர்க்குமுடிபுகூறுகின்றது. எல்லாருமென்னும்படர்க்கையிறுதியும் - எல்லாருமென்னுமகரவீற்றுயர்திணைப்படர்க்கைப் பெயரும் — எல்லீருமென்னுமுன்னிலையிறுதியும் - எல்லீருமென்னுமகரவீற்றுயர்திணைமுன்னிலைப்பெயரும்— ஒற்றுமுகரமுங்கெடுமெனமொழிப - மகரவொற்றுமதன்முன்னின்ற வுகரமுங்கெட்டுமுடியுமென்று சொல்லுவர்புலவர்— ரகரப்புள்ளிநிற்றல்வேண்டும் - அவ்வுகரமேறிநின்றரகரவொற்றுக்கெடாதுநிற்றலைவிரும்புமாசிரியன்—இறுதியானஉம்மைநிலையும் - அவ்விருமொழியிறுதிக்கண்ணுமும்மென்னுஞ்சாரியைநிலைபெறும் —படர்க்கைமேனதம்மிடைவரூஉம் - படர்க்கைச்சொல்விடத்துத்தம்முச்சாரியை இடைவரும்—முன்னிலைமொழிக்குநும்மிடைவரூம் - முன்னிலைச்சொற்குநும்முச்சாரியையிடைவரும்.—(எ-று) [உ-ம்] எல்லார்தம்மையும்-எல்லார்தம்மினும்எல்லார்தங்கணும் எனவுகரம்பெற்றும் எல்லார்தம்மொடும் - எல்லார்தமக்கும்- எல்லார்தமதும் எனவுகரங்கெட்டுமகரம்நிற்கும்-எல்லீர்நும்மையும்- எல்லீர்நும்மினும்- எல்லீர்நுங்கணும்-எனவும் எல்லீர்நும்மொடும்- எல்லீர்நுமதும்-எனவும்.வரும். முன்னர்மெய்யென்றவிலேசாற்கொண்டமகரக்கேடிவற்றிற்குமேல்வருவனவற்றிற்குங்கொள்க. படர்க்கைப்பெயர்முற்கூறியவதனானேரகரவீற்றுப் படர்க்கைப்பெயருமுன்னிலைப்பெயருமகரவீற்றுத்தன்மைப்பெயரும். தம்நும்நம்என்னுஞ்சாரியையிடையேபெற்றிறுதியும்முச்சாரியையும் பெற்றுமுடிவனவுங்கொள்க. கரியார்தம்மையும்- சான்றார்தம்மையும்- எனவும். கரியீர்நும்மையும்- சான்றீர் நும்மையு

ம்-எனவும்·ச்ரிபேநம்மையும்- இருவேநம்மையும்-எனவும்எல்லாவுருபொடுஞ்செய்கையறிந்தொட்டுக·உகரமுமொற்றுமென்றதனானிக்காட்டியவற்றிற்கெல்லாமூன்றுருபின்கண்ணு மும்மினுகரங்கெடுதல்கொள்க.நிற்றல்வேண்டும்ரகரப்புள்ளியென்றதனானேதம்முப்பெருமை வருமவையுங்கொள்க· எல்லார்க்குமெல்லா நிகழ்பவையெனவரும்· (௰௯)

தான்யானென்னுமாயீரிறுதியு, மேனமுப்பெயரொடும்வேறுபாடிலவே ※

இது னகரவீற்றுட்சிலவற்றிற்குமுடிபுகூறுகின்றது· தான்யானென்னுமாயீரிறுதியும் - தான்யான்என்று சொல்லப்படுமிரண்டுனகரவீறும்—மேனமுப்பெயரொடும்வெறுபாடிலவே - மேனமகரவீற்றுட்கூறியமூன்றுபெயரொடும்வேறுபாடின்றித்தானென்பதுகுறுகியும்யா னென்பதன்கணாகாரமெகாரமாயகரவொற்றுக்கெட்டுமுடியும்—(எ-று)தன்னை-என்னை-என எல்லாவுருபோடுமொட்டுக. செய்கையறிந்து· ஒற்றிரட்டுதல்நெடியதன்முன்னொன்பதனுளிலேசாற்கொள்க. (௨௰)

அழனேபுழனேயாயிருமொழிக்கு, மத்துமின்னுமுறழத்தோன்ற, லொத்ததென்பவுணருமோரே. ※

இதுவுமது. அழனேபுழனேயாயிருமொழிக்கும் - அழன்புழனாகிய வவ்விருமொழிக்கும் — அத்துமின்னுமுறழத்தோன்ற லொத்ததென்ப - அத்துச்சாரியையுமின்சாரியையு மாறிவரத்தோன்றுதலைப் பொருந்திற்றென்பர்— உணருமோர் - அறிவோர் (எ-று) அழத்தை-அழனினை-புழத்தை-புழனினை-எனச்செய்கையறிந் தெல்லாவுருபினோடுமொட்டுக· னகரத்தை யத்தின் மிசையொற்றென்றுகெடுத்து அத்தினகரமென்பதனான் முடிக்க. தோன்றலென்றதனால் எவன்என நிறுத்தி வற்றுக்கொடுத்து எவற்றைஎவறொடுஎனவொட்டுக.எல்லாவுருபினோடுமொட்டுக·எவற்றைஎன்புழிநிலைமொழிவகரமிதனாற்கெடுக்க· இனியொத்ததென்றதனால் எகின்என நிறுத்தியத்துமின்னுங்கொடுத்துச்செய்கைசெய்து எகினத்தை-எகினினை எனவொட்டுக அத்தினிதிசைத்தலின்முற்கூறினார்· (௨௧)

அன்னென்சாரியையேழனிறுதி, முன்னர்த்தோன்றுமியற்கைத்தென்ப. ※

இது எழென்னுமெண்ணுப் பெயரன்பெற்றுப்புணர்கவென்கின்றது. அன்னென்சாரியை யேழனிறுதிமுன்னர்த் தோன்றுமியற்கைத்தென்ப- அ

ன்னென்னுஞ்சாரியை யேழென்னுமெண்ணுப்பெயரின்முன்னே தோன்று மியல்பினையுடைத்தென்றுகூறுவராசிரியர்.—(எ-று)[உ-ம்]எழனை-எழற்கு எழனின்- என்றேனையுருபுகளோடுஞ்செய்கையறிந்தொட்டுக. சாரியைமுற் கூறியவதனாற்பிறவும்அன்பெறுவனகொள்க. பூழனை-யாழனை-என ஏனைய வற்றோடுமொட்டுக. மேல்வருகின்றவின்சாரியையைச்சேரவைத்தமையான வையெல்லாமின்சாரியைபெற்றுவருதலுங்கொள்க. எழினை- பூழினை- யாழினை -எனவரும். (௨௨)

குற்றியலுகரத்திறுதிமுன்னர்முற்றத்தோன்றுமின்னென்சாரியை. ※
இது குற்றுகரவீற்றிற்குமுடிபுகூறுகின்றது குற்றியலுகரத்திறுதிமுன்னர்- குற்றியலுகரமாகியவீற்றின்முன்னர்— முற்றத்தோன்றுமின்னென்சாரியை - முடியத்தோன்றுமின்னென்னுஞ்சாரியை.—(எ-று) [உ-ம்] நாகினை-நாகினொடு- வரகினை-வரகினொடு எனஏனையவற்றோடுஞ்செய்கையறிந்தொட்டுக. முற்றவென்றதனானேபிறசாரியை பெறுவனவுங்கொள்க. வழக்கத்தாற்பாட்டாராயந்தானெனவும் கரியதனை எனவும்வரும். (௨௩)

நெட்டெழுத்திம்ப ரொற்றுமிகத்தோன்று, மப்பான்மொழிக ளல்வழியான. ※
இது அக்குற்றியலுகரங்களுட்சிலவற்றிற்கினவொற்று மிகுமென்கின்றது. நெட்டெழுத்திம்பரொற்றுமிகத்தோன்றும் - நெட்டெழுத்தின் பின்னர் வருகின்றகுற்றுகரங் கட்கினவொற்றுமிகத்தொன்றுநிற்கும் — அப்பான் மொழிகளல்வழியான - ஒற்றுமிகத்தோன்றுதற்குசதபக்களீறாகிய மொழிகளல்லாதவிடத்து.—(எ-று) எனவேடகாரறகாரங்களீறானசொல்லிடைத் தொன்றுமாயிற்று [உ-ம்] நாகு-காசு- மோது-காபு- என்றாற்போல்வன அப்பான்மொழிகளினவொற்றுமிகாவாயின யாடென்பது யாட்டை-யாட்டொடு-யாட்டுக்கு-யாட்டின்-யாட்டது-யாட்டுக்கண்-எனவும். பாற்றை சோற்றைஎனவும்.இனவொற்றுமிக்கன இவையப்பான்மொழிகளல்லன. ௨௪

அவைதா;மியற்கைய்வாகுஞ்செயற்கையவென்ப. ※
இதுஎய்தியதுவிலக்கிற்று.அவைதா;மியற்கையவாகுஞ்செயற்கையவென்ப- அங்ஙனமிவ்வொற்றுமிகுவனதாமின்சாரியை பெறுதியல்பாகமுடியுஞ்செய்தியையுடையவென்றுகூறுவராசிரியர்.—(எ-று)உதாரணம் முன்னர்க்காட்டினவேகொள்க. செயற்கையவென்றமிகையானேஉயிர்த்தொடர்மொழிக

ளிலேற்பனவற்றிற்குமொற்றுமிகத்தோன்றுதல்கொள்க. முயிற்றை - முயிற்றொடு - முயிற்றிற்கு - முயிற்றின் - முயிற்றது - முயிற்றுக்கண் - எனவரும். இன்னுமிதனானேயாட்டினை முயிற்றினை எனவிலக்கியவின்பெறுதலுங் கொள்க.

எண்ணினிறுதியன்னொடுசிவணும். *

இது குற்றுகரவீற்றெண்ணுப்பெயர்முடிபுகூறுகின்றது. எண்ணினிறுதியன்னொடுசிவணும் - எண்ணுப்பெயர்களினதுகுற்றுகரவீறன் சாரியையோடுபொருந்தும்.—(எ-று) [உ-ம்] ஒன்றனை - இரண்டனை - எனவெல்லாவெண்ணினையுமெல்லாமுருபினோடுமொட்டுக. செய்கையறிந்து முன்னர்செயற்கையவென்ற விலேசானே ஒன்றினை - இரண்டினை என இன்சாரியையுங்கொடுக்க. (௨௫)

ஒன்றுமுதலாகப்பத்தூர்ந்துவரூஉ, மெல்லாவெண்ணுஞ்சொல்லுங் காலை யானிடைவரினுமானமில்லை, யஃதென்கிளவியாவயிற்கெடுமே ,யுய்தல்வேண்டும்பஃகான்மெய்யே. *

இது ஒன்றுமுதலாகஎட்டிறுதியாக நின்றகுற்றுகரவீற்றெண்ணுப்பெயரேழினோடும் பத்தென்னுமெண்ணுப்பெயர்வந்து புணர்ந்தொன்றாய்நின்ற சொற்கள்சாரியைபெற்றுத் திரியுமாறுகூறுகின்றது. ஒன்றுமுதலாகப்பத்தூர்ந்துவரூஉமெல்லாவெண்ணும் - ஒன்றுமுதலாக வெட்டீறாகநின்றவெண்களின்மேலேபத்தென்னுமெண்ணுப்பெயரேறிவருகின்ற வொருபதுமுதலாகவெல்லாவெண்களையும் — சொல்லுங்காலை - முடிபுகூறுங்காலத்து — ஆனிடைவரினுமானமில்லை - முற்கூறிய அன்சாரியையேயன்றி யான்சாரியையிடையேவரினுங் குற்றமில்லை — ஆவயினஃதென்கிளவிகெடும் - அவ்வான்பெற்றுழிப் பஃதென்னுமெண்ணிடத்தஃதென்னுஞ் சொற்கெட்டுப்போம் — பஃகான்மெய்யுய்தல்வேண்டும் - அவ்வகரத்தானூரப்பட்டபகரமாகியவொற்றுக்கெடாதுநிற்றலையாசிரியன்விரும்பும்.— (எ-று) நின்றபத்தனொற்றுக்கெடவாய்தம்வந்திடைநிலையு மென்பதனு ளாய்தம்பெற்றது[உ-ம்]ஒருபஃது - இருபஃது - முப்பஃது - நாற்பஃது - ஐம்பஃது - அறுபஃது - எண்பஃது - எனக்குற்றியலுகரப்புணரியலுண்முடியுமாறேநிறுத்தியஃதென்பதனைக்கெடுத்துப்பகரவொற்றைநிறுத்தி ஆன்சாரியைகொடுத்து. ஒருபானை - இருபானை என எல்லாவெண்ணொடுமெல்லாவுருபினையுஞ்செய்கையறிந்தொட்டுக. உம்மையான்ஒருபஃதனை இருபஃதனை - என எல்

னெல்லாவற்றொடுமொட்டுக. சொல்லுங்காலையென்றதனாற் பத்தூர்கிளவியே யன்றி ஒன்பான்முதனிலை ஒன்பாற்கொற்றிடைமிகுமே யென்றாற்போல வருவனவற்றின்கண்ணும் பகரத்து ளகரம்பிரித்து அஃதென்பது கெடுத்தான் கெடுக்க. (௨௭)

யாதெனிறுதியுஞ்சுட்டுமுதலாகிய, வாய்தவிறுதியு மன்னொடுசிவணு
மாய்தங்கெடுதலாவயினான. *

இது எண்ணுப்பெயரல்லாதகுற்றுகரவீற்றுட்சிலவற்றிற்கு முடிபுகூறுகின்றது. யாதெனிறுதியும் - யாதெனவருங்குற்றுகரவீறும் — சுட்டுமுதலாகிய வாய்தவிறுதியும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய வாய்தத் தொடர்மொழிக்குற்றுகரவீறும்— அன்னொடுசிவணும் - அன்சாரியையோடுபொருந்தும்— ஆவயினான வாய்தங்கெடுதல் - அவ்விடத்துவந்தவாய்தங்கெடும்— (எ-று) யாதனை - யாதனொடு - எனவும் அதனை - அதனொடு - இதனை - இதனொடு - உதனை - உதனொடு - எனவும்வரும். (௨௮)

எழனுருபிற்குத்திசைப்பெயர்முன்னர், சாரியைக்கிளவியியற்கையுமா
கு,மாவயினிறுதிமெய்யொடுங்கெடுமே. *

இதுவுங் குற்றுகரவீற்றுட்சிலவற்றிற்கேழனுருபொடு முடிபுகூறுகின்றது. திசைப்பெயர்முன்னரேழனுருபிற்கு - திசைப்பெயர்களின்முன்னர்வந்த கண்ணெனுருபிற்குமுடிபுகூறுங்கால் — சாரியைக்கிளவியியற்கையுமாகும் - முன்கூறியவின்சாரியையாகிய சொன்னின்றுமுடிதலேயன்றி நில்லாதியல்பாயுமுடியும் — ஆவயினிறுதிமெய்யொடுங்கெடும் - அங்ஙனமியல்பாயவழித் திசைப்பெயரிறுதிக்குற்றுகரந்தன்னானூரப்பட்ட மெய்யொடுங்கெடும் .— (எ-று)[உ-ம்]வடக்கின்கண் - கிழக்கின்கண் - தெற்கின்கண் - மேற்கின்கண் - எனவும்! வடக்கண் - கிழக்கண் - தெற்கண் - மேற்கண் - எனவும்வரும். இன்பெறுவழியுகரங்கெடாதென்றுணர்க. ஆவயினென்றதனாற்கீழ்சார் - கீழ்புடை மேல்சார் - மேல்புடை - தென்சார் - தென்புடை - வடசார் - வடபுடை - எனச் சாரியையின்றிப்பலவிகாரப்பட்டு நிற்பனவுங்கொள்க. இன்னுமிதனானே கீழைக்குளம் - மேலைக்குளம் - கீழைச்சேரி - மேலைச்சேரி - எனவைகாரம்பெறுதலுங்கொள்க. (௨௯)

புள்ளியிறுதியுமுயிரிறுகிளவியுஞ், சொல்லியவல்ல வேனையவெல்லா
ந்,தேருங்காலையுருபொடுசிவணிச்,சாரியைநிலையுங்கடப்பாடிலவே. *

இது இவ்வோத்தினுளெடுத்தோத்தானுமிலேசானு முடியாதுநின்றவற்றிற்கெல்லாமிதுவே யோத்தாயதோர் புறனடைகூறுகின்றது. சொல்லியவல்ல புள்ளியிறுதியுமுயிரிறுகிளவியும் - முற்கூறியபுள்ளியீறு முயிரீறுமல்லாதபுள்ளியீற்றுச் சொல்லுமுயிரீற்றுச்சொல்லும் — எனையவுமெல்லாம்- முற்கூறியவீறுகடம்முளொழிந்து நின்றனவுமெல்லாம் — தேருங்காலையுருபொடுசிவணிச் சாரியைநிலையுங்கடப்பாடில - ஆராயுங்காலத் துருபுகளோடு பொருந்திச்சாரியை நின்றுமுடியுமுறைமையையுடையவல்ல நின்றுநில்லாதுமுடியும்.—(எ-று) எனையவுமெனவும்மைவிரிக்க கூறாதபுள்ளியீறுகளைந்து. அவை ணகர யகர றகர லகர ளகரங்களாம். மண்ணினை - மண்ணை - வேயினை - வேயை - நாரினை - நாரை - கல்லினை - கல்லை - முள்ளினை - முள்ளை - எனவரும். உயிரீற்றுளொழிந்ததிகரமொன்றுமேயாதலின் அதனைப்பிற்கூறினார். கிளியினை - கிளியை - எனவரும். இனி தான் யான் அழன் புழன் என்னும் னகரவீற்றினுமேழென்னும்ழகரவீற்றினுமொழிந்தபொன்னினை - பொன்னை - தாழினை - தாழை - யென்றாற்போலவருவனபிறவுமாம் இனியீகாரவீற்றுளொழிந்ததீயினை - தீயை - ஈயினை - ஈயை - வீயினை - வீயை - என்றாற்போல்வன பிறவுமாம்.ஐகாரவீற்றுளொழிந்தன தினையினை - தினையை - கழையினை - கழையை - யென்றாற்போல்வனபிறவுமாம்.எனையீறுகளினும்வருவனவுணர்ந்துகொள்க.மேலேபெயரீற்றுச்செய்கையெல்லாந்தத்த மீற்றின்கண்முடிப்பாராதலினவையீண்டுக்கூறல்வேண்டா.இனித்தேருங்காலையென்றதனானேயுருபுகணிலைமொழியாக நின்றுதம்பொருளோடுபுணரும்வழி வேறுபடுமுருபீற்றுச்செய்கையெல்லாமீண்டுமுடித்துக்கொள்க. [உ-ம்] நம்பியைக்கொணர்ந்தான் - மண்ணினைக்கொணர்ந்தான் - கொற்றனைக்கொணர்ந்தான் - என ஐவகைப்பொருளோடுங்கூடிநின்றவுருபிற்கொற்றுக்கொடுக்க; மலையோடுபொருத்து மத்திகையாற்புடைத்தான் - சாத்தற்குக்கொடுத்தான் - ஊர்க்குச்சென்றான் - காக்கையிற்கரிது - காக்கையது பலி - மடியுட்பழுக்காய் - தடாவினுட்கொண்டான் - என்னுந்தொடக்கத்தனவுருபுகாரணமாகப்பொருளோடுபுணரும்வழியியல்பாயுமீறுதிரிந்துமொற்றுமிக்குவந்தனகொள்க.இனிக் கண் கால் புறமுதலியன பெயராயுமுருபாயுநிற்குமாதலினவையுருபாகக்கொள்ளும்வழி வேறுபடுஞ்செய்கைகளெல்லாமிவ்விலேசான்முடிக்க. இதுவுருபியலாதலினுருபொடுசிவணியெனவேண்டாவம்மிகையானேயுருபுபுணர்ச்சிக்கட்சென்றசாரியைகளெ

ல்லாமீற்றுப்பொருண்முடிபுள்ளவழிப் பொருட்புணர்ச்சிக்குங்கொள்க.விள வின்கோடு-கிளியின்கால்- எனவெல்லாவீற்றினுங்கொள்க. நம்பியை-கொ ற்றனையெனவுயிரீறும்புள்ளியீறுஞ் சாரியைபெறுதியல்பாய் முடிவனவுமீண் டுக்கொள்க. (௩௰)

ஆறாவது, உருபியன் - முற்றிற்று. ஆக - சூ - ௨௱௨

# ஏழாவது,

# உயிர்மயங்கியல்.

அகரவிறுதிப்பெயர்நிலைமுன்னர், வேற்றுமையல்வழிக்கசதபத்தோன் றிற்,றத்தமொத்தவொற்றிடைமிகுமே. *

இது உயிரீறுநின்றுவன்கணத்தோடுஞ்சிறுபான்மை யேனைக்கணங்களோடு மயங்கிப்புணருமியல்புணர்த்தினமையி னிவ்வோத்துயிர்மயங்கியலென்னு ம்பெயர்த்தாயிற்று. மேற்பெயரோடுருபு புணருமாறுகூறிப் பெயர்வருவ ழியுருபுதொக்குநின்ற பொருட்புணர்ச்சி கூறுகின்றமையி னுருபியலோடி யைபுடைத்தாயிற்று.இச்சூத்திரம்அகரவீற்றுப்பெய ரல்வழிக்கண் வன்கணத் தோடுபுணருமாறுகூறுகின்றது. அகரவிறுதிப்பெயர்நிலைமுன்னர்-அகரமா கியவிறுதியையுடையபெயர்ச்சொன்முன்னர் — வேற்றுமைய்லவழிக்கசத பத்தோன்றின் - வேற்றுமையல்லாதவிடத்துக்கசதபமுதன்மொழிகள் வரு மொழியாய்த்தோன்றுமாயின் — தத்தமொத்த வொற்றிடைமிகும் - தத் தமக்குப்பொருந்திய கசதபக்களாகிய வொற்றிடைக்கண்மிகும். (எ-று) [உ-ம்]விளக்குறிது-நுணக்குறிது- அதக்குறிது-சிறிது-தீது-பெரிது- எ னவொட்டுக. இவையஃறிணையியற்பெயராகியவெழுவாய் வினைக்குறிப்புப் பண்பாகியபயனிலையோடுமுடிந்தன. ஒத்தவென்றதுநத்த மென்றதனுன் அகரவீற்றுரிச்சொல்வல்லெழுத்துமிக்கு மெல்லெழுத்து மிக்குமுடியுமுடி பும்அகரந்தன்னையுணர நின்றவழிவன்கணத்தோடுமிக்குமுடியுமுடிபுங்கொ ள்க. தடக்கை-தவக்கொண்டான்-வயக்களிறு- வயப்புலி-குழக்கன்றுஎன வும் தடஞ்செவி-கமஞ்சூல்- எனவும் அக்குறிது-சிறிது- தீது-பெரிது- எனவும்வரும். இனியிடைச்சொல்வல்லொற்றுப் பெற்று வருவன வுளவே லவற்றையுமிவ்விலேசினுன்முடித்துக்கொள்க. (க)

வினையெஞ்சுகிளவியுமுவமக்கிளவியு, மென்னவெனெச்சமுஞ்சுட்டினி றுதியு,மாங்கவென்னுமுரையசைக்கிளவியும், ஞாங்கர்க்கிளந்தவல்லெழுத்து மிகுமே. ✻

இஃது தகரவீற்றுவினைச்சொல்லு மிடைச்சொல்லும் புணருமாறு கூறுகின்ற து. வினையெஞ்சுகிளவியும்-வினையையொழிபாகவுடைய வகரவீற்றுவினைச் சொல்லும்—உவமக்கிளவியும் - உவமவுருபாய்நின்றஅகரவீற்றிடைச்சொல் லும் — எனவெனெச்சமும் - எனவென்னும்வாய்பாடாநின்ற அகரவீற்றி டைச்சொல்லும்—சுட்டினிறுதியும் - சுட்டாகிய அகரவீற்றிடைச்சொல்லு ம்— ஆங்கவென்னுமுரையசைக்கிளவியும் - ஆங்கவென்னுமகரவீற்றுரைய சையிடைச்சொல்லும் — ஞாங்கர்க்கிளந்தவல்லெழுத்துமிகும் - முன்னர் க்கூறியவல்லெழுத்துமிக்குமுடியும்(எ-று) [உ-ம்] உண-தாவ-சாவ- என நி றுத்தி கொண்டான்- சென்றான்- தந்தான்- போயினான்- எனவும் கொள் ளெனக்கொண்டான்-சென்றான்-தந்தான்-போயினான்-எனவும் அக்கொ ற்றன்-சாத்தன்-தேவன்-பூதன் -எனவும் ஆங்கக்கொண்டான்- சென்றான்- தந்தான்-போயினான்- ஆங்கக் குயிலுமயிலுங்காட்டிக் கேசவனைவிடுத்துப் போகியோளெனவும்வரும். உவமம்வினையெச்சவினைக்குறிப்பேனுமொ ன்றனொடுபொருவப்படுத்தலேநோக்கியுவமவியலின்கணாசிரியர் வேறுபடுத்திக் கூறினார். எனவென்னுமெச்ச மிருசொல்லையுமியைவிக்கின்ற நிலைமையாணி டைச்சொல்லோத்தினுள்வேறோதினார். ஆங்கவென்பதேழனுருபின்பொரு ள்படவந்ததல்லாமை யாங்கவென்னுமுரையசையென்பதனானுணர்க. இ வையியல்புகணத்துக்கண்முடியுமுடிபும்ஞநமயவவென்புழிக்கூறியதேயாம் அவை தாவ-புலிபோல-கொள்ளென-ஆங்க-என நிறுத்திஞநமயவ முதலிய மொழியேற்பனகொணர்ந்துநிறுத்தியல்பாமாறொட்டிக்கொள்க. (உ)

சுட்டின்முன்னர் ஞநமத்தோன்றி, னொட்டியவொற்றிடை மிகுதல் வேண்டும். ✻

இது ஞநமயவவென்னுஞ்சூத்திரத்தான்மென்கணமியல்பாக வெனமுற்கூ றியவதனைவிலக்கிமிக்குமுடிகவென்றவினையீதிய துவிலக்கிட், பிறிதுவிதிவகு க்கின்றது. சுட்டின்முன்னர்ஞநமத்தோன்றின் -அகரச்சுட்டின்முன்னர்ஞ நமக்கண்முதலாகியமொழிவரின்—ஒட்டியவொற்றிடைமிகுதல்வேண்டும் - தத்தமக்குப்பொருந்தினவொற்றிடைமிகுதலைவிரும்புமாசிரியன்—.(எ-று)

அஞ்ஞான் - அந்நூல் - அம்மணி - எனவரும். ஒட்டியவென்றதனான் அஞ்ஞெளிர்ந்தது - அந்நன்று - அம்மாண்டது - என அகரந்தன்னை யுணரநின்றவழியுமிகுதல்கொள்க. (௩)

யவமுன் வரினே வகரமொற்றும். ※

இதுவுமது. யவமுன்வரின் - யகரவகரமுதன்மொழி அகரச்சுட்டின்முன்னே வரின் — வகரமொற்றும் - இடைக்கண்வகரமொற்றும். — (எ-று) [உ-ம்] அவ்யாழ் - அவ்வளை - எனவரும். வருமொழிமுற்கூறியவதனால் அகரந்தன்னை யுணரநின்றவழியும்வகரமிகுதல்கொள்க. அவ்வளைந்தது எனவரும் (௪)

உயிர்முன் வரினுமாயியறிரியாது. ※

இதுவுமது. உயிர்முன்வரினுமாயியறிரியாது - உயிர்களகரச்சுட்டின்முன்வரினுமுற்கூறியவகரமிக்குவருமியல்பிற்றிரியாது. — (எ-று) அ எனநின்றசுட்டின்முன்னர் அடையெனவருவித்துவகரமொற்றித்தன்னுருபிரட்டியுயிரோற்றி அவ்வடை - அவ்வாடை - அவ்விலை - அவ்வீயம் - அவ்வுரல் - அவ்வூர்தி - அவ்வெழு - அவ்வேணி - அவ்வையம் - அவ்வொழுக்கம் - அவ்வோடை - அவ்வௌவியம் - எனவொட்டுக. நெடியதன்முன்னரொன்பதனாணெறியியலென்றதனானிரட்டுதல்கூறுதலினது நிலைமொழித்தொழிலென்பதுபெறப்பட்டது. வருமொழிமுற்கூறியவதனானகரந்தன்னையுணரநின்றவழியும்வகரமிகுதல்கொள்க. அவ்வழகிது எனவரும். திரியாதென்றதனான்மேற்சுட்டுநீண்டவழி வகரக்கேடுங்கொள்க. (௫)

நீடவருதல்செய்யுளுளுரித்தே. ※

இது எய்தியதுவிலக்கிச்செய்யுட்காவதோர்விதிகூறுகின்றது. நீடவருதல்செய்யுளுளுரித்து - அகரச்சுட்டுநீடவருதல்செய்யுளிடத்துரித்து — (எ-று) [உ-ம்] ஆயிருதிணையினிசைக்குமன்சொல்லே - ஆயிருபாற்சொல் எனவரும். இதுவருமொழிவரையாதுகூறலின்வன்கணமொழிந்தகணமெல்லாவற்றோடுஞ்சென்றது. அவற்றிற்குதாரணம்வந்தவழிக்காண்க. இந்நீட்சியிருமொழிப்புணர்ச்சிக்கண்வருதலினீட்டுவழிநீட்டலாகாமையுணர்க. (௬)

சாவவென்னுஞ்செயவெனெச்சத்,திறுதிவகரங்கெடுதலுமுரித்தே. ※

இதுமேல்வினையெஞ்சுகிளவியென்றவெச்சத்திற்கெய்தாததெய்துவித்தது. சாவவென்னுஞ் செயவெனெச்சத்திறுதிவகரம் - சாவவென்றசொல்லப்படுஞ்செயவெனெச்சத்திறுதிக்கண்ணின்றவகரமுமதனாற்பற்றப்பட்டஅகர

மும் — கெடுதலுமுரித்து - கெட்டுநிற்றலுங்கெடாதுநிற்றலுமுரித்து:— (எ-று) [உ-ம்] கோட்டிடைச்சாக்குத்தினான் எனவரும். சீறினான்-தகர்த்தான்-புடைத்தான்- என வொட்டுக. கெடாததுமுன்னர்முடிந்ததாம். இதனை வினையெஞ்சுகிளவியென்றதன்பின் வையாததனானியல்புகணத்துமிந்நிலைமொழிக்கேடுகொள்க. சானான்றான்-நீண்டான்- மாண்டான்-யாத்தான்-வீழ்த்தான்-அடைந்தான்-எனவொட்டுக. (எ)

அன்னவென்னு முவமக்கிளவியு, மண்மைசுட்டியவிளிநிலைக்கிளவியுஞ், செய்ம்மனவென்னுந்தொழிலிறுசொல்லு, மேவல்கண்ணியவியங்கோட்கிளவியுஞ், செய்தவென்னும்பெயரெஞ்சுகிளவியுஞ், செய்யியவென்னும்வினையெஞ்சுகிளவியு,மம்மவென்னுமுரைப்பொருட்கிளவியும், பலவற்றிறுதிப்பெயர்க்கொடையுளப்பட,வன்றியனைத்துமியல்பெனமொழிப.

இது அகரவீற்றுளொருசார்பெயர்க்கும்வினைக்குமிடைக்கு முன்னெய்தியதுவிலக்கியுமெய்தாதனெய்துவித்துமிலக்கணங்கூறுகின்றது. அன்னவென்னுமுவமக்கிளவியும் - அன்னவென்றுசொல்லப்படுமுவமவுருபாகியஅகரவீற்றிடைச்சொல்லும்—அண்மைசுட்டியவிளிநிலைக்கிளவியும் - அணியாரைக்கருதினமுன்னின்றாரையெதிர்முகமாக்கிக் கூறும்விளியாகியநிலைமையினையுடையஅகரவீற்றுயர்திணைப்பெயர்ச்சொல்லும் — செய்ம்மனவென்னுந்தொழிலிறுசொல்லும் - செய்ம்மனவென்றுசொல்லப்படுந் தொழிற்சொற்பொருடருங்காலும்மீற்றானிறுஞ்சொல்லும் — ஏவல்கண்ணியவியங்கோட்கிளவியும் - ஒருவரானேவற்றொழின்மைகருதிக்கூறப்பட்ட வேவற்பொருண்மையைமுற்றமுடித்தலையுணர்த்து மகரவீற்று வினைச்சொல்லும் —செய்தவென்னும்பெயரெஞ்சுகிளவியும்-செய்தவென்றுசொல்லப்படும்பெயரெச்சமாகியவகரவீற்றுவினைச்சொல்லும் — செய்யியவென்னும்வினையெஞ்சுகிளவியும் - செய்யியவென்றுசொல்லப்படுகின்றவினையெச்சமாகியவகரவீற்றுவினைச்சொல்லும்—அம்மவென்னுமுரைப்பொருட்கிளவியும் அம்மவென்றுசொல்லப்படு மெதிர்முகமாக்கியவகரவீற்றிடைச்சொல்லும் —பலவற்றிறுதிப்பெயர்க்கொடையுளப்பட-பன்மைப்பொருளையுணர்த்து மகரவீற்றுப்பெயர்களைந்திணையுமுற்கூறியவற்றோடுகூட்டிக்கொடுத்தலுள்ளிட்டு—அன்றியனைத்துமியல்பெனமொழிப - அவ்வெட்டுச்சொல்லுமியல்பாமுடியுமென்றுகூறுவராசிரியர்.— (எ-று)[உ-ம்] பொன்னன்னகுதி

ணா - செந்நாய் - தகர் - பன்றி - எனவிதுவினையெஞ்சுகிளவி யென்பதனுன்மி க்குமுடிதலைவிலக்கிற்று. ஊர - கேள் - செல் - தா - போ - எனவுயிரீறுகியவுயர்தி ணையென்னுஞ்சூத்திரத்தானியல்பாய்முடிவதீண்டுனகரங்கெட்டு அகரவீறாய் விளியேற்றுமுடிந்தமையினெய்தாததெய்துவித்தது. உண்மன குதிரை - செ ந்நாய் - தகர் - பன்றி - என்டனவற்றிற்குண்ணுமெனவிரித்துயானுண்மன - நீயுண்மன - அவனுண்மன - எனநிறுத்தி கூழ் - சோறு - தேன் - பால் - எனவரு வித்துமுடித்து இவற்றிற்குமவ்வாறேவிரித்துக்கொள்க. இங்ஙனஞ்செய்யு மென்பதன்பொருட்டாகிய மனவென்னுஞ்சொல் அக்காலம்வழங்குதலின் ஆசிரியர்மனவென்பதனையும்வேறாகவெடுத்தோதினர். யானும்நின்னோடுட ன்வருக - அவன்செல்க - அவள்செல்க - அவர்செல்க - எனநிறுத்திக் காட்டின்க ண் - செறுவின்கண் - தானைக்கண். போரின்கண் - எனவருவித்துமுடிக்க. இவை யேவற்பொருண்மையைமுற்றமுடித்தன. எவல்கண்ணியவெனவேயேவல்க ண்ணாதனவுமுளவாயின. அவை. நீசெல்க - அதுசெல்க - அவைசெல்க எனநிறு த்திமுற்கூறியசாடுமுதலியவற்றைவருவித்துமுடிக்க. இவையேவற்பொருண் மையைமுற்றமுடியாதன. அஃறிணையேவற்பொருண்மையைமுற்றமுடியா மைவினையியலுள்வியங்கோட்கண்ணேபொருளியலுஞ்செய்யுளியலும்பற்றி க்கூறுதும். மனவும் வியங்கோளுமெய்தாததெய்துவித்தது. உண்டகுதிரை செந்நாய் - தகர் - பன்றி - இதுவுமதுஇதற்குரியவுண்ணுதகுதிரையென்னுமெ திர்மறையும்நல்லகுதிரையென்னுங்குறிப்புங்கொள்க. உண்ணியகொண்டா ன் - சென்றான் - தந்தான் - போயினான் - இதுமுன்னர்வினையெச்சம். வல்லெ ழுத்துப்பெறுகவென்றவினெய்தியதுவிலக்கிற்று. அம்மகொற்றா - சாத்தா - தேவா - பூதா - என்பதிடைச்செல்லாதவினெய்தாததெய்துவித்தது. இதுகே ளாய்கொற்றனேயெனவெதிர்முகமாக்கியவாறுகாண்க. பல்லகுதிரை - பலகு திரை - சிலகுதிரை - உள்ளகுதிரை - இல்லகுதிரை - செந்நாய் - தகர் - பன்றி - எ னவொட்டுக. இக்காலத்துப்பல்லவென்பதுவழங்காது. இதுவும்விளக்குறிநெ ன்றாற்போலப்பலக்குதிரையெனவல்லெழுத்தெய்தியதனைவிலக்கிற்று. விளி நிலைக்கிளவியாகியபெயர்முற்கூறுதலானே செய்யுமென்பதன்மறையாகி யசெய்யாதவென்பதற்கு மிவ்வியல்புமுடிபுகொள்க. அதுவாராதகொற்ற னெனவரும். இவ்வியல்புமுடிபிற்குச்செய்ம்மனசிறத்தலின் வியங்கோட்கு முன்வைத்தார். ஏவல்கண்ணியவென்பதனானேவல்கண்ணாததுமுளதென்று

கூறிமன்னியபெருமை நீயெனவுதாரணங்காட்டுகவெனின துபொருந்தாது. கூறுகின்றான் அவனிலைபெற்றிருத்தல்வேண்டுமென்றேகருதிக்கூறுதலின்ஏவல்கண்ணிற்றேயாம். எல்லாவற்றினுஞ்சிறந்தபலவற்றிறுதி முற்கூறாகவெனின் அதுவழக்கிற்குஞ்செய்யுட்கும்வேறுவேறுமுடிபுடைத்தென்றற்குஞ்செய்யுண்முடிபிவ் வியல்புபோற்சிறப்பின் றென்றற்கும் அகரவீற்றுண்முடிபு கூறாதுநின்றமுற்றுவினையும்வினைக்குறிப்பு மிவ்வியல்புமுடிபு பெறுமென்றற்கும்பின்வைத்தார். உண்டனகுதிரை இது முற்றுவினை. கரியனகுதிரை இது முற்றுவினைக்குறிப்பு- இஃதியல்புகணத்துமுடிபு- ஞநமயவவென்புழிப் பொருந்துவனவெல்லாங்கொள்க. (௯)

வாழியவென்னுஞ் சேயென்கிளவி, யிறுதியகரங்கெடுதலுமுரித்தே.※

இது எய்தியதன்மேற்சிறப்பு விதிவகுத்தது. வாழியவென்னுங்கிளவி-வாழியவென்றுசொல்லப்படுஞ்சொல் — சேயென்கிளவி-அதுதான்வாழுங்காலநெடுங்காலமென்னும் பொருளைத்தருஞ்சொல் — இறுதியகரங்கெடுதலுமுரித்து - இறுதிக்கண் அகரமுமதனூற்பற்றப்பட்டயகரவொற்றுங்கெட்டுமுடிதலுமுரித்து எனவே கெடாதுமுடிதலேபெரும்பான்மை.—(எ-று) வாழிகொற்றா-சாத்தா-தேவா-பூதா-எனவரும் வாழியவென்பதேபெரும்பான்மை. வாழியயான். நீ-அவன்-அவள்-அவர்-அது - அவை-இது மூன்றிடத்துஞ்சேறலின்உயிரீறாகியமுன்னிலைக்கிளவியு மென் புழிமுன்னிலையியல்பாமென்றதன்க ணடங்காதாயிற்று. இது குறிப்புவியங்கோள். ஒன்றினமுடித்தலானிஃதியல்புகணத்துங்கொள்க. வாழிஞெள்ளா -எனவரும். இவைவாழ்த்தப்படும்பொருள் வாழவேண்டுமென்னுங்கருத்தினனாகக் கூறுதலின் ஏவல்கண்ணிற்றேயாம். அல்லாக்கால்வாழ்த்தியல்வகையேநாற்பாற்குமுரித்தேயென்பதற்கும் வாழ்த்தியலாகச்சான்றோர் கூறியசெய்யுட்களுக்கும்பயனின்றாமென் றுணர்க. (௰)

உரைப்பெயர்க்கிளவிநீட்டமும்வரையார். ※

இது அம்மவென்பதற்கெய்தாததெய்துவித்தது. உரைப்பொருட்கிளவி-எதிர்முகமாக்கும்பொருளையுடையவம்மவென்னுஞ்சொல்— நீட்டமும்வரையார்- அகரமாகிநிற்றலேயன்றி ஆகாரமாய்நீண்டுமுடிதலையுநீக்கார். — (எ-று) அம்மா-கொற்றா-சாத்தா-தேவா-பூதா- எனவரும்.உம்மையானீளாமையேபெரும்பான்மையாம். வரையாதுகூறினமையினீட்சி யியல்புக

ணத்துங்கொள்க. அம்மா-ஞெள்ளா- நாகா-மாடா-வடுகா-ஆதா-என வொட்டுக. (௰)

பலவற்றிறுதி நீடுமொழியுளவே, செய்யுள்கண்ணியதொடர்மொழியான. *

இது முற்கூறியபலவற்றிறுதிக்குச்செய்யுண்முடிபுகூறுகின்றது. பலவற்றிறுதிநீடுமொழியுள - பலவற்றையுணர்த்துமைவகைச்சொல்லினிறுதி யகரநீண்டுமுடியுமொழிகளுஞ்சிலவுள — செய்யுள்கண்ணிய தொடர்மொழியான - யாண்டுளவெனிற்செய்யுளாதலைக்கருதியவொன்றோடொன்றுதொடர்ச்சிப்படுஞ்செய்யுண்முடிபுடைய மொழிகளின்கண்ணே. — (எ-று) உடைத்தென்னாதுள வென்றபன்மையான்வருமொழிக்கட்சிலவென்பது வந்துநீடுமென்றுகொள்க. செய்யுளானவென்றது செய்யுள்கண்ணியதொடர்மொழியானவென்றதனாற்பலவென்பதனிறுதி யகரநீண்டுழிநிலைமொழி அகரப்பேறும் வருமொழிஞகர மெல்லெழுத்துப்பேறும்வருமொழியிறுதிநீண்டவழி அகரப்பேறு மகரமெல்லெழுத்துப்பேறுங்கொள்க. பலாஅஞ்சிலாஅமென்மனார்புலவர் இதன்சொன்னிலைபலசிலவென்னுஞ்செவ்வெண். (௰௧)

தொடரலிறுதிதம்முற்றாம்வரின், லகரம்றகரவொற்றாகலுமுரித்தே. *

இது பலசிலவென்பனவற்றிற்கியல்பேயன்றித்திரிபுமுண்டெனவெய்திய தன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது. தொடரலிறுதி-தொடர்மொழியல்லாதவீரெழுத்தொருமொழியாகியபலசிலவென்னும் அகரவீற்றுச்சொல் — தம்முற்றாம்வரின் - தம்முன்னேதாம்வருமாயின் —லகரம்றகரவொற்றாகலுமுரித்து -தம்மீற்றினின்ற லகரவொற்றுறகரவொற்றாகத்திரிந்துமுடிதலுமுரித்து.—(எ-று)உம்மையாற்றிரியாமையுமுரித்தென்றார். பற்பலகொண்டார்-சிற்சிலவித்தி-எனவரும். அகரவீற்றுச்சுட்டல்லாதகுற்றெழுத்தோரெழுத்தொருமொழியாகுவன வின்மையிற்றொடரலிறுதி யெனவேயீரெழுத்தொருமொழியேயுணர்த்திற்று. தன்முனென்னாதுதம்முனென்றபன்மையாற்பலசிலவென நின்றவிரண்டுந்தழுவப்பட்டன. தம்முன்வரினென்றதுதாமென்றதனாற்பலவின்முன்பலவருதலுஞ்சிலவின்முன்சிலவருதலுங்கொள்க. லகரம்றகரவொற்றாமெனவொற்றிற்குத்திரிபுகூறியகரங்கெடுதல் கூறிற்றிலரெனின் அது வாராததனால்வந்ததுமுடித்தலென்னு முத்திபெற

வைத்ததென்றுணர்க. இதனைஞாபகமென்பாருமுளர். அருத்தாபத்தியாந் றம்முற்றும்வரினென வேதம்முன்பிறவரின்லகரம்றகரவொற்றாகாது அகர ங்கெடும். [உ-ம்] பல்கடல்-சேனை-தானை-பறை- எனவும் பல்யானை-பல் வேள்வி- எனவும் சில்காடு-சேனை-தானை-பறை- எனவும் சில்யானை-சில் வேள்வி- எனவும் வரும். உரித்தென்றதகரவீற்றொருமைபற்றி....(௱உ)

வல்லெழுத்தியற்கையுறழத்தோன்றும். *

இது முற்கூறியவிரண்டற்குமோர்முடிபுவேற்றுமைகூறுகின்றது. வல்லெ ழுத்தியற்கை-முற்கூறியபலசிலவென்னுமிரண்டற்குமகரவீற்றுப்பொது விதியிற்கூறியவல்லெழுத்துமிகுமியல்பு — உறழத்தோன்றும் - மிகுதலு மிகாமையுமாயுறழ்ந்துவரத்தோன்றும்.—(எ-று) [உ-ம்] பலப்பல-பலபல -சிலச்சில-சிலசில-எனவரும். ஈண்டுந்தம்முற்றும்வருதல்கொள்க. இயற்கை யென்றதனன் அகரங்கெடலகரந்திரிந்துந்திரியாதுமுறழ்ந்துமுடிதலுங் கொள்க. பற்பல-பல்பல-சிற்சில-சில்சில-எனவரும். தோன்றுமென்ற தனனகரங்கெட லகரமெல்லெழுத்துமாய்தமுமாகத்திரிந்துமுடிதலுங் கொள்க. பன்மீன்வேட்டத்து-பன்மலர்-பஃறுவி-பஃறுழிசை-சின்னூல்-சிஃறுழிசை-எனவரும். இதுமுன்னர்த்தோன்றுமென்றெடுத்தோதியசிற ப்புவிதியால்அகரங்கெடநின்றலகரவொற்றின்முடிபாகலிற்றகரம் வருவழி யாய்தமென்பதனுன்முடியாது. (௱௩)

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே. *

இஃது அகரவீற்றிற்கல்வழி முடிப்புகூறிவன்கணத்தோடு வேற்றுமைதொ க்குநின்றமுடிபு கூறுகின்றது. வேற்றுமைக்கண்ணுமதனோரற்று - அக ரவீற்றுப்பெயர்வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணுமுற்கூறிய அல்வ ழியோடொருதன்மைத்தாய்க் கசதபமுதன்மொழிவந்துழித்தத்தமொத்த வொற்றிடைமிக்குமுடியும். —(எ-று) [உ-ம்] இருவிளக்கொற்றன் - சாத் தன்-தேவன்-பூதன்- எனவரும். இருவிளக்குறுமை-சிறுமை-தீமை-பெரு மை- எனக்குணவேற்றுமைக்கண்ணுங்கொள்க. இருவிளவென்றதூஒர். வேணாட்டகத்தோரூர். கருவூரினகத்தொருசேரியுமென்ப. இருவிளவிற்கொ ற்றன் எனவிரிக்க. (௱௪)

மரப்பெயர்க்கிளவிமெல்லெழுத்துமிகுமே. *

இஃது அகரவீற்றுப் பெயர்க்கெய்தியது விலக்கிப்பிறிதுவிதிவகுத்த

து. மரப்பெயர்க்கிளவிமெல்லெழுத்துமிகும் - அகரவீற்று மரப்பெய
ராயசொல்வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண் மெல்லெழுத்துமிக்குமு
டியும்.— (எ-று) [உ-ம்] அதங்கோடு- விளங்கோடு-செதிள்- தோல்-பூ-
எனவரும். இதுகசதப வென்பதனான்முடியும். (௰௫)

மகப்பெயர்க்கிளவிக்கின்னேசாரியை. *

இது அகரவீற்றுளொன்றற் கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. ம
கப்பெயர்க்கிளவிக்கின்னேசாரியை - அகரவீற்றுமகவென்னும்பெயர்ச
சொல்லிற்கு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்வருஞ்சாரியையின்சா
ரியை.—(எ-று)[உ-ம்]மகவின்கை- செவி-தலை-புறம்- எனவரும். சாரி
யைப்பேறுவரையா துகூறியவழி நான்குகணத்துக்கண்ணுஞ்செல்லுமெ
ன்பதாசிரியர்க்குக்கருத்தாகலின் மகவின் - ஞாண் - நூல்-மணி- யாழ்-வட்டு-
அடை-எனவொட்டுக. மேல்அவணென்றதனானின்சாரியை பெற்றுழியி
யைபுவல்லெழுத்துவீழ்க்க. (௰௬)

அத்தவண்வரினும்வரைநிலையின்றே. *

இது ஈற்றுவல்லெழுத்துமத்தும் வகுத்தலி னெய்தியதன்மேற்சிறப்புவி
தி. அத்தவண்வரினும் - முற்கூறியமகவிடத்து அத்துவரினும் — வரைநி
லையின்று - இன்னேயன்றியத்துச்சாரியையுமீற்றுவல்லெழுத்தும்வந்துமு
டியினுநீக்குநிலைமையின்று.— (எ-று) [உ-ம்] மகத்துக்கை-செவி-த
லை-புறம்-எனவரும். அவணென்றதனால்மகப்பால்யாடெனவல்லெழுத்து
ப்பேறும்நிலையென்றதனால்மகம்பால்யாடென மெல்லெழுத்துப்பேறுங்
கொள்க. (௰௭)

பலவற்றிறுதியுருபியனிலையும். *

இது ஈற்றுவல்லெழுத்தும்வற்றும்வகுத்தலினெய்தியதன்மேற் சிறப்புவி
தி.பலவற்றிறுதி-பல்ல-பல-சில-உள்ள-இல்ல-என்னும்பலவற்றைபுணர்த்
தும் அகரவீற்றுச்சொற்களினிறுதி உருபியனிலையும்-உருபியற்கண்வற்று
ப்பெற்றுப்புணர்ந்தாற்போல வுருபினதுபொருட்புணர்ச்சிக்கண்ணும்வ
ற்றுப்பெற்றுப்புணரும்.—(எ-று)ஈற்றுவல்லெழுத்ததிகாரத்தாற்கொள்க.
பல்லவற்றுக்கோடு-பலவற்றுக்கோடு- சிலவற்றுக்கோடு-உள்ளவற்றுக்கோ
டு-இல்லவற்றுக்கோடு-செதிள்-தோல்-பூ- எனவொட்டுக. உருபுவிரிந்து
ழிநிற்குமாறுபோலன்றி யவ்வுருபுதொக்கதன்பொருணின்று புணருங்கால்

வேறுபாடுடைமையினவ்வேறுபாடுக ளீண்டோதினுரித்துணையு மென்று ணர்க. (மஅ)

ஆகாரவிறுதியகரவியற்றே. *

இது ஆகாரவீற்றுப்பெயரல்வழிக்கண்முடியுமாறுகூறுகின்றது. ஆகாரவிறு தியகரவியற்று - ஆகாரவீற்றுப்பெயரல்வழிக்க ணகரவீற்றல்வழியதியல்பிற் றுய்வல்லெழுத்துவந்துழித் தத்தமொத்தவொற்றிடைமிகும்.— (எ-று) [உ-ம்] மூங்காக்கடிது- தாராக்கடிது- சிறிது- தீது - பெரிது- என வொட்டுக. (மக)

செய்யாவென்னும்வினையெஞ்சுகிளவியு, மவ்வியறிரியாதென்மனார் புலவர். *

இது ஆகாரவீற்றுவினைச்சொன்முடிபு கூறுகின்றது. செய்யாவென்னும் வினையெஞ்சுகிளவியும் - செய்யாவென்னும்வினையெச்சமாகிய சொல்லு மும்மையாற்பெயரெச்சமறையாகியசொல்லும்—அவ்வியறிரியாதென்ம னார்புலவர் - வல்லெழுத்துமிக்குமுடியுமவ்வியல்பிற்றிரியா வென்றுசொ ல்லுவார்புலவர்— (எ-று) உண்ணாக்கொண்டான்- சென்றான் -தந்தான்- போயினான் எனவும் உண்ணாக்கொற்றன் -சாத்தன்-தேவன்-பூதன் - என வும் வரும். (உய)

உம்மையெஞ்சியவிருபெயர்த்தொகைமொழி, மெய்ம்மையாகவகர மிகுமே. *

இஃதாகாரவீற்றல்வழிக்கண்உம்மைத்தொகைமுடிபுகூறுகின்றது. உம்மை யெஞ்சிய விருபெயர்த்தொகைமொழி - உம்மைதொக்குநின்ற விருபெ யராகியதொகைச்சொற்கள் — மெய்ம்மையாகவகரமிகும் - மெய்யாக நிலைமொழியீற்றகரமிக்குமுடியும்.— (எ-று) [உ-ம்] உவா அப்பதினான் கு-இரா அப்பகல்-எனவரும்.மெய்ம்மையாகவென்பதனான்வல்லெழுத்து கொடுக்க. இதுஎழுவாயும்பயனிலையுமன்றி யும்மைத்தொகையாதவின்மா ட்டேற்றான்வல்லெழுத்துப்பெறுதாயிற்று உம்மைதொக்க வென்னாதெ ஞ்சியவென்றவாய்பாட்டுவேற்றுமையான் அரா அப்பாம்பு எனப் பண்பு த்தொகைக்கும் இரா அக்கொடிதென வெழுவாய்முடிபிற்கும் இரா அக் காக்கை யெனபெயரெச்சமறைக்கும் அகரப்பேறுகொள்க. வருமொ ழிவரையாது கூறினமையி னியல்புகணத்துக்கண்ணுமகரப்பேறுகொள்க.

இரு அவழு துணங்காய் எனவரும் . இஃதும்மைத்தொகை. அராஅக்குட்டி யென்பது பண்புத்தொகையும்வேற்றுமைத்தொகையுமாம். உவாஅப்பட் டினியென்பது வேற்றுமைத்தொகை. (௨௰௧)

• ஆவுமாவும்விளிப்பெயர்க்கிளவியும், யாவென்வினாவும் பலவற்றிறுதி யு. மேவல்குறித்தவுரையசைமியாவுந். தன்றொழிலுரைக்கும்வினாவின்கிள வியோ, டன்றியனைத்துமியல்பென மொழிப. *

இஃதெய்தியதுவிலக்கலுமெய்தாத தெய்துவித்தலு முணர்த்துகின்றது. ஆவும் - ஆவென்னும்பெயரும்—மாவும் - மாவென்னும்பெயரும் — விளிப்பெயர்க்கிளவியும் - விளித்தலையுடையபெயராகியவுயர்திணைச்சொல்லும் —யாவென்வினாவும் - யாவென்னும்வினாப்பெயரும்— பலவற்றிறுதியும்- பன்மைப்பொருளையுணர்த்துமாகாரவீற்றுப் பெயரொச்சமறையாகியமுற்றுவினைச்சொல்லும்—ஏவல்குறித்தவுரையசைமியாவும்-முன்னிலையேவல் வினையைக்கருதிவருமெதிர்முகமாக்குஞ்சொல்லினைச்சேர்ந்த மியாவென்னுமாகாரவீற்றிடைச்சொல்லும் — தன்றொழிலுரைக்கும்வினாவின்கிளவியொடு - தனதுதொழில்வினைச்சொல்லுமாகாரவீற்றுத் தன்மையாகிய வினாச்சொல்லோடுகூட— அன்றியனைத்தும் - அவ்வெழு வகையாகியசொல்லும் — இயல்பென மொழிப - இயல்பாய்முடியுமென்று சொல்லுவர்புலவர்.—(எ-று)[உ-ம்]ஆகுறிது-மாகுறிது-சிறிது-தீது-பெரிது-குறிய-சிறிய-தீய- பெரிய-எனவொட்டுக.இது ஆகாரவீற்றுப்பெயராகலின் மிக்குமுடிவனமிகாவென வெய்தியதுவிலக்கிற்று. ஊரா கேள் -செல்-தா-போ-எனவியல்பாமென்றவுயர்திணைப்படர்க்கைப்பெயர்திரிந்துமுன்னிலையாய்விளியேற்றலினெய்தாததெய்துவித்தது.யாகுறிய-சிறிய-தீய-பெரிய-எனவொட்டுக.இதுவும்பெயராகலினெய்தியவியைபு வல்லெழுத்துவிலக்கியதாம். உண்ணாகுதிரைகள்- செந்நாய்கள்- தகர்கள் -பன்றிகள் -என விதாஎய்தியதுவிலக்கிற்று. செய்யாவென்னுஞ்சூத்திரத்துமையாற்பெற்றவல்லெழுத்தினைவிலக்கலின்.கேண்மியாகொற்றா- சாத்தா-தேவா-பூதா- எனவும்உண்காகொற்றா-சாத்தா-தேவா-பூதா-எனவும் இவ்விடைச்சொற்கண்முடியாமையினெய்தாததெய்துவித்தது. உண்காவென்றதுயானுண்பேனேவென்னும்பொருட்டு.இயல்புகணத்துக்கண்ணுமியல்ஞநமயவவென்பதனான்முடிபெய்தும். (௨௨)

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே. *

இஃதாகாரவீற்றுவேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்முடியுமாறுகூறுகின்றது. வேற்றுமைக்கண்ணும் - ஆகாரவீற்றுப்பெய ரல்வழிக்கண்ணேயன்றிவேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும்— அதனோரற்று - அகரவீற்றல்வழியோடொருதன்மைத்தாய்வல்லெழுத்துவந்துழிவல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று)[உ-ம்]தாரா-மூங்கா-வங்கா-எனநிறுத்தி-கால்செவி-தலை-புறம்-எனவருவித்து வல்லெழுத்துக்கொடுத்தொட்டுக.(௨௫)

குறியதன்முன்னருமோரெழுத்துமொழிக்கு. மறியத்தோன்றுமகரக்கிளவி. *

இஃதவ்வீற்றிற்கெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது அகரமும்வல்லெழுத்தும்பெறுதலின்) குறியதன்முன்னரும் - குற்றெழுத்தின் முன்னின்றஆகாரவீற்றிற்கும்— ஓரெழுத்துமொழிக்கும் - ஓரெழுத்தொருமொழியாகியவாகாரவீற்றிற்கும்— அகரக்கிளவியறியத்தோன்றும் - நிலைமொழிக்கணகரமாகியவெழுத்துவிளங்கத்தோன்றும்.—(எ-று) [உ-ம்]பலாஅக்கோடு-செதிள்-தோல்-பூ- எனவும் காஅக்குறை-செய்கை-தலை-புறம்-எனவும் வரும். ஓரெழுத்தொருமொழி அகரம்பெறுதல்சிறுபான்மையென்றற்கதனைப்பிற்கூறினார். இதுநிலைமொழிச்செய்கையாதலிற் பலாஅவிலை-பலாஅநார்-எனவியல்புகணத்துங்கொள்க. அறியவென்றதனானவ்வகரமீரிடத்தும்பொருந்தினவழிக்கொள்க. இன்னுமிதனானே அண்ணாத்தேரி-திட்டாத்துக்குளம்- என அத்துக்கொடுத்தும் உவாத்துஞான்றுகொண்டான் என அத்துஞான்றுங்கொடுத்தும் உவாத்தாற்கொண்டான் எனஅத்துமானுங்கொடுத்தும் இடாவினுட்கொண்டான்என இன்னுமேழனுருபுங்கொடுத்துஞ்செய்கைசெய்துமுடிக்க. இன்னுமிதனானே மூங்காவின்கால் மூங்காவின்றலை எனவுருபிற்குச்சென்றசாரியை பொருட்கட்சென்றுழியியைபுவல்லெழுத்துக்கேடுங்கொள்க. (௨௪)

இராவென்கிளவிக்ககரமில்லை. *

இது ஆகாரவீற்றுப்பெயர்க் கொருவழியெய்தியதுவிலக்குகின்றது. இராவென்கிளவிக்கு-இராவென்னுமாகாரவீற்றுச்சொல்லிற்கு — அகரமில்லை - முற்கூறியவகரம்பெறுதலின்று வல்லெழுத்துப்பெற்றுமுடியும்.—(எ-று)[உ-ம்]இராக்கொண்டான்-சென்றான்-தந்தான்-போயினான்-என

வரும். இரா அக்காக்கை-இரா அக்கூத்து-எனப் பெயரெச்சமறைப்பொருடாராதுஇராவிடத்துக்காக்கை-அராவிடத்துக்கூத்து-எனவேற்றுமைகருதியவழிஅகரம்பெருதென்றுணர்க. (உ௫)

நிலாவென்கிளவியத்தொடுசிவணும். *

இஃது தகரம்விலக்கியதிகாரவல்லெழுத்திறேடைத்துவருத்தலினெய்தியதன்மேற்சிறப்புவிதி. நிலாவென்கிளவியத்தொடுசிவணும் - நிலாவென்னுஞ்சொல்லத்துச்சாரியையோடுபொருந்திமுடியும்.—(எ-று)[உ-ம்]நிலாத்துக்கொண்டான்- சென்றான்-தந்தான்-போயினான்-எனவரும் நிலைமொழித்தொழிலை விலக்குமாதலினத்துவருப்பவகரம்வீழ்ந்தது. இதற்கேழனுருபுவிரிக்க நிலாஅக்கதிர்என்பது வேற்றுமைக்கண்ணுமென்பதனானீற்றுவல்லெழுத்துப்பெற்றது நிலா அமுற்றமென்பதொட்டுதற்கொழுகிய வழக்கலீமையினத்துப்பெருதாயிற்று. ஈண்டுவருமொழிவரையாதுகூறினமையின் நிலாத்துஞான்றான்எனவியல்புகணத்துக்கண்ணுமேற்பனகொள்க. (உ௬)

யாமரக்கிளவியும்பிடாவுந்தளாவு, மாமுப்பெயருமெல்லெழுத்துமிகுமே. *

இது வல்லெழுத்துவிலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது. யாமரக்கிளவியும் - யாவென்னு மரத்தையுணரநின்றசொல்லும்—பிடாவும் - பிடாவென்னுஞ்சொல்லும்— தளாவும் - தளாவென்னுஞ்சொல்லும்— ஆமுப்பெயருமெல்லெழுத்துமிகும்-ஆகியமூன்றுபெயரும்வல்லெழுத்துமிகாதுமெல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று)[உ-ம்]யா அங்கோடு-பிடா அங்கோடு-தளா அங்கோடு-செதிள்-தோல்-பூ-எனவரும். வருமொழித்தொழிலாகியமெல்லெழுத்துவருப்ப வல்லெழுத்துவிலக்கிற்றும். இதற்குவிலக்காமையின்அகரம்பெற்றது. (உ௭)

வல்லெழுத்துமிகினுமானமில்லை. *

இஃது தெய்தியதிகந்துபடாமற்காத்தது. அகரத்தோடுமெல்லெழுத்தேயன்றிவல்லெழுத்தும் பெறுமென்றலின்) வல்லெழுத்துமிகினுமானமில்லை - முற்கூறியமூன்று பெயர்க்குமெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்துமிக்குமுடியினுங்குற்றமில்லை.—(எ-று)[உ-ம்]யா அக்கோடு-பிடா அக்கோடு-தளாஅக்கோடு-செதிள்-தோல்-பூ-எனவரும்.மானமில்லையென்றதனல்உரு

பிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றுழி யியைபுவல்லெழுத்துவீழ்க்க· யாவின்கோடு-பிடாவின்கோடு-தளாவின்கோடு- எனவரும். சாரியைபெறவே அகரம்வீழ்ந்தது·இன்னுமிதனானேயாஅத்துக்கோடு-பிடாஅத்துக்கோடு-தளாஅத்துக்கோடு-என அத்துப்பெறுதலுங்கொள்க·அகரமும் வல்லெழுத்தும்பெறுதலின். யாமரக்கிளவியென்பதனைக்குறியதன்முன்னரொல்பதன்பின்வையாதவதனால் இராவிற்கொண்டான் நிலாவிற்கொண்டான் எனவுருபிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றுழி யியைபுவல்லெழுத்துவீழ்க்க. (௨௮)

மாமரககிளவியுமாவுமாவு, மாமுப்பெயருமவற்றோரன்ன, வகரம் வல்லெழுத்தவையவணிலையா·னகரமொற்றுமாவுமாவும். *

இஃதெய்தியதுவிலக்கியெய்தாததெய்துவித்தது. இம்மூன்றும்வல்லெழுத்துப்பெறுவென்றலினெய்தியதுவிலக்கிற்று.மாமரத்திற்குஅகரமும்ஙஞநமவொற்றும்எனையவற்றிற்குனகரவொற்றும்மெய்தாததெய்துவித்தது· மாமரக்கிளவியுமாவுமாவு மாமுப்பெயருமவற்றோரன்ன - மாமரமாகிய சொல்லும் ஆவென்னுஞ்சொல்லு மாவென்னுஞ் சொல்லுமாகியஇம்மூன்றுபெயரும்யாமரமுதலியமூன்றோடுமொருதன்மையவாய்மெல்லெழுத்துப்பெற்றுமுடியும்— ஆவுமாவுமகரமவணிலையானகரமொற்றும்-அவற்றுளாவுமாவுமகரம் புணர்ச்சியிடத்துநிலைபெறுவாய் னகரவொற்றுப்பெற்றுமுடியும்—எனவேயருத்தாபத்தியான்மாமரத்திற்குஅகரநிலைபெற்றுஙஞநமவொற்றும்பெறுமாயிற்று· அவைவல்லெழுத்தவணிலையா-அம்மூன்றுபெயருமுற்கூறியவல்லெழுத்துப் புணர்ச்சியிடத்துநிலைபெறுவாய்வரும்.—(எ-று) அவணிலையாவென்றதனையிரண்டிடத்துங்கூட்டுக.[உ-ம்]மாஅங்கோடு-செதிள்-தோல்-பூ- ஆன்கோடு-மான்கோடு-செவி-தலை-புறம்-எனவரும். ஆவுமாவுமவற்றோரன்ன வென்றுஞாபகமாகக் கூறியவதனால்மாங்கோடென அகரமின்றியும்வரும். இனிஅவணென்றதனால்காயாங்கோடு-நுணாங்கோடு-ஆணாங்கோடு- என்றாற்போலப்பிறவுமெல்லெழுத்துப்பெறுதலும்அங்காக்கொண்டான்-இங்காக்கொண்டான்-உங்காக்கொண்டான் - எங்காக்கொண்டான் - எனவிவற்று ளேழாம்வேற்றுமையிடப்பொருளுணரனின்றவிடைச்சொற்கள்வல்லெழுத்துப்பெறுதலும். ஆவின்கோடு- மாவின்கோடு- எனச்சிறுபான்மையின் பெறுதலும்பெற்றுழி

வல்லெழுத்துவீழ்வுங்கொள்க. மாட்டேற்றான்மூன்றுபெயரும்வல்லெழுத்துப் பெறாது மெல்லெழுத்துப்பெற்றவாறுமாமரம்அகரம்பெற்றவாறுமிச்சூத்திரத்தின்கண்ணழிவானுணர்க. (௨௯)

ஆனொற்றகரமொடுநிலையிடனுடைத்தே. ※

இஃது தவற்றுளானென்றதற்கு எய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது. ஆனொற்று-ஆவென்னுஞ்சொன்முன்னர்ப் பெற்றுநின்றனகரவொற்று —அகரமொடுநிலையிடனுடைத்து.-அகரத்தோடுகூடிநிற்றலுமிடனுடைத்து.—(எ-று) இடனுடைத்தென்றவதனால்வன்கணமொழிந்தகணத்திம்முடிபெனக்கொள்க. [உ-ம்] ஆனநெய்தெளித்துநானநீவி-ஆனமணிகறங்குங்கானத்தாங்கண்-எனவரும். அகரமொடுமென்றவும்மையால்அகரமின்றிவருதலேபெரும்பான்மை. ஆனெய்தெளித்து - ஆன்மணி-ஆன்வால்-எனவரும். (௫௰)

ஆன்முன்வரூஉமீகாரபகரந்,தான்மிகத்தோன்றிக்குறுகலுமுரித்தே※

இது ஆனென்பதற்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிகூறுகின்றது. ஆன்முன்வரூஉமீகாரபகரம்-ஆனென்னுஞ்சொன்முன்னர்வருமொழியாய்வருகின்றஈகாரத்தோடுகூடியபகரமாகியமொழி —தான்மிகத்தோன்றி- அப்பகரமாகியதான்மிக்குநிற்பநிலைமொழினகரத்திற்குக்கேடுதோன்றி —குறுகலுமுரித்து-ஈகாரமிகரமாகக்குறுகிநிற்றலுமுரித்து.—(எ-று)[உ-ம்] ஆப்பி-எனவரும். உம்மையெதிர்மறையாகலான்ஆன்பீஎன்றுமாம். (௫௰௧)

குறியதனிறுதிச்சினைகெடவுகர, மறியவருதல்செய்யுளுளுரித்தே.※

இதுஆகாரவீற்றுட்சிலவற்றிற்குச்செய்யுண்முடிபுகூறுகின்றது. குறியதனிறுதிச்சினைகெட - குற்றெழுத்திறுதிக்கண்ணின்றவாகாரத்தினதிரண்டுமாத்திரையிலொருமாத்திரைகெட்டுஅதகரமாய்நிற்க-உகரமறியவருதல்செய்யுளுளுரித்து-ஆண்டுகரம்புலப்படவருதல்செய்யுளுளுரித்து.—(எ-று)[உ-ம்] இறவுப்புறத்தன்னபிணர்படுதடவுமுதல்·சுறவுக்கோட்டன்னமுள்ளிலைத்தாழைப்-புறவுப்புறத்தன்னபுன்காயுகாய் எனவரும். உகரம்வகுப்பவேநிலைமொழிபகரங்கெட்டது. அதிகாரவல்லெழுத்துவிலக்காமையினின்றுமுடிந்தது. இந்நிலைமொழித்தொழில்வரையாதுகூறினமையினியல்புகணத்திற்குமிவ்விதியெய்திற்றாகவிண்டுவருமுகரம்புலப்பட வாராமையுமுணர்க. சுறவுயர்கொடி-அரவுயர்கொடி-முழவுறழ்தோள் - எனவிவைகுறியதனி

றுதிச்சினைகெட்டுவருமொழி யுயிர்முதன்மொழியாப்வருதலின்வகரவுடம்படுமெய்பெற்றுகரம்பெறுதுமுடிந்தன.இவற்றிற்கிரண்டாமுருபுவிரிக்க. மூன்றாவதுமாம். (௫௰௨)

இகரவிறுதிப்பெயர்நிலைமுன்னர், வேற்றுமையாயின்வல்லெழுத்துமிகுமே. ✻

இஃது இகரவீற்றுப்பெயர்க்கல்வழிமுடிபுதொகைமரபிற்கூறிவேற்றுமைமுடிபுகூறுகின்றது. இகரவிறுதிப்பெயர்நிலைமுன்னர் -இகரவீற்றுப்பெயர்ச்சொன்முன்னரதிகாரத்தாற்கசதபமுதன்மொழிவந்துழி —வேற்றுமையாயின்வல்லெழுத்துமிகும் - வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயிற்றமக்குப்பொருந்தினவல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று)[உ-ம்]கிளிக்கால்-சிறகு-தலை-புறம்- எனவரும். புவிநரியென்றாற்போல்வனவுமவை. இனிக்கிளிகுறுமை-கிளிக்குறுமைனக்குணம்பற்றிவந்தவுறழ்ச்சிமுடிபுமேல் வல்லெழுத்துமிகினுமென்னுஞ்சூத்திரத்து ஒல்வழியறிதலென்றதனாற்கொள்க. (௫௰௩)

இனியணியென்னுங்காலையுமிடனும்,வினையெஞ்சுகிளவியுஞ்சுட்டுமன்ன.

இது எய்தாததெய்துவித்தது. இகரவீற்றிடைச்சொற்கும்வினைச்சொற்குமுடிபுகூறுதலின்) இனியணியென்னுங்காலையுமிடனும்- இனியென்றும்அணியென்றுஞ்சொல்லப்படுகின்ற காலத்தையுமிடத்தைய முணர நின்றவிடைச்சொல்லும் —வினையெஞ்சுகிளவியும்-இவ்வீற்றுவினையெச்சமாகிய சொல்லும்—சுட்டுமன்ன-இகரவீற்றுச்சுட்டாகியவிடைச்சொல்லுமுற்கூறியவாறேவல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று)[உ-ம்[இனிக்கொண்டான்-அணிக்கொண்டான்- தேடிக்கொண்டான்-சென்றான்- தந்தான்-போயினன்-எனவும் இக்கொற்றன்-சாத்தன்தேவன்-பூதன்- எனவும் வரும். இவ்விடைச்சொன்மூன்றும்இப்பொழுதுகொண்டான்-அணியவிடத்தேகொண்டான்- இவ்விடத்துக்கொற்றன்எனஉருபின்பொருள்படவந்தவேற்றுமையாதலின்வேறோதிமுடித்தார். (௫௰௪)

இன்றியென்னும்வினையெஞ்சிறுதி, நின்றவிகரமுகரமாத், றென்றியன்மருங்கிற்செய்யுளுளுரித்தே. ✻

இது இவ்வீற்றுவினையெச்சத்துளொன்றற்குச்செய்யுண்முடிபுகூறுகின்றது. இன்றியென்னும்வினையெஞ்சிறுதி நின்றவிகரமுகரமாதல் - இன்றி

றியென்றுசொல்லப்படும் வினையெச்சக்குறிப்பினிறுதிக்கணின்றவிகர முகரமாகத்திரிந்துமுடிதல்—தொன்றியன்மருங்கிற்செய்யுளுளுரித்து - பழகநட்ந்தகூற்றையுடையசெய்யுளுளுரித்து·—(எ-று)[உ-ம்] உப்பின்றுபுற்கையுண்கமாகொற்கையோனே· நின்றவென்றதனால் வினையெச்சத்திற்குமுன்னெய்தியவல்லெழுத்துவீழ்க்க. தொன்றியன்மருங்கினென்றதனான் அன்றியென்பதுஞ்செய்யுளிடத்திம்முடிபெய்துதல்கொள்க· இடனன்றுதுறத்தல்வல்லியோரே- வாளன்றுபிடியாவன்கணுடவர்- நாளன்றுபோகி-எனவரும்.முற்றியவிகரந்திரிந்துகுற்றியலுகரமாய்நின்றது· (௱௰௫)

சுட்டினியற்கைமுற்கிளந்தற்றே. ※

இது இகரவீற்றுச்சுட்டுப்பெயரியல்புக்ணத்தோடு முடியுமாறுகூறுதவினெய்தாததெய்துவித்தது·சுட்டினியற்கை - இகரவீற்றுச்சுட்டினியல்பு—முற்கிளந்தற்று - முன் னகரவீற்றுச்சுட்டிற்குக் கூறிய தன்மைத்தாம்—(எ-று)என்றது சுட்டின்முன்னர் ஞநமத்தோன்றினென்பதுமுதலியநான்குசூத்திரத்தானுங்கூறியவிலக்கணங்களை அவைமென்கணத்துமெல்லெழுத்துமிகுதலுமிடைக்கணத்துமுயிர்க்கணத்தும் வகரம்பெறுதலுஞ்செய்யுட்கண்வகரங்கெட்டுச்சுட்டுநீடலுமாம்.இஞ்ஞாண்- நூல்-மணி-எனவும்இவ்யாழ்-இவ்வட்டு- எனவும் இவ்வடை-இவ்வாடை- இவ்விலை - இவ்வீயம்- இவ்வுரல்-இவ்வூர்தி- இவ்வெழு- இவ்வேணி-இவ்வையம் - இவ்வொடு-இவ்வோக்கம்-இவ்வெளவியம்- எனவும் ஈவயினை எனவும்வரும்· ஈகாண்டோன்றுமெஞ்சிறுநல்லூரே என்றதுவும் கள்வனேவல்லன் கணவனென்காற்சிலம்புகொள்ளும்விலைப்பொருட்டாற்கொன்றூாயீதொன்று-என்றதும் இதுவென்னுஞ்சுட்டுமுதலுகரவீறுதவினதுசெய்யுளகத்துப்புறனடையான்முடியுமெனவுணர்க· (௱௰௬)

பதக்குமுன்வரினேதூணிக்கிளவி, முதற்கிளந்தெடுத்தவேற்றுமையியற்றே. ※

இது இவ்வீற்றல்வழிகளுளளவுப்பெயருளொன்றற்குத்தொகைமரபினெய்திய எயென்சாரியைவிலக்கி வேறுமுடிபுகூறுகின்றது· தூணிக்கிளவிமுன்பதக்குவரின் - தூணியாகியவளவுப்பெயரின் முன்னர்ப்பதக்கென்னுமளவுப்பெயர்வருமாயின் —முதற்கிளந்தெடுத்தவேற்றுமையியற்று - முன்புவிதந்தெடுத்தவேற்றுமைமுடிபினியல்பிற்றாய் வல்லெழுத்துமிக்குமு

டியும்.— (எ-று)[உ-ம்] தூணிப்பதக்கு - எனவரும். இதுஉம்மைத்தொகை. வருமொழிமுற்கூறியவதனான் அடையொடுவந்தவழியுமிவ்விதிகொள்க. இருதூணிப்பதக்கு -முத்தூணிப்பதக்கு-எனவொட்டுக. இளந்தெடுத்தவென்றதனால் - தூணிக்கொள். 'சோளம்-தோரை - பயறு - எனப்பொருட்பெயர்முன்வந்தவழியும் இருதூணிக்கொள். எனவதுதானடையடுத்தவழியும் தூணித்தூணி -தொடித்தொடி - காணிக்காணி - பூணிப்பூணி -எனத்தன்முன்னர்த்தான்வந்தவழியும்இவ்விதிகொள்க . இன்னுமிதனானே தன்முன்னர்த்தான் வந்தவழியுந்தானடையடுத்துவந்தவழியும் இக்குச்சாரியைபெறுதலுங்கொள்க. தூணிக்குத்தூணி- இருதூணிக்கிருதூணி -எனவரும். இவற்றுட்பண்புத்தொகையுமுள. (௩௰௭)

உரிவருகாலைநாழிக்கிளவி, யிறுதியிகரமெய்யொடுங்கெடுமே, டகரமொற்றுமாவயினான. ※

இதுவுமஃது. உரிவருகாலைநாழிக்கிளவி - நாழிமுன்னருரிவருமொழியாய் வருங்காலத்தந்நாழியென்னுஞ்சொல் —இறுதியிகரமெய்யொடுங்கெடும்- தன்னிறுதியினின்றஇகரந்தானேறியமெய்யொடுங்கெடும்— ஆவயினான டகரமொற்றும் -அவ்விடத்துடகரமொற்றாய்வரும். (எ-று)[உ-ம்] நாடுரி- என்வரும். ஏகாரம்விலக்குண்டது. வருமொழிமுற்கூறியவதனான்) இருநாடுரி-முந்நாடுரி-எனவொட்டுக. இறுதியிகரமெனமுன்னுமோரிகரமுள்ளதுபோலக்கூறியவதனானீண்டைநிலைமொழியும்வருமொழியும்நிலைமொழியாய்நின்றுபெயரோடுவல்லெழுத்துமிக்குமுடிதலுங்கொள்க. நாழிக்காயம்-உரிக்காயம்-சுக்கு-தோரை-பயறு-எனவரும். (௩௰௮)

பனியெனவருஉங்காலவேற்றுமைக்,கத்துமின்னுஞ்சாரியையாகும். ※

இஃது இகரவீற்றுவேற்றுமையுளொன்றற்குவல்லெழுத்தினோடுசாரியைபெறுமெனவெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது . பனியென்வருஉங்காலவேற்றுமைக்கு- பனியென்றுசொல்லவருகின்றநோயன்றிக்காலத்தையுணரநின்றவேற்றுமைமுடிபுடையபெயர்க்கு— அத்துமின்னுஞ்சாரியையாகும் - அத்தும்இன்னுஞ்சாரியையாகவரும்.— (எ-று) [உ-ம்] பனியத்துக்கொண்டான் - பனியிற்கொண்டான் - சென்றான் -தந்தான்-போயினான்-எனவரும். வேற்றுமையென்றதனானின்பெற்றுழியியைபு வல்லெழுத்துவீழ்க்க. (௩௰௯)

வளியெனவரூஉம்பூதக்கிளவியு, மவ்விய னிலையல்செவ்விதென்ப. *

இதுவுமது. வளியெனவரூஉம்பூதக்கிளவியும் - வளியென்றுசொல்லவருகின்ற விடக்கரல்லாதவைம்பெரும் பூதங்களிலொன்றையுணரநின்றசொல்லும் — அவ்வியனிலையல்செவ்விதென்ப - முன்னேக்கூறியவத்துமின்னும் பெற்றவ்வியல்பின்கணிற்றல்செவ்விதென்றுகூறுவர்புலவர்.— (எ-று) [உ-ம்]வளியத்துக்கொண்டான் - வளியிற்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினன் - எனவரும். செவ்விதென்றதனுலின்பெற்றுழியிவை புவல்லெழுத்துவீழ்க்க. (௪௰)

உதிமரக்கிளவி மெல்லெழுத்துமிகுமே. *

இது மரப்பெயரிலொன்றற்குவல்லெழுத்துவிலக்கிமெல்லெழுத்துவிதிக்கின்றது. உதிமரக்கிளவி - உதித்தவென்னுந்தொழிலன்றியுதியென்னுமரத்தினையுணரநின்றசொல் — மெல்லெழுத்துமிகும் - வல்லெழுத்துமிகாதுமெல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று) [உ-ம்]உதிங்கோடு-செதிள்-தோல்-பூ-எனவரும். அம்முச்சாரியைவிதிக்கின்றபுளிமரத்தினையிதன்பின் வைத்ததையானுதியங்கோடு- எனவிதற்குமம்முப்பெறுதல்கொள்க. இது இக்காலத்தொதியெனமருவிற்று. (௪௰௧)

புளிமரக் கிளவிக் கம்மேசாரியை. *

இதுவல்லெழுத்துவிலக்கியம்முவகுத்தலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. புளிமரக்கிளவிக்கம்மேசாரியை - சுவையன்றிப்புளியென்னுமரத்தினையுணரநின்றசொல்லிற்குஅம்மென்னுஞ்சாரியைவரும்.—( எ-று ) [உ-ம்]புளியங்கோடு - செதிள் - தோல் - பூ-எனவரும். சாரியைப்பேற்றிடைமுன்னின்றசூத்திரத்து எழுத்துப்பேறு கூறியவதனலம்முப்பெற்றுழியிவைபுவல்லெழுத்துவீழ்க்க. (௪௰௨)

ஏனைப்புளிப்பெயர்மெல்லெழுத்துமிகுமே. *

இது வல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்துவிதித்தலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது.ஏனைப்புளிப்பெயர்மெல்லெழுத்துமிகும்-அம்மரப்பெயரன்றிச்சுவைப்புளிபுணரநின்றபெயர்வல்லெழுத்துமிகாது மெல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று) [உ-ம்] புளிங்கூழ்-சோறு-தயிர்-பாளிதம் எனவரும்.பாளிதம்பாற்சோறு.இவற்றிற்கிரண்டாமுருபுவிரிக்க.(௪௰௫)

வல்லெழுத்துமிகினுமானமில்லை,யொல்வழியறிதல்வழக்கத்தான. *

இதனெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது. வல்லெழுத்துமிகினுமானமில்லை - சுவைப்புளிமெல்லெழுத்தேயன்றிவல்லெழுத்துமிக்குமுடியினுங்குற்றமில்லை - ஒல்வழியறிதல்வழக்கத்தான - பொருந்துமிடமறிகவழக்கிடத்து — (எ-று) [உ-ம்] புளிக்கூழ் - சாறு - தயிர் - பாளிதம் - எனவரும். ஒல்வழியென்றதனாற்புளிச்சாறுபோல வேனையவழக்குப்பயிற்சியிலவென்றுகொள்க. வழக்கத்தானென்றதனானிவ்வீற்றுக்கணெடுத்தோத்துமிலேசுமின்றிவருவனவெல்லாவற்றிற்கு மேற்குமாறுசெய்கையறிந்துமுடித்துக்கொள்க. அவை - இன்னினிக்கொண்டான் - அண்ணணிக்கொண்டான் - என்பன அடையடுத்தவினியணியென்றவழியுமுடியாவாய்வல்லெழுத்துப்பெற்றன. கப்பிதந்தை - சென்னிதந்தை - என்பன அஃறிணைவிரவுப்பெயரென்பதனுளியல்பெய்தாதீண்டுவருமொழித்தகர அகரங்கெட்டு கப்பிந்தை - சென்னிந்தை - எனமுடிந்தது. கூதாளி - கணவிரி - என்பனவற்றிற்குஅம்முக்கொடுத்திகரங்கெடுத்துக்கூதாளங்கோடு - கணவிரங்கோடு - செதிள் - தோல் - பூ - எனமுடிக்க. இனியிவைமகரவீறாயும்வழங்கும். அது வெண்கூதாளத்துத்தண்பூங்கோதையர் என அத்துப்பெற்றுமகரங்கெட்டுங்கணவிரமாலை இடூஉக்கழிந்தன்ன எனமகரங்கெட்டுநிற்கும். கணவிரங்கோடுஎனமெல்லெழுத்துப்பெற்றுநிற்கும். கட்டியெனநிறுத்திஇடி - அகல் - எனத்தந்துடகரத்திலிகரங்கெடுத்து - கட்டிடி - கட்டகல் - எனமுடிக்க. பருத்திக்குச்சென்றானெனவீற்றுவல்லெழுத்தும்இக்குங்கொடுத்துமுடிக்க. துளியத்துக்கொண்டான் - துளியிற்கொண்டான் - என அத்துமின்னுங்கொடுத்துமுடிக்க. புளிங்காய்வேட்கைத்தன்றெனவும் புளிம்பழமெனவும்அம்முப்பெறாதுமெல்லெழுத்துப்பெற்றுமுடிதலுங்கொள்க. இன்னுமிதனானேயுருபிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றுழியியைபு வல்லெழுத்துக்கெடுத்து - கிளியின்கால் - புளியின்கோடு - உதியின்கோடு - எனமுடிக்க (௪௰௪.)

நாண்முற்றோன்றுந்தொழினிலைக்கிளவிக், கானிடைவருதலையமின்றே ※

இது ஈற்றுவல்லெழுத்துவிலக்கி ஆன்சாரியைவிதிக்கின்றது. நாண்முற்றோன்றுந் தொழினிலைக்கிளவிக்கு - இகரவீற்றுநாட்பெயர்களின்முன்னர்த்தோன்றுந்தொழிற்சொற்கு — ஆனிடைவருதலையமின்று - ஆன்சாரியையிடைவந்துமுடிதலையமின்று — (எ-று) [உ-ம்] பாணியாற்கொண்டான் - சோதியாற்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - எனவ

றும்·ஐயமின்றென்றதனுவிவையபு வல்லெழுத்துவீழ்க்க. இதற்குக்கண்ணெ ணுருபுவிரிக்க.. (௪௰௫)

திங்கண்முன்வரினிக்கேசாரியை. *

இது இவையபுவல்லெழுத்திறேடிக்குவருத்தவினெய்தியதன்மேற்சிறப்புவி திவகுத்தது. திங்கண்முன்வரின் - திங்களைபுணரநின்றவிகரவீற்றுட்பெயர் களின்முன்னர்த்தொழினிலைக்கிளவிவரின்வருஞ்சாரியை—இக்கேசாரியை - இக்குச்சாரியையாம்.— (எ-று) [உ-ம்] ஆடிக்குக்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினன் - எனவிவையபுவல்லெழுத்துக்கொடுத்து முடிக்க·இதற்குங்கண்ணெணுருபுவிரிக்க· (௪௰௬)

ஈகாரவிறுதியாகாரவியற்றே. *

இது ஈகாரவீற்றுப்பெயரல்வழிக்கண் முடியுமாறுகூறுகின்றது. ஈகாரவிறுதி - ஈகாரவீற்றுப்பெயரல்வழிக்கண் — ஆகாரவியற்று - ஆகாரவீற்றல்வழியினியல்பிற்றுயவல்லெழுத்து வந்துழிவல்லெழுத்துமிக்குமுடியும். (எ-று)[உ-ம்]ஈக்கடிது-தீக்கடிது-சிறிது-தீது-பெரிது-எனவரும்·௪௰௭

நீயென்பெயருமிடக்கர்ப்பெயரு, மீயெனமரீஇயவிடம்வரைகிளவி யு,மாவயின்வல்லெழுத்தியற்கையர்கும். *

இஃதெய்தியதுவிலக்கலுமெய்தாததெய்துவித்தலுங்கூறுகின்றது.நீயென் பெயருமிடக்கர்ப்பெயரும் - நீயென்னும் பெயருமிடக்கர்ப்பெயராகிய வீகாரவீற்றுப்பெயரும் — மீயெனமரீஇய்விடம்வரைகிளவியும் - மீயென்றுசொல்லமருவாய் வழங்கினவோரிடத்தைவரைந் துணர்த்துஞ்சொல்லும்—ஆவயின்வல்லெழுத்தியற்கையாகும் - புணருமிடத்துமுற்கூறியவல் லெழுத்துப்பெறுதியல்பாய்முடியும்—(எ-று)[உ-ம்]நீகுறியை-சிறியை-தீயை-பெரியை-எனவும் பீகுறிது-சிறிது-தீது-பெரிது- எனவும் இவை யீற்றுக்குப்பொதுவாயெய்தியவல்லெழுத்துவிலக்குண்டன· மீகண்-செவி-தலை-புறம் இஃதிலக்கணத்தோடுபொருந்தியமருவாதவினெய்தாததெய் துவித்தது. நீயென்பது அஃறிணைவிரவுப்பெயருளடங்காதோ வெனின் மேனின்கையெனத்திரிந்து முடிதலினடங்காதாயிற்று· மீகண்என்பதுமே விடத்துக்கண்ணெனவேற்றுமையெனினுமியல்புபற்றியுடன்கூறினர்·௪௮

இடம்வரைகிளவிமுன்வல்லெழுத்துமிகூஉ, முடனிலைமொழியுமு ளவெனமொழிப· *

இது வல்லெழுத்து மிகுகவென்றலின்எய்தியதிகந்துபடாமற்காத்தது. இடம்வரை கிளவிமுன்வல்லெழுத்துமிகூஉம் - இடத்தைவரைந்துணர்த்துமீ யென்னுஞ்சொல்லின்முன்னரியல்பாய் முடிதலேயன்றி வல்லெழுத்துமிக்குமுடியும்—உடனிலைமொழியுமுளவென மொழிப - தம்மிலோசையினையைந்துநிற்றலையுடையமொழிகளு முளவென்றுகூறுவராசிரியர்.—(எ - று) [உ-ம்] மீக்கோள் - மீப்பா - எனவரும். உடனிலையென்றதனான்மீங்குழி - மீந்தோல் - எனமெல்லெழுத்துப்பெற்றுமுடி வனவுங்கொள்க. (௪௯)

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே. *

இது ஈகாரவீற்றுப்பெயர்வேற்றுமைக்கண்ணு முடியுமாறு கூறுகின்றது. வேற்றுமைக்கண்ணுமதனோரற்று - ஈகாரவீற்றுப்பெயர்வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணு மாகாரவீ ற்றல்வழிபோல வல்லெழுத்துவந்துழிவல்லெழுத்துமிக்குமுடியும் — (எ-று) [உ-ம்] ஈக்கால் - சிறகு - தலை - புறம் - தீக்கடுமை - சிறுமை - தீமை - பெருமை - எனவரும். (௫௰)

நீயெனொருபெயருருபியனிலையுமாவயின்வல்லெழுத்தியற்கையாகும். *

இது எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. வல்லெழுத்துவிலக்கி னகரவொற்றுப்பெறுகவென்றலின்.) நீயெனொருபெயருருபியனிலையும் - நீயென்னுமோரொழுத்தொருமொழியுருபுபுணர்ச்சிக் கணெடுமுதல்குறுகினகரமொற்றிநின்றாற்போலவீண்டுப்பொருட்புணர்ச்சிக்கண்ணுமுடியும் — ஆவயின்வல்லெழுத்தியற்கையாகும் - அவ்வாறுமுடியுழியியையுவல்லெழுத்து மிகா.—(எ-று)[உ-ம்] நின்கை - செவி - தலை - புறம் - எனவரும். இஃதீகாரவீறிகரவீறாயிகரவீறனகரவீறாய்நின்றுழியு நீயெனொருபெய ரென்றவிற்றிரிந்ததன்றிரிபதுவேயாயிற்று. இயற்கையாகுமெனவே நிலைமொழித்தொழிலதிகாரவல்லெழுத்தைவிலக்காதாயிற்று. (௫௰௧

உகரவிறுதியகரவியற்றே. *

இஃது உகரவீற்றுப்பெயரல்வழிக்கண்முடியுமாறுகூறுகின்றது, உகரவிறுதியகரவியற்று - உகரவீற்றுப்பெய ரல்வழிக்கணகரவீற்றியல்பிற்றாய்வல்லெழுத்துவந்துழிவல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று)[உ-ம்] கடுக்குறிது - சிறிது - தீது - பெரிது - எனவரும். (௫௰௨)

சுட்டின்முன்னருமத்தொழிற்றாகும். *

இது உகரவீற்றுச்சுட்டுவன் கணத்தோடு முடியுமாறுகூறுகின்றது. சுட்டி

ன்முன்னரு மத்தொழிற்றுகும் - உகரவீற்றுச்சுட்டின்முன்னும்வல்லெழு த்துவந்துழிவல்லெழுத்துமிக்குமுடியும். — (எ-று) [உ-ம்] உக்கொற் றன்-சாத்தன்-தேவன்-பூதன்-எனவரும். (௩௰௩)

எனவைவரினே மேனிலையியல. *

இஃதுகரவீற்றுச்சுட்டு ஒழிந்தகணங்களோடு முடியுமாறு கூறுகின்றது. ஏனவைவரின் - உகரவீற்றுசசுட்டின்முன் வல்லெழுத்தலலாத மென்கண முதலியமூன்றும் வரின்— மேனிலையியல - அகரவீற்றுச்சுட்டுமுடிந்தா ற்போல.ஞநமத்தோன்றி னொற்றுமிக்தும்யவ்வரினும் உயிர்வரினும் வகர மொற்றியுஞ்செய்யுளுணீண்டுமுடியும்.—(எ-று) [உ-ம்]உஞ்ஞாண்-நூ ல்-மணி- எனவும் உவ்யாழ்-உவ்வட்டு- எனவும் உவ்வடை-உவ்வாடை- எ னவும் ஊவயினான- எனவும் வரும். (௩௰௪)

சுட்டுமுதலிறுதியியல்பாகும்மே. *

இதுஇவ்வீற்றுட்சிலவற்றிற்குவல்லெழுத்துவிலக்கியியல்புகூறுகின்றது.சுட் டுமுதலிறுதி - சுட்டெழுத்தினைமுதலாகவுடையவுகரவீற்றுப்பெயர் —இ யல்பாகும்-முற்கூறியவல்லெழுத்துமிகாதியல்பாய்முடியும்.— (எ-று) [உ-ம்] அதுகுறிது-இதுகுறிது-உதுகுறிது-சிறிது-தீது-பெரிது- என வரும்.முற்கூறியவைசுட்டுமாத்திரை. இவைசுட்டுப்பெயராகவுணர்க. (௩௰௫)

அன்றுவருகாலையாவாகுதலு, மைவருகாலைமெய்வரைந்துகெடுதலு ஞ்,செய்யுண்மருங்கினுரித்தெனமொழிப. *

இதுஇவ்வீற்றுச்சுட்டுமுதற்பெயர்க்குச்செய்யுண்முடிபுகூறுகின்றது. அன் றுவருகாலையாவாகுதலும் -அதிகாரத்தானின்றசுட்டுமுதலுகரவீற்றின்முன் னர்அன்றென்னும்வினைக்குறிப்புச்சொல்வருங்காலத்துஅத்தகரவொற்றின் மேலேறிநின்றவுகரம்ஆகாரமாத்திரிந்துமுடிதலும் — ஐவருகாலைமெய்வ ரைந்துகெடுதலும்-அதன்முன்னர்ஐயென்னுஞ்சாரியைவருங்காலத்து அத் தகரவொற்றுநிற்கஅதன்மேலேறியவுகரங்கெடுதலும்—செய்யுண்மருங்கி னுரித்தெனமொழிப - செய்யுட்கணுரித்தென்றுசொல்லுவராசிரியர்.— (எ-று)[உ-ம்]அதான்றம்ம - இதான்றம்ம - உதான்றம்ம - அதான்றென்ப வெண்பாயாப்பே.எனவும் அதைமற்றம்ம - இதைமற்றம்ம - உதைமற்ற ம்ம-எனவும்வரும். மொழிந்தபொருளோடொன்றவவ்வயின்முடியாதத னைமுட்டின்றிமுடித்தலென்பதனால்அதன்று- இதன்று-உதன்று-என அன்

றென்பதன்முன்னும்உகரங்கெட்டுத்தகரவொற்றுநிற்றல்கொள்க. (௫௰௬)

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே. *

இது இவ்வீற்றுப்பெயர்வேற்றுமைக்கண்முடியுமாறுகூறுகின்றது. வேற்றுமைக்கண்ணும் - உகரவீற்றுப்பெயர்வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும்— அதனோரற்று - அகரவீற்றல்வழியோடொருதன்மைத்தாய்வல்லெழுத்துவந்துழிவல்லெழுத்துமிக்குமுடியும்.— (எ-று) [உ-ம்] கடுக்காய் - செதிள் - தோல் - பூ - எனவரும். கடுக்கடுமை - எனவும்வரும். (௫௰௭)

எருவுஞ்செருவுமம்மொடுசிவணித், திரிபிடனுடையதெரியுங்காலை, யம்மின்மகரஞ்செருவயிற்கெடுமே, தம்மொற்றுமிகூஉம்வல்லெழுத்தியற்கை. *

இது அவ்வீற்றுளொன்றற்கு வல்லெழுத்துவிலக்கிச்சாரியைவிதியுமொன்றற்குவல்லெழுத்தினோடு சாரியைவிதியுஞ் சாரியைபெறாதவழிவல்லெழுத்துமெல்லெழுத்துப்பேறுங்கூறுகின்றது. எருவுஞ்செருவு மம்மொடுசிவணி - எருவென்னுஞ்சொல்லுஞ் செருவென்னுஞ்சொல்லு மம்முச்சாரியையோடுபொருந்தி — திரிபிடனுடையதெரியுங்காலை - அதிகாரவல்லெழுத்துப்பெறுமற்றிரியுமிடனுடைய வாராயுங்காலத்து— அம்மின்மகரஞ்செருவயிற்கெடும் - ஆண்டம்முச்சாரியையினதீற்றின்மகரஞ்செருவென்னுஞ்சொல்விடத்துக்கெட்டுமுடியும் — வல்லெழுத்துமிகூஉம் - ஆண்டுச்செருவின்கண்வல்லெழுத்துமிக்குமுடியும்— இயற்கைத்தம்மொற்றுமிகூஉம்- அம்முப்பெறாதவழியிரண்டிற்குந்தமக்கினமாகியவல்லொற்றுமெல்லொற்றுமிக்குமுடியும்.— (எ-று) [உ-ம்] எருவெனநிறுத்தி-குழி-சேறு-தாது-பூழி- எனத்தந்து அம்முக்கொடுத்து - அம்மினிறுதிங்கசதக்காலையென்பதனல்எருவங்குழியெனமுடிக்க. ஏனையவுமன்ன. செருவெனநிறுத்தி களம் - சேனை - தானை - பறை - எனத்தந்திடையம்முக்கொடுத்துமகரங்கெடுத்துவல்லெழுத்துக்கொடுத்துச்செருவக்களமெனமுடிக்க. ஏனையவுமன்ன. இனியம்முப்பெறாதவழிஎருக்குழி - எருங்குழிஎனவல்லெழுத்துமெல்லெழுத்துங்கொடுத்துமுடிக்க. இனிச்செருவிற்கேற்புழிக்கோடலென்பதனற்செருக்களமெனவல்லெழுத்தேகொடுத்துமுடிக்க. தெரியுங்காலையென்றதனன் - எருவின்குறுமை - செருவின்கடுமை - எனவுருபிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றுழிவல்லெழுத்துவீழ்தலும்எருவஞாற்சி - செருவஞாற்சி - எனவியல்புகணத்துக்கணம்முப்பெறுதலுங்கொள்க. மகரம்

மென்மையுமிடைமையுமென்பதனாற்கொடுக்க. தம்மொற்றுமிகூஉமென வுடம்பொடுபுணர்த்துச் சூத்திரஞ்செய்தவி னுகரம்நீடவருதலுங்கொள்க. வரூஉம் - தரூஉம் - படூஉம் - என வரும். (௫௰௮)

ழகரவுகர்நீடிடனுடைத்தே,யுகரம்வருதலாவயினான. *

இஃதெய்தியதன்மேற்சிறப்புவிதிவகுத்தது. வல்லெழுத்தினோடுகரம்பெறுதலின்.) ழகரவுகரநீடிடனுடைத்து - உகரவீற்றுசசொற்களுள்ழகரத்தோடுகூடியவுகரவீற்றுச்சொனீண்டுமுடியுமிடனுடைத்து — ஆவயினான வுகரம்வருதல் - அவ்விடத்துசரம்வந்துமுடியும்.—(எ-று)[உ-ம்]எழூஉக்கதவு - சிறை - தானை - படை - என வரும். நீடிடனுடைத்தென்றதனானீளாதும் உகரம்பெறுதும்வருமாயிற்று.குழூத்தோற்றம் - எனவரும். இன்னுமிதனாற் பழூக்காயென அல்வழிக்கண்ணுமிவ்விதியுன்றிவருதல்கொள்க. ஆவயினான் றதனாற்பெரும்பான்மைசெய்யுட்கணீண்டுகரம் பெற்றுவருமென்றுகொள்க. எழூஉத்தாங்கியகதவுமலைத்தவர்குழூஉக்களிற்றுக்குறும்புடைத்தலின் எனவும்பழூஉப்பல்லன்னபருவுகிர்ப்பாவடி எனவும்வருதல்கொள்க.(௫௰௯

ஒடுமரக்கிளவி யுதிமரவியற்றே. *

இது அவ்வீற்றுமரப்பெயருளொன்றற்குவல்லெழுத்துவிலக்கிமெல்லெழுத்துவிதித்தது. ஒடுமரக்கிளவி - ஒடுவென்னுமரத்தினையுணரநின்றசொல்— உதிமரவியற்று - உதியென்னுமரத்தினியல்பிற்றாய் மெல்லெழுத்துப் பெற்றுமுடியும்.—(எ-று)[உ-ம்]ஒடுங்கோடு - செதிள் - தோல் - பூ - எனவரும். மரமென்றார். ஒடுவென்னுநோயை நீக்குதற்கு)முன்னருதிமரத்தின்பின்னர்அப்முட்பெறுகின்ற புளிமரம்வைத்தவியைபானிதற்கு டம்முட்பேறுகொள்க. ஒடுவங்கோடு - எனவரும். (௬௰)

சுட்டுமுதலிறுதியுருபியனிலையு,மொற்றிடைமிகாஅவல்லெழுத்தியற்கை.

இது சுட்டுப்பெயர்க்குவல்லெழுத்துவிலக்கிச் சாரியைவகுத்தது.சுட்டுமுதலிறுதியுருபியனிலையும் - சுட்டெழுத்தினைமுதலாகவுடையவுகரவீற்றுச்சொற்கள் பொருட்புணர்ச்சிக்கண்ணு முருபு புணர்ச்சியிற் கூறியவியல்பிலே நின்றன்சாரியைபெற்றுகரங்கெட்டுமுடியும் — வல்லெழுத்தியற்கையொற்றிடைமிகாஅ - வல்லெழுத்தியற்கையாகியவொற்றிடைக்கண்மிகா. (எ-று) [உ-ம்] அதன்குறை - இதன்குறை - உதன்குறை - செதிள் - தோல் - பூ - எனவரும். ஒற்றிடைமிகாவெனவேசாரியைவகுப்பவல்லெழுத்துவீழா

வென்பதுபெற்றும். வல்லெழுத்தியற்கையென்றதனானுகரவீற்றுள்எருவு
ஞ்செருவுமொழித்தேனையவற்றிற்கும்உருபிற்குச்சென்றசாரியை பொரு
ட்கட்சென்றுழியியையுவல்லெழுத்துவீழ்க்க.கடுவின்குறை ஒடுவின்குறை-
எழுவின்புறம்- தொழுவின்கூர்மை- எனவரும். இன்னுமிதனானே உதுக்
காணென்றவழிவல்லெழுத்துமிகுதலுங்கொள்க. (சூ௰௧)

ஊகாரவிறுதியாகாரவியற்றே. *

இது நிறுத்தமுறையானேஊகாரவீறல்வழிக்கட்புணருமாறுகூறுகின்றது.
ஊகாரவிறுதியாகாரவியற்று - ஊகாரவீற்றுப்பெயரல்வழிக்கண் ஆகார
வீற்றல்வழியினியல்பிற்றாய் வல்லெழுத்துவந்துழிவல்லெழுத்துமிக்குமுடி
யும்.— (எ-று) [உ-ம்] தழூஉக்கடிது-கொண்மூக்கடிது- சிறிது- தீது-
பெரிது- எனவரும். (சூ௰௨)

வினையெஞ்சுகிளவிக்குமுன்னிலைமொழிக்கு,நினையுங்காலையவ்வகைவ
ரையார். *

இது இவ்வீற்றுவினையெச்சத்திற்குமிக்குமுடியுமென்றவினெய்தாததெய்து
வித்தது. முன்னிலைவினைக்கியல்புமுறழ்புமாற்றுதவினெய்தியது விலக்கிய
தூஉங்கூறிற்று. வினையெஞ்சுகிளவிக்கும் - ஊகாரவீற்றுவினையெச்சமாகிய
சொற்கும்—முன்னிலைமொழிக்கும்-முன்னிலைவினைச்சொற்கும்— நினையு
ங்காலையவ்வகைவரையார்- ஆராயுங்காலத் தவ் வல்லெழுத்துமிக்குமுடியுங்
கூற்றினைநீக்கார்.—(எ-று) [உ-ம்]உண்ணூக்கொண்டான்-சென்றான்-த
ந்தான்-போயினான்-எனவும் - கைதூக்கொற்றா-சாத்தா-தேவா-பூதா-எ
னவும்வரும். நினையுங்காலையென்றதனானிவ்வீற்றுயர்திணைப்பெயர்க்கல்வழி
க்கண்வல்லெழுத்துக்கொடுத்துமுடிக்க. ஆடூஉக்குறியன்-மகடூஉக்குறியள்-
எனவரும். உயர்திணைப்பெயரொடுத்தோதிமுடிப்பாராதவினம்முடிபுபெறு
மையினீற்றுப்பொதுவிதியான்முடியாதிவேசான்முடித்தார். (சூ௰௩)

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே. *

இது ஊகாரவீறுவேற்றுமைக்கண்முடியுமாறுகூறுகின்றது. வேற்றுமை
க்கண்ணுமதனோரற்று -ஊகாரவீறுவேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்
ணுமாகாரவீற்றல்வழிபோல் வல்லெழுத்துவந்துழி வல்லெழுத்துமிக்குமு
டியும்.—(எ-று)[உ-ம்]தழூஉக்கடுமை-சிறுமை-தீமை-பெருமை-கொ
ண்மூக்குழாம்-செலவு-தோற்றம்-பறைவு-எனவரும். (சூ௰௪)

குற்றெழுத்திம்பரு மோரெழுத்துமொழிக்கு, நிற்றல்வேண்டுமுகர
க்கிளவி. *

இஃதியைபுவல்லெழுத்திறேடுகரம்வகுத்தலினெய்தியதன்மேற்சிறப்புவி
தி· குற்றெழுத்திம்பரும் - குற்றெழுத்தின்பின்வந்தவூகாரவீற்றுமொழிக்
கும்— ஒரெழுத்துமொழிக்கும்-ஓரெழுத்தொருமொழியாகியவூகாரவீற்
றுமொழிக்கும்—உகரக்கிளவிநிற்றல்வேண்டும்- உகரமாகியவெழுத்துநிற்
றலைவிரும்புமாசிரியன்·—(எ-று)[உ-ம்]உடூஉக்குறை-செய்கை-தலை-புற
ம்-என்வும் தூஉக்குறை-செய்கை-தலை-புறம்-எனவும்வரும். நிற்றலென்ற
தனுனுயர்திணைப்பெயர்க்கும் வல்லெழுத்துமுகரமுங்கொடுக்க· ஆடூஉக்
கை-செவி-தலை-புறம் -எனவிவைதொகைமரபினுளியல்பாகவெய்தியவற்
றைமீண்டிருவழிக்கண் ணுமுடித்தார்·ஈற்றுப்பொதுவொப்புமைகண்டு·(௬௫)

பூவெனொருபெயராயியல்பின்றே, யாவயின்வல்லெழுத்துமிகுதலு
முரித்தே. *

இஃதூகாரவீற்றுளொன்றற்குஉகரமுமியைபுவல்லெழுத்தும்விலக்கிப்பெ
ரும்பான்மைமெல்லெழுத்துஞ்சிறுபான்மைவல்லெழுத்தும்பெறுமென
வெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது· பூவெனொருபெயராயியல்பின்
று- பூவென்னுமூகாரவீற்றையுடையவொருபெயர்மேற்கூறியவுகரமும்
வல்லெழுத்தும்பெற்றுமுடியுமவ்வியல்பின்மையையுடைத்து— ஆவயின்
வல்லெழுத்துமிகுதலுமுரித்து- அவ்விடத்துமெல்லெழுத்துமிக்குமுடித
லேயன்றி வல்லெழுத்துமிக்குமுடிதலுமுரித்து.— (எ-று) [உ-ம்] பூங்
கொடி- சோலை-தாமம்-பந்து-எனவும-பூக்கொடி-செய்கை-தாமம்-ப
ந்து-எனவும்வரும்· பூவென்பதுபொலிவென்னும்வினைக்குறிப்பையுணர்
த்தாதுநிற்றற்கொருபெயரென்றார்· (௬௰௬)

ஊவெனொருபெயராவொடுசிவணும்· *

இஃதெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது· உகரமும்வல்லெழுத்தும் வி
லக்கி னகரம்விதித்தலின்) ஊவெனொருபெயர்- ஊவெனத்தசையையுண
ர்த்திநின்றவோரெழுத்தொருமொழி—ஆவொடுசிவணும்- ஆகாரவீற்றிலா
வென்னுஞ்சொல்வல்லெழுத்துப்பெறாது னகரவொற்றுப்பெற்றுமுடிந்
தாற்போல னகரவொற்றுப்பெற்றுமுடியும்·—(எ-று) [உ-ம்]ஊவென நி
றுத்தினகரவொற்றுக்கொடுத்து ஊன்குறை - செய்கை-தலை- புறம்-என

முடிக்க. ஊவென்பது தசையையுணர்த்திநின்றவழக்கு. ஆசிரியர் நூல்செய்தகாலத்துவழக்கு. அன்றித்தேயவழக்கேனுமுணர்க. (சூ௰எ)

அக்கென்சாரியைபெறுதலுமுரித்தே, தக்கவழியறிதல்வழக்கத்தான. ※

இஃதெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது. அக்கென்சாரியைபெறுதலுமுரித்து - அதிகாரத்தானின்ற ஊவென்னும்பெயர் முற்கூறிய னகரத்தோடக்கென்னுஞ்சாரியைபெற்றுமுடிதலுமுரித்து— வழக்கத்தான தக்கவழியறிதல் - அம்முடிபுவழக்கிடத்துத்தக்கவிடமறிக.—(எ-று) தக்கவழியறிதலென்றதனாற்சாரியைபெற்றுழி னகரம்விலக்குண்ணாதுநிற்றலு முன்மாட்டேற்றால்விலக்குண்டவல்லெழுத்துக்கெடாதுநிற்றலுங்கொள்க [உ-ம்] ஊனக்குறை - செய்கை - தலை - புறம் - எனவரும். வழக்கத்தானவென்றதனானாகாரவீற்றுச்சொல்லிற்குஉருபிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றுழியினையவல்லெழுத்துக்கெடுக்க. கொண்மூவின்குழாம் - ஊவின்றலை - ஊவின்குறை - எனவரும். (சூ௰அ)

ஆடூஉமகடூஉவாயிருபெயர்க்கு, மின்னிடைவரினுமானமில்லை. ※

இது குற்றெழுத்திம்பருமென்பதனுணிற்றலென்றவிலேசானெய்தியவல்லெழுத்தேயன்றிச் சாரியையும் வகுத்தலி னெய்தியதன்மேற்சிறப்புவிதி. ஆடூஉமகடூஉவாயிருபெயர்க்கும் - ஆடூஉ மகடூஉ வாகியஉயர்திணைப்பெயரிரண்டிற்கும்— இன்னிடைவரினுமானமில்லை - முன்னெய்தியவல்லெழுத்தேயன்றி யின்சாரியையிடைவரினுங்குற்றமில்லை.—(எ-று) [உ-ம்] ஆடூஉவின்கை - மகடூஉவின்கை - செவி - தலை - புறம் - எனவரும். மானமில்லையென்றதனானின்பெற்றுழிமேலெய்தியவல்லெழுத்துவீழ்க்க. (சூ௰௯)

எகரவொகரம்பெயர்க்கீறாகா, முன்னிலைமொழியவென்மனார்புலவர்,
தேற்றமுஞ்சிறப்புமல்வழியான. ※

இஃதெகரவொகரமீறாமிடமுணர்த்துகின்றது. தேற்றமுஞ்சிறப்புமல்வழியான - தெளிவுப்பொருளுஞ்சிறப்புப்பொருளுமல்லாதவேற்றுமைப்பொருண்மையிடத்தளபெடுத்துக்கூறுதலினுளவாகிய— எகரவொகரம்பெயர்க்கீறாகா - எகரஒகரங்கள்பெயர்க்கீறாய்வாரா. வினைக்கீறாய்வரும்.—முன்னிலைமொழியவென்மனார்புலவர் - அவைதாந் தன்மையினும்படர்க்கையினும்வாரா. முன்னிலைச்சொல்லிடத்தனவாமென்றுகூறுவர்புலவர்.—(எ-று) எனவே தெளிவுப்பொருளினுஞ் சிறப்புப்பொருளினும்வந்து பெயர்க்கீறாயிடைச்

சொல்லாகிய வெகரவொகரமூன்றிடத்திற்குமுரியவாமென்றேபொருளாயிற்று. எனவிங்ஙனமருத்தாபத்தியாற்கொண்டதற்கிலக்கணமேலைச்சூத்திரத்தாற்கூறுப. [உ-ம்] எஎக்கொற்றூ-ஓஒக்கொற்றூ-சாத்தா-தேவா-பூதா-எனவரும். இவை எனக்கொருகரும்பணியெனவும்- இங்ஙனஞ்செய்கின்றதனையொழியெனவுமுன்னிலையேவற்பொருட்டாய்வந்தன. இதற்குவல்லெழுத்துப்பெறுமாறுமேலேகூறுப. (௭௰)

தேற்றவெகரமுஞ்சிறப்பினொவ்வு, மேற்கூறியற்கைவல்லெழுத்துமிகா. ※

இஃதெய்தியதிகந்துபடாமற்காத்தெய்தாததெய்துவித்தது. தேற்றவெகரமுஞ்சிறப்பினொவ்வுமேற்கூறியற்கை - முன்னரருத்தாபத்தியாற்பெயர்க்கண் வருமென்றதேற்றப்பொருண்மையில் எகரமுஞ்சிறப்புப்பொருண்மையிலொகரமுமூன்றிடத்தும் வருமென்றவிலக்கணத்தனவாம் — வல்லெழுத்துமிகா- வல்லெழுத்துமிக்குமுடியா. எனவேமுன்னிலைக்கண்வருமென்ற எகரவொகரங்கள்வல்லெழுத்துமிக்குமுடியும்.— (எ-று) [உ-ம்] யானேஎகொண்டேன்-நீயேஎகொண்டாய்-அவனேஎகொண்டான்-எனவும் யானோஒகொடியன்-நீயோஒகொடியை- அவனோஒகொடியன் -எனவும்பெயர்க்கணீறுமியல்பாய்வந்தவாறுகாண்க. இது முன்னெய்தியவிலக்கணமிகவாமற்காத்தார். முன்னின்றசூத்திரத்தின்முன்னிலைக்கும் வல்லெழுத்துமிகுத்தெய்தாததெய்துவித்தார். இச்சூத்திரத்திற்களபெடுத்தல்தெளிவினைவுமென்னுஞ்சூத்திரத்தாற்கொள்க. எனவேமுடிவுபெற்றுழியிங்ஙனமிடைச்சொல்லுமெடுத்தோதிப்புணர்ப்பவென்பதூஉம்பெற்றாம். (௭௰௧)

ஏகாரவிறுதியூகாரவியற்றே. ※

இதுநிறுத்தமுறையானே ஏகாரவீறல்வழிக்கட்புணருமாறுகூறுகின்றது. ஏகாரவிறுதி - ஏகாரவீற்றுப்பெயரல்வழிக்கண்—ஊகாரவியற்று- ஊகாரவீற்றல்வழியினியல்பிற்றாய்வல்லெழுத்துவந்துழி வல்லெழுத்துமிக்குமுடியும்.— (எ-று) [உ-ம்] ஏக்கடிது-சேக்கடிது-சிறிது-தீது - பெரிது எனவரும். (௭௰௨)

மாறுகோளெச்சமும்வினாவுமெண்ணுங், கூறியவல்லெழுத்தியற்கையாகும். ※

இஃதிடைச்சொற்களியல்பாய்ப்புணர்கவென வெய்தாததெய்துவித்தது. மாறுகோளெச்சமும் - மாறுகோடலையுடைய வெச்சப்பொருண்மைக்

கண்வருமேகாரவீற்றிடைச்சொல்லும்—வினவும்-வினைப்பொருண்மைக்க ண்வருமேகாரவீற்றிடைச்சொல்லும்— எண்ணும்-எண்ணுப்பொருண்மை க்கண்வருமேகாரவீற்றிடைச்சொல்லும் — கூறியவல்லெழுத்தியற்கையாகு ம்-முற்கூறியவல்லெழுத்துப்பெறு தியல்பாய்முடியும்.— (எ-று)[உ-ம்] யானேகொண்டேன்-சென்றேன்-தந்தேன்-போயினேன்- என்புழியான் கொண்டிலேனென மாறுகொண்டவொழிபுபடநின்றது. நீயேகொண்டா ய்- சென்றாய்- தந்தாய்- போயினாய்-எனவும் நிலனே-நீரோ-தீயே- வளி யே-கொற்றனே- சாத்தனே -எனவும்வரும். கூறியவென்பதனாற்பிரிநிலை யேகாரமுமீற்றசையேகாரமு மியல்பாய்முடிதல்கொள்க. அவருளிவனே கொண்டான் எனவும்கழியேசிறுகுரனெய்தலோடுபாடோவாதேகடலேபா டெழுந்தொலிக்கும்.எனவும்வரும். (௭௰௫)

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே. *

இது இவ்வீற்றுவேற்றுமைமுடிபுகூறுகின்றது. வேற்றுமைக்கண்ணும் -ஏ காரவீற்றுவேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும்—அதனோரற்று -ஏ காரவீற்றல்வழிபோல வல்லெழுத்துவந்துழி வல்லெழுத்துமிக்குமுடியும். —(எ-று)[உ-ம்]ஏக்கடுமை-சிறுமை-தீமை- பெருமை-எனவும் வேக்கு டம்-சாடி- தூதை-பானை- எனவும்வரும். வேக்குடம் வேதலையுடையகு டமெனவிரியும். (௭௰௪)

ஏயெனிறுதிக்கெகரம்வருமே. *

இது வல்லெழுத்தினோடெகரம்விதித்தவினெய்தியதன்மேற்சிறப்புவிதி. ஏ யெனிறுதிக்கெகரம்வரும்-' அவ்வேற்றுமைக்கண்ஏயென்னுமிறுதிக்கெகர ம்வரும்.—(எ-று)[உ-ம்]எஎக்கொட்டில்-சாலை- துளை-புழை-எனவரும். வருமொழிவரையாதுகூறினமையினியல்புகணத்துக்கண்ணும்வருமெனக் கொள்க.எஎஞெகிழ்ச்சி-நேர்மை - எனவரும். உரையிற்கோடலால் எகர மேற்புழிக்கொள்க. (௭௰௬)

சேவென்மரப்பெயரொடுமரவியற்றே. *

இது அவ்வீற்றுளொன்றற்குவல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்துவிதித்த து. சேவென்மரப்பெயர் - பெற்றமன்றிச்சேவென்னுமரத்தினையுணரநி ன்றபெயர்—ஒடுமரவியற்று - ஒடுமரம்போலமெல்லெழுத்துமிக்குமுடி யும்.—(எ-று) [உ-ம்]சேங்கோடு-செதிள்-தோல்-பூ-எனவரும்-(௭௰௭)

பெற்றமாயின்முற்றவின்வேண்டும். *

இஃதியைபுவல்லெழுத்துவிலக்கியின்வகுத்தது. பெற்றமாயின் - முற்கூறியசேவென்பதுபெற்றத்தினையுணர்த்தியபொழுதாயின் — முற்றவின்வேண்டும்-முடியவின்சாரியைபெற்றுமுடியவேண்டும்:—(எ-று)[உ-ம்]சேவின்கோடு - தலை-புறம் - எனவரும்.முற்றவென்றதனானேமுற்கூறியசேவென்னுமரப்பெயர்க்கும் ஏவென்பதற்குமுருபிற்கெய்தியசாரியைபொருட்கட்சென்றுழியியைபுவல்லெழுத்துவீழ்தல்கொள்க. சேவின்கோடு -செதிள் - தோல்-பூ - எனவும் ஏவின்கடுமை - சிறுமை - தீமை- பெருமை- எனவும்வரும். சாரியைப்பேறு வருமொழிவரையாதுகூறினமையியல்புகணத்தும்பெறுதல்கொள்க.சேவினலம்-மணி-வால் - சேவினிமில்-சேவினடை- சேவினுட்டம்- எனவரும்.இன்றுமிதனானேஇயல்புகணத்துக்கணின்பெறுது வருதலுங்கொள்க. செய்யுட்கண் தென்றற்குவீணைக்குச்சேமணிக்குக்கோகிலத்திற்கன்றிற்கு- எனவரும். (௭௰௭)

ஐகாரவிறுதிப் பெயர்நிலைமுன்னர்,வேற்றுமையாயின்வல்லெழுத்துமிகுமே. *

இதுஐகாரவீறுவேற்றுமைக்கண்முடியுமாறுகூறுகின்றது:தொகைமரபினுள்வேற்றுமையல்வழி இஐயென்னுமென்பதன்கணல்வழிமுடித்தார். ஐகாரவிறுதிப்பெயர்நிலைமுன்னர்- ஐகாரவீற்றுப்பெயர்ச்சொன்முன்னரதிகாரத்தாற்கசதபமுதன்மொழிவந்துழி— வேற்றுமையாயின்வல்லெழுத்துமிகும்- வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயிற்றமக்குப்பொருந்தினவல்லெழுத்துமிக்குமுடியும்:—(எ-று)[உ-ம்]யானைக்கோடு- செவி-தலை-புறம் -எனவரும்.வேற்றுமையாயினென்பதனானுருபுபுணர்ச்சிக்கண்ணும்யானையைக்கொணர்ந்தானெனவல்லெழுத்துமிகுதல்கொள்க. (௭௰௮)

சுட்டுமுதலிறுதியுருபியனிலையும். *

இதுவல்லெழுத்தினோடுவற்றுவருத்தலினெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது. சுட்டுமுதலிறுதி-சுட்டெழுத்தினைமுதலாகவுடையவைகாரவீற்றுப்பெயர் - உருபியனிலையும் - உருபுபுணர்ச்சியிற்கூறியவியல்புபோலப்பொருட்புணர்ச்சிக்கண்வற்றுப்பெற்றுமுடியும்:—(எ-று)[உ-ம்]அவையற்றுக்கோடு-இவையற்றுக்கோடு-உவையற்றுக்கோடு-செவி- தலை-புறம்-எனவரும்:இதனைவஃகான்மெய்கெடவென்பதனான்முடிக்க. (௭௰௯)

விசைமரக்கிளவியு ஞெமையு நமையு, மாமுப்பெயருஞ் சேமரவியல ※

இது வல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்துவிதித்தலினெய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தது. விசைமரக்கிளவியும் - விசைத்தற்றொழிலன்றி விசையென்னுமரத்தையுணர நின்றசொல்லும்— ஞெமையும். ஞெமைமரத்தினையுணர நின்றசொல்லும்— நமையும் - நமையென்னமரத்தினையுணர நின்றசொல்லும்— ஆமுப்பெயரும் - ஆகியவம்மூன்றுபெயரும்— சேமரவியல - வல்லெழுத்துமிகாது சேமரம்போல மெல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று) [உ-ம்] விசைங்கோடு - ஞெமைங்கோடு - நமைங்கோடு - செதிள் - தோல் - பூ - எனவரும். இவைகசதபமுதலியமொழி மேற்றோன்றுமெல்லெழுத்தென்றுணர்க. (௮௰)

பனையுமரையுமாவிரைக்கிளவியு, நினையுங்காலையம்மொடுசிவணு,மை யெனிறுதியரைவரைந்துகெடுமே, மெய்யவணொழியவென்மனார்புலவர். ※

இஃதிவைபுவல்லெழுத்துவிலக்கியம்முவகுத்தது: பனையுமரையுமாவிரைக்கிளவியும் - பனையென்னும்பெயரும் அரையென்னும்பெயரும் ஆவிரையென்னும்பெயரும்— நினையுங்காலையம்மொடுசிவணும் - ஆராயுங்காலத்து வல்லெழுத்துமிகாது அம்முச்சாரியையொடுபொருந்திமுடியும்— ஐயெனிறுதியரைவரைந்துகெடும் - அவ்விடத்தையென்னுமீறு அரையென்னுஞ் சொல்லைநீக்கியேனையிரண்டிற்குங்கெடும்—மெய்யவணொழியவென்மனார் புலவர் - தன்னானூரப்பட்டமெய்கெடாதச்சொல்லிடத்தேநிற்கவென்று கூறுவர்புலவர்.—(எ-று) [உ-ம்] பனை - ஆவிரை - என நிறுத்தி அம்முவருவித்துஐகாரங்கெடுத்தொற்றின்மேலேஅகரமேற்றிப் பனங்காய் - ஆவிரங்கோடு - செதிள் - தோல் - பூ - எனவரும். அரையென நிறுத்தியம்முக்கொடுத்துஐகாரங்கெடாதுஅரையங்கோடு - செதிள் - தோல் - பூ - எனமுடிக்க. வல்லெழுத்துக்கேடுமேலேகூறுதும். கடிநிலையின்றென்றதனால்) நினையுங்காலையென்றதனால் தூதுணை - வழுதுணை - தில்லை - ஒலை - தாழை - என நிறுத்தியம்முக்கொடுத்துஐகாரங்கெடுத்துத் தூதுணங்காய் - வழுதுணங்காய் - தில்லங்காய் - ஓலம்போழ் - தாழங்காய் - எனமுடிக்க. (௮௰௧)

பனையின்முன்னரட்டுவருகாலை, நிலையின்றாகுமையெனுயிரே, யாகாரம்வருதலாவயினான். ※

இது நிலைமொழிச்செய்கைநோக்கியெய்தாததெய்துவித்தது. பனையின்

முன்னரட்டுவருகாலை- முற்கூறியவாறன்றிப்பனையென்னுஞ்சொன்முன்னரட்டென்னுஞ்சொல் வருமொழியாய்வருங்காலத்து — நிலையின்றாகுமையெனுயிர்- நிற்றவில்லையாகுமையென்னுமுயிர் — ஆவயினானவாகாரம்வருதல்- அவ்விடத்தாகாரம்வந்தம்மெய்ம்மேலேறிமுடிக — (எ-று) [உ-ம்] பனாஅட்டு - எனவரும். இதற்குமூன்றாவதுமாறாவதும்விரியும். ஆவயினானவென்றதனால் ஒராநயம் - விச்சாவாதி-என்னும்வேற்றுமைமுடிபும் கேட்டாமூலம்-பாறுங்கல்-என்னுமல்வழிமுடிபுங்கொள்க. இவற்றுள்வடமொழிகளைமறுத்தலுமொன்று. (௮௰௨)

கொடிமுன்வரினேயையவணிற்பக், கடிநிலையின்றேவல்லெழுத்துமிகுதி. ※

இது மேலதைகாரங்கெடுத்தம்முப்பெறுகவென்றார்- ஈண்டதுகெடாதுநிற்கவென்றலினெய்தியதிகந்துபடாமற்காத்தது: அம்முவிலக்கிவல்லெழுத்துவிதித்தலினெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதியுமாம். முன்கொடிவரின் - பனையென்னுஞ்சொன்முன்னர்க்கொடியென்னுஞ்சொல்வரின் — ஐயவணிற்ப -மேற்கூறியவைகாரமாண்டுக்கெடாதுநிற்ப — வல்லெழுத்துமிகுதிகடிநிலையின்று - வல்லெழுத்துமிக்குமுடிதனிக்குநிலைமையின்று. — (எ-று) [உ-ம்]பனைக்கொடி-எனவரும். இதற்கிரண்டாவதுமூன்றாவதும்விரியும். கடிநிலையின்றென்றதனானைகாரவீற்றுப்பெயர்களெல்லாமெடுத்தோத்தானுமிலேசானுமம்முச்சாரியையும்பிறசாரியையும்பெற்றுழியதிகாரவல்லெழுத்துக்கெடுத்துக்கொள்க. இன்னுமிதனானேயுருபிற்குச்சென்றசாரியை பொருட்கட்சென்றுழியியைபுவல்லெழுத்துவீழ்க்க, பனையின்குறை - அரையின்கோடு- ஆவிரையின்கோடு- விசையின்கோடு- ஞெமையின்கோடு- நமையின்கோடு- எனவும் தாதுணையின்காய்-உழையின்கோடு-வழையின்கோடு - எனவும்வரும். பனைத்திரள்- பனந்திரள் - என்னுமுறழ்ச்சிமுடிபு தொகைமரபினுட்புறனடையாற்கொள்க. அல்வழியுமாதலின்)அன்றியீண்டையவணென்றதனாற்கொள்வாருமுளர். (௮௰௩)

திங்களுநாளுமுந்துகிளந்தன்ன. ※

இஃதியைபுவல்லெழுத்தினோடிக்குச்சாரியையும்வல்லெழுத்துவிலக்கியான்சாரியையும்வகுத்தலினெய்தியதன் மேற்சிறப்புவிதியுமெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதியுங்கூறுகின்றது. திங்களுநாளும் - ஐகாரவீற்றுத்திங்களையுணர

நின்றபெயருநாளைபுணரநின்றபெயரும்—முந்துகிளந்தன்ன-இகரவீற்று
த்திங்களுநாளும்போலஇக்குமானும்பெற்றுமுடியும்.—(எ-று) [உ-ம்]
சித்திரைக்குக்கொண்டான்- கேட்டையாற்கொண்டான் - சென்றான்-தந்
தான்-போயினான்-எனவரும்.சித்திரை நாளாயின்ஆன்சாரியை கொடுக்க.வ
ல்லெழுத்துக்கேடுமுன்னர்க்கடிநிலையின்றென்றதனாற்கொள்க.திங்கண்முற்
கூறியமுறையன்றிக்கூற்றினால் உழைங்கோடு- அமைங்கோடு-உடைங்கோ
டு-எனமெல்லெழுத்துக்கொடுத்துங் கலைங்கோடு-கலைக்கோடு-எனவுறழ்ச்
சியெய்துவித்தும் கரியவற்றுக்கோடு-நெடியவற்றுக்கோடு-குறியவற்றுக்
கோடு- எனவைகாரவீற்றுப்பண்புப்பெயர்க்குவற்றுக்கொடுத்து ஐகாரங்
கெடுத்து வற்றுமிசையொற்றென்றொற்றுக்கெடுத்துச்செய்கைசெய்தும்
அவையத்துக்கொண்டான் - அவையிற்கொண்டான் - என அத்துமின்னுங்
கொடுத்தும் பனையின்மாண்பு - கேட்டையினாட்டினானெனவியல்புகணத்
துக்கணின்சாரியைகொடுத்தும் பனையின்குறை -எனவின்கொடுத்துமுடி
க்க.ஐகாரவீ-றின்சாரியைபெறுதன்றுகைமரபினுட்கூறாமையினீண்டுக்கொ
ண்டாம். (௮௰௪)

மழையென்கிளவிவளியியனிலையும். ※

இது வல்லெழுத்தினோடத்துவருத்தலினெய்தியதன்மேற்சிறப்புவிதியு மி
யைபுவல்லெழுத்துவிலக்கியின்வருத்தலி னெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதியு
ங்கூறுகின்றது. மழையென்கிளவி-மழையென்னுமைகாரவீற்றுச்சொல்வி
வளியியனிலையும்-வளியென்னுஞ்சொல் அத்துமின்னும்பெற்றுமுடிந்த
யல்பின்கண்ணேநின்றுமுடியும்—(எ.று)[உ.ம்]மழையத்துக்கொண்டா
ன்-மழையிற்கொண்டான்-சென்றான்-தந்தான்-போயினான் - எனவரும்.
ஈண்டின்பெற்றுழி வல்லெழுத்துக்கேடுகடிநிலையின்றென்றதனாற்கொள்க.
சாரியைப்பேறுவருமொழிவரையாது கூறினமையினியல்புகணத்துள்ளுங்
கொள்க. மழையத்துஞான்றான்-மழையின்ஞான்றான் - நிறுத்தினான்-மா
ட்டினான்-வந்தான்-அடைந்தான்-எனவொட்டுக. (௮௰௫)

செய்யுண்மருங்கின்வேட்கையென்னு, மைமெனிறுதியவாமுன்வரினே
மெய்யொடுங்கெடுதலென்மனார்புலவர்,டகாரணகாரமாதல்வேண்டும். ※

இதுவேற்றுமைக்கட்செய்யுண்முடிபுகூறுகின்றது. செய்யுண்மருங்கின்
வேட்கையென்னுமையெனிறுதி-செய்யுளிடத்துவேட்கையென்னுமைகா

ரவீற்றுச்சொல்— அவாமுன்வரின்-அவாவென்னுஞ்சொற்கு முன்னர்வரி
ன்—மெய்யொடுங்கெடுமென்மனார்புலவர் - அவ்வைகாரந்தானூர்ந்தமெ
ய்யோடுங்கூடவேகெடுமென்றுகூறுவர்புலவர் — டகாரணகாரமாதல்வே
ண்டும் - அவ்விடத்துநின்றடகாரவொற்றுணகாரவொற்றாகத்திரிதல்வே
ண்டும்.—(எ-று) [உ-ம்]வேணவாநலியவெய்யவுயிரா-எனவரும். வேட்
கையாவதுபொருள்கண்மேற்றோன்றும்பற்றுள்ளம். அவாவாவதப்பொ
ருள்களைப்பெறவேண்டுமென்றுமேன்மேனிகழுமாசை-எனவேவேட்கை
யாலுண்டாகியவவாவெனமூன்றனுருபுவிரிந்தது. இதனைவேட்கையும் அ
வாவுமென அல்வழியென்பாருமுளர். இங்ஙனங்கூறுவார்பாறங்கலென்பத
னையம்முறைக்கொடுத்தீண்டுமுடிப்பர். (௮௰௬)

ஒகாரவிறுதியேகாரவியற்றே. *

இஃதோகாரவீற்றல்வழிமுடிபுகூறுகின்றது. ஒகாரவிறுதியேகாரவியற்று
-ஓகாரவீற்றுப்பெயர்ச்சொல்எகாரவீற்றல்வழியினியல்பிற்றாய்வல்லெழுத்
துவந்துழிவல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று)[உ-ம்]ஒக்கடிது-சோ
க்கடிது-சிறிது-தீது-பெரிது- எனவரும். (௮௰௭)

மாறுகொளெச்சமும்வினாவுமையமுங், கூறியவல்லெழுத்தியற்கை
யாகும். *

இஃ திடைச்சொன்முடிபுகூறியெய்தாததெய்துவித்தது. மாறுகொளெ
ச்சமும்- யாறுபாட்டினைக்கொண்டவெச்சப்பொருண்மையையொழிபா
கவுடையவோகாரமும்—வினாவும்-வினாப்பொருண்மையையுடையவோகா
ரமும்—ஐயமும்-ஐயப்பொருண்மையையுடையவோகாரமும்— கூறிய
வல்லெழுத்தியற்கையாகும் -முன்னர்க்கூறியவல்லெழுத்தின்றியியல்பாய்
முடியும்:—(எ-று) [உ-ம்]யானோகொண்டேன்-எனவும் நீயோகொண்
டாய்- எனவும் பத்தோபதினொன்றோ-புற்றோபுதலோ- எனவும்வரும்.கூ
றியவென்றதனான் யானோதேறேனவர்பொய்வழங்கலோ எனப்பிரிநிலை
யும் நன்றோதீதோகண்டது எனத்தெரிநிலையும் ஒஒகொண்டேன் என
ச்சிறப்பும் குன்றுறழ்ந்தகளிறென்கோகொய்யுளைமாவென்கோஎனவெ
ண்ணுநிலையும்வல்லெழுத்துமிகாதியல்பாய்முடிதல்கொள்க. இதனானேயீ
ற்றசைவருமேனுமுணர்க. (௮௰௮)

ஒழிந்ததனிலையுமொழிந்தவற்றியற்றே. *

இதுவுமது. ஒழிந்ததனிலையுமொழிந்தவற்றியற்று - ஒழியிசையோகாரத்
தினதுநிலையுமுற்கூறிய வோகாரங்களினியல்பிற்றாயியல்பாய்முடியும். —
(எ-று)[உ-ம்]கொளவோகொண்டான்-செலவோசென்றான்- தரவோத
ந்தான்போதவோபோயினான் - எனவோசைவேற்றுமையானொருசொற்
றான்றப்பொருடந்துநிற்கும். (௮௰௯)

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே,யொகரம்வருதலாவயினான. *

இதுஒகாரவீற்றுவேற்றுமைமுடிபுகூறுகின்றது. வேற்றுமைக்கண்ணுமத
னோரற்று - ஒகாரவீறுவேற்றுமைக்கண்ணு மவ்வேகாரவீற்றல்வழியோ
டொத்துவல்லெழுத்துமிக்குமுடியும்— ஆவயினானவொகரம்வருதல் - அ
வ்விடத்தொகரம்வருக.—(எ-று)[உ-ம்]ஒஒக்கடுமை - கோஒக்கடுமை-சி
றுமை-தீமை-பெருமை-எனவரும். (௯௰)

இல்லொடுகிளப்பினியற்கையாகும். *

இஃதெய்தியதுவிலக்கிற்று. என்னைமுன்னர்வன்கணம்வந்துழியொகரம்
பெறுகவெனவரைந்துகூறாது நிலைமொழித்தொழில்வரையாதுகூறலினா
ன்குகணத்துக்கண்ணுஞ்சேறலின்.) இல்லொடுகிளப்பினியற்கையாகும்-
ஒகார வீற்றுக்கோவென்னுமொழியினையில்லென்னும் வருமொழியோடு
சொல்லினொகரமிகாதியல்பாய்முடியும்.—(எ-று)[உ-ம்]கோவில்-எனவ
ரும்.கோவென்றதுயர்திணைப்பெயரன்றோவெனின்-கோவந்ததென்றஃறி
ணையாய்முடிதலினஃறிணைப்பாற்பட்டது. (௯௰௧)

உருபியனிலையுமொழியுமாருளவே, யாவயின்வல்லெழுத்தியற்கை
யாகும் *

இது வல்லெழுத்துவிலக்கிச்சாரியைவகுத்தலி னெய்தியதுவிலக்கிப்பிறிது
விதிவகுத்தது. உருபியனிலையுமொழியுமாருள-ஒகாரவீற்றுச்சிலபொருட்
புணர்ச்சிக்கணுருபுபுணர்ச்சியதியல்பிலேநின்றான்சாரியை பெற்றுமுடி
யுமொழிகளுமுள — ஆவயின்வல்லெழுத்தியற்கையாகும் - அவ்விடத்து
வல்லெழுத்தின்றியியல்பாய்முடியும். —(எ-று) [உ-ம்] கோஒன்கை -
செவி-தலை-புறம்- எனவரும். இதனானும்பெற்றாம். சாரியைப்பேறுவ
ருமொழியின்வல்லெழுத்தைவிலக்காமை.) (௯௰௨)

ஔகாரவீறுதிப்பெயர்நிலைமுன்ன,ரல்வழியானும்வேற்றுமைக்கண்
ணும், வல்லெழுத்துமிகுதல்வரைநிலையின்றே,யவ்விருவீற்றுமுகரம்வருத

ல், செவ்விதென்பசிறந்திசினேரே, *

இது ஔகாரவீற்றிற்கிருவழியுமுடியுமாறுகூறுகின்றது. ஔகாரவிறுதிப்பெயர்நிலைமுன்னர் - ஔகாரமிறுதியாகியபெயர்ச்சொன்முன்னர் வல்லெழுத்துமுதன்மொழிவருமொழியாய்வரின் — அல்வழியானும்வேற்றுமைக்கண்ணும் - அல்வழிக்கண்ணும்வேற்றுமைக்கண்ணும் — வல்லெழுத்துமிகுதல்வரைநிலையின்று - வல்லெழுத்துமிக்குமுடிதனீக்குநிலைமையின்று — அவ்விருவீற்றுமுகரம்வருதல்செவ்விதென்பசிறந்திசினோர் - அவ்விருகூற்றின்முடிபின்கண்ணுநிலைமொழிக்கண்ணுகரம்வந்து முடிதல்செவ்விதென்றுசொல்லுவர்சிறந்தோர். — (எ - று) [உ - ம்] கௌவுக்கடிது - சிறிது - தீது - பெரிது - எனவும். கடுமை - சிறுமை - தீமை - பெருமை - எனவும்வரும் செவ்விதென்றதனான்மென்கணத்துமிடைக்கணத்துமுகரம்பெறுதல்கொள்க. கௌவுஞெகிழ்ந்தது - ஞெகிழ்ச்சி - எனவும் - வௌவுவலிது - வலிமை - எனவும்வரும். நிலைமொழியென்றதனாற்கௌவின்கடுமை - எனஉருபிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றுழியியைபுவல்லெழுத்துவீழ்வுங்கொள்க. இன்னுமிதனானே ஐகாரமுமிகரமும் வேற்றுமைக்கண்ணுருபுதொகையாயுழியியல்பாதல்கொள்க. (௬௰௫)

ஏழாவது, உயிர்மயங்கியல் - முற்றிற்று. ஆ - சூ - (௨௱௬௰௫)

---

# எட்டாவது.

# புள்ளிமயங்கியல்.

ஞகாரையொற்றியதொழிற்பெயர்முன்ன, ரல்லதுகிளப்பினும்வேற்றுமைக்கண்ணும், வல்லெழுத்தியையினவ்வெழுத்துமிகுமே, யுகரம்வருதலாவயினான, *

நிறுத்தமுறையானேயுயிரீறுபுணர்த்துப்புள்ளியீறுவன்கணத்தோடுஞ்சிறுபான்மையேனைக்கணத்தோடும்புணருமாறு கூறவினிவ்வோத்துப்புள்ளிமயங்கியலென்னும்பெயர்த்தாயிற்று. இச்சூத்திரம்ஞகாரவீறு வன்கண

த்தோடிருவழியும்புணருமாறுகூறுகின்றது. ஞகாரைபொற்றியதொழிற் பெயர்முன்னர் - ஞகாரமீற்றின்கணுற்றாக நின்றதொழிற்பெயரின்முன்னர்—அல்லதுகிளப்பினும்வேற்றுமைக்கண்ணும் - அல்வழியைச்சொல்லுமிடத்தும்வேற்றுமையைச்சொல்லுமிடத்தும்— வல்லெழுத்தியையினவ்வெழுத்துமிகும் - வல்லெழுத்துமுதன்மொழிவருமொழியாய்வரினவ்வல்லெழுத்துவருமொழிக்கண் மிக்குமுடியும் —ஆவயினுனவுகரம்வருதல் அவ்விடத்துகரம்வருக.—(எ-று) [உ-ம்] உரினுக்கடிது- சிறிது - தீது- பெரிது- எனவும் உரினுக்கடுமை- சிறுமை- தீமை- பெருமை - என்வும் வரும். (க)

ஞநமவவியையினுமுகரநிலையும். ※

இது அவ்வீறுமென்கணத்தோடுமிடைக்கணத்துவகரத்தோடுமுடியுமென வெய்தாததெய்துவித்தது. ஞநமவவியையினுமுகரநிலையும் - அஞ்ஞகரவீறுவன்கணமன்றிஞநமவமுதன்மொழி வருமொழியாய் வரினும்நிலைமொழிக்கண்ணுகரநிலைபெற்றுமுடியும்.— (எ-று)[உ-ம்]உரினுஞான்றது -நீண்டது -மாண்டது -வலிது-எனவும் ஞாற்சி- நீட்சி-மாட்சி- வலிமை-எனவும்வரும். யகரத்தோடுமுயிரோடும்புணருமாறுதொகைமரபினுளுகரமொடுபுணருமென்பதனாற்கூறினார். (உ)

நகரவிறுதியுமதனோரற்றே. ※

இதுநகரவீறுமுற்கூறியகணங்களோடல்வழிக்கண்முடியுமாறு கூறியெய்தாததெய்துவிக்கின்றது. நகரவிறுதியும்- நகரவீற்றுப்பெயருமுற்கூறியகணங்களோடுபுணரும்வழி — அதனோரற்று - அஞ்ஞகரவீற்றுத்தொழிற்பெயரியல்பிற்றாய்வல்லெழுத்துவந்துழிவல்லெழுத்துமிக்கு உகரம்பெற்றும் ஞநமவவந்துழியுகரம்பெற்றுமுடியும்.—(எ-று)[உ-ம்]பொருநுக்கடிது-வெரிநுக்கடிது-சிறிது-தீது-பெரிது-எனவும்ஞான்றது-நீண்டது-மாண்டது-வலிது-எனவும்வரும்.முடிபொப்புமைநோக்கிநகரவீறீண்டுப்புணர்த்தார். ஈண்டுவேற்றுமை யொழித்துமாட் டேறுசென்றதென்றுணர்க. (௩)

வேற்றுமைக்குக்கெடவகரநிலையும். ※

இது நிலைமொழியுகரம்விலக்கிபகரம்வகுத்தலினெய்தியதுவிலக்கிப்பிறிது விதிவகுக்கின்றது. வேற்றுமைக்கு- அந்நகரவீறுவேற்றுமைப்பொருட்பு

ணர்ச்சிக்கு — உக்கெடவகரநிலையும் - மேலெய்தியவுகரங்கெடஅகரம்நிலைபெற்றுப்புணரும்.—(எ-று) [உ-ம்] பொருநக்கடுமை-வெரிநக்கடுமை-சிறுமை-தீமை-பெருமை- ஞாற்சி -நீட்சி-மாட்சி-வன்மை - எனவரும். அகரநிலையுமென்னு துகரங்கெடவென்றதனானுருபிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றுழியியைபுவல்லெழுத்துவீழவுஞ் சிறுபான்மையுகரப்பேறுங்கொள்க.வெரிநின்குறை-பொருநின்குறை-உரிஞின்குறை -எனவும்உய்வல்யானைவெரிநுச்சென்றனன்எனவும்வரும்.யானையின்முதுகின்மேற்சென்றனன்என விரிக்க. பொருநர்என்பதுஒருசாதிப்பெயரும் பொருதுதலென்னும்வினைப்பெயருமாம். (௪)

வெரிநெனிறுதிமுழுதுங்கெடுவழி, வருமிடனுடைத்தேமெல்லெழுத்தியற்கை ※

இது அந்நகரவீற்றுளொருமொழிக்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. வெரிநெனிறுதி-வெரிநென்றுசொல்லப்படுநகரவீற்றுமொழி—முழுதுங்கெடுவழி-தன்னீற்றுநகரமுன்பெற்றவுகரத்தோடெஞ்சாமைக்கெட்டவிடத்து— மெல்லெழுத்தியற்கைவருமிடனுடைத்து - மெல்லெழுத்துப்பெறுமியல்புவந்துமுடியுமிடனுடைத்து.—(எ-று) [உ-ம்] வெரிங்குறை-செய்கை-தலை-புறம்-எனவரும்.மெல்லெழுத்துவருமொழிநோக்கிவந்தது. வெயில்வெரிநிறுத்தபயிலிதழ்ப்பசுங்கோடைஎன்பதனுன்நகரவிகரமேயிட்டெழுதுப. (௫)

ஆவயின்வல்லெழுத்துமிகுதலுமுரித்தே. ※

இதுஅதற்கெய்தாததெய்துவித்தது. ஆவயின்-அவ்வெரிநென்னுஞ்சொல்அவ்வாறீறுகெட்டுநின்றவிடத்து—வல்லெழுத்துமிகுதலுமுரித்து-மெல்லெழுத்தேயன்றிவல்லெழுத்துமிக்குமுடிதலுமுரித்து.—(எ-று) [உ-ம்] வெரிக்குறை-செய்கை-தலை-புறம்-எனவரும். (௬)

ணகாரவிறுதிவல்லெழுத்தியையின், டகாரமாகும்வேற்றுமைப்பொருட்கே. ※

இது நிறுத்தமுறையானேணகாரவீறுவேற்றுமைப்பொருட்கட்புணருமாறுகூறுகின்றது. ணகாரவிறுதி-ணகாரவீற்றுப்பெயர்—வல்லெழுத்தியையின் - வல்லெழுத்துமுதன்மொழிவந்தியையின் — டகாரமாகும்வேற்

றுமைப்பொருட்கு - டகாரமாகத்திரிந்துமுடியும்வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்.— (எ-று) [உ-ம்] மட்குட்டம்-சாடி-தூதை-பானை-எனவரும்·மண்கை-புண்கை-என்பனவிரண்டாவதன்றிரிபின்முடிந்தன-கவண்காலென்பதுமேன்முடித்தும். (௭)

ஆணும்பெண்ணுமஃறிணையியற்கை. ※

இது அவ்வீற்றுவிரவுப்பெயருட்சிலவற்றிற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது· ஆணும்பெண்ணும் - ஆணென்னும்விரவுப்பெயரும்பெண்ணென்னும்விரவுப்பெயரும்— அஃறிணையியற்கை - தொகைமரபினுண்மொழிமுதலாகுமென்பதன்கணஃறிணைப்பெயர்முடிந்தவியல்புபோலவேற்றுமைக்கணியல்பாய்முடியும்·— (எ-று).[உ-ம்] ஆண்கை-பெண்கை-செவி-தலை-புறம்எனவரும்· இதுதொகைமரபினுளஃறிணைவிரவுப்பெயரொன்பதனுண்முடிந்தவியல்பன்றோவெனின் இவையாண்டுமுடிந்தனபோலத்தத்தமரபின்வினையாற்பாலறியப்படுவனவன்றியிருதிணைக்கண்ணுமஃறிணையாய்முடிதலி னஃறிணைப்பெயரதியல்போடுமொட்டெறிந்துமுடித்தாரென்க· ஆண்கடிது - பெண்கடிது - என்னுமல்வழிமுடிபுமொழிமுதலாகுமென்பதன்கண்வருமொழிமுற்கூறியவதனான்முடிக்க. (௮)

ஆண்மரக்கிளவியரைமரவியற்றே· ※

இது திரிபுவிலக்கிச்சாரியைவகுத்தலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது· ஆண்மரக்கிளவி-ஆணென்னுமரத்தினையுணரநின்றசொல்—அரைமரவியற்று - அரையென்னுமரமம்முப்பெற்றவியல்பிற்றாய்த்தானுமம்முப்பெற்றுமுடியும்·— (எ-று) [உ-ம்] ஆணங்கோடு-செதிள்-தோல்-பூ-எனவரும்·ஒன்றினமுடித்தலானியல்புகணத்துங்கொள்க· ஆணநார்-இலை-எனவரும்·விரவுப்பெயரன்றென்றற்குமரமென்றார். (௯)

விண்ணெனவரூஉங்காயப்பெயர்வயி,னுண்மையுமுரித்தேயத்தென்
சாரியை,செய்யுண்மருங்கிற்றொழில்வருகாலை· ※

இதுசெய்யுளுட்டிரிபுவிலக்கிச்சாரியைவகுத்தது· விண்ணெனவரூஉங்காயப்பெயர்வயின் - விண்ணென்றுசொல்லவருகிறவாகாயத்தையுணரநின்றபெயர்க்கண் — அத்தென்சாரியைமிகுதலுமுரித்து- அத்தென்னுஞ்சாரியையுண்டாதலுமுரித்துஇல்லையாதலுமுரித்து — செய்யுண்மருங்கிற்றொழில்வருகாலை - செய்யுளிடத்துத்தொழிற்சொல்வருங்காலத்து·—(எ-று)

[உ-ம்] விண்ணத்துக்கொட்கும்-விண்ணத்தமரர்- எனவும் விண்ணத்துக் கொட்கும் வினைசெல்லூர்திமேயாயெனவும் விண்ணத்துநீள்வரைவெற்பகளைபவோ-எனவும்வரும். விண்ணென்னுங்குறிப்பினைநீக்குதற்குக்காயமென்றார். விண்வத்துக்கொட்கும்-எனவுடம்படுமெய்புணர்ந்துநிற்றலுங்கொள்க அதிகாரவல்லெழுத்தின்மையிற்சாரியைவல்லெழுத்துக்கொடுக்க. (௰)

தொழிற்பெயரெல்லாந்தொழிற்பெயரியல. ✻

இது இவ்வீற்றுட்சிலவற்றிற்குத்திரிபுவிலக்கிஉகரமும்வல்லெழுத்தும்விதிக்கின்றது. தொழிற்பெயரெல்லாந்தொழிற்பெயரியல - அல்வழிக்கண்ணும்வேற்றுமைக்கண்ணும்ஞகாரவீற்றுத்தொழிற்பெயரியல்பிற்றாய்வன்கணம்வந்துழிவல்லெழுத்துமுகரமும்பெற்று மென்கணத்துமிடைக்கணத்துவகரத்துமுகரம்பெற்றுமுடியும்.—(எ-று) [உ-ம்] மண்ணுக்கடிது-பண்ணுக்கடிது-சிறிது- தீது-பெரிது-ஞான்றது-நீண்டது-மாண்டது-வலிது -எனவும் மண்ணுக்கடுமை-சிறுமை-தீமை-பெருமை- ஞாற்சி-நீட்சி-மாட்சி- வன்மை-எனவும்வரும். எல்லாமென்றதனாற்றொழிற்பெயரல்லனவும் வல்லெழுத்துப்பெற்றுமின்சாரியைபெற்றும் புணர்வனகொள்க. வெண்ணுக்கரை-தாழ்பெயல்கனைகுரல்கடுப்பப் பண்ணுப்பெயர்த்து - எண்ணுப்பாறு-வெண்ணின்கரை எனவரும். (௰௧)

கிளைப்பெயரெல்லாங்கொளத்திரிபிலவே. ✻

இது இவற்றுட்சிலவற்றிற்குத்திரிபுவிலக்கியியல்புகூறுதலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிகூறுகின்றது. கிளைப்பெயரெல்லாம்-ணகரவீற்றுளோரினத்தையுணரநின்றபெயரெல்லாம்—கொளத்திரிபில-திரிபுடையவென்றுகருதும்படியாகத்திரிதலின்றியியல்பாய்முடியும்.—(எ-று) [உ-ம்] உமண்-எனநிறுத்தி-குடிசேரி-தோட்டம்-பாடி-எனத்தந்துமுடிக்க. இனியெல்லாமென்றதனாற்பிறசாரியைபெற்றுமுடிவனவுமியல்பாய் முடிவனவுங்கொள்க. மண்ணப்பத்தம்-எண்ணநெலை-எனவும்கவண்கால்-எனவும் கொள்க. கொளவென்றதனாலேலாம்வேற்றுமைப்பொருண்மையுணரநின்றவிடைச்சொற்கடிரிந்துமுடிவனவுங்கொள்க. அங்கட்கொண்டான் - இங்கட்கொண்டான்-உங்கட்கொண்டான்-எங்கட்கொண்டான்-எனவும் ஆங்கட்கொண்டான்-ஈங்கட்கொண்டான்-ஊங்கட்கொண்டான்-யாங்கட்கொண்டான்-எனவும் அவட்கொண்டான்-இவட்கொண்டான்- உவட்கொண்டா,

ன்-எவட்கொண்டான்-எனவுமொட்டுக. (௰௨)

வேற்றுமையல்வழியெண்ணெ னுணவுப்பெயர், வேற்றுமையியற்கை நிலையலுமுரித்தே. *

இது அவ்வீற்றுளொன்றல்வழியுள வேற்றுமைமுடிபுபோலத்திரிந் தமுடியுமாறு கூறுகின்றது. வேற்றுமையல்வழி-வேற்றுமையல்லாதவிடத்து—எண்ணெனுணவுப்பெயர் - வரையறைப்பொருண்மையுணர்த்தா தெண்ணென்றுசொல்லப்படுமுணவினையுணர்த் தும்பெயர் — வேற்றுமையியற்கைநிலையலுமுரித்து -வேற்றுமைய துதிரிந் தமுடியுமியல்பு நிற்றலுமுரித்து.—(எ-று)[உ-ம்]எட்கடி து-சிறி து-தீ து-பெரி து-எனவரும். உம்மையாற்றொகைமரபினுண்மொழிமுதலாகுமென்பதனாற்கூறியவியல்புபெரும்பான்மையாயிற்று. அதுஎண்கடி துஎனவரும். (௰௩)

முரணென்றொழிற்பெயர்முதலியனிலையும். *

இதுஇவ்வீற்றுட்டொழிற்பெயருளொன்றற்குத்தொழிற்பெயர்க்கெய்திய வுகரமும்வல்லெழுத் தும்விலக்கியிவ்வீற்றல்வழிமுடிபும் வேற்றுமைமுடிபுமெய் துவித்தது. முரணென்றொழிற்பெயர் - மாறுபாடுணர்த் துமுரணென்னுந்தொழிற்பெயர்—முதலியனிலையும் - தொகைமரபிற்கூறியவல்வழிக்கட்டிரியா துமுடிந்தவியல்பின்கண்ணுமீண்டுவேற்றுமைக்கட்டிரிந் தமுடிந்தவியல்பின்கண் ணுநிலைபெற்றுமுடியும்.—(எ-று) [உ-ம்]முரண்கடி து-சிறி து-தீ து-பெரி து-ஞெகிழ்ந்த து-நீண்ட து- மாண்ட து-வலி து-எனவும் முரட்கடுமை-சேனை - தானை -பறை-எனவும் முரண்ஞெகிழ்ச்சி-நீட்சி-மாட்சி-வலிமை-எனவும்வரும். இதனைத்தொழிற்பெயரொல்லாமென்பதன்பின்வையாதமுறையின்றிக்கூற்றினான் முரண்கடுமை- முரட்கடுமை -அரண்கடுமை- அரட்கடுமை-யென்னுமுறழ்ச்சியுங்கொள்க. (௰௪)

மகரவிறுதிவேற்றுமையாயிற், றுவரக்கெட்டுவல்லெழுத் துமிகுமே. *

இதுமுறையானேமகரவீற்றுப்பெயர்வேற்றுமைக்கட் புணருமாறுகூறுகின்றது. மகரவிறுதிவேற்றுமையாயின் -மகரவீற்றுப்பெயர்வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணாயின் — துவரக்கெட்டுவல்லெழுத் துமிகும் - அந்நிலைமொழிமகரமுற்றக்கெட்டு வருமொழி வல்லெழுத் துமிக்குமுடியும். (எ-று) [உ-ம்]மரக்கோடு-செதிள்-தோல்-பூ- எனவரும். முண்டகக்கோதை-எனவும்வரும். துவரவென்றதனானியல்புகணத் துக்கண்ணுமுயர்திணை

ப்பெயர்க்கண்ணும்விரவுப்பெயர்க்கண்ணுமகரக்கேடுகொள்க.மரஞான்-மரநால் இவற்றிற்குநான்கனுருபுவிரிக்க.மரமணி-யாழ்-வட்டு-அடை-ஆடையெனவொட்டுக. தங்கை-எங்கை-செவி-தலை-புறம்-எனவும் தங்கை-செவி-தலை-புறம்-எனவும்வரும். ஈண்டுமகரக்கேடேகொள்க. முடிபுமேற்கூறுப. (௰௫)

அகரஆகாரம்வருஉங்காலை,யீற்றுமிசையகரநீட லுமுரித்தே. *

இது அவ்வீற்றுமுடிபுவேற்றுமையுடையனகூறுகின்றது. அகரஆகாரம் வருஉங்காலை - அகரமுதன்மொழியுமாகார முதன்மொழியும்வருமொழியாய்வருங்காலத்து—ஈற்றுமிசையகரநீடலு முரித்து-மகரவொற்றின்மேனின்றஅகரம்நீண்டுமுடிதலுமுரித்துநீடாமையுமுரித்து.—(எ-று)[உ-ம்] மரம்- குளம்-என நிறுத்தி மகரங்கெடுத்து அடி-ஆம்பல்-எனத்தந்து ரகரளகரங்களினின்றஅகரம்ஆகாரமாக்கி-மராஅடி -குளாஅம்பல்-எனமுடிக்க. மேற்செல்வழியறிதல்வழக்கத்தானவென்றதனல்குளாஅம்பலென்புழி ஆகாரத்தைஅகரமாக்குக. உம்மையான் மரவடி-குளவாம்பல்-என நீடாமையுங்கொள்க. வருமொழிமுற்கூறியவதனனிவ்வீற்றுட்பிறவும் வேறுபடமுடிவனகொள்க. கோணுகோணம்-கோணுவட்டம்-இவற்றிற்குள்ளென்னுமுருபுவிரிக்க. கோணுகோணத்திற்கு வல்லெழுத்துக்கேடுமேலைச்சூத்திரத்திலேசாற்கொள்க. (௰௬)

மெல்லெழுத்துறழுமொழியுமாருளவே,செல்வழியறிதல்வழக்கத்தான.*

இது மகரங்கெட்டுவல்லெழுத்துமிகுதலோடுமெல்லெழுத்துமுறழ்கவென்றலினெய்தியதன்மேற்சிறப்புவிதி. மெல்லெழுத்துறழுமொழியுமாருள-மகரவீற்றுள்வல்லெழுத்தினேடு மெல்லெழுத்துப்பெற்றுறழ்ந்துமுடியுமொழிகளுமுள — வழக்கத்தான செல்வழியறிதல் - வழக்கத்தின்கண்ணும்வழங்குமிடமறிக.— (எ-று) [உ-ம்] குளங்கரை- குளக்கரை -சேறு-தாது-பூழி-எனவரும். இவற்றுட்குளங்கரை-குளக்கரைபோலவல்லனவொத்தவுறழ்ச்சியாய்வழங்காவென்றற்குச்செல்வழியறிதலென்றார். வழக்கத்தானவென்றதனன்-குளத்துக்கொண்டான்-ஈழ்த்துச்சென்றான்-குடத்துவாய் -பிலத்துவாய்-என்றாற்போல்வனமகரங்கெட்டத்துப்பெற்றன.இவைஅத்தேவற்றேயென்பதனனெற்றுக்கெடாதாயிற்று. அஃதல்வழிக்குக்கூறுதவின்)மழகளிறு-மழவுங்குழவுமிளமைப்பொருள என்றவுரிச்சொல்லது

மகரவீறன்று. சண்பகங்கோடென்பது வழக்கிடத்துச்செல்லாது. இன்னு மிதனானே மகரங்கெடாது நிற்பனவுங்கொள்க. புலம்புக்கனனே கலம்பெறுகண்ணுளரொக்கற்றலைவர் எனவரும். (௰௭)

இல்லமரப்பெயர்விசைமரவியற்றே. *

இஃது இவ்வீற்றுளொன்றற்கு வல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்துவிதித்தது. இல்லமரப்பெயர் - புக்குறையுமில்லன்றி யில்லமென்னுமரத்தினையுணர நின்றசொல்— விசைமரவியற்று - விசையென்னுமரத்தினியல்பிற்றாய் மெல்லெழுத்துமிக்குமுடியும்.— (எ-று) [உ-ம்] இல்லங்கோடு - செதிள் - தோல் - பூ - எனவரும். மேலைச்சூத்திரத்துவழக்கத்தானவென்றதனான் மகரக்கேடுகொள்க. (௰௮)

அல்வழியெல்லாமெல்லெழுத்தாகும். *

இது மகரமல்வழிக்கட்டிரிகவெனமுற்கூறுமையினெய்தாததெய்துவித்தது. அல்வழியெல்லாமெல்லெழுத்தாகும் - மகரவீறல்வழிக்கணெல்லாமெல்லெழுத்தாகத்திரிந்துமுடியும்.— (எ-று) [உ-ம்] மரங்குறிது - சிறிது - தீது பெரிது - எனவரும். மரம்பெரிது - என்புழித்திரிபின்றென்பதானை கூறலென்னுமுத்தி. இனியெல்லாமென்றதனா லல்வழிக்கண்மகரவீறுபிறவாற்றான் முடிவனவெல்லாமுடிக்க. வட்டத்தடுக்கு - சதுரப்பலகை - ஆய்தப்புள்ளி - வெழக்கரும்பு - கலக்கொள் - சுக்கு - தோரை - பயறு - நீலக்கண் - என்னும்பண்புப்பெயர்கள் மகரங்கெட்டுவல்லெழுத்துமிக்குமுடிந்தன. ஆய்தவுலக்கை - அகரமுதல் - இவையியல்புகணத்துக்கண்மகரங்கெட்டுமுடிந்தன. எல்லாருங்குறியர் - நாங்குறியேம் - இவையுயர்திணைப்பெயர்மகரந்திரிந்து மெல்லெழுத்தாய்முடிந்தன. கொல்லுங்கொற்றன் - உண்ணுஞ்சாத்தன் - சவளமாந்து மலைகெழுநாடன் - பொருமாரன் - தாவுபரி - பறக்குநாரை ஓடுநாகம் - ஆடுபோர் - வருகாலம் - கொல்லும்யானை - பாடும்பாணன் - எனவிவை மகரந்திரிந்துங்கெட்டுநிலைபெற்றும்வந்தபெயரெச்சம். இன்னுமிதனானேயியல்புகணத்துக்கண்ணு மகரங்கெடுதலுங்கெடாமையுங்கொள்க. மரஞான்றது - நீண்டது - மாண்டது - யாது - வலிது - அடைந்தது - எனவரும். இன்னுமிதனானேபவளவாயெனவுவமத்தும் - நிலநீரென வெண்ணிடத்தும் கேடுகொள்க. (௰௯)

அகமென்கிளவிக்குக்கைமுன்வரினே, முதனிலையொழியமுன்னவைகெ

•டுதலும்,வரைநிலையின்றேயாசிரியர்க்க,மெல்லெழுத்துமிகுதலாவயினான.※ இது மகரவீற்றல்வழிக்கணிம்மொழியிம்முடிபெய்துகவென்றவினெய்தாததெய்துவித்தது. அகமென்கிளவிக்குக்கைமுன்வரின் - அகமென்னுஞ்சொல்லிற்குக்கையென்னுஞ்சொன்முன்னேவருமாயின் — முதனிலையொழியமுன்னவைகெடுதலும் - முன்னின்றஅகரங்கெடாது நிற்பவதன்முன்னின்றககரமுமகரவொற்றுங்கெட்டுமுடிதலு ங்கெடாதுநின்றுமுடிதலும் — வரைநிலையின்றேயாசிரியர்க்கு - நீக்குநிலைமையின்றாசிரியர்க்கு— ஆவயினான மெல்லெழுத்துமிகுதல் - அவைகெட்டவழிமெல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று)[உ-ம்] அங்கை-எனவரும். அகங்கை-எனக்கெடாதுமுடிந்தவழியல்வழி யெல்லாமென்றதனான்மகரந்திரிந்து முடிதல்கொள்க. இவைபண்புத்தொகை. அதிகாரத்தானும் பொருளேனுக்கானும் வேற்றுமைத்தொகையன்மையுணர்க. (௨௰)

இலமென்கிளவிக்குப்படுவருகாலை,நிலையலுமுரித்தேசெய்யுளான ※ இது இலமென்பதுமுற்றுவினைச்சொல்லாகாதுகுறிப்பாகிய வுரிச்சொல்லாய்நிற்குங்கா லல்வழிக்கண்முடியுமாறுகூறுகின்றது. இலமென்கிளவிக்கு - இல்லாமையென்னுங்குறிப்பாகியவுரிச்சொற்கு — படுவருகாலை- உண்டாதலென்னும்வினைக்குறிப்புப்பெயர்வருமொழியாய்வருங்காலத்து —செய்யுளானநிலையலுமுரித்து - செய்யுளிடத்துமகரக்கேடுந்திரிபுமின்றிநிற்றலுமுரித்து •எனவேஉம்மையாற்பிறசொல்வருங்காலத்துக்கேடுந்திரிபும்பெற்றுநிற்றலுமுரித்து.—(எ-று)[உ.ம்]இலம்படுபுலவரேற்றகைநிறைய இதற்கில்லாமையுண்டாகின்றபுலவரெனப்பொருள்கூறுக-இலம்பாடுநாணுத்தருமென்கின்றதோவெனின் இல்லாமையுண்டாதனாணுத்தருமென்றுபொருள்கூறுக. இதனைநெற்பாடுபெரிதென்றாற்போலக்கொள்க. இதுபொருளிலமெனமுற்றுவினைச்சொல்லாமாறுமுணர்க. இலநின்றதெனக்கெட்டவாறும் இலங்கெடவியந்தான்-இலஞ்சிறிதாக-இலந்தீதென்றுவணக்கசதக்களவரும்வழித்திரிந்தவாறுங்காண்க . எல்லாமென்றதனான் இலம்வருவதுபோலும்- இலம்யாரிடத்தது என வகர யகரங்களின்முன்னர்க்கெடாதுநிற்றல்கொள்க. இதனையிலத்தாற்பற்றப்பட்டபுலவரென வேற்றுமையென்றாராலுரையாசிரிய ரெனின்-பற்றப்பட்டபுலவரென்பதுபெயரெச்சமாதலிற்பற்றவென்னுந்தொழிறோற்றுவிக்கின்றமுதனிலைச்சொல்

லைச் சூத்திரத்தாசிரியரெடுத்தோதிற்றிலராகலானும் படுவென்பது தானும் புலவரென்னும்பெயரோடு முடியுங்கா லிரண்டுகாலமுங்காட்டுமீறுகளொடு க்கமுதனிலைச்சொல்லறியநிற்றலி னதனையெடுத்தோதினாராதலானு மாசிரியர்க்கங்ஙனங் கூறுதல்கருத்தன்மையுணர்க. அன்றியும்பற்றப்பட்ட வென்புழியிரண்டுமுதனிலைகூடியொன்றாய்நின்றுபற்றுதலைச்செய்யப்பட்ட வெனப்பொருடாராமையானு மவ்வழியதிகார மாதலானு மதுபொருளன்மையுணர்க. (௨௰௧)

அத்தொடுசிவணுமாயிரத்திறுதி, யொத்தவெண்ணு,முன்வருகாலை. ※

இஃதிவ்வீற்றுளெண்ணுப்பெயருளொன்றற்குத்தொகைமரபினுளுயிரும் புள்ளியுமிறுதியாகியென்பதனு னெய்தியவேயென்சாரியைவிலக்கியத்து வகுக்கின்றது. ஆயிரத்திறுதி- ஆயிரமென்னுமெண்ணுப்பெயரின்மகரம் —ஒத்தவெண்ணுமுன்வருகாலை - தனக்ககப்படுமொழியாய்ப்பொருந்தின வெண்ணுப்பெயர்தன்முன்வருங்காலத்து— அத்தொடுசிவணும்-தொகை மரபிற்கூறியவேயென்சாரியையொழித்தத்துச் சாரியையோடுபொருந்தி முடியும்.—(எ-று) [உ-ம்] ஆயிரத்தொன்று -ஆயிரத்தொன்பது -ஒன்றுமுதலொன்பதின்காறுமொட்டுக. மகரத்தையத்தின்மிசையொற்றென்றுகெடுத்து அத்தினகரமகரமுனையில்லையென்றுமுடிக்க. ஆயிரத்தொருபது-என்றாற்போல்வனவற்றிற்குமொட்டுக. நிலைமொழிமுற் கூறாததனான் ஆயிரத்துக்குறை-கூறு-முதல்-என்பனவுங்கொள்க. இன்னுமிதனானே ஆயிரப்பத்தென்புழிமகரங்கெடுத்துவல்லொற்றுமிகுத்துமுடிக்க. (௨௰௨)

அடையொடுதோன்றினுமதனோரற்றே. ※

இது அடையொடுதோன்றினும்புணர்நிலைக்குரியவென்றமையினவ்வெண்ணுப்பெயரையடையடுத்துமுடிக்கின்றது. அடையொடுதோன்றினும்- அவ்வாயிரமென்னுமெண்ணுப் பெயரடையடுத்தமொழியோடுவரினும் —அதனோரற்று - முற்கூறியதனோடொருதன்மைத்தாயத்துப் பெற்றுமுடியும்.— (எ-று) [உ-ம்] பதினாயிரத்தொன்று- இரண்டு -இருபதினாயிரத்தொன்று-ஆறாயிரத்தொன்று -நூறாயிரத்தொன்று -முந்நூறாயிரத்தொன்று-ஐந்நூறாயிரத்தொன்று -எனவொட்டுக. முன்னரிலேசினான்முடிந்தவற்றையுமடையடுத்தொட்டுக.பதினாயிரத்துக்குறை- புறம்-கூறு முதல்-எனவும்நூறாயிரப்பத்து-எனவும்வரும். (௨௰௩)

அளவு நிறையும் வேற்றுமையியல. *

இது அவ்வெண்ணின்முன்னரளவுப்பெயருநிறைப்பெயரும்வந்தால்முடியுமாறுகூறுதலினெய்தாததெய்துவித்தது. அளவுநிறையும் - அதிகாரத்தாலாயிரந்தானேநின்றுழியு மடையடுத்துநின்றுழியுமளவுப்பெயருநிறைப்பெயரும்வந்தால் — வேற்றுமையியல - மகரவீற்றுவேற்றுமையோடொத்துவல்லெழுத்துவந்துழிமகரங்கெட்டுவல்லெழுத்துமிக்குமியல்புகணம்வந்துழித் துவரவென்னுமிலேசானெய்தியமகரங்கெட்டும்புணரும் — (எ-று) [உ-ம்] ஆயிரம்-பதினாயிரம்-நூறாயிரம்-எனநிறுத்தி-கலம்-சாடி-தூதை-பானை-நாழி-மண்டை-வட்டில்- அகல்-உழக்கு-எனவும் கழஞ்சு-கழஞ்சு-தொடி-துலாம்-பலம்- எனவுந்தந்தொட்டுக.வேற்றுமையியலவெனவேதாம்வேற்றுமையல்லாவாயின. (௨௰௪)

படர்க்கைப்பெயருமுன்னிலைப்பெயருந், தொடக்கங்குறுகும்பெயர்நிலைக்கிளவியும்வேற்றுமையாயினுருபியனிலையும், மெல்லெழுத்துமிகுதலாவயினான. *

இது உயர்திணைப்பெயரும்விரவுப்பெயருமுருபியலுண்முடிந்தவாறேயீண்டுப்பொருட்புணர்ச்சிக்கண்ணுமுடிகவென வெய்தாததெய்துவித்தது. படர்க்கைப்பெயருமுன்னிலைப்பெயரும் - எல்லாருமென்னும் படர்க்கைப்பெயரும் — முன்னிலைப்பெயரும் - எல்லீருமென்னுமுன்னிலைப்பெயரும்—தொடக்கங்குறுகும்பெயர்நிலைக்கிளவியும் - கிளைத்தொடர்ச்சிப்பொருள்வாய்நெடுமுதல்குறுகிமுடியும் தாம் நாம் யாமென்னும்பெயராகியநிலைமையையுடையசொல்லும்— வேற்றுமையாயினுருபியனிலையும்-வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணாயினுருபு புணர்ச்சிக்குக்கூறியவியல்பின்கண்ணே நின்றுமுடியும்— ஆவயினான மெல்லெழுத்துமிகுதல்-நெடுமுதல்குறுகுமொழிக்கண்மெல்லெழுத்துமிக்குமுடியும்.— (எ-று) எல்லாருமென்பதனைமகரவொற்றுமுகரமுங்கெடுத்துரகரப்புள்ளியைநிறுத்தி கை-செவி- தலை- புறம்-எனத்தந்து இடையிலேதம்முச்சாரியையுமிறுதியிலேயும்முச்சாரியையுங்கொடுத்து எல்லார்தங்கையும் - செவியும்-தலையும்-புறமும் எனமுடிக்க. இதற்கம்மினிறுதியென்னுஞ்சூத்திரத்துள் தன்மெய்யென்றதனாற் பிறசாரியைக்கண் மகரவொற்றுத்திரிந்துநகரவாகுமெனச்செய்கைசெய்துமுடிக்க. எல்லீருமென்பதற்கிடை

யிலே நம்முச்சாரியையுமிறுதியிலேயும்முச்சாரியையுங் கொடுத்துமுற்கூறியசெய்கைகளெல்லாஞ்செய்து எல்லீர் நுங்கையும் - செவியும் - தலையும் - புறமும் - என முடிக்க. தாம் நாம் என்பனவற்றை யேனையிரண்டும் நெடுமுதல்குறுகுமெனக்குறுக்கிமகரவிறுதி யென்பதனான் மகரங்கெடுத்து தங்கை - நங்கை - செவி - தலை - புறம் - என முடிக்க. யாமென்பதனை ஆகாரத்தை எகரமாக்கி யகரவொற்றைக்கெடுத்துமகரவிறுதியென்பதனான்மகரங்கெடுத்து. எங்கை - செவி - தலை - புறம் - என முடிக்க. தொடக்கங்குறுகுவன வற்றிற்கிச்சூத்திரத்தான் மெல்லெழுத்துமிகுக்க. உருபியனிலையு மென்பதனான் வேற்றுமையாதல்பெறுநிற்கவும் பின்னும் வேற்றுமையாயினென்றமிகையானேபடர்க்கைப்பெயருமுன்னிலைப்பெயருமியல்புகணத்து ஞகாரமுநகாரமும்வந் துழித்தம்முச்சாரியையும் நம்முச் சாரியையும் பெறுதலுமகரங்கெட்டும்முப்பெறுதலுமாவயினான் வென்றதனானொற்றிரட்டுதலுங்கொள்க. எல்லார்தஞ்ஞாணும் - எல்லீர் நுஞ்ஞாணும் - நூலும் - என வரும். இனித்தொடக்கங்குறுகுவனவற்றிற்கும் அவ்விரண்டிலேசானுமகரங்கெடுதலுமொற்றிரட்டுதலுங்கொள்க. தஞ்ஞாண் - நஞ்ஞாண் - எஞ்ஞாண் - நூல் - என வரும். இன்னுமாவயினானவென்றதனானே எல்லார்தம் எல்லீர் நும் என நின்றவற்றின்முன்னர் எனை - மணி - யாழ் - வட்டு - அடை என்பனவந்துழிமகரங்கெடாமையும்உம்முப்பெறுதலுங்கொள்க. இன்னுமிதனானே தொடக்கங்குறுகுவன வற்றிற்கும் - தம்மணி - யாழ் - வட்டு - அடை - என மகரங்கெடாமையுங்கொள்க. இன்னுமிதனானே தமகாணம் - நமகாணம் - எமகாணம் - நுமகாணம் - எனவுருபீற்றுச்செய்கைகளுங்கொள்க. இன்னுமிதனானேஎல்லார்கையும் - எல்லீர்கையும் - எனத்தம்முநம்மும்பெறுதுநிற்றலுங்கொள்க. (௨௰௫)

அல்லதுகிளப்பினியற்கையாகும். *

இது முற்கூறியமூன்றுபெயர்க்குமல்வழிமுடிபுகூறுகின்றது. அல்லதுகிளப்பினியற்கையாகும் - அம்மூன்றுபெயருமல்வழியைச்சொல்லுமிடத்தியல்பாய்முடியும். (எ - று) ஈண்டியற்கையென்றதுசாரியைபெறாமைநோக்கி) இவற்றினீறுதிரிதல்வழியெல்லாமென்றதனுளெல்லாமென்றதனாற்கொள்க. [உ - ம்] எல்லாருங்குறியர் - சிறியர் - தீயர் - பெரியர் - எனவும். எல்லீருங்குறியிர் - சிறியிர் - தீயிர் - பெரியிர் - எனவும்தாங்குறியர் - சிறியர்

தீயர்-பெரியர்-எனவும் தாங்குறிய-சிறிய-தீய-பெரிய-எனவும்நாங்குறியம்-சிறியம்-தீயம்-பெரியம்-என்வும் யாங்குறியேம் - சிறியேம்-தீயேம்-பெரியேம்-எனவும்வரும். இன்னுமெல்லாமென்றதனனே இவற்றின்முன்னர் ஞகார நகாரம்வந்தாலவையவ்வொற்றாத்திரிதல்கொள்க. எல்லாருஞ்ஞான்றார்-நீண்டார்-எல்லீருஞ்ஞான்றீர்-நீண்டீர்- எனவும் தாஞ்ஞான்றார்-நீண்டார்-எனவும் நாஞ்ஞான்றாம்-நீண்டாம்-எனவும் யாஞ்ஞான்றேம்-நீண்டேம்-எனவும்வரும். இனியெல்லாரும்வந்தார்- யாத்தார்-அடைந்தார்-எல்லீரும்வந்தீர்-யாத்தீர்-அடைந்தீர் எனவும் தாம்வந்தார்-யாத்தார்-அடைந்தார்-நாம்வருதும்-யாத்தும்-அடைந்தும் - யாம்வருவேம்-யாப்பேம்-அடைவேம்-எனவேனைக்கண்ணங்களின்முன்னர்மகரந்திரியாதுநிற்றலுமுயிரீறாகியவுயர்திணைப்பெயரு மென்பதனுன்முடியும். (௨௬)

அல்லதுகிளப்பினும்வேற்றுமைக்கண்ணு, மெல்லாமெனும்பெயருருபியனிலையும், வேற்றுமையல்வழிச்சாரியை நிலையாது. *

இது இவ்வீற்றுள்விரவுப்பெயருளொன்றற்கல்வழிக்கண்ணும்வேற்றுமைக்கண்ணுமுருபியலோடுமாட்டெறிந்தெய்தாததெய்துவித்தது. அல்லதுகிளப்பினுமவேற்றுமைக்கண்ணும்-அல்வழிக்கட்சொல்லினும்வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கட்சொல்லினும்—எல்லாமெனும்பெயருருபியனிலையும் - எல்லாமென்னும்விரவுப்பெயருருபுபுணர்ச்சியினியல்பிலேநின்றுமுடியும்—வேற்றுமையல்வழிச்சாரியைநிலையாது - அப்பெயர்வேற்றுமைப்பொருட் புணர்ச்சியல்லாதவிடத்து வற்றுச்சாரியைநில்லாதாய்முடியும்—(எ-று) உருபியனிலையுமென்றமாட்டேறு அல்வழிக்கண்ணும்முப்பெற்றுநிற்றலும்பொருட்புணர்ச்சிக்கண் வற்றும்மும்பெற்றுநிற்றலுமுணர்த்திற்று. உம்முச்சாரியையொன்றுமேபெற்றுமுடிகின்றவல்வழியினையும் வற்றும்மும்பெற்று முடிகின்றவேற்றுமையோடொருங்கோதியவும்வற்றுப்பெறுமாறுபோல மாட்டெறிந்தமிகையானே வன்கணத்தல்வழிக்கணிலைமொழி மகரக்கேடும் வருமொழிவல்லெழுத்துப்பேறுமென்கணத்துமகரங்கெட்டும்முப்பெற்றும்பெறுதும்வருதலும் வினைக்கணத்துமகரங்கெட்டும்முப்பெற்றுமகரங்கெடாதும்முப்பெறுதும்வருதலுங்கொள்க. [உ-ம்] எல்லாக்குறியவும்-சிறியவும்-தீயவும்-பெரியவும்-எனவும்எல்லாஞாணும்-நூலும்-மணியும்- எனவும்எல்லாஞான்றன-நீண்டன-மாண்டன-எனவு

மெல்லாயாழும்-வட்டும்-அடையும்-எனவும் எல்லாம்வாடின-ஆடின-என வும்வரும். இனிவேற்றுமைக்கண்-எல்லாவற்றுக்கோடும்-செவியும்-தலையும்-புறமும்-எனவிவைவற்றுமும்முப்பெற்றன. இவற்றிற்குமகரம்வற்றின் மிசையொற்றென்றுகெடுக்க. இனிமென்கணத்துக்கண் எல்லாவற்றுஞாணும்- நூலும் - மணியும் - எனவும் ஏனைக்கணத்துக்கண் எல்லாவற்றியாப்பும்- வலியும் - அடையும் - எனவும்வரும். ஏனைக்கணமும்வற்றுமும்மும் பெற்றன. (௨௭)

மெல்லெழுத் துமிகினுமான மில்லை. *

இது வல்லெழுத்தைவிலக்கிமெல்லெழுத்துவிதித்தலினெய்திய தன்மேற் சிறப்புவிதி. மெல்லெழுத்துமிகினுமானமில்லை- அவ்வெல்லாமென்பதல் வழிக்கண்மேவிலேசினாற்கூறியவல்லெழுத்தேயன்றிமெல்லெழுத்துமிக்கு முடியினுங்குற்றமில்லை. — (எ - று) எனவேவ்வல்லெழுத்துமிகுதலேபெரும்பான்மையாயிற்று முற்கூறியசெய்கைமேலே மிதுகூறினமையின்மகரக்கேடுமும்முப்பேறுங்கோள்க. எல்லாங்குறியவும்- சிறியவும்-தீயவும்-பெரியவும்- எனவரும். மானமில்லையென்றதனானுயர்திணைக்கண்வன்கணத்துமகரங்கெட்டுவல்லெழுத்துமிக்குஇறுதியும்முப்பெற்றுமுடிதலுமியல்புகணத்துக்கண்மகரங்கெட்டும்முப்பெற்று முடிதலுங்கொள்க. எல்லாக்கொல்லரும்- சான்றோரும்- தச்சரும்- பார்ப்பாரும் -குறியரும்-சிறியரும் தீயரும்-பெரியரும்-எனவும்-எல்லாஞான்றோரும் -நாயகரும்-மணியகாரரும்-வணிகரும்-அரசரும்-எனவும்வரும். இன்னுமிதனானேஉயர்திணைக்கண்எல்லாங்குறியரும்-சிறியரும்- தீயரும்-பெரியரும்-எனமகரங்கெட்டு மெல்லெழுத்துமிக்கும்முப்பெறுதலும் எல்லாங்குறியர்-குறியிர்-குறியம் -எனவும்முப்பெறாதுவருதலுங்கொள்க. இன்னுமிதனானேஇடைக்கணத்துமுயிர்க்கணத்துமகரங்கெடாதும் மின்றிவருதலுங்கொள்க. எல்லாம்வந்தேம்-அடைந்தேம்- எனவரும். (௨௮)

உயர்திணையாயினுருபியனிலையும். *

இது எல்லாமென்பதற்குயர்திணைமுடிபுகூறுகின்றது. உயர்திணையாயினுருபியனிலையும் - எல்லாமென்பதுயர்திணையாய் நிற்குமாயின் உருபுபுணர்ச்சியினியல்பிலேநின்றிடைக்கணம்முமிறுதிக்கணும்மும்பெற்றுமுடியும். —(எ-று)உருபியலுள்எல்லாமென்னுமிறுதிமுன்னர்வற்றுச்சாரியைவருத்

நீதனான்வற்றின் மிசையொற்றென்றுமகரங்கெடுத்த வதிகாரத்தானுயர்தி
ணையாயினம்மிடைவருமென நம்மின்முன்னுமகரங்கெடுத்தார்· அதனோடு
ண்டுமொட்டெறிதலினது கொண்டீண்டுமகரங்கெடுக்க. அம்மினிறுதியென்
புழித்தன்மெய்யென்றதனான் நம்முச்சாரியையினது மகரந்திரிதல்கொள்
க. எல்லாநங்கையும்- செவியும் - தலையும்- புறமும் -எனவொட்டுக. வரு
மொழிவரையாதுகூறலின் எல்லாநஞ்ஞாற்சியும்-நீட்சியும்-எனவேற்பன
வற்றோடுமுடிபறிந்தொட்டுக· (உகூ)

நும்மெனொருபெயர்மெல்லெழுத்துமிகுமே· *

இதுமகரவீற்றிற்குவல்லெழுத்துவிலக்கிமெல்லெழுத்துவிதித்தது· நும்மெ
னொருபெயர்மெல்லெழுத்துமிகும் - நும்மென்றுசொல்லப்படுகின்ற
விரவுப்பெயர்பொருட்புணர்ச்சிக்கண் மெல்லெழுத்துமிக்குமுடியும்.—
(எ-று) நுங்கை-செவி-தலை-புறம்-எனவரும். மகரவிறுதியென்பதனான்
மகரங்கெடுக்க · ஒன்றினமுடித்தலென்பதனான் உங்கை-என்பதுங்கொள்
க. துவரவென்றதனான் ஞகரநகரங்கள்வந்துழிமகரங்கெடுதலு மொருபெ
யரென்றதனானொற்றுமிகுதலுங்கொள்க· நுஞ்ஞாண்-நூல்-எனவரும்· இ
ன்னுமொருபெயரென்றதனான் நும்மணி-யாழ்-வட்டு- அடை-எனமகர
ங்கெடாமையுங்கொள்க· (ருய)

அல்லதன்மருங்கிற்சொல்லுங்காலை,யுக்கெடநின்றமெய்வயினீவர,இ
இடைநிலையீறுகெடரகர,நிற்றல்வேண்டும்புள்ளியொடுபுணர்ந்தே, யப்
பான்மொழிவயினியற்கையாகும்· *

இது நும்மென்பதற்கல்வழிமுடிபுகூறுகின்றது. அல்லதன்மருங்கிற்சொ
ல்லுங்காலை-நும்மென்பதனையல்வழிக்கட்கூறுமிடத்து — உக்கெடநின்ற
மெய்வயினீவர- நகரத்துளுகரங்கெட்டுப்போகவொழிந்துநின்றநகரவொ
ற்றிடத்தேயீகாரம்வந்துநிற்ப— இஇடைநிலையீறுகெட- ஒரிகரமிடையி
லேவந்துநிலைபெற்றும்கரமாகியவீறுகெட்டுப்போக — புள்ளிரகரநிற்றல்
வேண்டும் - ஆண்டுப்புள்ளிபெற்றொருரகரம்வந்துநிற்றலைவிரும்புமாசிரி
யன் — அப்பால்வயின்மொழி - அக்கூற்றினையுடையநிலைமொழியிடத்து
வருஞ்சொல்—இயற்கையாகும்-இயல்பாய்முடியும்·— (எ-று) [உ-ம்]
நீயிர்-குறியீர்-சிறியீர்-தீயீர்- பெரியீர்-எனவரும்·சொல்லுங்காலையென்ற
தனானே நீயிர்-ஞான்றீர்- நீண்டீர்-மாண்டீர்-யாத்தீர் - வாடினீர் - அடை

ந்தீர் -எனவேனைக்கணத்திலுமொட்டுக. (௫௧)

தொழிற்பெயரெல்லாந்தொழிற்பெயரியல. *

இதுவேற்றுமைக்கண்மகரங்கெட்டுவல்லெழுத்துமிக்கும்அல்வழிக்கண்மெல்லெழுத்தாத்திரிந்தும் வருமெனவெய்தியதனைவிலக்கி ஞகரவீற்றுத்தொழிற்பெயர்போலநிற்குமெனப்பிறிதுவிதிவகுத்தது. தொழிற்பெயரெல்லாம்-மகரவீற்றுத்தொழிற்பெயரெல்லாம் — தொழிற்பெயரியல- ஞகாரவீற்றுத்தொழிற்பெயர்போல அல்வழியினும்வேற்றுமையினும் வன்கணத்துகரமும்வல்லெழுத்துமியல்புகணத்துகரமும்பெற்றுமுடியும்.—(எ-று) [உ-ம்] செம்முக்கடிது-சிறிது-தீது-பெரிது-ஞான்றது-நீண்டது-மாண்டது-வலிது-எனவும் செம்முக்கடுமை-சிறுமை - தீமை - பெருமை-ஞாற்சி-நீட்சி-மாட்சி-வலிமை-எனவும்வரும். தும்முச்செறுப்பவென்பதுமது. இவைகுறியதன்முன்னர்த்தன்னுருபிரட்டும்—எல்லாமென்றதனானுகரம்பெறாதுநாட்டங்கடிது -ஆட்டங்கடிது-எனமெல்லெழுத்தாவல்வழிக்கட்டிரிதலும்-நாட்டக்கடுமை-ஆட்டக்கடுமைஎனவேற்றுமைக்கண்வலலெழுத்துமிகுதலுங்கொள்க. (௫௨)

ஈமுங்கம்முமுருமென்கிளவியு, மாமுப்பெயருமவற்றோரன்ன. *

இதுபொருட்பெயருட்சிலதொழிற்பெயரோடொத்துமுடிகவெனவெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது.. ஈமுங்கம்முமுருமென்கிளவியு மாமுப்பெயரும்- ஈமென்னுஞ்சொல்லுங்கம்மென்னுஞ்சொல்லுமுருமென்னுஞ்சொல்லுமாகியவம்மூன்றுபெயரும்— அவற்றோரன்ன-முற்கூறியதொழிற்பெயரோடொருதன்மையவாய்வன்கணத்துகரமும்வல்லெழுத்துமியல்புகணத்துகரமும்பெற்றுமுடியும்.—(எ-று) ஈம் என்பது சுடுகாடு. கம்-தொழில்.[உ-ம்]ஈமுக்கடிது-கம்முக்கடிது-உருமுக்கடிது- சிறிது-தீது-பெரிது-ஞான்றது- நீண்டது-மாண்டது- வலிது-எனவும் ஈமுக்கடுமை-கம்முக்கடுமை-உருமுக்கடுமை-சிறுமை-தீமை- பெருமை-ஞாற்சி-நீட்சி-மாட்சி-வலிமை-எனவும்-ஒட்டுக. கிளவியென்றதனான் வேற்றுமைக்கண்ணுமல்வழிக்கண்ணுமுயிர்வருவழியுகரம்பெறாது ஈமடைவு -ஈமடைந்தது-எனநிற்றலுங்கொள்க. தன்னினமுடித்தலென்பதனான். அம்மு-தம்மு-நம்மு-எனச்சாரியைக்கண்ணுமுகரம்வருதல்கொள்க. (௫௫)

வேற்றுமையாயினேனையிரண்டுந்தோற்றம்வேண்டுமக்கென்சாரியை.*

இதுமேன்முடிபுகூறியமூன்றனுளிரண்டற்கும்வேற்றுமைக்கண்வேறோர்முடிபுகூறுகின்றது. வேற்றுமையாயின் - வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயின் — ஏனையிரண்டுந்தோற்றம்வேண்டுமக்கென்சாரியை - இறுதியிலுருமொழிந்தவிரண்டுமக்கென்னுஞ் சாரியைதோன்றிமுடிதலைவேண்டுமாசிரியன்.—(எ-று) [உ-ம்] ஈமக்குடம்-கம்மக்குடம்-சாடி-தூதை-பானை-எனவும்ஞாற்சி-நெருப்பு-மாட்சி-விறகு-எனவுமொட்டுக. அக்குவருப்பவேநிலைமொழித்தொழிலாகியவுகரங்கெட்டுமுற்கூறியவல்லெழுத்துவிலக்கப்படாமையினனறுமுடிந்தது. வன்கணத்திற்குமுன்னின்றசூத்திரத்திற்கூறியதுகுணவேற்றுமைக்கென்றும் ஈண்டுக்கூறியதுபொருட்புணர்ச்சிக்கென்றுங்கொள்க. (௬௪)

வகரமிசையுமகரங்குறுகும். *

இதுமுன்னரணாயளவுகுறுகலெனவும்னகாரமுன்னரொனவுங்கூறியமகரமிருமொழிக்கண்ணுங்குறுகுமெனத்தன்னிற்றகதெய்தாத|தெய்துவிக்கின்றது. வகரமிசையுமகரங்குறுகும் - மகரமொருமொழிக்கண்ணேயன்றிவகரத்தின்மேலுங்குறுகும்.—(எ-று) [உ-ம்] நிலம்வலிது - வருமவண்ணக்கன் - என வரும். (௬௫)

நாட்பெயர்க்கிளவிமேற்கிளந்தன்ன,வத்துமான்மிசைவரைநிலையின்றே,யொற்றுமெய்கெடுதலென்மனார்புலவர். *

இதுஇவ்வீற்றுநாட்பெயர்க்குவேற்றுமைமுடிபுகூறுகின்றது. நாட்பெயர்க்கிளவிமேற்கிளந்தன்ன - மகரவீற்றுநாட்பெயரிசரவீற்றுநாட்பெயர்போலவான்சாரியைபெற்றுமுடியும்—அத்துமான்மிசைவரைநிலையின்று - அத்துச்சாரியையான்சாரியைமேலும்பிறசாரியைமேலும் வருதனீக்குநிலைமையின்று —ஒற்றுமெய்கெடுதலென்மனார்புலவர் - ஆண்டுநிலைமொழிமகரவொற்றுக்கெடுகவென்றுகூறுவர்புலவர். —(எ-று)உம்மையையான்மிசையுமெனமாறுக. [உ-ம்] மகத்தாற்கொண்டான் - ஒணத்தாற்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினன் - என்றேனைநாட்களோடுமொட்டுக. மகரவொற்றுக்கெடுத்தத்தினகரமகரமுனையில்லையெனவகரங்கெடுத்துக்குற்றியலுகரமுமற்றெனவென ஆனேற்றி ஆனினகரமுமென்றதனான்- றகரமாக்கிமுடிக்க. மகத்துஞான்றுகொண்டான்- சென்றான்- தந்தான்-போயினன்- எனஞான்றென்னுஞ்சாரியைமேலத்துவ

ந்தது. வரையாதுகூறினமையி னிம்முடிபு நான்குக்கணத்துங் கொள்க. மகத்தான்ஞாற்றினான் - நிறுத்தான் - மாய்ந்தான் - வந்தான் - அடைந்தான் - எனவரும். (௯௬)

ணகாரவிறுதிவல்லெழுத்தியையிற், றகாரமாகும்வேற்றுமைப்பொருட்கே. *

இதுநிறுத்தமுறையானேணகரவிறுதிவேற்றுமைக்கட் புணருமாறுகூறுகின்றது. ணகாரவிறுதிவல்லெழுத்தியையிற்றகாரமாகும் - ணகாரவீற்றுப்பெயர்வல்லெழுத்துமுதன்மொழிவரு மொழியாய்வந்தியையிற்றகாரமாகும்— வேற்றுமைப்பொருட்கு -வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண். —(எ-று)[உ-ம்]பொற்குடம் - சாடி - தூதை - பானை - என்வரும். (௯௭)

மன்னுஞ்சின்னுமானுமீனும், பின்னுமுன்னும் வினையெஞ்சுகிளவியு, மன்னவியலவென்மனார்புலவர். *

இது அவ்வீற்றசைநிலையிடைச்சொற்களுமேழாம்வேற்றுமை யிடப்பொருளுணரநின்றவிடைச்சொற்களும் வினையெச்சமுமுடியுமாறுகூறுகின்றது. மன்னுஞ்சின்னுமானுமீனும்பின்னுமுன்னும் வினையெஞ்சுகிளவியும் - மன்னென்னுஞ்சொல்லுஞ்சின்னென்னுஞ்சொல்லு மானென்னுஞ்சொல்லுமீனென்னுஞ்சொல்லும்பின்னென்னுஞ்சொல்லுமுன்னென்னுஞ்சொல்லும்வினையெச்சமாகியசொல்லும்— அன்னவியலவென்மனார்புலவர் - முற்கூறியவியல்பினையுடையவாய் ணகரம்றகரமாய்முடியுமென்றுசொல்லுவர்புலவர்—(எ-று)[உ-ம்]அதுமற்கொண்கன்றேரோ- காப்பும்பூண்டிசிற்கடையும்போகல் எனவும் ஆற்கொண்டான் - ஈற்கொண்டான் பிற்கொண்டான் - முற்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - எனவும்வரிற்கொள்ளும் - செல்லும் - தரும் - போம் - எனவும்வரும். பெயரார்ந்தன்மையவாகிய ஆன் - ஈன் என்பனவற்றைமுற்கூறாததனான் - ஆன்கொண்டான் - ஈன்கொண்டான் - என த்திரியாமையுங்கொள்க. பின் - முன் - என்பனபெயருமுருபும்வினையெச்சமுமாய் நிற்றலிற்பெயரீண்டுக்கூறினாரோனையஉருபியலுள்ளும் வினையெஞ்சுகிளவியென்பதன்கண்ணுமுடியும் அப்பெயர்முற்கூறாததனான். பின்கொண்டான் - முன்கொண்டான் - என த்திரியாமையுங்கொள்க. இயலவென்றதனான் உளனென்னுஞ்சுட்டுஉளன்கொண்டானெனவியல்பாய்முடிதல்கொள்க. (௯௮)

சுட்டுமுதல்வயினுமெகரமுதல்வயினுமப், பண்புநிலையுமியற்கைய
வென்ப. *

இது இவ்வீற்றுளேழாம்வேற்றுமையிடப்பொருளுணர்த்துமிடைச்சொற்குமுடிபுகூறுகின்றது. சுட்டுமுதல்வயினும்-சுட்டெழுத்தினைமுதலாகவுடைய வயினென்னுஞ்சொல்லும்— எகரமுதல்வயினும் - எகரமாகியமுதல்வினாவினையுடையவயினென்னுஞ்சொல்லும் — அப்பண்புநிலையுமியற்கையவென்ப - மேனகரம்றகரமாமென்ற தன்மைநிலைபெற்று முடியுமியல்பையுடையவென்றுகூறுவராசிரியர்.—(எ-று)[உ-ம்]அவ்வயிற்கொண்டான்- இவ்வயிற்கொண்டான்,-உவ்வயிற்கொண்டான் - எவ்வயிற்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - எனவரும். இயற்கையவென்றதனாற்றிரியாதியல்பாய்முடிவனவுங்கொள்க. கான்கோழி-எனவரும். (௩௯)

குயினென்கிளவியியற்கையாகும். *

இதுனகாரந்திரியாதியல்பாகவென்றலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. குயினென்கிளவியியற்கையாகும்-குயினென்னுஞ்சொற்றிரியாதியல்பாய்முடியும்.—(எ-று)[உ-ம்]குயின்குழாம்-செலவு- தோற்றம்-பறைவு-எனவரும். குயினென்பதுமேகம். அது அஃறிணைப்பெயர். தொகைமரபினுளுயர்திணைப்பெயரும்விரவுப்பெயருமியல்பாகவென்றார். குயின்வினையுமாம். (௪௰)

எகின்மரமாயினாண்மரவியற்றே. *

இது திரிபுவிலக்கியம்முவகுத்தலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. எகின்மரமாயின் - எகினென்பதுபுள்ளன்றிமரப்பெயராயின்—ஆண்மரவியற்று-ஆண்மரத்தினியல்பிற்றாயம்முப்பெற்றுமுடியும்.—(எ-று)எகினங்கோடு-செதிள்-தோல்-பூ-எனவரும். (௪௰௧)

ஏனையெகினேயகரம்வருமே, வல்லெழுத்தியற்கைமிகுதல்வேண்டும். *

இதுவுமது. திரிபுவிலக்கியகரம்விதித்தலின்) ஏனையெகினேயகரம்வரும்-மரமல்லாதவெகினிலைமொழிக்கண் அகரம்பெற்றுமுடியும்—வல்லெழுத்தியற்கைமிகுதல்வேண்டும்-ஆண்டுவருமொழிவல்லெழுத்தியல்புமிக்குமுடிதலைவேண்டுமாசிரியன்.—(எ-று)[உ-ம்] எகினக்கால-செவி-தலை-புறம்-எனவரும். மேலைச்சூத்திரத்தோடிதனையொன்றாகவோதாததனானியல்புகணத்தும்அகரப்பேறுகொள்க. எகினஞாற்சி-நீட்சி-மாட்சி-வலிமை-யாப்

பு-அடைவு-எனவரும். இயற்கையென்றதனான் அகரத்தோடுமெல்லெழுத்துப்பேறுங்கொள்க. எகினங்கால்-செவி-தலை-புறம்-எனவரும். இனிச்சிறுபான்மை-எகின்சேவல்-எகினச்சேவல்-பெடை-என்பன-ஆறனுருபுவிரிவுழியீண்டையிலேசான்முடிக்க. பண்புகருதியவழியிவ்வோத்தின்புறனடையான்முடிக்க. (௪௰௨)

கிளைப்பெயரெல்லாங்கிளைப்பெயரியல. *

இதுனகரந்திரிதலைவிலக்கியியல்பாகவென்றலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. கிளைப்பெயரெல்லாங்கிளைப்பெயரியல-னகரவீற்றுக்கிளைப்பெயரெல்லாம்ணகாரவீற்றுக்கிளைப்பெயர்போலத் திரியாதியல்பாய்முடியும்.—(எ-று)[உ-ம்]எயின்குடி-சேரி-தோட்டம்-பாடி-எனவரும். எயின்வந்ததென்றஃறிணைக்குமெய்துதலிற்றொகைமரபினுண்முடியாதாயிற்று. ஆண்பெயர்திணைக்கேகூறுதலின்) இனியெல்லாமென்றதனானே-எயினக்கன்னி-பிள்ளை-என அக்கும்வல்லெழுத்தும்பெறுதலும் எயினவாழ்வெனவல்லெழுத்துப்பெறாமையுங்கொள்க. இன்னுமிதனானே பார்ப்பனக்கன்னி-பிள்ளை-குமரி-சேரி-என ஆகாரங்குறுக்கியக்கும்வல்லெழுத்துங்கொடுத்தும் பார்ப்பனவாழ்க்கையெனவல்லெழுத்துக்கொடாதுமுடிக்க. இன்னுமதனானே நான்குகணத்துக்கண்ணும்வெள்ளாளனெனநின்றதனை அன்கெடுத்துப்பிரித்தளகாரவொற்றினைணகரவொற்றாக்கிவெள்ளாண்குமரி பிள்ளை-மாந்தர்-வாழ்க்கை-ஒழுக்கம்-எனமுடிக்க. இன்னுமதனானேமுதலெழுத்தைநீட்டிளகாரவொற்றினைக்கெடுத்துவேளாளனென்னமுடிக்க. இதனானேபொருநவாழ்க்கையுமுடிக்க. வேட்டுவக்குமரியென்பதுமரூஉவழக்கு. (௪௩)

மீனென்கிளவிவல்லெழுத்துறழ்வே. *

இதுவுமது. தன்றிரிபுவல்லெழுத்தினோடுறழ்கவென்றலின்) மீனென்கிளவிவல்லெழுத்துறழ்வு- மீனென்னுஞ்சொற்றிரிபுவல்லெழுத்தினோடுறழ்ந்துமுடியும்.—(எ-று)[உ-ம்]மீன்கண்-மீற்கண்-மீன்சினை-மீற்சினை-மீன்றலை-மீற்றலை-மீன்புறம்-மீற்புறம்-எனவரும். (௪௰௪)

தேனென்கிளவிவல்லெழுத்தியையின், மேனிலையொத்தலும்வல்லெழுத்துமிகுதலு,மாமுறையிரண்டுமுரிமையுமுடைத்தே, வல்லெழுத்துமிகுவழியிறுதியில்லை. *

இதுவுமது. மேலதனோடுமோட்டெறிதலின்) தேனென்கிளவிவல்லெழுத்

•தியையின் - தேனென்னுஞ்சொல்வல்லெழுத்துமுதன்மொழிவருமொழியாய்வரின் — மேனிலையொத்தலும் - மீனென்பதற்குக்கூறியதிரிபுறழ்ச்சிநிலையொத்துமுடிதலும் — வல்லெழுத்துமிகுதலும் - வருமொழிவல்லெழுத்துமிக்குமுடிதலுமாகிய — ஆமுறையிரண்டுமுரிமையுமுடைத்து - அம்முறைமையினையுடையவிரண்டினையுமுரித்தாதலையுமுடைத்து — வல்லெழுத்துமிகுவழியிறுதியில்லை - வல்லெழுத்துமிக்குவருமிடத்திறுதியினின்றனகரங்கெடும் (எ-று) உரிமையுமென்னுமும்மைமெல்லெழுத்துமிகினுமெனமேல்வருகின்றதனைநோக்கிற்று. [உ-ம்] தேன்குடம் - தேற்குடம் - சாடி - தாழி - பானை - எனமேனிலையொத்தன. தேக்குடம் - சாடி - தாழி - பானை - யெனனகரங்கெட்டுவல்லெழுத்துமிக்கன. (௪௰௫)

மெல்லெழுத்துமிகினுமானமில்லை. *

இதுவுமது. உறழ்ச்சியும்வல்லெழுத்தும்விலக்கிமெல்லெழுத்துவிதித்தவின்) மெல்லெழுத்துமிகினுமானமில்லை - முற்கூறியதேனென்கிளவிவல்லெழுத்துவந்தால்வல்லெழுத்துமிகுதலேயன்றிமெல்லெழுத்துமிகினுங்குற்றமில்லை. — (எ-று) னகரக்கேடதிகாரத்தாற்கொள்க. [உ-ம்] தேங்குடம் - சாடி - தூதை - பானை - எனவரும். (௪௬)

மெல்லெழுத்தியையினிறுதியொடுறழும். *

இதுதொகைமரபினுள்வேற்றுமைக்கண்ணும்வல்லெழுத்தல்வழியென்பதனாற்கூறியவியல்பைவிலக்கியுறழுமென்றலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. மெல்லெழுத்தியையின் - அத்தேனென்கிளவிமெல்லெழுத்துமுதன்மொழிவந்தியையின் — இறுதியொடுறழும் - நிலைமொழியிறுதியினகரவொற்றுக்கெடுதலுங்கெடாமையுமாகியவுறழ்ச்சியாய்முடியும். — (எ-று) [ உ-ம் ] தேன்ஞெரி - தேஞெரி - தேனுனி - தேநுனி - தேன்மொழி - தேமொழி - எனவரும். மேல்ஆமுறையென்றதனான் - தேஞெரி - தேஞ்ஞெரி - தேநுனி - தேந்நுனி - தேமொழி - தேம்மொழி - எனனகரங்கெட்டுத்தத்தமெல்லெழுத்துமிக்குமிகாதுமுடிந்தனவுங்கொள்க. இனிமேன்மானமில்லையென்றதனானிறுகெட்டு மெல்லெழுத்துமிகாதியல்பாய் முடிவனவுங்கொள்க. தேஞெரி - தேநுனி - தேமொழி - என்பனகாட்டினவைமுற்கூறியவற்றுளடங்கும். (௪௭)

இருஅற்றோற்றமியற்கையாகும். *

இது அத்தேனென்பதற்குயிர்க்கணத்தொருமொழிமுடிபுவேற்றுமைகூறுகின்றது. இறாஅற்றோற்றம் - தேனென்னுஞ்சொல் இறாலென்னும்வருமொழியதுதோற்றத்துக்கண் — இயற்கையாகும் - நிலைமொழியினகரங்கெடாதேநின்றியல்பாய்முடியும். — (எ-று) [உ-ம்] தேனிறால்- எனவரும்.

ஒற்றுமிகுதகரமொடு நிற்றலுமுரித்தே. *

இதுவுமதற்கெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது. ஒற்றுமிகுதகரமொடுநிற்றலுமுரித்து- அத்தேனென்பதிறாலொடுபுணருமிடத்துப்பிறிதுமோர்தகரத்தோடுநின்றுமுடிதலுமுரித்து. — (எ-று) வல்லெழுத்துமிகும்வழியிறுதியில்லை. யென்றதனா னிலைமொழி யீறுகெடுக்க. தகரமென்னாதொற்றுமிகுமென்றதனானீரொற்றாக்குக. [உ-ம்] தேத்திறால்- தேனிறால்- எனவரும். மேலைச்சூத்திரத்தோடிதனையொன்றாகவோதாததனாற் பிறவருமொழிக்கண்ணுமிம்முடிபுகொள்க. தேத்தடை- தேத்தீ- எனவரும். தோற்றமென்றதனால்தேனடை- தேனீ- என்னுமியல்புங்கொள்க. (௪௰௯)

மின்னும்பின்னும்பன்னுங்கன்னு,மந்நாற்சொல்லுந்தொழிற்பெயரியல. *

இது அல்வழிக்கண்ணியல்பாயும்வேற்றுமைக்கட்டிரிந்தும்வருகவெனவெய்துவித்தமுடிபைவிலக்கித்தொழிற்பெயரியல்பாமெனப்பிறிதுவிதிவகுத்தது. மின்னும்பின்னும்பன்னுங்கன்னுமந்நாற்சொல்லும் - மின்னென்னுஞ்சொல்லும்பின்னென்னுஞ்சொல்லும்பன்னென்னுஞ்சொல்லுங்கன்னென்னுஞ்சொல்லுமாகியவந்நான்குசொல்லும்— தொழிற்பெயரியல- அல்வழியினும்வேற்றுமையினுமுகரவீற்றுத்தொழிற்பெயர் போலவன்கணத்துகரமும்வல்லெழுத்துமென்கணத்துமிடைக்கணத்துவகரத்துமுகரமும்பெற்றுமுடியும்.— (எ-று) மின்னுச்செய்விளக்கத்து- பின்னுப்பிணியவிழ்ந்த. [உ-ம்] பன்னுக்கடிது- கன்னுக்கடிது- சிறிது- தீது- பெரிது ஞான்றது- நீண்டது- மாண்டது- வலிது- எனவும் மின்னுக்கடுமை- பின்னுக்கடுமை- பன்னுக்கடுமை- கன்னுக்கடுமை- சிறுமை- தீமை- பெருமை- ஞாற்சி- நீட்சி- மாட்சி- வலிமை- எனவும்வரும். தொழிற்பெயரொலவாந்தொழிற்பெயரியல வென்றோதாதுகிளந்தோதினாரிவைதொழினிலைக்கணன்றி வேறுதம்பொருளுணரநின்றவழியுமிம் முடிபெய்து மென்றற்கு) மின்னென்பதுமின்னுதற்றொழிலுமின்னுநிமிர்ந்தனனெனமின்னெனப்படுவதோர்பொருளுமுணர்த்தும். ஏனையவுமன்ன. (௫௰)

வேற்றுமையாயினேனையெகினொடு, தோற்றமொக்குங்கன்னென்கிளவி. ※

இது நிலைமொழிக்கண் ணுகரம்விலக்கியகரம்வகுத்தலினெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தது. வேற்றுமையாகினேனையெகினொடுதோற்றமொக்கும் - வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயினொழிந்தமரமல்லாதவெகினொடுதோற்றமொத்து அகரமும்வல்லெழுத்தும்பெற்றுமுடியும் — கன்னென்கிளவி - கன்னென்னுஞ்சொல் — (எ-று) [உ-ம்] கன்னக்குடம் - சாடி - தூதை - பானை - ஞாற்சி - நீட்சி - மாட்சி - வலிமை - எனவரும். கன்னக்கடுமை - எனக்குணவேற்றுமையுஞ்சிறுபான்மைகொள்க. தோற்றமென்றதனாலல்வழிக்கண்வன்கணத்தகரமுமெல்லெழுத்து மேனைக்கணத்தகரமுங்கொள்க. கன்னங்கடிது - சிறிது - தீது - பெரிது - ஞான்றது - நீண்டது - மாண்டது - வலிது - என்வரும். கன்னங்கடுமை யெனக்குணவேற்றுமைக்கண்ணுமிவ்விதிகொள்க. பொன்னகரவளைப்பிற்கன்னந்தூக்கியென்பதோவெனினது மகரவீற்றுப்பொருட்பெயர். (௫௰௧)

இயற்பெயர்முன்னர்த்தந்தைமுறைவரின், முதற்கண்மெய்கெடவகரநிலையு, மெய்யொழித்தன்கெடுமவ்வியற்பெயரே. ※

இது அஃறிணைவிரவுப்பெயரியல்புமாருளவேயென்றதற்கீண்டுத்திரிபு கூறவினெய்தாததெய்துவித்தது. இயற்பெயர்முன்னர்த்தந்தைமுறைவரின் - இவ்வீற்றுவிரவுப்பெயருளியற்பெயரின்முன்னர்த் தந்தையென்னுமுறைப்பெயர்வருமொழியாய்வருமாயின் — முதற்கண்மெய்கெடவகரநிலையும் - அத்தந்தையென்பதன்முதற்கணின்றதகரவொற்றுக்கெட வதன்மேலேறிநின்றஅகரங்கெடாதுநிற்கும் — அவ்வியற்பெயர்மெய்யொழித்தன்கெடும் - அந்நிலைமொழியாகிய வியற்பெயர் அன்னென்னுஞ்சொல்விலகரமேறிநின்ற மெய்யையொழித்து அவ்வன்றான்கெட்டுமுடியும். — (எ-று) [உ-ம்] சாத்தந்தை - கொற்றந்தை - எனவரும். முதற்கண்மெய்யென்றதனால்சாத்தன்றந்தை - கொற்றன்றந்தை - என்னுமியல்புமுடிபுங்கொள்க. (௫௰௨)

ஆதனும்பூதனுங்கூறியவியல்பொடு, பெயரொற்றகரந்துவரக்கெடுமே. ※

இதுமேலதற்கெய்தியதன்மேற்சிறப்புவிதி. ஆதனும்பூதனும் - முற்கூறியவியற்பெயருளாதனும்பூதனுமென்னுமியற்பெயர்கள் தந்தையென்னுமுறைப்பெயரொடுமுடியுங்கால் — கூறியவியல்பொடு - முற்கூறியநிலை

மொழியன்கெடுதலும் வருமொழித்தகரவொற்றுக் கெடுதலுமாகியசெய்கைகளுடனே—பெயரொற்றகரந்துவரக்கெடும்- நிலைமொழிப்பெயரிலன்கெடநின்றதகரவொற்றும்வருமொழியிற்றகரவொற்றுக்கெடநின்றஅகரமுமுற்றக்கெட்டுமுடியும்.—(எ-று)[உ-ம்] ஆந்தை-பூந்தை-எனவரும். இயல்பென்றதனால்பெயரொற்றும்அகரமுங்கெடாதேநிற்றலுங்கொள்க. ஆதந்தை-பூதந்தை-எனவரும். இனித்துவரவென்றதனான் அழான்-புழான்-என நிறுத்திதந்தைஎனவருவித்து. நிலைமொழினகரமும்வருமொழித்தகரமும் அகரமுங்கெடுத்து அழாந்தை-புழாந்தை-எனமுடிக்க. (௫௰௩)

சிறப்பொடுவருவழியியற்கையாகும். *

இஃதெய்திய துவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. சிறப்பொடுவருவழி - அவ்வியற்பெயர்பண்படுத்துவரும்வழி— இயற்கையாகும்-முற்கூறியவிருவகைச்செய்கையுந்தவிர்ந்தியல்பாய்முடியும்.—(எ-று)[உ-ம்] பெருஞ்சாத்தன்றந்தை-பெருங்கொற்றன்றந்தை- எனவரும். கொற்றங்கொற்றன்றந்தை-சாத்தங்கொற்றன்றந்தை - என்றாற்போல்வனபண்பன்றியடையடுத்தனவாதவிற்புறனடையான்முடிக்க. (௫௰௪)

அப்பெயர்மெய்யொழித்தன்கெடுவழியே, நிற்றலுமுரித்தேயம்மென்சாரியை, மக்கண்முறைதொகூஉமருங்கினான. *

இதுமேலதற்குவேறோர்வருமொழிக்கணெய்தாததெய்துவித்தது. அப்பெயர்மக்களானமுறைதொகூஉமருங்கினும் - அவ்வியற்பெயர்முன்னர்த்தந்தையன்றிமகனாகிய முறைப்பெயர்வந்துதொகுமிடத்தினும்—மெய்யொழித்தன்கெடுவழியம்மென்சாரியை நிற்றலுமுரித்து- அவ்வியற்பெயரிற்றோன்றியமெய்நிற்கஅன்கெடுமிடத்து அம்முச்சாரியைவந்துநிற்றலுமுரித்து.-(எ-று) ஆனவென்பதனைமக்களோடுமும்மையைமருங்கினோடுங்கூட்டுக-முறைதொகூஉமருங்கினென்றதுஇன்னாற்குமகனென்னுமுறைப்பெயராய்ச்சேருமிடத்து.— [உ-ம்] சொற்றங்கொற்றன் -சாத்தங்கொற்றன்-எனநிலைமொழியன்கெட்டுழியம்முவந்தது. இவற்றிற்கதுவெனுருபுவிரியாததனுடைமைப்பொருள்விரிக்க. இதுமுறைப்பெயர். இனிக்கொற்றங்குடி-சாத்தங்குடி-என்பனபிறபெயர்தொக்கன. மெய்யொழித்தென்றதனானேகொற்றமங்கலம்-சாத்தமங்கலம் - என்பனவற்றின்கணம்மின்மகரங்கெடுதலும் வேட்டமங்கலம்-வேட்டங்குடி- என்பனவற்றினி

லமொழியொத்திரட்டுதலுங்கொள்க. (௫௰௫)

தானும்பேனுங்கோனுமென்னு,மா முறையியற்பெயர்திரிபிடனிலவே. ※

இது மேலதற்கொருவழியெய்திய துவிலக்கிப்பிறிதுவிதிவருத்தது. தானும்பேனுங்கோனுமென்னுமா முறையியற்பெயர் - அவ்வியற்பெயருள் தானும் பேனுங்கோனுமென்னு மம்முறையினையுடையவியற்பெயர்கள்தந்தையொடுமக்கண்முறைமையொடும்புணரும்வழி — திரிபிடனில - முற்கூறிய திரிபுகளின்றி யியல்பாய்முடியும் —(எ-று) [உ-ம்] தான்றந்தை-பேன்றந்தை - கோன்றந்தை- எனவும் தான்கொற்றன் - பேன்கொற்றன்- கோன்கொற்றன் -எனவும்வரும். பேன்-கோன்-என்பன முற்காலத்துவழக்கு. இவைதொகைமரபினுளஃறிணைவிரவுப்பெயரொன்புழியியல்பாயினுமீண்டிவ்வீற்றிற்குத் திரிபுகூறுதலினதனையும்விலக்கி யியல்பாமென்புதூஉங்கூறினார். (௫௰௬)

தான்யானெனும்பெயருருபியனிலையும். ※

இஃதெய்திய துவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. தொகைமரபினுளஃறிணைவிரவுப்பெயரொன்பதனுளே இயல்பாய்நின்றதானென்பதனையுமுயிரீறாகிய வென்பதனுனியல்பாய்நின்றயானென்பதனையு மவ்வியல்புவிலக்கியுருபியலோடுமாட்டெறிதலின்) தான்யானெனும்பெயர் - தானென்னும்விரவுப்பெயரும்யானென்னுமுயர்திணைப்பெயரும் — உருபியனிலையும் - உருபியலிற்கூறியவியல்பிலேநிலைபெற்றுத் தானென்பது நெடுமுதல்குறுகித்தன்னென்றும்யானென்பதாகாரமெகாரமாயகரங்கெட்டெனனென்றுமுடியும்.—(எ-று) [உ-ம்] தன்கை-என்கை-செவி- தலை-புறம்-எனவரும். வருமொழிவரையாதுகூறினமையினியல்புகணத்துக்கண்ணும்- தன்ஞாண் -என்ஞாண் - நூல்-மணி-யாழ்-வட்டு-அடை -ஆடை-எனவரும். (௫௰௭)

வேற்றுமையல்வழிக்குறுகலுந்திரிதலுந், தோற்றமில்லையென்மனார்புலவர். ※

இது அல்வழிக்கணியல்பாகவென்றலினெய்தாததெய்துவித்தது. வேற்றுமையல்வழி - முற்கூறிய தான்யானென்பனவேற்றுமைப்புணர்ச்சியல்லாதவிடத்து — குறுகலுந்திரிதலுந்தோற்றமில்லையென்மனார்புலவர் - தானென்பதுநெடுமுதல்குறுகுதலும் யானென்பதவ்வாறுதிரிதலுந்தோற்றமின்றியியல்பாய்முடியுமென்றுகூறுவர்புலவர்.(எ-று)[உ-ம்] தான்குறிய

ன் - சிறியன் - தீயன் - பெரியன் - ஞான்றான் - நீண்டான் - மாண்டான் - வலிய
ன் - நீண்டேன் - எனவும் யான்குறியேன் - சிறியேன் - தீயேன் - பெரியேன் -
ஞான்றேன் - மாண்டேன் - வலியேன் - எனவும்வரும். தோற்றமென்றத
னான்வேற்றுமைக்கணவ்வாறன்றினகரந்திரிதலுங்கொள்க. தற்புகழ் - தற்பா
டி - எற்புகழ் - எற்பாடி - எனவரும். (௫௰௮)

அழனெனிறுதிகெடவல்லெழுத்துமிகுமே. *

இது வேற்றுமைக்கணகரந்திரியாதுகெடுகவென்றவினெய்தியதுவிலக்கி
ப்பிறிதுவிதிவகுத்தது. அழனெனிறுதிகெட - அழனென்னுஞ்சொற்ற
ன்னீற்றுனகரங்கெட — வல்லெழுத்துமிகும் — வல்லெழுத்துமிக்குமுடியு
ம். — (எ - று) [உ - ம்] அழக்குடம் - சாடி - தூதை - பானை - எனவரும். அழக்
குடமென்பது பிணக்குடத்தை. (௫௰௯)

முன்னென்கிளவிமுன்னர்த்தோன்றும், மில்லென்கிளவிமிசைறகர
மொற்ற, றொல்லியன்மருங்கின்மரீஇயமரபே. *

இதுமருவின்றொகுதியென்பதனாற்கூறியவிலக்கணமருக்களிலொன்றற்கு
முடிபுகூறுகின்றது. முன்னென்கிளவிமுன்னர்த்தோன்றுமில்லென்கிள
விமிசை - முன்னென்னுஞ்சொல்லின்முன்னேவருமில்லென்னுஞ்சொல்லி
ன்மேலே — றகரமொற்றல் - ஒருறகரவொற்றுவந்துநின்றுமுடிதல் —
தொல்லியன்மருங்கின்மரீஇயமரபு - பழையதாகியவியல்பினையுடையவழ
க்கிடத்துமருவிவந்தவிலக்கணமுடிபு. - (எ. று) [உ. ம்] முன்றில் எனவரும்.
இன்முன்னெனநிற்கற்பாலதுமுன்றிலென்றுதலைதடுமாறுதலின்மருவாயி
ற்று. முன்னென்பதற்கொற்றிரட்டுதலிலக்கணமேனுமதுவன்றித் தனக்கி
னமாயதோர்றகரவொற்றுப்பெறுதலின்வேறுமுடிபாயிற்று. (௬௰)

பொன்னென்கிளவியீறுகெடமுறையின், முன்னர்த்தோன்றும்லகார
மகாரஞ், செய்யுண்மருங்கிற்றொடரியலான. *

இஃதிவ்வீற்றிற்குச் செய்யுண்முடிபு கூறுதலினெய்தாததெய்துவித்தது.
பொன்னென்கிளவியீறுகெட - பொன்னென்னுஞ்சொற்றன்னீறாகியன
கரங்கெடாநிற்க. — முன்னர்லகாரமகாரமுறையிற்றோன்றும் - அதன்
முன்னர்லகரமுமகரவொற்று முறையானேவந்துநிற்கும் — செய்யுண்ம
ருங்கிற்றொடரியலான - அங்ஙனநிற்பதுசெய்யுளிடத்துச்சொற்கடம்மு
ட்டொடர்ச்சிப்படுமியல்பின்கண். — (எ - று) [உ - ம்] முறையினென்றதனு

ன்மகரமொற்றுதல்கொள்க. பொலம்படப்பொலிந்தகொய்சுவற்புரவியெனவரும். தொடரியலானவென்றதனானே வன்கணத்துக்கண்ணும் லகரம்நிற்கமகரம்வல்லெழுத்திற்கேற்ற மெல்லெழுத்தாகத்திரிதல்கொள்க. பொலங்கலஞ்சுமந்த பூண்டாங்கிளமுலை-பொலஞ்சுடராழிபூண்டதேரோ-பொலந்தேர்க்குட்டுவன்எனவரும். இன்னுமிதனானே பொலநறுந்தெரியல்-பொலமலராவிரை என்றாற்போலமகரங்கெட்டுப்பிறகணத்துமுடிதலுங்கொள்க. (௯௰௧)

யகரவிறுதிவேற்றுமைப்பொருள்வயின், வல்லெழுத்தியையினவ்வெழுத்துமிகுமே. *

இது முறையானேயகரவீற்றிற்குவேற்றுமைமுடிபுகூறுகின்றது. யகரவிறுதிவேற்றுமைப்பொருள்வயின்-யகரவீற்றுப்பெயர்வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்— வல்லெழுத்துமிகும் - வல்லெழுத்துமுதன்மொழிவந்தியையினவ்வெழுத்துமிக்குமுடியும்.—(எ-று)[உ-ம்]நாய்க்கால்-செவி-தலை-புறம்-எனவரும். (௯௨)

தாயென்கிளவியியற்கையாகும். *

இது விரவுப்பெயருளொன்றற்கெய்தியவல்லெழுத்துவிலக்கிப்பிறிதுவிதி வகுத்தது. தாயென்கிளவியியற்கையாகும் - தாயென்னுஞ்சொல்வல்லெழுத்துமிகாதியல்பாய்முடியும்.—(எ-று) [உ-ம்] தாய்கை-செவி-தலை-புறம்-என்வரும். மேலைச்சூத்திரத்தான்மிகுதியுங்கூறுதலி னஃறிணைவிரவுப்பெயருளடங்காதாயிற்று. (௯௰௩)

மகன்வினைகிளப்பின்முதனிலையியற்றே. *

இது எய்தாததெய்துவித்தது. தாயென்பதடையடுத்துழிவல்லெழுத்துமிகுகவென்றலின்)மகன்வினைகிளப்பின் -தாயென்னுஞ்சொற்றனக்கடையாய்முன்வந்தமகனதுவினையைப்பின்னுகவொருவன்கூறுமிடத்து — முதனிலையியற்று - இவ்வீற்றுண்முதற்கட்கூறிய நிலைமையினியல்பிற்றாய்வல்லெழுத்துவந்துழிவல்லெழுத்துமிக்குமுடியும்.—(எ-று) [உ-ம்] மகன்றாய்க்கலாம்-செரு-தார்த்தல்- பகைத்தல்-எனவும்மகன்றாயோடுகலாய்த்தகலாம்-எனவிரியும். ஏனையவற்றிற்குமேற்குமுருபுவிரிக்க.வினையீண்டுப்பகைமேற்று. (௯௰௪)

மெல்லெழுத்துறழுமொழியுமாருளவே. *

இதுஎய்தாததெய்துவித்தது. மெல்லெழுத்துறழுமொழியுமாருள - ய கரவீற்றுளதிகாரவல்லெழுத்திரேறடுமெல்லெழுத்து மிக்குறழ்ந்துமுடிவ னவுமுள.—(எ-று)[உ-ம்]வேய்ங்குறை-வேய்க்குறை-செய்கை-தலை-பு றம்-எனவரும். (௬௫௰)

அல்வழியெல்லாமியல்பெனமொழிப. *

இது அவ்வீற்றல்வழிக்கெய்தாததெய்துவித்தது. அல்வழியெல்லாமிய ல்பெனமொழிப-யகரவீற்றல்வழியெல்லாமியல்பாய்முடியும்.—(எ-று) [உ-ம்]நாய்கடிது-சிறிது-தீது-பெரிது-எனவரும். எல்லாமென்றதனு ல் அவ்வாய்க்கொண்டான்-இவ்வாய்க்கொண்டான்-உவ்வாய்க்கொண்டா ன்-எவ்வாய்க்கொண்டான்-சென்றான்-தந்தான்-போயினன்-எனவுருபி ன்பொருள்படமுடிப்பனவும் தாய்க்கொண்டான் - தூய்க்கொண்டான் என்றாற்போலும்வினையெச்சமும் பொய்ச்சொல்-மெய்ச்சொல்-எய்ப்ப ன்றி-என்றாற்போலும்பண்புத்தொகையும் வேய்கடிது-வேய்க்கடிது-எ ன்னுமல்வழியுறழ்ச்சிமுடிவுங்கொள்க. (௬௫௬)

ரகாரவிறுதியகாரவியற்றே. *

இதுநிறுத்தமுறையானேரகாரவீற்றுவெற்றுமைமுடிபுகூறுகின்றது. ர காரவிறுதி-ரகாரவீற்றுப்பொருட்புணர்ச்சிக்கண்—யகாரவியற்று-யகார வீற்றியல்பிற்றாய்வல்லெழுத்துவந்துழி வல்லெழுத்து மிக்குமுடியும்.— (எ-று)[உ-ம்]தேர்க்கால்-செலவு-தலை-புறம்-எனவரும். இம்மாட்டேற் றினையகரவீற்றுவேற்றுமையல்வழியென்னு மிரண்டையுங்கருதிமாட்டெ றிந்தாரென்பாரல்வழிமுடிபுமீண்டுக்காட்டுவர். யாமிவ்வோத்தின்புறன டையிற்காட்டுதும்.இதுழகரவீற்றிற்குமொக்கும். மாட்டேற்றானுறழ்ச்சி யுங்கொள்க.வேர்ங்குறை-வேர்க்குறை-எனவரும். (௬௫௭)

ஆரும்வெதிருஞ்சாரும்பீரு மெல்லெழுத்துமிகுதன்மெய்பெறத் தோன்றும். *

இஃதிவ்வீற்றிற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. ஆரும்வெதிருஞ் சாரும்பீரும்-ஆவென்னுஞ்சொல்லும்வெதிரென்னுஞ்சொல்லுஞ்சாரென் னுஞ்சொல்லும்பீரென்னுஞ்சொல்லும் — மெல்லெழுத்துமிகுதன்மெய் பெறத்தோன்றும்- மெல்லெழுத்துமிக்குமுடிதல்மெய்ம்மைபெறத்தோ ன்றும்.—(எ-று) [உ-ம்] ஆர்ங்கோடு-வெதிர்ங்கோடு-சார்ங்கோடு-பீர்ங்

கோடு-செதிள்-தோல்- பூ- எனவரும். பீர்மரமென்பார்பீர்ங்கோடென்பர்·பீர்வரப்பிரிந்தநீரறுநிறைமுறைசெய்வோனென்றாற்போலச்சான்றோர்பலருஞ் செய்யுள்செய்தவாறுகாண்க· மெய்பெறவென்றதனான் ஆரங்கண்ணியடுபோர்சசோழர்என்ஆரம்முப்பெறுதலும்-மாரிப்பீரத்தலர்சிலர்கொண்டேனப்பீர்அத்துப்பெறுதலுங்கொள்க. இதனையதிகாரப்புறனடையான்முடிப்பாருமுளர்· இன்னுமிதனனே கூர்ங்கதிர்வேல் ஈர்ங்கோதை எனப்பண்புத்தொகையும் குதிர்ங்கோடு-விலர்ங்கோடு-அவர்ங்கோடு-துவர்ங்கோடு-என்றாற்போல்வனவுங்கொள்க· இதனனே துவரங்கோடெனஅம்முப்பெறுதலுங்கொள்க. (௬௮)

சாரென்கிளவிகாழ்வயின்வலிக்கும். ※

இது எய்தியதன்மேற்சிறப்புவிதிவகுத்தது· சாரென்கிளவிகாழ்வயின்வலிக்கும்- சாரென்பதுகாழென்பதனோடுபுணருமிடத்துவல்லெழுத்துமிக்குப்புணரும்·—(எ·று)[உ-ம்]சார்க்காழ்-எனவரும்சாரினதுவித்தென்பதேபொருள்·இதனைவயிரமெனிற்கிளந்தோதுவாரென்றுணர்க. (௬௯)

பீரென்கிளவியம்மொடுசிவணும். ※

இது எய்தியதன்மேற்சிறப்புவிதிவகுத்தது· பீரென்கிளவியம்மொடுசிவணும்-பீரென்னுஞ்சொல்மெல்லெழுத்தேயன்றியம்முப்பெற்றுமுடியும்.—(எ·று)[உ-ம்]பீரங்கொடி-செதிள்-தோல்-பூ-எனவும்பொன்போற்பீரமொடுபூத்தபுதன்மலர்எனவும் வரும்· உம்மையிறந்ததுதழுவிற்று.(௭௰)

லகாரவிறுதினகாரவியற்றே. ※

இது முறையானேலகாரவீற்றைவேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கட்புணர்க்கின்றது· லகாரவிறுதினகாரவியற்று -லகாரவீற்றுப்பெயர்வன்கணம்வந்துழி னகாரவீற்றியல்பிற்றாய்லகரம் றகரமாகத்திரிந்துமுடியும்·( எ - று ) [உ-ம்]கற்குறை-சிறை-தலை-புறம்-எனவும்· (௭௰௧)

மெல்லெழுத்தியையினகாரமாகும். ※

இது னகாரமாமென்றலினவற்றிற்கெய்தாததெய்துவித்தது· மெல்லெழுத்தியையினகாரமாகும் - அவ்வீற்றுமென்கணம் வந்திலயினகாரமாகத்திரிந்துமுடியும்·—(எ-று) [உ-ம்]கன்ஞெரி-நுனி- முரி-எனவரும்·இச்சூத்திரத்தினைவேற்றுமையிறுதிக்கணல்வழியதெடுத்துக்கோடற்கட்சிங்கநோக்காகவைத்தமையானல்வழிக்குமிம்முடிபுகொள்க· கன்ஞெரிந்தது

-நீண்டது-மாண்டது-எனவரும். (௭௰௨)

அல்வழியெல்லா முறழெனமொழிப. *

இஃது தவ்வீற்றல்வழிமுடிபுகூறுகின்றது. அல்வழியெல்லா முறழென மொழிப - இவ்வீற்றல்வழிகளெல்லாந்தந்திரிபுவல்லெழுத்திேனா டுறழ்ந்துமுடியுமென்றுகூறுவர்புலவர்.—(எ-று) [உ-ம்]கல்குறிது-கற்குறிது-சிறிது-தீது-பெரிது-எனவரும். எல்லாமென்றதனால் கல்குறுமை-கற்குறுமை-சிறுமை-தீமை-பெருமை- எனக்குணம்பற்றிவந்தவேற்றுமைக்குமுறழ்ச்சிகொள்க. இன்னுமிதனானேவினைச்சொலீறு திரிந்தனவுமுருபுதிரிந்தனவுங்கொள்க. வந்தானற்கொற்றன்-போவானற்போகான்-எனவும் அத்தாற்கொண்டான்-இத்தாற்கொண்டான்-உத்தாற்கொண்டான்-எத்தாற்கொண்டான்-எனவும்வரும். பிறவுமுடிபுள்ளனவெல்லாமிதனான்முடித்துக்கொள்க. (௭௰௩)

தகரம்வருவழியாய்தநிலையலும், புகரின்றென்மனார்புலமையோரே. *

இது லகரம்றகரமாத்திரிதலேயன்றியாய்தமாகத்திரியுமென்றவினெய்தியதன்மேற்சிறப்புவிதி. தகரம்வருவழியாய்தநிலையலும் - தகரமுதன்மொழியாய்வந்தால்- லகரம்றகரமாத்திரிதலெயன்றியாய்தமாகத்திரிந்துநிற்றலும்—புகரின்றென்மனார்புலமையோர்-குற்றமின்றென்று சொல்லுவாராசிரியர்.—(எ-று)கஃறீது-கற்றீது-எனவரும். புகரின்றென் றதனால் நெடியதனிறுதியென்யதனுள்வேறீது-வேற்றீது- என்னுமுறழ்ச்சிமுடிபுங்கொள்க. (௭௰௪)

நெடியதனிறுதியியல்புமாருளவே. *

இஃது தல்வழியெல்லாமுறழ்வென்றதனைவிலக்கியியல்பாகவென்றவினெய்தியதுவிலக்கிபிறிதுவிதிவகுத்தது. நெடியதனிறுதியியல்புமாருள -நெட்டெழுத்தினீற்றுலகாரவீறுகுறியதனிறுதிக்கணின்றலகாரம்போலத்திரிந்துறழ்தலேயன்றியியல்பாய்முடிவனவுமுள.—(எ-று)[உ-ம்]பால்கடிது-சிறிது-தீது-பெரிது-எனவரும். இயல்பாகாதுதிரிந்தன-வேல்கடிது-வேற்கடிது-என்றாற்போல்வன. (௭௰௫)

நெல்லுஞ்செல்லுங்கொல்லுஞ்சொல்லு, மல்லதுகிளப்பினும்வேற்றுமையியல. *

இது அல்வழிக்கணுறழ்ந்துமுடிகவென்றதனை வேற்றுமைமுடிபென்றவி

வினெய்திய துவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது நெல்லுஞ்செல்லுங்கொல்லுஞ்சொல்லும்—நெல்லென்னுஞ்சொல்லுஞ்செல்லென்னுஞ்சொல்லுங்கொல்லென்னுஞ்சொல்லுஞ்சொல்லென்னுஞ்சொல்லுமாகியவந்நான்குசொல்லும்—அல்லதுகிளப்பினும்வேற்றுமையியல- அல்வழியைச்சொல்லுமிடத்துந்தாம் வேற்றுமைமுடிபினியல்பிற்றுய்லகரம்றகரமாத்திரிந்துமுடியும்.—(எ-று)உம்மை-சிறப்பு-[உ-ம்]நெற்காய்த்தது-செற்கடிது-கொற்கடிது-சொற்கடிது-சிறிது-தீது-பெரிது-எனவரும். (௭௰௬)

இல்லென்கிளவியின்மைசெப்பின்,வல்லெழுத்துமிகுதலுமையிடைவருதலு,மியற்கையாதலுமாகாரம்வருதலுங், கொளத்தகுமரபினுகிடனுடைத்தே. ※

இஃதிவ்வீற்றுவினைக்குறிப்புச்சொல்லுளொன்றற்கெய்தாததெய்துவித்தது. இல்லென்கிளவியின்மைசெப்பின்-இல்லென்னுஞ்சொல்விருப்பிடமாகியவில்லையுணர்த்தாதொருபொருளினதில்லாமையையுணர்த்துமிடத்து—வல்லெழுத்துமிகுதலும் - வல்லெழுத்துமுதன்மொழிவந்துழி வல்லெழுத்துமிக்குமுடிதலும்—ஐயிடைவருதலும் - ஐகாரமிடையேவருதலும்—இயற்கையாதலும்-இரண்டும்வாராதியல்பாய்முடிதலும்—ஆகாரம்வருதலும்-ஆகாரம்வந்துமுடிதலுமாகியவிந்நான்குமுடிபும்— கொளத்தகுமரபின்-சொற்குமுடிபாகக்கொளத்தகுமுறையானே—ஆகிடனுடைத்து-இதன்முடிபாமிடனுடைத்து.—(எ-று)கொளத்தகுமரபினென்றதனன் வல்லெழுத்துமுதன்மொழிவந்துழி ஐகாரமும் ஐகாரம்வந்துழிவல்லெழுத்துமிகாமையும் ஆகாரம்வந்துழிவல்லெழுத்துமிக்குமுடிதலுங்கொள்க. [உ.ம்]இல்லெனநிறுத்தி-கொற்றன்-சாத்தன்-தெளிவு-பொருள்-எனத்தந்துவல்லெழுத்துமைகாரமுங்கொடுத்துஇல்லைக்கொற்றனெனவேனையவற்றோடுமொட்டுக. இன்னுமவ்வாறேநிறுத்தி யைகாரமேகொடுத்து இல்லைகொற்றன்-சாத்தன்-தெளிவு-பொருள் எனவல்லெழுத்துமிகாதுமுடிக்க. கொளத்தகுமரபினென்றதனானேனைக்கணத்தின்முன்னும்ஐகாரமேகொடுத்துஇல்லைஞாண்-நூல்-மணி-வானம்-ஆடை-எனவொட்டுக.இஃதில்லென்பதோர்முதனிலைநின்றுவருமொழியோடிங்ஙனம்புணர்ந்ததென்பதுணர்தற்கில்லென்கிளவியென்றுமியற்கையாதலுமென்றுங்கூறினர். இம்முடிபுவினையியலுள்விரவுவினைக்கணின்மைசெப்பலென்புழிஇல்லைஇல்லென்று

ணாகூறியவதனானும் அவனில்லைஎன்றாற்போல்வனவுதாரணமாக வெல்லா
வாசிரியருங்காட்டியவாற்றானுமுணர்க. இதனானே இங்ஙனம்புணர்த்தசொ
ல்லன்றி இல்லையெனவைகாரவீறாய் நிற்பதோர்சொல்லின்மையுமுணர்க. ஆ
யின் அன்மைமுதலியவற்றையுமிவ்வாறேபுணர்க்கவெனினவைவருமொழியி
ன்றியொருசொல்லாய் நிற்றலிற்புணராராயினர். இனியியல்புவருமாறு - எ
ண்ணில்குணம் - செய்கை - துடி - பொருள் - எனவும் பொய்யில்ஞானம் - மை
யில்வாண்முகம் - எனவும்வரும். இனிஆகாரம்வருமாறு - இல்லாக்கொற்றன்
- சாத்தன் - தேவன் - பொருள் - எனஆகாரம்வல்லெழுத்துப்பெற்றன. பிற்
கூறியவிரண்டுமில்லென்னும்வினைக்குறிப்புமுதனிலையடியாகத்தோன்றிய
பெயரொச்சமறைதொக்கும்விரிந்துநின்றன. இயல்புமுற்கூறுததனால் இம்
முடிபிற்குவேண்டுஞ் செய்கைசெய்துதாவினீட்சிஎன்றாற்போல வேறுப
டவருவனவற்றிற்கும்வேண்டுஞ்செய்கைசெய்துமுடிக்க. (௭௰௭)

வல்லென்கிளவிதொழிற்பெயரியற்றே. *

இஃதிருவழியுந்திரிந்துமுறழ்ந்தும்வருமெனவெய்தியதனைவிலக்கித்தொ
ழிற்பெயரோடுமாட்டெறிதலிற்பிறிதுவிதியாயிற்று. வல்லென்கிளவி -
வல்லென்னுஞ்சொல் அல்வழிக்கண்ணும்வேற்றுமைக்கண்ணும் — தொழி
ற்பெயரியற்று - ஞகாரவீற்றுத்தொழிற்பெயரியல்பிற்றாய்வன்கணத்துக
ரமும் வல்லெழுத்துமென்கணத்தும் இடைக்கணத்துவகரத்துமுகரமும்
பெற்றுமுடியும்.—(எ-று) [உ-ம்] வல்லுக்கடிது - சிறிது - தீது - பெரிது -
ஞான்றது - நீண்டது - மாண்டது - வலிது - எனவும் வல்லுக்கடுமை - சிறுமை -
தீமை - பெருமை - ஞாற்சி - நீட்சி - மாட்சி - வன்மை - எனவும்வரும். (௭௰௮)

நாயும்பலகையும்வரூஉங்காலை, யாவயினுகரங்கெடுதலுமுரித்தே,
யுகரங்கெடுவழியகரநிலையும். *

இதுஎய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. நாயும்ப்லகையும்வரூஉங்கா
லை - வல்லென்பதன்முன்னாயென்னுஞ்சொல்லும்பலகையென்னுஞ்சொ
ல்லும்வருமொழியாய்வருங்காலத்து — ஆவயினுகரங்கெடுதலுமுரித்து -
அவ்விடத்துகரங்கெடாதுநிற்றலேயன்றிக்கெட்டு முடியவும்பெறும்.—
உகரங்கெடுவழியகரநிலையும் - அவ்வுகரங்கெடுமிடத்துஅகரநிலைபெற்றுமு
டியும்.—(எ-று) [உ-ம்] வல்லநாய் - வல்லப்பலகை - எனவும் உம்மையெதி
ர்மறையாகலானுகரங்கெடாதேநின்று - வல்லுநாய் - வல்லுப்பலகை - என

ருதலுங்கொள்க. அகரநிலையுமென்னுதுகரங்கெடுமென்றதனாற் பிறவரு மொழிக்கண்ணுமிவ்வகரப்பேறுகொள்க. வல்லக்கடுமை-சிறுமை-தீமை பெருமை-எனவும்வரும். (௭௰௯)

பூல்வேலென்றுவாலென்கிளவியொ, டாமுப்பெயர்க்குமம்மிடை வருமே. ※

இஃதெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. பூல்வேலென்றுவாலென் கிளவியொடாமுப்பெயர்க்கும் - பூலென்னுஞ்சொல்லும்வேலென்னுஞ் சொல்லும்ஆலென்னுஞ்சொல்லுமாகியவம்மூன்றுபெயர்க்கும்—அம்மி டைவரும் - வேற்றுமைக்கட்டிரிபின்றிஅம்முச்சாரியையிடைவந்து முடி யும்.—(எ-று) [உ-ம்] பூலங்கோடு - வேலங்கோடு - ஆலங்கோடு-செ தின் - தோல் - பூ-எனவரும். வருமொழிவரையாதுகூறினமையி னியல் புகணத்துமொட்டுக. பூலஞெரி - வேலஞெரி - ஆலஞெரி - நீழல் - விறகு - எனவரும். என்றுவென எண்ணிடையிட்டமையாற்பூலரங்கோடுபூலாங்கழி யெனஆகாரம்பூலுக்குக்கொள்க. (௮௰)

தொழிற்பெயரெல்லாந்தொழிற்பெயரியல. ※

இது இவ்வீற்றுத்தொழிற்பெயர்க்கு அல்வழிக்கண்ணும்வேற்றுமைக்கண் ணுந்திரிபுமுறழ்ச்சியும்விலக்கித்தொழிற்பெயரோடுமாட்டெறிதவினெய் திய துவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. தொழிற்பெயரெல்லாம்-லகாரவீற் றுத்தொழிற்பெயரெல்லாம்_தொழிற்பெயரியல-ஞகாரவீற்றுத்தொழிற் பெயரினியல்பினவாயிருவழியும்வன்கணத்துகரமும்வல்லெழுத்துமென்க ணத்துமிடைக்கணத்துவகரத்துமுகரமும்பெற்றுமுடியும்.(எ-று)[உ-ம்] புல்லுக்கடிது-கல்லுக்கடிது-வல்லுக்கடிது-மல்லுக்கடிது-சிறிது-தீது- பெரிது-ஞான்றது-நீண்டது-மாண்டது-வலிது-எனவும் வல்லுக்கடுமை -சிறுமை-தீமை-பெருமை - ஞாற்சி-நீட்சி-மாட்சி-வன்மை- எனவும்வ ரும். இவற்றிற்குப்புல்லுதல் - கல்லுதல்-வல்லுதல்-மல்லுநிற்றல்- எனப் பொருளுணர்க்க. இனி யெல்லாமென்றதனாற் றொழிற்பெயர்விதி யெ ய்தாதுபிறவிதி யெய்துவனவுங்கொள்க. கன்னல்கடிது - பின்னல்கடிது -கன்னற்கடுமை-பின்னற்கடுமை-எனவும்வரும். இதனானேமென்கணம்வ ந்துழிப்பின்னன்ஞான்றது-நீண்டது-மாண்டது-பின்னன்ஞாற்சி-நீட்சி -மாட்சி-எனவொட்டுக. இனியாடல்பாடல்கூடல்நீடல்முதலியனவுமல்லு

ழிக்கணியல்பாயும்வேற்றுமைக்கட்டிரிந்துமுடிதலிதனுற்கொள்க. (அ௰க)

வெயிலென்கிளவிமழையியனிலையும். ❊

இது திரிபுவிலக்கியத்துமின்னும்வகுத்தலினெய்திய துவிலக்கிப்பிறிதுவிதி வகுத்தது. வெயிலென்கிளவிமழையியனிலையும் - வெயிலென்னுஞ்சொன்மழை யென்னுஞ்சொற்போல வத்துமின்னும் பெற்றுமுடியும். — (எ - று) மழையென்பதனைவளியுடனும் வளியென்பதனைப்பனியுடனுமாட்டெறிந்தவாறுகாண்க. [ உ - ம் ] வெயிலத்துக்கொண்டான் - வெயிலிற்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினன் - எனவரும். இதுஅத்துமிசையொற்றுக்கெடாதுநின்றவிடம். இது அவற்றுமுன்வரூஉம்வல்லெழுத்துமிக்கது. அதிகாரவல்லெழுத்தின்மையின் இயல்புகணத்துங்கொள்க. சாரியைவருமொழிவாராதுகூறினமையின்.) (அ௰எ)

சுட்டுமுதலாகியவகரவிறுதி, முற்படக்கிளந்தவுருபியனிலையும். ❊

இதுமுறையானேவகரவீறுவேற்றுமைக்கட்புணருமாறுகூறுகின்றது. — சுட்டுமுதலாகியவகரவிறுதி - வகரவீற்றுப்பெயர்நான்கனுட்சுட்டெழுத்தினைமுதலாகவுடையவகரவீற்றுப்பெயர்மூன்றும் — முற்படக்கிளந்தவுருபியனிலையும் - முற்படக்கூறியவுருபுபுணர்ச்சியினியல்பிற்றிரிபுவற்றுப்பெற்றுமுடியும் — ( எ - று ) [உ - ம்] அவற்றுக்கோடு - இவற்றுக்கோடு - உவற்றுக்கோடு - செவி - தலை - புறம் - எனவரும். முற்படக்கிளந்தவென்றதனனேவற்றின்னேடின்னும்பெறுதல்கொள்க. அவற்றின்கோடு - எனவொட்டுக. இஃதேனைக்கணத்தோடுமொட்டுக. (அ௰கூ)

வேற்றுமையல்வழியாய்தமாகும். ❊

இதுமேலனவற்றிற்கல்வழிமுடிபுகூறுகின்றது. வேற்றுமையல்வழியாய்தமாகும் - அச்சுட்டுமுதல்வகரம்வன்கணத்துக்கண்வேற்றுமையல்லாதவிடத்துஆய்தமாகத்திரிந்துமுடியும். — (எ - று) [உ - ம்] அஃகடிய - இஃகடிய - உஃகடிய - சிறிய - தீய - பெரிய - எனவரும். இவ்வழக்கிக்காலத்தரிது. அ௰சு

மெல்லெழுத்தியையினவ்வெழுத்தாகும். ❊

இதுஎய்தாததெய்துவித்தது. மெல்லெழுத்தியையினவ்வெழுத்தாகும் - அவ்வகரவீறு மென்கணம்வந்தியையுமாயி னவ்வகரவொற்று அவ்வமெல்லெழுத்தாத்திரிந்துமுடியும். — (எ - று) [உ. ம்] அஞ்ஞாண் - நூல் - மணி - எனவும்வரும்.

(அ௰ரு

ஏனவைபுணரி னியல்பென மொழிப. ※

இதுவுமது. அவ்வீறேனைக்கணங்களோடுபுணருமாறுகூறுதலின்) ஏனவைபுணரின்- அச்சுட்டுமுதல்வகரவீற்றோடிடைக்கணமுமுயிர்க்கணமும்வந்துபுணருமாயின்—இயல்பெனமொழிப- அவ்வகரந்திரியாதியல்பாய்முடியுமென்றுகூறுவர்புலவர்.—(எ-று) [உ-ம்]அவ்யாழ்- இவ்யாழ்- உவ்யாழ்-வட்டு-அடை- ஆடை - எனவொட்டுக. ஈண்டுக்கூறியதுநிலைமொழிக்கென்றுமாண்டுநின்றசொன்முனியல்பாகுமென்றது வருமொழிக்கென்றுமுணர்க. (அ௰சு)

ஏனவகரந்தொழிற்பெயரியற்றே. ※

இது எய்தாததெய்துவித்தது. ஏனவகரம்-வகரக்கிளவிநான்மொழியீற்றதென்றதனுளொழிந்துநின்றவுரிச்சொல்லாகியவகரமிருவழியும்—தொழிற்பெயரியற்று - ஞகரவீற்றுத்தொழிற்பெயரியல்பிற்றாய்வன்கணத்துகரமும் வல்லெழுத்து மென்கணத்துமிடைக்கணத்துவகரத்து முகரமும்பெற்றுமுடியும்.—(எ-று)[உ-ம்]தெவ்வுக்கடிது-சிறிது-தீது-பெரிது-ஞான்றது-நீண்டது-மாண்டது-வலிது-எனவும். தெவ்வுக்கடுமை- சிறுமை- தீமை-பெருமை- ஞாற்சி-நீட்சி-மாட்சி-வன்மை-எனவும்வரும்.உரையிற்கோடலென்பதனால் தெம்முனை-எனவகரவொற்றுமகரவொற்றாகத்திரிதல்கொள்க. (அ௰எ)

ழகாரவிறுதிரகாரவியற்றே. ※

இதுநிறுத்தமுறையானேழகாரவீற்றுவேற்றுமைமுடிபுகூறுகின்றது. ழகாரவிறுதிரகாரவியற்று - ழகாரவீற்றுப்பெயர்வன்கணம்வந்தால் வேற்றுமைக்கண்ரகாரவீற்றினியல்பிற்றாய்வல்லெழுத்து மிக்குமுடியும்.—(எ-று)[உ-ம்]பூழ்க்கால்-சிறகு-தலை-புறம்-எனவும்வரும். (அ௰அ)

தாழென்கிளவி கோலொடுபுணரி,னக்கிடைவருதலுரித்துமாகும். ※

இஃதிவ்வீற்றுளொன்றற்கெய்தியதன்மேற்சிறப்புவிதி. வல்லெழுத்தினோடக்குவகுத்தலின்) தாழென்கிளவிகோலொடுபுணரின் - தாழென்னுஞ்சொற்கோலென்னுஞ்சொல்லோடுபுணருமிடத்து—அக்கிடைவருதலுமுரித்தாகும்-வல்லெழுத்துமிகுதலேயன்றி யக்குச்சாரியையிடையேவந்துநிற்றலுமுரித்து.—(எ-று)எனவேயக்குப்பெறுதுவல்லெழுத்துமிகுதல்வலியுடைத்தாயிற்று.[உ-ம்]தாழக்கோல்-தாழ்க்கோல்-எனவரும். இது

தாழைத்திறக்குங்கோலென விரியும். (௮௰௯)

தமிழென்கிளவியுமதனோரற்றே. *

இதுவுமது. தமிழென்கிளவியும் - தமிழென்னுஞ்சொல்லும் — அதனோரற்று - வல்லெழுத்துமிக்குமுடிதலேயன்றியக்குச்சாரியையும் பெற்றுமுடியும். — (எ. று) அதனோரற்றேயென்பதனால் இதற்குந்தமிழ்க்கூத்தெனவல்லெழுத்துமிகுதலேவ்வழியுடைத்து. [உ. ம்] தமிழக்கூத்து - சேரி - தோட்டம் - பள்ளி - எனவரும். தமிழையுடையகூத்தெனவிரிக்க. தமிழதரையர்என்றாற்போல வல்லெழுத்துப்பெறுதற்குப்பெற்றனவுணரக்கூறியவென்னும் புறனடையாற்கொள்க. தமிழநாடு - தமிழ்நாடு - எனஏனைக்கணத்துமுடிபுள்ளப்பெயர்முன்னரொன்பதனுண்முற்றவென்றதனான்முடித்தாம். (கூ௰)

குமிழென்கிளவிமரப்பெயராயிற், பீரென்கிளவியொடோரியற்றாகும். *

இதுவல்லெழுத்துவிலக்கிமெல்லெழுத்துமம்மும்வகுத்தலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிகூறுகின்றது. குமிழென்கிளவிமரப்பெயராயின் - குமிழென்னுஞ்சொற்குமிழ்த்தலென்னுந்தொழிலன்றிமரப்பெயராயின் — பீரென்கிளவியொடோரியற்றாகும் - பீரென்னுஞ்சொல்லோடோரியல்பிற்றாயொருவழி மெல்லெழுத்துமொருவழி யம்மும்பெற்றுமுடியும். — (எ - று) [உ - ம்] குமிழ்ங்கோடு - குமிழங்கோடு - செதிள் - தோல் - பூ - எனவரும். ஓரியற்றென்றதனாற்பிறவற்றிற்குமிம்முடிபுகொள்க. மகிழ்ங்கோடு - மகிழங்கோடு - எனவொட்டுக. (கூ௰க)

பாழென்கிளவிமெல்லெழுத்துறழ்வே. *

இதுவல்லெழுத்தினோடுமெல்லெழுத்துப்பெறுகவென்றலினெய்தியதன்மேற்சிறப்புவிதி. பாழென்கிளவிமெல்லெழுத்துறழ்வு - பாழென்னுஞ்சொல்லீற்று வல்லெழுத்தினோடு மெல்லெழுத்துப்பெற்றுறழ்ந்துமுடியும். — (எ - று) [உ - ம்] பாழ்க்கிணறு - பாழ்ங்கிணறு - சேரி - தோட்டம் - பாடி - எனவொட்டுக. இதுபாழுட்கிணறெனவிரியும். பாழ்த்தகிணறெனவினைத்தொகைமுடியாமையின்.) (கூ௰உ)

எழென்கிளவியுருபியனிலையும். *

இஃதெண்ணுப்பெயரிவ்வாறுமுடியுமென்றலினெய்தாததெய்துவித்தது. எழென்கிளவி - எழென்னுமெண்ணுப்பெயரிறுதி — உருபியனிலையும் - உருபுபுணர்ச்சிக்கட்கூறியவியல்பின்கண்ணேநிலைபெற்றன்பெற்றுமுடியும்.

—(எ-று) அன்னென்சாரியையேழனிறுதியென்பதாம். [உ-ம்] எழன்காயம்-சுக்கு-தோரை-பயறு-எனவரும். இவைபுல்லெழுத்தோத்தின்புறனடையான்வீழ்க்க. இது எழுநூற்கொண்டகாயமெனவிரியும். (௪௱௰௩)

அளவுநிறையுமெண்ணும்வருவழி, நெடுமுதல்குறுகலுமுகரம்வருதலுங், கடிநிலையின்றேயாசிரியற்க. *

இதுமேலதற்கெய்தாததெய்துவித்தது. அளவுநிறையுமெண்ணும்வருவழி-அவ்வேழென்பதன்முன்னரளவுப்பெயரு நிறைப்பெயரு மெண்ணுப்பெயரும்வருமொழியாய்வருமிடத்து—நெடுமுதல்குறுகலுமுகரம்வருதலுங்கடிநிலையின்றேயாசிரியற்க - முன்னின்றநெட்டெழுத்தின் மாத்திரைகுறுகலும் ஆண்டுகரம்வருதலு நீக்குநிலைமையின்றாசிரியற்கு.—(எ-று) [உ-ம்] எழுகலம்-சாடி-தூதை-பானை மண்டை வட்டி-நாழி-அகல்-உழக்கு-எனவும் எழுகழஞ்சு-தொடி-பலம்-எனவும்எழு மூன்று-எழுநான்கு-எனவும்வரும். நிலையென்றதனான் வன்கணத்துப்பொருட்பெயர்க்குமிம்முடிபுகொள்க. எழுகடல்-சிலை-திசை-பிறப்பு-எனவரும். (௪௱௰௪)

பத்தென்கிளவியொற்றிடைகெடுவழி, நிற்றல்வேண்டுமாய்தப்புள்ளி. *

இது மேலதற்கெய்தியதன்மேற்சிறப்புவிதிவகுத்தது. (வருமொழிநோக்கிவிதித்தலின்) பத்தென்கிளவியொற்றிடைகெடுவழி - அவ்வேழனோடுபத்தென்பது புணருமிடத்து அப்பத்தென்கிளவியிடையொற்றுக்கெடுவழி—ஆய்தப்புள்ளிநிற்றல்வேண்டும் - ஆய்தமாகியபுள்ளிநிற்றலைவிரும்புமாசிரியன்.—(எ-று) [உ-ம்] எழுபஃது-எனவரும். (௪௱௰௫)

ஆயிரம்வருவழியுகரங்கெடுமே. *

இது நெடுமுதல்குறுகிநின்றுகரம்பெறுமென்றவினெய்தியதுமறுத்தது. ஆயிரம்வருவழி- ஏழென்பதன்முன்னாயிரமென்னுமெண்ணுப்பெயர்வருமொழியாய்வருமிடத்து— உகரங்கெடும் - நெடுமுதல்குறுகிநின்றுகரம்பெறுதமுடியும்.—(எ-று) [உ-ம்] எழாயிரம்-எனவரும். (௪௱௰௬)

நூறூர்ந்துவரூஉமாயிரக்கிளவிக்குக், கூறியநெடுமுதல்குறுக்கமின்றே.*

இஃதெய்தியதுமுழுவதூஉம்விலக்கிற்று. (உகரங்கெட்டதன்மேலேநெடுமுதல்குறுகாதென்றலின்) நூறூர்ந்துவரூஉமாயிரக்கிளவிக்கு-அவ்வேழென்பதனாறென்னுஞ்சொன்மேல்வருமாயிரமென்னுஞ்சொலவிற்கு—கூறியநெடுமுதல்குறுக்கமின்று - முற்கூறியநெடுமுதல் குறுகியுகரப்பெறுதலி

ன்று.—(எ-று)[உ-ம்]எழ்நூறுயிரம்-எனவரும்.கூறிய வென்றதனுனெடுமு தல்குறுகியுகரம் பெற்றெழுநூறுயிரமெனவும்வரும். இதனுனேஎழாயிர மெனமுதனிலைநீடலுங்கொள்க. இதனுனேஎழூஞாயிறு- எழுநாள்-எழுவ கை-எனவியல்புகணத்துநெடுமுதல்குறுகியுகரம்பெறுதலுங்கொள்க. ௬௭)

ஐயம்பல்லெனவரூஉமிறுதி,யல்பெயரெண்ணுமாயியனிலையும். ※

இதுவுமது.)ஐயம்பல்லெனவரூஉமிறுதி-அவ்வேழன்முன்னர்ஐயென்றும் அம்மென்றும்பல்லென்றும்வருகின்றவிறுதிகளையுடையபெயர்— அல்பெ யரெண்ணும்-பொருட்பெயரல்லாதவெண்ணுப்பெயராகியதாமரை வெள் ளம் ஆம்பல் எனப்படுவனவர்தாலும்— ஆயியனிலையும்-நெடுமுதல்குறுகியுகரம் பெறுதவ்வியல்பின்கண்ணே நின்றுமுடியும்.—(எ-று)[உ-ம்]எழ்தாமரை- எழ்வெள்ளம்-எழாம்பல்-எனவரும். (௬௰அ)

உயிர்முன்வரினுமாயியறிரியாது. ※

இதுவுமது.) உயிர்முன்வரினும்-அவ்வேழென்பதன்முன்னரளவுப்பெயரு மெண்ணுப்பெயருமாகியஉயிர்முதல்மொழிவரினும்— ஆயியறிரியாது - நெடுமுதல்குறுகியுகரம்பெறுதுமுடிபுமியல்பிற்றிரியாதுமுடியும்.—(எ- று)[உ-ம்]எழகல்-எழுழக்கு-எழொன்று- எழிரண்டு-எனவரும். (௬௯)

கீழென்கிளவியுறழத்தோன்றும். ※

இஃது திவ்வீற்றுளொன்றற்கு வேற்றுமைக்கணுறழ்ச்சிகூறுகின்றது. கீ ழென்கிளவியுறழத்தோன்றும் - கீழென்னுஞ்சொல்உறழ்ச்சியாய்த்தோ ன்றிமுடியும்.—( எ -று ) தோன்றுமென்றதனுனெடுமுதல்குறுகாதுவல் லெழுத்துப்பெற்றும்பெறுதும் வருமென்ற விரண்டுமுறழ்ச்சியாய்வரு மென்றுகொள்க.இயைபுவல்லெழுத்ததிகாரத்தாற்கொள்க. [உ-ம்] கீழ்க் குளம்-கீழ்குளம்-சேரி- தோட்டம்-பாடி-எனவரும். (௭)

ளகாரவிறுதிணகாரவியற்றே. ※

இதுநிறுத்தமுறையானேளகாரவீற்றுச்சொல் வேற்றுமைக்கட்புணருமா றுகூறுகின்றது. ளகாரவிறுதிணகாரவியற்று - ளகாரவீற்றுப்பெயர்ண காரவீற்றியல்பிற்றாய் வன்கணம்வந்துழிடகாரமாத் திரிந்துமுடியும். — (எ-று) [உ-ம்] முட்குறை-சிறை-தலை-புறம்-எனவரும். (௭௧)

மெல்லெழுத்தியையினணகாரமாகும். ※

இதுமேலதற்குமென்கணத்துமுடிபுகூறுகின்றது, மெல்லெழுத்தியை

பின்ணகாரமாகும் - ளகாரவீறு மெல்லெழுத்துமுதன்மொழிவருமொழி யாய்வந்தியையின் ணகாரமாத்திரிந்துமுடியும். — (எ-று) [உ-ம்] முண்ஞெரி - நுனி - மரம் - எனவரும். இதனை வேற்றுமையிறுதிக்கணல்வழியதெடுத்துக்கோடற்கட்சிங்கநோக்காகவைத்தலி னல்வழிக்குமிம்முடிபுகொள்க. முண்ஞெரிந்தது - நீண்டது - மாண்டது - எனவரும். (௱௨)

அல்வழியெல்லாமுறமெனமொழிப. ※

இது மேலதற்கல்வழிமுடிபுகூறுகின்றது. அல்வழியெல்லாம் - ளகாரவீறல்வழிக்கணெல்லாம் — உறமெனமொழிப - திரியாதும் டகாரமாத்திரிந்தும் உறழ்ந்துமுடியுமென்றுசொல்லுவர்புலவர். — (எ-று) [உ-ம்] முள்கடிது - முட்கடிது - சிறிது - தீது - பெரிது - எனவரும். எல்லாமென்றதனாற்குண வேற்றுமைக்கண்ணுமிவ்வுறழ்ச்சிகொள்க. முள்குறுமை - முட்குறுமை - சிறுமை - தீமை - பெருமை - எனவும் கோள்கடுமை - கோட்கடுமை - வாள்கடுமை - வாட்கடுமை - எனவுமொட்டுக. இதனானே அதோட்கொண்டான் - இதோட்கொண்டான் - உதோட்கொண்டான் - எதோட்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினனென உருபுவாராதுருபின்பொருள்படவந்தனவுங்கொள்க. (௱௩)

ஆய்தநிலையலும்வரைநிலையின்றே, தகரம்வரூஉங்காலையான. ※

இது மேலதற்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தது. தகரம்வருவழியுறழ்ச்சியேயன்றி யாய்தமாகத்திரிந்துறழ்கவென்றவின்) தகரம்வரூஉங்காலையான - தகரமுதன்மொழியாய்வருங்காலத்து — ஆய்தநிலையலும்வரைநிலையின்று - ளகாரம் டகாரமாத்திரியாது ஆய்தமாகத்திரிந்துநிற்றலு நீக்குநிலைமையின்று. — (எ-று) [உ-ம்] முஃடீது - முட்டீது - எனவரும். (௱௪)

நெடியதனிறுதியியல்பாகுனவும், வேற்றுமையல்வழி வேற்றுமைநிலையலும், போற்றல்வேண்டுமொழியுமாருளவே. ※

இதுமேலதற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. நெடியதனிறுதியியல்பாகுனவும் - அவ்வீற்றுநெடியதனிறுதி திரியாதியல்பாய்முடிவனவற்றையும் — வேற்றுமையல்வழிவேற்றுமைநிலையலும் - வேற்றுமையல்லாதவிடத்துவேற்றுமையினியல்பையுடையவாகத்திரிந்துமுடிதலையும் — போற்றல்வேண்டுமொழியுமாருள - போற்றுதல்வேண்டுஞ் சொற்களுமுள. — (எ-று) [உ-ம்] கோள்கடிது - வாள்கடிது - சிறிது - தீது - பெரிது - எனவும்

புட்டேம்பப்புயன்மாறி - எனவும் வரும். போற்றல்வேண்டுமென்றதனுஞ் உதளங்காய் - செதிள் - தோல் - பூ என அம்முப்பெறுதலுங்கொள்க. உதளென்பது யாட்டினையுணர்த்துங்கால் முற்கூறிய முடிபுகளிருவழிக்குமேற்றவாறேமுடிக்க. உதட்கோடு - உதள்கடிது - உதணன்று - எனவொட்டுக. மோத்தையுந்தகரு முதளுமப்பருமென்றூர்மரபியலில். (௱௫)

தொழிற்பெயரெல்லாந் தொழிற்பெயரியல. *

இது இவ்வீற்றுத்தொழிற்பெயர்க் கிருவழியுமெய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தது. தொழிற்பெயரெல்லாம் - ளகாரவீற்றுத்தொழிற்பெயரெல்லாமிருவழியும் — தொழிற்பெயரியல - ஞகாரவீற்றுத்தொழிற்பெயர்போலவன்கணத்துகரமும்வல்லெழுத்து மென்கணத்துமிடைக்கணத்து வகரத்து முகரமும்பெற்றுமுடியும. — (எ - று) [உ-ம்] துள்ளுக்கடிது - சிறிது - தீது - பெரிது - ஞான்றது - நீண்டது - மாண்டது - வலிது - எனவும் துள்ளுக்கடுமை - சிறுமை - தீமை - பெருமை - ஞாற்சி - நீட்சி - மாட்சி - வன்மை - எனவும்வரும். எல்லாமென்றதனானேயிருவழியுந்தொழிற்பெயர்களுகரமும் வல்லெழுத்தும்பெறாதுதிரிந்துந்திரியாதுமுடிவனவுங்கொள்க. கோள்கடிது - கோட்கடிது - கோள்கடுமை - கோட்கடுமை என்பனபோல்வனபிறவும்வரும். இனி வாள்கடிது - வாட்கடிது - சிறிது - தீது - பெரிது - எனவும்வாள்கடுமை - வாட்கடுமை - எனவுங்காட்டுக. அது சொல்லுதலாககி.) (௱௬)

இருளென்கிளவி வெயிலியனிலையும். *

இது திரிபுவிலக்கியத்துமின்னும்வகுத்தலினெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. இருளென்கிளவி - இருளென்னுஞ்சொல்வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண் — வெயிலியனிலையும் - வெயிலென்னுஞ்சொற்போலவத்துமின்னும்பெற்றுமுடியும். - (எ - று) [உ-ம்] இருளத்துக்கொண்டான் - இருளிற்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - எனவரும். சாரியைவரையாதுகூறினமையினியல்புகணத்துமொட்டுக இருளத்துஞான்றான் - நீண்டான் - மாண்டான் - இருளின்ஞான்றான் - நீண்டான் - மாண்டான் - எனவரும். (௱௭)

புள்ளும்வள்ளுந்தொழிற்பெயரியல. *

இதுவு மெய்தியதுவிலககிப் பிறிதுவிதிவகுத்தது. திரிபுமியல்பும்விலக்கித் தொழிற்பெயர் விதிவகுத்தலின்) புள்ளும்வள்ளும் - புள்ளென்னுஞ்சொல்

லும்வள்ளென்னுஞ்சொல்லுமிருவழிக்கண்ணும் — தொழிற்பெயரியல —
ஞகாரவீற்றுத்தொழிற்பெயர்போலவன்கணத்துகரமும்வல்லெழுத்துமெ
ன்கணத்துமிடைக்கணத்துவகரத்தீதுமுகரமும்பெற்றுமுடியும்.— (எ-று)
[உ-ம்]புள்ளுக்கடிது-வள்ளுக்கடிது-சிறிது-தீது- பெரிது-ஞான்றது-
நீண்டது-மாண்டது-வலிது- எனவும் புள்ளுக்கடுமை-வள்ளுக்கடுமை-சி
றுமை-தீமை-பெருமை-ஞாற்சி நீட்சி-மாடசி-வன்மை-எனவும் வரும்.
இதனைத்தொழிற்பெயரெல்லாமென்றதன்பின் வையாததனால்இருவழியும்
வேற்றுமைத்திரிபெய்திமுடிவனவுங்கொள்க. புட்கடிது-வட்கடிது-சிறி
து-தீது-பெரிது-எனவும் புட்கடுமை -வட்கடுமை-சிறுமை-தீமை-பெ
ருமை-எனவும புண்ஞான்றது-நீண்டது-மாண்டது- எனவும் ஞாற்சி-நீ
ட்சி-மாட்சி-எனவும் வரும். புள்ளுவலிது-புள்வலிது - புள்ளுவன்மை-புள்
வன்மை-எனவகரத்தின்முன்னருகரம்பெற்றும் பெறாதும் வருதலினின்ற
சொன்முனியல்பாகும் என்றதனான் முடியாமையுணர்க இது வள்ளிற்கு
மொக்கும். (௩௰௮)

மக்களென்னுப்பெயர்ச்சொலிறுதி, தக்கவழியறிந்துவலித்தலுமுரித்தே.※

இஃதெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. உயிரீறாகியவுயர்திணைப்பெ
யரென்பதனுட்கூறியவியல்புவிலக்கித்திரிபுவகுத்தலின் ) மக்களென்னும்
பெயர்ச்சொலிறுதி-மக்களென்னும்பெயர்ச்சொல்லிறுதியியல்பேயன்றி
—தக்கவழியறிந்துவலித்தலுமுரித்து - தக்கவிடமறிந்துவல்லொற்றாகத்தி
ரிந்துமுடிதலுமுரித்து.—(எ-று தக்கவழியென்றூர்.பெரும்பான்மைமக்
களுடம்புயிர்நீங்கிக்கிடந்தகாலத்தினஃதிம்முடிபென்றற்கு) [உ-ம்] மக்க
ட்கை-செவி-தலை- புறம் - எனவரும். இக்கிடந்தது மக்கட்டலையென்பத
னைவ்வாறுதலகொள்க.மக்கள்கை-செவி-தலை-புறம்-எனத்திரியாதுநின்
றது யிருண்மைபெற்றது. இனிச்சிறுபான்மைமக்கட்பண்புமக்கட்சுட்டு
எனவும்வரும். (௩௰௯)

உணரக்கூறியபுணரியன்மருங்கிற், கண்டுசெயற்குரியவைகண்ணினர்
கொளலே. ※

இஃ திவ்வோத்தின்கண் எடுத்தோத்தானுமிலேசானுமுடியாதுநின்றவற்
றிற்கெல்லாமிதுவேயோத்தாகக்கொண்டுசாரியைபெறுவனவற்றிற்குச்சா
ரியையும் எழுத்துப்பெறுவனவற்றிற் கெழுத்துங் கொடுத்துமுடித்துக்

கொள்கவென்கின்றது. உணரக்கூறியபுணரியன்மருங்கின் - உணரக்கூறப்பட்டபுள்ளியீறுவருமொழியோடுபுணருமியல்பிடத்து - கண்டுசெயற்குரியவை - மேன்முடித்தமுடிபன்றிவழக்கினுட்கண்டுமுடித்தற்குரியவைதோன்றியவழி — கண்ணினர்கொளல் - அவற்றையுங்கருதிக்கொண்டேற்றவாறேமுடிக்க. — (எ - று) அல்வழிக்கண் - [உ - ம்] மண்ணப்பத்தம் - என ணகரவீறு அக்குப்பெற்றது. மண்ணங்கட்டி - என வம்முப்பெற்றது. பொன்னப்பத்தம்என னகரவீறக்குப்பெற்றது. பொன்னங்கட்டி - என அம்முப்பெற்றது. கானங்கோழி - என வேற்றுமைக்கணம்முப்பெற்றது. மண்ணாங்கட்டி - கானாங்கோழி - என்பன மரூஉ. வேயின்றலைஎனயகரவீற்றுருபிற்குச்சென்றசாரியை பொருட்கட்சென்றுழி வல்லெழுத்துக்கெடுக்க. நீர்குறிது - என ரகரவீறல்வழிக்கணியல்பாயிற்று. வேர்குறிது - வேர்க்குறிது - இதுரகரவீற்றல்வழியுறழ்ச்சி. வடசார்க்கூரை மேல்சார்க்கூரை - இவைவல்லெழுத்துமிக்கமரூஉமுடிபு. அம்பர்க்கொண்டான் - இம்பர்க்கொண்டான் - உம்பர்க்கொண்டான் - எம்பர்க்கொண்டான் - என இவ்வீறேழனுருபின்பொருள்படவந்தன வல்லொற்றுப்பெற்றன. தகர்க்குட்டி - புகர்ப்போத்து - என்பனபண்புத்தொகைகருதிற்றேலீண்டுமுடிக்க. வேற்றுமையாயின் முன்னர்முடியும்விழலென்னும் லகரவீறுவேற்றுமைக்கண்றகரமாகாதுனகரமாய்முடிதல்கொள்க. விழன்காடு - செய் - தாள் - புறம் - என வரும். கல்லம்பாறை - உசிலங்கோடு - எலியாலங்காய் - புடோலங்காய் - என வவ்வீறம்முப்பெற்றது. கல்லாம்பாறையென்பதுமரூஉ. அழலத்துக்கொண்டான் என அவ்வீறத்துப்பெற்றது. அழுக்கற்போர் - புழுக்கற்சோறு - என்பன அவ்வீற்றல்வழித்திரிபு. யாழ்குறிது - என்பதுழகரவீற்றல்வழியியல்பு. வீழ்குறிது - வீழ்க்குறிது - என்பன அவ்வீற்றல்வழியுறழ்ச்சி. தாழப்பாவை என்பதவ்வீற்றல்வழியக்குப்பெற்றது. யாழின்கோடு - செய்கை - தலை - புறம் - என அவ்வீற்றுருபிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றுழிவல்லெழுத்துவீழ்க்க. முன்னாளைவாழ்வு - முன்னாளைப்பரிசு - ஒருநாளைக்குழவி - ஒருதிங்களைக்குழவி - என்றாற்போல்வன ளகாரவீறைகாரமுமதனொடுவல்லெழுத்தும்பெறுதல்கொள்க. பிறவுமிவ்வோத்தின்வேறுபடவருவனவெல்லாங்கொணர்ந்திதனான்முடிக்க. குளத்தின்புறம் - மரத்தின்புறம் - என வுருபிற்கெய்தியவத்தோடின்பெறுதலுங்கொள்க. இனிக்கடிசொல்லில்லையென்பது

னான்வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண்ணும் வந்துதிரிந்துமுடியுஞ்சொற்களுமுள. அவற்றைக்கண்ணினர்கொளலேயென்பதனான்மண்ணுக்குப்போனான்-பொன்னுக்குவிற்றான்-பொருளுக்குப்போனான்-நெல்லுக்குவிற்றான்-கொள்ளுக்குக்கொண்டான்-பதினேழவல்றாற்போலவழக்கின்கணுகரம்பெறுவனவும்விண்ணுக்குமேல்-மண்ணுக்குநாப்பண்-பல்லுக்குத்தோற்றபனிமுல்லைபைங்கிளிகள், சொல்லுக்குத்தோற்றினன்றோற்றினவானெல்லுக்கு, நூறாநூறென்பானுடங்கிடைக்கும்வன்முலைக்கு, மாறாமாலன்றளந்தமண். -என்றாற்போலச்செய்யுட்கணுகரம்பெறுவனவுமுடிக்க. பற்கு-நெற்கு.என்பன இவையுருபின்பொருள்படவாராதுருபின்கண்வந்தனவேனுமீண்டுக்காட்டினாம். ஆண்டுப்புள்ளியிறுதியுமென்னுமுருபியற்சூத்திரத்திலேசுகோடற்கிடனின்றென்றுகருதி) இனியச்சூத்திரத்துத்தேருங்காலையென்றதனான்முடித்தலுமொன்று. (௱௰)

எட்டாவது, புள்ளிமயங்கியல் - முற்றிற்று.

ஆ சூத்திரம். (௪௱௫)

## ஒன்பதாவது;

# குற்றியலுகரப்புணரியல்.

ஈரெழுத்தொருமொழியுயிர்த்தொடரிடைத்தொட, ராய்தத்தொடர்மொழிவன்றொடர்மென்றொட, ராயிருமூன்றேயுகரங்குறுகிடன். *

இவ்வோத்துக்குற்றியலுகரமென்றுகூறப்பட்ட வெழுத்துப்பொருட்பெயரோடும் எண்ணுப்பெயர்முதலியவற்றோடும் புணருமுறைமையுணர்த்தினமையிற்குற்றியலுகரப்புணரியலென்னும்பெயர்த்தாயிற்று. இது மெய்யுயிரோயென்றவற்றுளுயிரினதுவிகாரமாய்நின்றகுற்றுகரத்தையிருவழிக்கண்ணும்புணர்க்கின்றமையின் மேலையோத்தினோ டியைபுடைத்தாயிற்று. இத்தலைச்சூத்திர மொழிமரபினகத்திருவகைத்தென்றகுற்றுகரமிதனகத்தினைத்துமொழியிறுதிவருமென்றவற்றிற்குப் பெயருமுறையுந்தொகையுமு

ணர்த்துகின்றது. அப்பெயர்பெயர்அம்முறைமுறைஅத்தொகைதொகை
தொடர்மொழியீற்றுவருமென்றுண்டுக்கூறியதனையீண்டைத் துவகைப்படு
த்தியதனோடுநெட்டெழுத்திம்பருமென்றதொன்றேயாதலினதனையுங்கூ
ட்டியறுவகைத்தென்றார். ஈரொழுத்தொருமொழி - இரண்டெழுத்தாலாகிய
வொருமொழியும் — உயிர்த்தொடர் - உயிர்மேல்வருமெய்யைத்தொடர்ந்து
நின்றசொல்லும் — இடைத்தொடர் - இடையொற்றுமேல்வருமெய்யைத்
தொடர்ந்துநின்றசொல்லும் — ஆய்தத்தொடர்மொழி - ஆய்தமாகியவெ
ழுத்தின்மேல்வருமெய்யைத்தொடர்ந்துநின்றசொல்லும் — வன்றொடர் -
வல்லொற்றுமேல்வருமெய்யைத்தொடர்ந்து நின்றசொல்லும் — மென்
றொடர் - மெல்லொற்றுமேல்வருமெய்யைத்தொடர்ந்து நின்றசொல்லு
ம் — ஆயிருமூன்று - ஆகியவவ்வாறுசொல்லுமே — உகரங்குறுகிடன் - கு
ற்றியலுகரங்குறுகிவருமிடன். — (எ-று) [உ-ம்] நாகு - வரகு - தெள்கு - எஃ
கு - கொக்கு - குரங்கு - எனவரும். இதனையேமென்றேகொள்வார்க்குப்பின்
ணக்கு - சுண்ணம்பு - ஆமணக்கு - முடியாமையுங்கொள்க. (௧)

அவற்றுள்! ஈரொற்றுத்தொடர்மொழியிடைத்தொடராகா. ※
இது அவ்வாறனுளொன்றற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. அவ
ற்றுள் - அவ்வாறனுள் — ஈரொற்றுத்தொடர்மொழி - இரண்டொற்றிடைக்க
ட்டொடர்ந்துநிற்குஞ்சொல்லித்திடையினவொற்றுமுதனின்றால் — இடை
த்தொடராகா - மேலிடையினந்தொடர்ந்துநில்லாவல்லினமுமெல்லினமு
ந்தொடர்ந்துநிற்கும். — (எ-று) [உ-ம்] ஆர்க்கு - ஈர்க்கு - தொய்ம்பு - மொ
ய்ம்பு - எனவரும். (௨)

அல்லதுகிளரப்பினும்வேற்றுமைக்கண்ணு, மெல்லாவிறுதியு முகரநி
றையும். ※
இஃதிடைப்படிற்குறுகுமிடனுமாருண்டேயென்றதனைப் புணர்மொழிக்க
ணைமாத்திரையினுங்குறுகுமெனவெய்தியதனைவிலக்கியவ்வியனிலையுமே
னைமூன்றேயென்றவிதியேபெறுமென்கின்றது. அல்லதுகிளப்பினும் - அ
ல்வழியைச்சொல்லுமிடத்தும் — வேற்றுமைக்கண்ணும் - வேற்றுமைப்புண
ர்ச்சிக்கண்ணும் உ எல்லாவிறுதியுமுகரநிறையும் - ஆறீற்றின்கண்ணுமுகரந்த
ன்னைமாத்திரையைப்பெற்றுநிற்கும். - (எ-று) வருமொழியானல்லது அல்

வழியும் வேற்றுமையும் விளங்காமையினல்லதுகிளப்பினும்வேற்றுமைக்கண்ணுமெனவே யிருமொழிப்புணர்ச்சியென்பதுபெற்றாம். இவ்விருமொழிக்கட்பழையவரைமாத்திரை பெற்றேநிற்குமென்றார். அன்றியிருமொழிப்புணர்ச்சிக்கண்ணொருமாத்திரை பெறுமென்றார்க்குப்பன்மொழிப்புணர்ச்சியாகியசெய்யுளிலக்கணங்குற்றுகரந்தானேர்பசை நிரைபசை கோடலுமவற்றான றுபதுவஞ்சிச்சீர்கோடலும் பத்தொன்பதினாயிரத்திருநூற்றுத்தொண்ணூற்றோர்தொடைகோடலுமின்றாய்முற்றியலுகரமாகவே கொள்ளவேண்டுதலின் மாறுகொளக்கூறலென்னுங் குற்றந்தங்குமென்றுணர்க. [உ-ம்] நாகுகடிது - வரகுகடிது - நாகுகடுமை - வரகுகடுமை - எனவரும். இவை தம்மரைமாத்திரை பெற்றன. ஏனையவற்றோடுமொட்டுக. இனியிதுமால்யானைபோந்துகால்துரந்துபாய்ந்தது. எனத்தொடர்மொழிக்கண்ணுமரைமாத்திரைபெற்றதென்னாக்கால்வஞ்சிச்சீரின்றாமாறுணர்க. (௫)

வல்லொற்றுத்தொடர்மொழிவல்லெழுத்துவருவழித், தொல்லையியற்கைநிலையலுமுரித்தே. *

இதுமுன்னின்றசூத்திரத்தானரைமாத்திரைபெறுமென்றதனைவிலக்கியிடைப்படிற்குறுகுமிடனுமென்றதனானரைமாத்திரையினுங்குறுகுமென்றாண்டுவிதித்ததீண்டுவல்லொற்றுத்தொடர்மொழிக்கண்ணேவருமென்கின்றது. வல்லொற்றுத்தொடர்மொழி - வல்லொற்றுத்தொடர்மொழிக் குற்றுகரம் — வல்லெழுத்துவருவழி - வல்லெழுத்துமுதன்மொழிவருமொழியாய் வருமிடத்து — தொல்லையியற்கைநிலையலுமுரித்து - இடைப்படிற்குறுகுமென்பதனாற்கூறியவரைமாத்திரையினுங் குறுகிநிற்குமென்ற வியல்பிலேநிற்றலுமுரித்து.—(எ-று) உம்மையெதிர்மறை. [உ-ம்] கொக்குக்கடிது- கொக்குக்கடுமை- எனவரைமாத்திரையிற்குறைந்தவாறு. குரங்குகடிதென்பதுமுதலியவற்றோடுபடுத்துச்செவிகருவியாகவுணர்க. முன்னின்றசூத்திரத்துகரநிறையுமென்றற்குகரமரைமாத்திரையிற்சிறிதுமிக்குநிற்குமென்றுபொருள்கூறி யிச்சூத்திரத்திற்குப்பழையவரைமாத்திரைபெற்றுநிற்குமென்றுகூறுவாருமுளர். (௬)

யகரம்வருவழியிகரங்குறுகு,முகரக்கிளவிதுவரத்தோன்றாது. *

இதுகுற்றியலிகரம்புணர்மொழியகத்துவருமாறுகூறுகின்றது. யகரம்வருவழியுகரக்கிளவிதுவரத்தோன்றாது - யகரமுதன்மொழிவருமொழியா

ய்வருமிடத்து நிலைமொழிக் குற்றுகரவெழுத்து முற்றத்தோன்றாது — இசைநிறைந்து ங்குறுகும் - ஆண்டோரிகரம்வந்து அளைமாத்திரைபெற்று நிற்கும்.-(எ-று) [உ-ம்] நாகியாது - வரகியாது - தெள்கியாது - எஃகியாது - கொக்கியாது - குரங்கியாது - எனவரும். துவரவென்றார். ஆறீற்றின்கண்ணுமுகரங்கெடுமென்றற்கு.) (௫)

ஈரெழுத்துமொழியுமுயிர்த்தொடர்மொழியும், வேற்றுமையாயினொற்றிடையினமிகத், தோற்றம்வேண்டும்வல்லெழுத்துமிகுதி. ※

இதுமுற்கூறியவாறனுண்முன்னர்நின்றவிரண்டற்கும்வேற்றுமைப்பொருட்புணர்ச்சிமுடிபுகூறுகின்றது. ஈரெழுத்துமொழியுமுயிர்த்தொடர்மொழியும் - ஈரெழுத்தொருமொழிக்குற்றுகரவீற்றிற்குமுயிர்த்தொடர்மொழிக்குற்றுகரவீற்றிற்கும் — வேற்றுமையாயின் - வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயின் — இனவொற்றிடைமிக - இனமாகியவொற்றிடையிலேமிக — வல்லெழுத்துமிகுதிதோற்றம்வேண்டும் - வல்லெழுத்துமிகுதிதோன்றிமுடிதலைவிரும்புமாசிரியன். — (எ-று) [உ-ம்] யாட்டுக்கால் - செவி - தலை - புறம் - எனவும் முயிற்றுக்கால் - சினை - தலை புறம் - எனவும்வரும். கயிற்றுப்புறம் - வயிற்றுத்தீ - என்பனவுமாம். தோற்றமென்றதனானேனைக்கணத்துமிம்முடிபுகொள்க. யாட்டுஞாற்சி - நீட்சி - மணி - வால் - அதள் - எனவும் முயிற்றுஞாற்சி - நீட்சி - முட்டை - வலிமை - அடை - ஆட்டம் - எனவும்வரும். (௬)

ஒற்றிடையினமிகாமொழியுமாருளவே, யத்திறத்தில்லைவல்லெழுத்துமிகலே. ※

இஃதெய்தியதொருமருங்குமறுக்கின்றது. ஒற்றிடையினமிகாமொழியுமாருள - முற்கூறியவிரண்டனுள்ளினவொற்றிடைமிக்குமுடியாதமொழிகளுமுள — வல்லெழுத்துமிகலத்திறத்தில்லை - வல்லொற்றுமிக்குமுடிதலக்கூற்றிவில்லை — (எ-று) [உ-ம்] நாகுகால் - செவி - தலை - புறம் - எனவும் வரகுகதிர் - சினை - தாள் - பதர் - எனவும்வரும். அத்திறமென்றதனானுருபிற்கெய்தியசாரியைபொருட்கெய்தியவழியியைபுவல்லெழுத்துவீழ்க்க. யாட்டின்கால் - முயிற்றின்கால் - நாகின்கால் - வரகின்கதிர் - எனவரும். அத்திறமென்றதனானேனைக்கணத்துமொற்றிடைமிகாமைகொள்க. நாகுஞாற்சி - நீட்சி - வரகுஞாற்சி - நீட்சி - எனவொட்டுக. (௭)

இடையொற்றுத்தொடருமாய்தத்தொடரு, நடையாயியலவென்மனார்புலவர். *

இஃதிவைநின்றவிரண்டற்குமுடிபுகூறுகின்றது. இடையொற்றுத்தொடருமாய்தத்தொடரும் - இடையொற்றுத்தொடர்மொழிக்குற்றுகரவீறுமாய்தத்தொடர்மொழிக்குற்றுகரவீறும்— நடையாயியலவென்மனார்புலவர் - நடக்குமிடத்துமுற்கூறியவவ்வியல்புமுடிபினையுடையவென்றுகூறுவர்புலவர்.—(எ-று)[உ-ம்]தெள்குகால்-சிறை-தலை-புறம்-எஃகுகடுமை-சிறுமை-தீமை-பெருமை-எனவரும். (அ)

வன்றொடர்மொழியுமென்றொடர்மொழியும், வந்தவல்லெழுத்தொற்றிடைமிகுமே, மெல்லொற்றுத்தொடர்மொழி மெல்லொற்றெல்லாம், வல்லொற்றிறுதி கிளையொற்றாகும். *

இது பின்னின்றவிரண்டிற்கு முடிபுகூறுகின்றது. வன்றொடர்மொழியுமென்றொடர்மொழியும் -வன்றொடர்மொழிக்குற்றுகரவீறுமென்றொடர்மொழிக்குற்றுகரவீறும்—வந்தவல்லெழுத்தொற்றிடைமிகும்-வருமொழியாய்வந்தவல்லெழுத்தினவொற்றிடையிலேமிக்குமுடியும்— மெல்லொற்றுத்தொடர்மொழிமெல்லொற்றெல்லாம்- அவ்விரண்டனுண்மெல்லொற்றுத்தொடர்மொழிக்கணின்றமெல்லொற்றெல்லாம் —இறுதிவல்லொற்று-இறுதிக்கணின்றவல்லொற்றும்— கிளையொற்றாகும் - கிளையாகியவல்லொற்றுமாய்முடியும்.—(எ-று)இறுதிவல்லொற்றுவருதலாவது குற்றுகரமேறிநின்றவல்லொற்றுத்தானேமுன்னர்வந்துநிற்றலாம்.கிளைவல்லொற்றுவருமாறு ணகாரத்திற்குடகாரமுமனகாரத்திற்குறகாரமும்புணர்ச்சியும்பிறப்புநோக்கிக்கிளையாமாதலினவையுமுன்னர்வந்துநிற்றலாம்.[உ-ம்]கொக்குக்கால்-சிறகு-தலை-புறம்-குரங்குக்கால்-செவி-தலை-புறம்- குரக்குக்கால்-செவி-தலை-புறம்- எட்குக்குட்டி-செவி-தலை-புறம்-எற்புக்காடு-சுரம்-தலை-புறம்-எனவரும். அற்புத்தளை - என்பதன்பினுற்செய்ததளையெனவேற்றுமையுமன்பாகியதளையெனவல்வழியுமாம்.வந்தவென்றதனானிவ்விரண்டிற்குமுருபிற்குச்சென்றசாரியைபொருட்கட்சென்றவழியியைபு வல்லெழுத்துவீழ்க்க.கொக்கின்கால்-குரங்கின்கால்- எனவரும். எல்லாமென்றதனால்-பறம்பிற்பாரி-குறும்பிற்சான்றோர்-என மெல்லொற்றுத்திரியாமையுங்

---

கிளையெழுத்தென்றும் பாடம்உண்டு.

கொள்க. ஒற்றென்றமிகுதியாவியல்புகணத்துக்கண்ணும் குரக்குஞாற்சி- நிணம்-முகம்-விரல்-உகிர்-எனமெல்லொற்றுத்திரிந்துவருமாறுகொள்க. சிலப்பதிகாரமென்பதுமது. வன்றொடர்மொழியியல்புகணத்துக்கண்வருதல் ஞநமயவவென்பதனான்முடியும். (௯)

மரப்பெயர்க்கிளவிக்கம்மேசாரியை. *

இஃதெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிகூறுகின்றது. அம்முவருதலின்) மரப்பெயர்க்கிளவிக்கம்மேசாரியை - குற்றுகரவீற்றுமரப்பெயர்க்குவருஞ்சாரியையம்முச்சாரியை.—(எறு) [உம்] தேக்கங்கோடு-செதிள்-தோல்-பூ- எனவும் கமுகங்காய்-தெங்கங்காய்-சிழ்கம்புல்-கம்பம்புலம்-பயற்றங்காய்-என்றாற்போலும் புல்லினையுமரமெனவடக்கிமாறுகொளக்கூறலெனத் தழீஇக்கொண்டசிதைவென்பதாமிச்சூத்திரமென்றுணர்க. (௰)

மெல்லொற்றுவலியாமரப்பெயருமுளவே. *

இது மென்றொடர்மொழிக்கெய்தியதொருமருங்குமறுக்கின்றது. மெல்லொற்றுவலியாமரப்பெயருமுள - மெல்லொற்றுவல்லொற்றாகத் திரியாதுமெல்லொற்றாய்முடியுமரப்பெயருமுள.—(எ-று) [உ-ம்] புன்கங்கோடு-செதிள்-தோல்-பூ-எனவும் குருந்தங்கோடு-செதிள் தோல் பூ-எனவும் வரும். வலியாமரப்பெயருமுளவெனவே வலிக்குமரப்பெயருமுளவென்றுகொள்க. வேப்பங்கோடு-கடப்பங்காய்-ஈச்சங்காய்-எனவரும். (௰௧)

ஈரொழுத்துமொழியும்வல்லொற்றுத்தொடரு,மம்மிடைவரற்குமுரியவையுளவே,யம்மரபொழுகுமொழிவயினான. *

இஃ தீரொழுத்தொருமொழிக்கும் வன்றொடர்மொழிக்கு மெய்தாத தெய்துவித்தது. முன்னரெய்தியதனைவிலக்கி யம்முவருதலின்) ஈரொழுத்துமொழியும் வல்லொற்றுத்தொடரும் - ஈரொழுத்தொருமொழிக் குற்றியலுகரமும்வன்றொடர்மொழிக்குற்றியலுகரமும் — அம்மிடைவரற்குமுரியவையுள - முன்முடித்துப்போந்தமுடிபுகளன்றியம்முச்சாரியையிடைவந்துமுடிதற்குரியனவுமுள. யாண்டெனின்— அம்மரபொழுகுமொழிவயினான - அவ்விலக்கணநடக்குமொழியிடத்து.—(எ-று) [உ-ம்] ஏறங்கோள்-சூதம்போர்-வட்டம்போர்- புற்றம்பழஞ்சோறு- எனவரும். உம்மையெதிர்மறையாகலினம்முப்பெறாதனநாகுகால்-கொக்குக்கால்- எனமுன்னர்க்காட்டினவேயாம். அம்மரபொழுகுமென்றதனால்அரசக்கன்னி -மு

• ரசக்கடிப்பு-எனவக்கும்வல்லெழுத்துங்கொடுத்தும் அரசவாழ்க்கை-முரசுவாழ்க்கை-எனவக்குக்கொடுத்துமுடிக்க. இன்னுமதனானேயிருளத்துக்கொண்டான்-விளக்கத்துக்கொண்டான் -எனவத்தும் வல்லெழுத்துங்கொடுத்துமயிலாப்பிற்கொற்றன்-பறம்பிற்பாரி-எனவின்கொடுத்தும்கரியதன்கோடு-நெடியதன்கோடு-என அன்கொடுத்துமுடிக்க. (௰௨)

ஒற்றுநிலைதிரியாதக்கொடுவரூஉ,மக்கிளைமொழியுமுளவெனமொழிப.*

இதுமென்றொடர்மொழியுட்சிலவற்றிற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது. ஒற்றுநிலைதிரியாதக்கொடுவரூஉம் - ஒற்றுமுன்னின்றநிலைதிரியாதக்குச்சாரியையோடும்பிறசாரியையோடும்வரும்— அக்கிளைமொழியுமுளவெனமொழிப- அக்கிளையானசொற்களுமுளவென்றுசொல்லுவாராசிரியர்—(எ-று)இதற்கும்மைமுன்னர்மாறுக·[உ-ம்] குன்றக்கூகை-மன்றப்பெண்ணை-எனவரும்.உம்மையாற்கொங்கத்துழவு-வங்கத்துவாணிகம்-எனவத்துப்பெற்றன· நிலையென்றதனானொற்றுநிலைதிரியாவதிகாரத்துக்கண்வருஞ்சாரியைக்கியைபுவல்லெழுத்துவீழ்க்க. அக்கிளையென்றார்· இரண்டுச்சாரியைதொடர்ந்துமுடிவனவுமுளவென்றற்கு) பார்ப்பனக்குழவி-சேரி-தோட்டம்-பிள்ளை-யெனஅன்னுமக்கும்வந்தன· இவற்றிற்குடைமைவிரிக்க· பார்ப்பிடைக்குழவியென்றமாம்· பார்ப்பானாகியகுழவியென்றுவீண்டுமுடியாதென்றுணர்க· பார்ப்பனமகன்-பார்ப்பனவனிதை-என்பனவும் பார்ப்பாரச்சாதியுணர்த்தின· (௰௩)

எண்ணுப்பெயர்க்கிளவியுருபியனிலையும்· *

இது குற்றுகரவீற்றெண்ணுப்பெயரோடுபொருட்பெயர்முடிக்கின்றது· எண்ணுப்பெயர்க்கிளவி - எண்ணுப்பெயராகியசொற்கள்பொருட்பெயரோடுபுணருமிடத்து—உருபியனிலையும்- உருபுபுணர்ச்சியினியல்பின்கண்ணேநின்றல்பெற்றுப்புணரும்·—(எ-று) [உ-ம்]ஒன்றன்காயம்-இரண்டன்காயம்-சுக்கு-தோரை-பயறு-எனவொட்டுக· வருமொழிவரையாதுகூறினமையினியல்புகணத்துக்கண்ணுங்கொள்க·ஒன்றன்ஞாண்-நூல்-மணி-யாழ்-வட்டு-அடை-எனவரும்·ஒன்றனுற்கொண்டகாயமெனவிரியும்·மேலைச்சூத்திரத்துநிலையென்றதனானியைபுவல்லெழுத்துவீழ்க்க· (௰௪)

வண்டும்பெண்டுமின்னொடுசிவணும். *

இதுமென்றொடர்மொழியுட்சிலவற்றிற்குப்பிறமுடிபுகூறுகின்றது· வண்

டும்பெண்டுமின்னொடுசிவணும் - வண்டென்னுஞ்சொல்லும்பெண்டென்னுஞ்சொல்லுமின்சாரியையோடுபொருந்திமுடியும்.—(எ-று) [உ-ம்] வண்டின்கால்-பெண்டின்கால் -எனவரும். இதற்குமுற்கூறியவிலேசினான்வல்லெழுத்துவீழ்க்க. (௰௫)

பெண்டென்கிளவிக்கன்னும்வரையார். *

இது மேற்கூறியவற்றுளொன்றற் செய்தியதன்மேற் சிறப்புவிதிகூறுகின்றது. பெண்டென்கிளவிக்கன்னும்வரையார் - பெண்டென்னுஞ்சொற்கின்னேயுமன்றியன்சாரியைவருதலையும்நீக்காராசிரியர். —(எ-று) [உ-ம்] பெண்டன்கை-செவி-தலை-புறம்-எனவரும். (௰௬)

யாதெனிறுதியுஞ்சுட்டுமுதலாகிய, வாய்தவிறுதியுமுருபியனிலையும். *

இஃதீரெழுத்தொருமொழியுளொன்றற்குஞ்சுட்டுமுதலாகியவாய்தத்தொடர்மொழிக்கும்வேறுமுடிபுகூறுகின்றது. யாதெனிறுதியுஞ்சுட்டுமுதலாகியவாய்தவிறுதியும் - யாதென்னுமீறுஞ்சுட்டெழுத்துமுதலாகியவாய்தத்தொடர்மொழிக்குற்றுகரவீறும் — உருபியனிலையும் - உருபுபுணர்ச்சியினியல்பின்கண்ணேநின்று அன்பெற்றுச்சுட்டுமுதலிறுதி யாய்தங்கெட்டுமுடியும்.—(எ-று) [உ-ம்] யாதன்கோடு-அதன்கோடு-இதன்கோடு-உதன்கோடு-செவி-தலை-புறம்-எனவரும். ஆய்தங்கெடாமுன்னே அன்னினகரத்தைக்குற்றுகரத்தின்மேலேற்றுக. ஆய்தங்கெட்டாலதுமுற்றுகரமாய் நிற்றலின்.) (௰௭)

முன்னுயிர்வருமிடத்தாய்தப்புள்ளி,மன்னல்வேண்டுமல்வழியான. *

இது முற்கூறியவற்றுட்சுட்டுமுதலுகரத்திற்கு ஒருவழியல்வழிமுடிபுகூறுகின்றது. முன்னுயிர்வருமிடத்து- சுட்டுமுதலாகிய்வாய்தத்தொடர்மொழிக்குற்றுகரவீற்றின்முன்னேயுயிர்முதன்மொழிவருமிடத்து — ஆய்தப்புள்ளிமன்னல்வேண்டும் - ஆய்தவொற்றுமுன்புபோலக்கெடாதுநிலைபெற்றுமுடிதலைவிரும்புமாசிரியன்—அல்வழியான- அல்வழிக்கண். —(எ-று) [உ-ம்] அஃது இஃது-உஃது-எனநிறுத்தி. அடை-ஆடை -இலை-ஈயம்-உரல்-ஊழ்-எழு-ஏணி-ஐயம்-ஒடுக்கம்-ஓக்கம்-ஔவியம்- எனவொட்டுக. முன்னென்றதனான் வேற்றுமைக்கண்ணுமிவ்விதிகொள்க. அஃதடை-அஃதொடுக. எனவரும். இவற்றிற்கிரண்டாமுருபுவிரிக்க. இன்னுமிதனானே யேனையிலக்கணமுடியுமாறிறந்துமுடிக்க. (௰௮)

எனைமுன் வரினே தானிலையின்றே. ✻
இது மேலவற்றிற்குப் பிறகணத்தோடு அல்வழிமுடிபு கூறுகின்றது. எனை முன்வரின் - முற்கூறியவீறுகளின் முன்னருயிர்க்கணமல்லன வருமாயின் — தானிலையின்று - அவ்வாய்தங்கெட்டுமுடியும். — (எ - று) [உ-ம்] அதுகடிது - இதுகடிது - உதுகடிது - சிறிது - தீது - பெரிது - ஞான்றது - நீண்டது - மாண்டது - யாது - வலிது - என வொட்டுக. (௰௯)

அல்லதுகிளப்பினெல்லா மொழியுஞ், சொல்லியபண்பினியற்கையாகும். ✻
இது ஆறீற்றுக்குற்றுகரத்திற்கு மல்வழிமுடிபுகூறுகின்றது. அல்லதுகிளப்பின் - அல்வழியைச்சொல்லுமிடத்து — எல்லாமொழியும் - ஆறீற்றுக்குற்றுகரமும் — சொல்லியபண்பினியற்கையாகும். மேலாசிரியர்கூறியகுணத்தையுடையவியல்பாய்முடியும். — (எ - று) [உ-ம்] நாகுகடிது - வரகுகடிது - தெள்குகடிது - எஃகுகடிது - குரங்குகடிது - சிறிது - தீது - பெரிது - என வரும். எனைக்கணத்துக்கண் நின்றசொன் முனியல்பாகுமென்றதனாற்கொள்க. எல்லாமொழியுமென்றதனால்வினைச்சொல்லும்வினைக்குறிப்புச்சொல்லுமியல்பாய்முடிதல்கொள்க. கிடந்தது குதிரை - கரிது குதிரை - என வரும். சொல்லியவென்றதனானிருபெயரொட்டுப்பண்புத்தொகைவன்கணத்துக்கணினவொற்றுமிக்குவல்லெழுத்துப்பெற்றுமுடிதலுமியல்புகணத்துக்கணினவொற்றுமிக்குமுடிதலுங்கொள்க. கரட்டுக்கானம் - குருட்டுக்கோழி - திருட்டுப்புலையன் - களிற்றுப்பன்றி - வெளிற்றுப்பனை - எயிற்றுப்பல் - எனவும் வரட்டாடு - குருட்டெருது - எனவும் வரும். பண்பினென்றதனால் மெல்லொற்றுவல்லொற்றாய் ஐகாரம்பெற்றுமுடிவனவும் மெல்லொற்றுவல்லொற்றாயைகாரமும்வல்லெழுத்தும் பெற்றுமுடிவனவும் மெல்லொற்றுவல்லொற்றாகா தைகாரமும்வல்லெழுத்தும்பெற்று முடிவனவுங்கொள்க. ஓர்யாட்டையானை - ஐயாட்டையெருது - எனவும் அற்றைக்கூத்தர் - இற்றைக்கூத்தர் - எனவும் மன்றைத்தூதை - மன்றைப்பானை - பண்டைச்சான்றூர் - எனவும்வரும். (உ௰)

வல்லொற்றுத்தொடர்மொழிவல்லெழுத்துமிகுமே. ✻
இது அவ்வாறீற்றுளொன்றற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது. வல்லொற்றுத்தொடர்மொழி வல்லெழுத்துமிகும் - வல்லொற்றுத்தொடர்மொழிக்குற்றுகரவீறு வல்லெழுத்துவருவழி வல்லெழுத்து மிக்குமுடியு

ம்.—(எ-று)[உ-ம்]கொக்குக்கடிது-பாக்குக்கடிது-சிறிது-தீது-பெரிது-பட்டுக்கடிது-எனவரும். (உய௧)

சுட்டுச்சினைநீடியமென்றொடர்மொழியும், யாவினாமுதலியமென்றொடர்மொழியு,மாயியதிரியாவல்லெழுத்தியற்கை. *

இதுவுமவ்வாறீற்றுளொன்றன்கணேழாம்வேற்றுமையிடப்பொருளுணரநின்றவிடைச்சொற்குமுடிபுகூறுகின்றது. சுட்டுச்சினைநீடியமென்றொடர்மொழியும் -சுட்டாகியசினையெழுத்துநீண்டஆகாரமுதன்மொழிமென்றொடர்க்குற்றுகரவீறும் — யாவினாமுதலியமென்றொடர்மொழியும்-யாவென்னும்வினாமுதலாகியமென்றொடர்மொழிக்குற்றுகரவீறும் —வல்லெழுத்தியற்கைஆயியதிரியா-வல்லெழுத்துப்பெற்றுமுடியுந்தன்மையாகியவவ்வியல்பிற்றிரியாதுமுடியும்.-(எ-று)[உ-ம்]ஆங்குக்கொண்டான்-ஈங்குக்கொண்டான்-ஊங்குக்கொண்டான்-யாங்குக்கொண்டான்- சென்றான்-தந்தான்-போயினான் -எனவல்லெழுத்துக்கொடுக்க. இயற்கையென்றதனானிக்குற்றியலுகரவீற்றுவினையெச்சமியல்பாய் மிக்குமுடிவனவுங்கொள்க. இருந்துகொண்டான்-ஆண்டுசென்றான்-தந்துதீர்ந்தான்-வந்துபோயினான்-எனவும் செத்துக்கிடந்தான்-செற்றுச்செய்தான் -உய்த்துக்கொண்டான்-நட்டுப்போனான்-எனவும்வரும். (உயஉ)

யாவினாமொழியேயியல்புமாகும். *

இது மேலனவற்றுளொன்றற்கெய்தியதன்மேற்சிறப்புவிதி கூறுகின்றது. வல்லெழுத்து விலக்கியியல்பாமென்றவின்.) யாவினாமொழியேயியல்புமாகும்-முற்கூறியவற்றுள்யாவென்னும்வினாவையுடையசொல்முற்கூறியவாறன்றியியல்பாயுமுடியும்.—(எ-று) [உ-ம்]யாங்குகொண்டான்-சென்றான்-தந்தான்-போயினான்-எனவரும். இதனைப்படியென்னும் வினாப்பொருளை யுணர்த்திற்று. உம்மையான் மிக்குமுடிதலே வலியுடைத்து. எகாரம்பிரிநிலை. (உயங)

அந்நான்மொழியுந்தந்நிலைதிரியா. *

இதுமேலனவற்றிற்குநிலைமொழிச்செய்கைகூறுகின்றது. அந்நான்மொழியும் - சுட்டுமுதன்மூன்றும்யாமுதன்மொழியுமாகியவந் நான்கு மொழியும் —தந்நிலைதிரியா - தன்மெல்லொற்றுய தன்மைதிரிந்துவல்லொற்றாகாதுமுடியும்—(எ-று) உதாரணமுற்காட்டியவே. தந்நிலையென்றதனு

ன்மெல்லொற்றுத்திரியாதுவல்லெழுத்து மிக்குமுடிவனபிறவுங்கொள்க. அங்குக்கொண்டான் - இங்குக்கொண்டான் - உங்குக்கொண்டான் - எங்குக்கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - எனவரும். இதுமுன்னர் யா மொழியென்னாதுவினாவென்றதனான்எழாவதனிடப் பொருட்டாகியபிறவுமியல்பாய்முடிவனவுங்கொள்க. முந்துகொண்டான் - பண்டுகொண்டான் - இன்றுகொண்டான் - அன்றுகொண்டான் - என்றுகொண்டான்என வரும்.

(உ௰ச)

உண்டென்கிளவியுண்மைசெப்பின், முந்தையிறுதிமெய்யொடுங்கெடுதலு, மேனிலையொற்றேளகாரமாதலு, மாமுறையிரண்டுமுரிமையுமுடைத்தே, வல்லெழுத்துவரூஉங்காலையான. ※

இது மென்றொடர்மொழியுள்வினைக்குறிப் புமொழிக்குவேறுமுடிபு கூறுகின்றது. உண்டென்கிளவியுண்மைசெப்பின் - உண்டென்னுஞ் சொல் வினைக்குறிப்பையுணர்த்தாதொருபொருடோன்றுங்காற்றோன்றியதுகெடுந்துணையுமுண்டாய்நிற்கின்றதன்மையாகியபண்பையுணர்த்திநிற்குமாயின் — முந்தையிறுதிமெய்யொடுங்கெடுதலும் - முன்னர்நின்றகுற்றுகரந்தானேறிநின்றமெய்யொடுங்கெடுதலும் — மேனிலையொற் றேளகாரமாதலும் - அதற்குமேனின்றணகாரவொற்றுளகாரவொற்றாதலுமாகிய — ஆமுறையிரண்டுமுரிமையுமுடைத்து - அம்முறைமையினையுடையவிரண்டுநிலையுமுரித்து. அஃதுரித்தன்றிமுன்னர்நின்ற நிலையிலேகேடுந்திரிபுமின்றிநிற்றலுமுடைத்து — வல்லெழுத்துவரூஉங்காலையான - வல்லெழுத்துமுதன்மொழியாய்வருங்காலத்து. - (எ - று) வல்லெழுத்ததிகாரத்தால்வாராநிற்பவல்லெழுத்துவரூஉங்காலையென்றதனானவ்விருமுடிபுமுளபண்பையுணர்த்தும்பகரம்வருமொழிக்கண்ணேயென்பதூஉ மேனைக்கசதக்களிலுமியல்புகணத்திலுமுண்டெனநின்றுவினைக்குறிப்பாயுஞ்சிறுபான்மைபண்பாயுநிற்குமென்பதூஉங்கொள்க. [உம்] உள்பொருள் - உண்டுபொருள் - எனவும்இதுபொருண்மைசுட்டாதுண்மைத்தன்மைப்பண்பையீண்டுணர்த்திற்று இனிஉண்டுகாணம் - உண்டுசாக்காடு - உண்டுதாமரை - உண்டுஞானம் - நூல் - மணி - யாழ் - வட்டு - அடை - ஆடை - எனவருவனவெல்லாங்கேடுந்திரிபுமின்றிவினைக்குறிப்பாயுஞ்சிறுபான்மைபண்பாயும்நின்றன. இவற்றின்வேறுபாடுவினையியலுள்வினைக் குறிப்போதும்வழியுணர்க. உள்பொருளென்பது பண்புத்

தொகை முடிபன்றேவெனின் அஃதோகையொற்றுமை படச்சொல்லு ம்வழி யது. இஃதோகை யிடையறவுபடச்சொல்லும் வழிய து போ லும். (௨௱௫)

இருதிசைபுணரினேயிடைவருமே. *

இதுகுற்றுகரவீற்றுத்திசைப்பெயர்க்கல்வழிமுடிபுகூறுதலினெய்தாததெ ய்துவித்தது. இருதிசைபுணரின் - இரண்டுபெருந்திசையுந்தம்மிற்புண ரின் — ஏயிடைவரும் - ஏயென்னுஞ்சாரியை யிடைநின்றுபுணரும். — (எ - று) [உ - ம்] தெற்கேவடக்கு-கிழக்கேமேற்கு-இவையும்மைத் தொகை. (௨௱௬)

திரிபுவேறுகிளப்பினொற்றுமுகரமுங், கெடுதல்வேண்டுமென்மனார்புல வ, ரொற்றுமெய்திரிந்தனகாரமாகுந், தெற்கொடுபுணருங்காலையான. *

இதுபெருந்திசைகளோடுகோணத்திசைகள்புணர்த்தலினெய்தாததெய்து வித்தது. திரிபுவேறுகிளப்பின் - அப்பெருந்திசைகளோடுகோணத்திசை களைவேறாகப்புணர்க்குமிடத்து — ஒற்றுமுகரமுங்கெடுதல்வேண்டுமென் மனார்புலவர் - அவ்வுகரமேறிநின்றவொற்றுமவ்வீற்றுகரமுங்கெட்டுமுடித ல்வேண்டுமென்றுசொல்லுவர்புலவர் — தெற்கொடுபுணருங்காலை - அது தெற்கென்னுந்திசையொடுபுணருங்காலத்து - ஆனவொற்றுமெய்திரிந்து னகாரமாகும் - அத்திசைக்குப்பொருந்திநின்றறகாரவொற்றுத்தன்வடிவு திரிந்துனகரவொற்றாய்நிற்கும். — (எ - று) திரிந்தென்றதனான்வடக்கென்ப தன்கணின்றககரவொற்றுக்கெடுக்க. [உ - ம்] வடகிழக்கு-வடமேற்கு-தென் கிழக்கு-தென்மேற்கு-எனவரும். வேறென்றதனாற்றிசைப்பெயரோடுபொ ருட்பெயர்க்குமிம்முடிபுகொள்க. வடகடல்-வடசுரம்-வடவேங்கடம் தெ ன்குமரி-தென்சுரம்-தென்னிலங்கைஎனவரும். மெய்யென்றதனானுயிர்கெ ட்டுந்திரிந்து மெய்கெட்டுமுடிவனவுமுள. அதுதிசைப்பெயர் முன்னர்ப் பொருட்பெயர்வந்தவழியென்றுணர்க. கீழ்கரை-கீழ்கூரையென்பன - கிழ க்கு!கரை -கூரை - யென்பவற்றோடு புணருமிடத்து நிலைமொழி யிறுதி யுகரமெய்யோடுங்கெட்டு அதன்மேல்நின்றககரவொற்றும் ழகரத்தில்அக ரமும்கெட்டுமுதலெழுத்துநீண்டுமுடிந்தனவாம் - மீகரை -மீகூரையென் பன - மேற்கு!கரை - கூரை - யென்பவற்றோடுபுணருமிடத்துநிலைமொழியீ ற்றுகரமெய்யோடுங்கெட்டு அதன்மேல்நின்றறகரவொற்றுங்கெட்டேகா

ரமீகாரமாகி யேறிமுடிந்தன. இன்னுமிதனானே - மேன்மாடு - மேல்பால் மேலைச்சேரி - யென்றாற்போல்வனவுஞ் செய்கையறிந்துமுடிக்க. (௨௭)

ஒன்றுமுதலாக வெட்டனிறுதி, யெல்லாவெண்ணும் பத்தன்முன்வரிற், குற்றியலுகர மெய்யொடுங் கெடுமே, முற்றவின் வரூஉ மிரண்டலங் கடையே. ※

இது நிறுத்தமுறையானே யாறீற்றுக்குற்றுகரமுமுணர்த்தியிதுமுதலாக வெண்ணுப்பெயர்முடிக்கின்றார். ஒன்றுமுதலாகவெட்டனிறுதியெல்லா வெண்ணும் - ஒன்றென்னு மெண்முதலாக வெட்டென்னு மெண்ணீறாயுள்ள வெல்லாவெண்ணுப்பெயர்களும்—பத்தன்முன்வரின் - பத்தென்னுமெண்ணுப்பெயரின்முன்வரின்—குற்றியலுகரமெய்யொடுங்கெடும் - அப்பத்தென்னுஞ் சொல்லிற் குற்றுகரந் தானேறி நின்றமெய்யோடுங் கெடும்—இரண்டலங்கடைமுற்றவின்வரூஉம் - ஆண்டிரண்டல்லாதவெண்ணுப்பெயர்களிடத்துமுடிய வின்சாரியையிடைவந்துபுணரும்—(எ - று) [உ-ம்] பதினொன்று - பதின்மூன்று - பதினான்கு - பதினைந்து - பதினாறு - பதினேழு - பதினெட்டு - எனவரும். நிலைமொழி முற்கூறாததனாற்பிறவெண்ணின் முன்னர்ப்பிறபெயர்வந்துழியு மின்பெறுதல்கொள்க. ஒன்பதின்கூறு - ஒன்பதின்பால் - எனவரும். முற்றவென்றதனாற்பதினான்கென்புழி வந்தவின்னினகரம்வருமொழிக்கட்கருவிசெய்துகெடுத்துமுடிக்க. (௨௮)

பத்தனொற்றுக்கெட னகரமிரட்டல், லொத்ததென்பவிரண்டுவருகாலை. ※

இது மேலின்பெறாதென்றுவிலக்கிய இரண்டற்குப்பிறிதுவிதிகூறுகின்றது. பத்தனொற்றுக்கெடனகரமிரட்டல் - பத்தென்னுஞ்சொல்லினின்றதகரவொற்றுக்கெட னகரவொற்றிரட்டித்து வருதல்—இரண்டுவருகாலைஒத்ததென்ப - இரண்டென்னு மெண்வருங்காலத்திற்பொருந்திற்றென்பராசிரியர்.— (எ-று) [உ-ம்] பன்னிரண்டு - எனவரும். குற்றியலுகரமெய்யொடுங்கெடுமென்றவிதியிதற்கு மேலனவற்றிற்குங்கொள்க. (௨௯)

ஆயிரம்வரினுமாயியறிரியாது ※

இதுவு மெண்ணுப்பெயர்முடிபு கூறுகின்றது. ஆயிரம்வரினுமாயியறிரியாது - முற்கூறியபத்தன்முன்னரொன்று முதலியனவேயன்றி யாயிரமென்னு மெண் வந்தாலு மீறுகெட்டின்பெற்று முடியு மியல்பிற்றிரியாதுமுடியும். (எ-று) [உ-ம்] பதினாயிரம். எனவரும்.

உம்மை யிறந்தது தழீஇயிற்று (௫௰).

நிறையுமளவும்வருஉங்காலையுங், குறையாதாகுமின்னென்சாரியை.*

இது எண்ணுப்பெயரோடு நிறைப்பெயருமளவுப்பெயரும்புணர்க்கின்றது. நிறையுமளவும்வருஉங்காலையும் - முற்கூறியபத்தென்பதன்முன்னர் நிறைப்பெயருமளவுப்பெயரும்வருங்காலத்தும் — இன்னென் சாரியை குறையாதாகும் - அவ்வின்னென்னுஞ்சாரியைகுறையாதுவந்துமுடியும். (எ-று) [உ-ம்] பதின்கழஞ்சு-தொடி-பலம்-எனவும் பதின்கலம்-சாடி-தூதை-பானை-நாழி-மண்டை-வட்டி- எனவும் பதிற்றகல்-பதிற்றுழக்கு எனவும்வரும். குறையாதாகுமென்றதனாற் பத்தின்முன்னர் பொருட்பெயருமெண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் வந்துழியு மின்கொடுத்துவேண்டுஞ்செய்கைசெய்து முடிக்க. பதிற்றுவேலி-யாண்டு-அடுக்கு-முழம்-எனவும் பதின்றிங்கள்- எனவும்வரும். பதிற்றொன்று-இரண்டுமுதல் பத்தளவுமொட்டுக. பதிற்றுத்தொடி- எனவுமொட்டுக. இவ்வீற்றினகரம் றகரமாதல் ளவாகுமொழிமுத லென்பதனுணிலைஇய வென்பதனான்முடிக்க. இவற்றிற்கொற்றிரட்டுதலுமுகரம் வருதலும் வல்லெழுத்துப் பெறுதலுமுற்கூறிய வொன்றுமுதலாகவென்பதனுட் கூறியமுற்றவென்றதனாற்கொள்க. (௫௰௧)

ஒன்றுமுதலொன்பானிறுதிமுன்னர், நின்றபத்தனொற்றுக்கெடவாய்தம், வந்திடைநிலையுமியற்கைத்தென்ப, கூறியவியற்கைகுற்றியலுகர, மாறனிறுதியல்வழியான. *

இது எண்ணுப்பெயரோடெண்ணுப்பெயர்க்குமுடிபுகூறுகின்றது. ஒன்றுமுதலொன்பானிறுதிமுன்னர் - ஒன்றுமுதலொன்பதீறாகக்கூறுகின்றவெண்ணுப்பெயர்களின்முன்னர்— நின்றபத்தனொற்றுக்கெட- வருமொழியாகவந்துநின்றபத்தென்னுஞ் சொல்லினது தகரவொற்றுக்கெட — ஆய்தம்வந்திடை நிலையுமியற்கைத் தென்ப- ஆய்தமானது வந்திடையே நிலைபெறு மியல்பையுடைத்தென்று கூறுவராசிரியர்— ஆறனிறுதியல்வழியான -அவற்றுளாறென்னுமீறல்லாதவிடத்து— குற்றியலுகரங் கூறியவியற்கை - குற்றியலுகர முற்கூறியவியற்கையாய்மெய்யொடுங்கெட்டுமுடியும்—(எ-று) இங்ஙனம்வருமாறுமேல்வருகின்றசூத்திரங்களுட்காட்டுதும். வந்தென்றதனாலாய்தமாகத்திரியாதுதகரவொற்றுக்கெட்டு ஒரு

பதென்று நிற்றலுங்கொள்க. (ஙஉ)

முதலீரெண்ணினொற்றுரகரமாகு, முகரம்வருதலாவயினான. *

இது மேற்கூறியவற்றிற்கு நிலைமொழிச் செய்கை கூறுகின்றது. முதலீரெண்ணினொற்றுரகரமாகும் - அவற்றின் முதற்கணின்றவிரண்டெண்ணினுடையனகரவொற்றும்ணகரவொற்றும்ரகரவொற்ருகத் திரிந்துநிற்கும்— ஆவயினானஉகரம்வருதல் - அவ்விடத்துகரம்வருக.—(எ-று) [உ.ம்] ஒருபஃது-எனவரும்.ஒன்றென்பத னீற்றுக்குற்றுகரமெய்யொடுங்கெடுத்து னகரவொற்றினை ரகரவொற்ருக்கியுகரமேற்றியொருவெனநிறுத்திநின்றபத்தென்பதன்தகரவொற்றுக்கெடுத்து ஆய்தமாக்கிப் பஃதெனவருவித்து ஒருபஃதெனமுடிக்க.மேல்வருவனவற்றிற்குச்சூத்திரங்களாற் கூறுஞ்சிறப்புவிதியொழிந்தவற்றிற்கிதுவேமுடிபாகக்கொள்க. (ஙஙு)

இடைநிலைரகர மிரண்டனெண்ணிற்கு,நடைமருங் கின்றே பொருள்வயினான. *

இதுவுமது. இரண்டனெண்ணிற் கிடைநிலைரகரம் - இரண்டென்னுமெண்ணிற் கிடைநின்றரகரம் — பொருள்வயினான - அம்மொழி பொருள்பெறுமிடத்து— நடைமருங்கின்று - நடக்குமிடமின்றிக்கெடும்(எ-று) [உ-ம்] இருபஃது - எனவரும். இதற்கு ரகரவுயிர்மெய் யிதனாற்கெடுத்தேனையகூறியவாறேமுடிக்க.பொருளெனவேயெண்ணல்லாப்பொருளுங்கொள்க.இருகடல் - இருவினை - இருபிறப்பு எனவரும். (ஙச)

மூன் று மா று நெடுமுதல் குறுகும். *

இதுவுமது. மூன்றுமாறுநெடுமுதல்குறுகும் - மூன்றென்னுமெண்ணும் ஆறென்னுமெண்ணும் நெடுமுதல்குறுகி முடியும்.—(எ-று) அறுவெனக்குறுக்கிப் பஃதெனவருவித்து அறுபஃதெனமுடிக்க. (ஙரு)

மூன் ற னொற் றே பகாரமாகும். *

இதுவுமது. மூன்றனொற்றேபகாரமாகும் - மூன்றென்னுமெண்ணின்கணின்ற னகரவொற்றுப் பகரவொற்ருய்முடியும். — (எ-று) [உ-ம்]முப்பஃது-எனவரும்.மூன்றுமாறுநெடுமுதல்குறுகுமென்றதனானே மூன்றனொற்றேயெனக்குறுக்கிச்சூத்திரஞ்செய்யாராயினர். திரிந்ததன்றிரிபது வென்பதுபற்றி)ஏனையவற்றிற்குமிஃதொக்கும். (ஙசா)

நான்கனொற்றேறகாரமாகும். *

இதுவுமது· நான்கனொற்றே றகாரமாகும் - நான்கென்னு மெண்ணின்கணின்ற னகரவொற்று றகரவொற்றாய் முடியும். — (எ-று) [உ-ம்] நாற்பஃது - எனவரும். (௫௭)

ஐந்தனொற்றே மகாரமாகும். *

இதுவுமது· ஐந்தனொற்றே மகாரமாகும் - ஐந்தென்னு மெண்ணின்கணின்ற நகரவொற்று மகரவொற்றாய்முடியும்.—(எ-று) [உ-ம்] ஐம்பஃது எனவரும்; எழு குற்றியலுகரவீறன்மையுருபியலுட்காண்க (௫௮)

எட்டனொற்றே ணகாரமாகும். *

இதுவுமது· எட்டனொற்றே ணகாரமாகும் - எட்டென்னுமெண்ணின்கணின்ற டகரவொற்று ணகரவொற்றாய்முடியும்.—(எ-று)[உ-ம்] எண்பஃது-எனவரும். (௫௯)

ஒன்பானொகரமிசைத் தகரமொற்று, முந்தையொற்றே ணகாரமிரட்டும், பத்தென்கிளவி யாய்தபகரங்கெட, நிற்றல்வேண்டு மூகாரக்கிளவி, யொற்றியதகரம் றகரமாகும். *

இஃதெய்தாததெய்துவித்தது·ஒன்பஃதெனநிறுத்திப்பஃதென வருவித்துமுடிக்குங்கால்) ஒன்பானொகரமிசைத் தகரமொற்றும்- நிலைமொழியாகியவொன்பதென்னு மெண்ணினதொகரத்திற்குமுன்னாக வொருதகரவொற்றுத் தோன்றிநிற்கும்—முந்தையொற்றேணகாரமிரட்டும்- முன்சொன்ன வொகரத்திற்கு முன்னர் நின்ற னகரவொற்று ணகரவொற்றாயிரட்டித்து நிற்கும்—பத்தென்கிளவியாய்தபகரங்கெட- வருமொழியாகியபத்தென்னுஞ்சொற்றன்கண்ணாய்தமும்பகரமுங்கெட்டுப்போக— ஊகாரக்கிளவிநிற்றல்வேண்டும் - நிலைமொழியிரட்டிய ணகரத்தின்பின்னரூகாரமாகியவெழுத்துவந்துநிற்றலையாசிரியன்விரும்பும்— ஒற்றியதகரம்றகரமாகும்- வருமொழியாகிய பத்தென்பதனீற்றின்மேலுறியவுகரங்கெடாதுபிரிந்துநிற்பவொற்றாய்நின்றதகரம்றகரவொற்றாய் நிற்கும்.—(எ-று)[உ-ம்]தொண்ணூறு-எனவரும்.இதனை- ஒற்றாய்வந்துநின்ற தகரவொற்றின்மேல்நிலைமொழிஒகரத்தையேற்றித்தொவ்வாக்கி ணகரவொற்றிரட்டியதன்மேல்வருமொழிக்கட்பகரமுமாய்தமுங்கெட வந்த ஊகாரமேற்றித்தொண்ணூறாக்கிப்பகரவாய்தமென்னாத முறையன்றிக்கூற்றினானிலைமொழிக் கட்பகரமுமாய்தமுங் கெடுத்துக்குற்றியலுகர மெய்யோ

டுங்கெடுத்து வருமொழியிறுதித்தகரவொற்றுத் திரிந்துநின்ற றகரவொற்றின்மேலேநின்றவுகரமேற்றித்தொண்ணூறெனமுடிக்க. (சும)

அளந்தறிகிளவியு நிறையின்கிளவியுங், கிளந்தவியலதோன்றுங்காலை ✻

இது மேற்கூறியவொன்றுமுத லொன்பானெண்களோ டளவுப்பெயரு நிறைப்பெயருமுடியுமாறுகூறுகின்றது. அளந்தறிகிளவியு நிறையின்கிளவியுந்தோன்றுங்காலை - முற்கூறியவொன்று முதலொன்பான்களின் முன்னர்அளந்தறியப்படு மளவுப்பெயரும் நிறைப்பெயரும் வந்துதோன்றுங்காலத்து—கிளந்தவியல - ஆறனீறல்வழிக்குற்றுகர மெய்யொடுங் கெட்டு முதலீரெண்ணிறொற்று ரகாரமா யுகரம்வந் திடைநிலைரகரங்கெட்டு மூன்றுமாறுநெடுமுதல்குறுகி நான்கனொற்று வன்கணத்து றகரமா யெட்டனொற்றுணகாரமாய் முடியும்.—(எ-று) [உ-ம்] ஒருகலம்-இருகலம்-சாடி-தூதை-பானை -நாழி-மண்டை- வட்டி-எனவும்-ஒருகழஞ்சு- இருகழஞ்சு- தொடி- பலம்- எனவும்வரும். அகல்- உழக்கு -என்பனமுன்னர் முடித்தும். இவைமுதலீரெண்ணின் செய்கை. தோன்றுங்காலையென்றதனு னிவ்வெண்ணின் முன்ன ரெடுத்தோத்தானுமிலேசானு முடியாது நின்றவெண்ணுப் பெயர்களெல்லா மிவ்விதியும்பிறவிதியு மெய்துவித்து முடித்துக்கொள்க. ஒருமூன்று- ஒருநான்கு இருமூன்று- இருநான்கு- ஒருகால்-இருகால்-ஒருமுந்திரிகை- இருமுந்திரிகை- ஒருமுக்கால்- இருமுக்கால்- என்பனபிறவுங் கொணர்ந்தொட்டுக. இனிப்பிறவிதியெய்துவன ஒரொன்று-ஓரிரண்டு- ஓரைந்து-ஓராறு-ஒரேழு- ஒரெட்டு- ஒரொன்பது-எனவும் ஈரொன்று-ஈரிரண்டு- ஈரைந்து-ஈராறு-ஈரேழு-ஈரெட்டு-ஈரொன்பது-எனவும் மூவொன்று மூவிரண்டு மூவைந்து-மூவாறு-மூவேழு-மூவெட்டு-மூவொன்பது- எனவும் முதலீரெண்ணின் முனுயிரென்னுஞ் சூத்திரத்தா னுயிர்க்கெய்திய பிறவிதியு மூன்றன் முதனிலை நீடலுமென்ற விதியும்பெற்றுப் பிறசெய்கைகளும் பெற்றுமுடிந்தன. நாலொன்று - நாலிரண்டு- நாலைந்து- நாலாறு-நாலேழு- நாலெட்டு- நாலொன்பது- என்பன நான்கனொற்றே லகாரமாகுமென்ற விதிபெற்றுமுடிந்தன. பிறவுமிவ்வாறேயளவு நிறையு மெண்ணுமெல்லாமிவ்விலேசான்முடிக்க. (சக)

மூன்ற னொற்றே வந்த தொக்கும். ✻

இது மேன்மாட்டேற்றேடொவ்வாததற்குவேறுமுடிபுகூறுகின்றது. மூன்றனொற்றேவந்ததொக்கும் - மூன்றுமெண்ணின்கணின்ற னகரவொற்றுவருமொழியாய்வந்தவளவுப்பெயர்நிறைப்பெயர்களின் முன்னர்வந்தவொற்றோடொத்தவொற்றாய்முடியும்.—(எ-று)[உ-ம்]முக்கலம்-சாடி-தூதை-பானை-எனவும் முக்கழஞ்சு- தொடி-பலம்- எனவும்வரும். நான்கனொற்றே றகாரமாகுமென்ற முன்னைமாட்டேறு நிற்றலின் நாற்கலம்- சாடி- தூதை- பானை-எனவும் நாற்கழஞ்சு-தொடி- பலம்-எனவும்வரும். (௪௨)

ஐந்தனொற்றே மெல்லெழுத் தாகும். *

இதுவுமது. ஐந்தனொற்றேமெல்லெழுத்தாகும் - ஐந்தாவதன்கணின்ற நகரவொற்றுவருமொழி வல்லெழுத்துக்கேற்றமெல்லெழுத்தாகத் திரிந்திமுடியும்.—(எ-று) [உ-ம்] ஐங்கலம்- சாடி- தூதை-பானை-எனவும் ஐங்கழஞ்சு-தொடி-பலம்-எனவும்வரும். எகாரமீற்றசை. (௪௫)

கசதப முதன்மொழி வரூஉங்காலை. *

இது முற்கூறியமூன்றற்கு மைந்தற்கும் வருமொழிவரையறுக்கின்றது. கசதபமுதன்மொழிவரூஉங்காலை-மூன்றனொற்றுவந்ததொப்பதூஉமைந்தனொற்று மெல்லெழுத்தாவதூஉ மவ்வளவுப்பெயர் ஒன்பதினும் வன்கணமாகிய கசதபக்கண் முதன் மொழியாய் வந்தவிடத்து.—(எ-று) அது முன்னர்க்காட்டினும். ஆறுநெடுமுதல்குறுகுமென்ற மாட்டேற்றானேயாறு நெடுமுதல்குறுகிநின்றது. [உ-ம்] அறுகலம் - சாடி -தூதை- பானை-நாழி-மண்டை - வட்டி - எனவும் அறுகழஞ்சு - தொடி-பலம்- எனவும்வரும். அகல்-உழக்கு-என்பனமேற்காட்டுதும். எழ்குற்றுகரவீறன்மையின்மாட்டேறேலாதாயிற்று. (௪௰௪)

நமவவென்னுமூன்றொடுசிவணி,யகரம்வரினுமெட்டன்முனியல்பே. *

இது வேண்டாதுகூறி வேண்டியதுமுடித்தல். ஞநமயவவென்னுஞ் சூத்திரத்துட் கூறியவற்றைக் கூறுதலின்) எட்டன்முன் - எட்டென்பதன்முன்னர்—நமவவென்னுமூன்றொடுசிவணியகரம்வரினும் - அளவுப்பெயர்களின்முன்னர் மென்கணத்திரண்டு மிடைக்கணத்தொன்றுமாகிய நமவவென்னுமூன்றனோடுபொருந்தி யுயிர்க்கணத் தகரம்வரினு மும்மையானுயிர்க்கணத் அகரம்வரினுங் கூறுதவல்லெழுத்துக்கள் வரினும்— இய

ல்பு - முற்கூறியவாறே டகாரம்ணகாரமாய் வேறோர்விகாரமின்றியியல்பாய்முடியும்.—(எ-று)நமவவென்னுமூன்றும்வந்தாற்போலகரம்வரினுமென்பதுபொருள். [உ-ம்]எண்ணாழி-மண்டை-வட்டி-எனவும் எண்ணகல்-எண்ணுழக்கு- எனவும்.எண்கலம்-சாடி- தூதை-பானை - எனவும்வரும்.ஒன்றெனமுடித்தலான்வன்கணத்து நிறைப்பெயருங்கொள்க.எண்கழஞ்சு-தொடி-பலம்-எனவரும். இவ்வேண்டாகூறலான் எண்ணகலெனக் குற்றுகரவீறுய்க்கேடுந்திரிவும் பெற்றுயிர்வருமொழியானதொடர்மொழிக்கணொற்றிரட்டுதல்கொள்க. (௪௫)

ஐந்துமூன்று நமவருகாலை,வந்ததொக்கு மொற்றியனிலையே. *

இதுவு மேன்மாட்டேற்றோ டொவ்வாமுடிப்பு கூறுகின்றது. ஐந்துமூன்று நமவருகாலை- ஐந்தென்னுமெண்ணு மூன்றென்னுமெண்ணு நகரமுதன்மொழியு மகரமுதன்மொழியும் வருமொழியாய்வருங்காலத்து— ஒற்றியனிலை-நிலைமொழிக்கணின்றவொற்று நடக்குநிலைமைகூறின்—வந்ததொக்கும்-மேற்கூறியவாறே மகரமும் பகரமுமாகாது வருமொழிமுதல்வந்த வொற்றோடொத்தவொற்றாய்முடியும்.—(எ-று) [உ-ம்]ஐந்நாழி-ஐம்மண்டை-முந்நாழி- மும்மண்டை-எனவரும். மூன்று மைந்துமென்றதை முறையன்றிக்கூற்றினால் நானாழி- நான்மண்டை- என்புழி நிலைமொழி னகரம் றகரமாகாதுநின்றவாறே நின்றுமுடிதலும்வருமொழிமுதனின்ற நகரம்னகரமாகத்திரிய நிலைமொழிநகரங் கெடுதலுங்கொள்க. (௪௬)

மூன்றனொற்றே வகாரம்வருவழித்,தோன்றியவகரத் துருவாகும்மே *

இதுவுமது. மூன்றனொற்று - மூன்றுமெண்ணின்கணின்ற னகரவொற்று—வகரம்வருவழி-வகரமுதன்மொழிவருமிடத்து—தோன்றியவகரத்துருவாகும்- அவ்வருமொழியாய்த் தோன்றிய வகரத்தின் வடிவாய்முடியும்.—(எ-று)[உ-ம்]முவ்வட்டி- எனவரும்.தோன்றியவென்றதனானே முதனீண்டுவகரவொற்றின்றி மூவட்டி-என்றுமாம். (௪௭)

நான்கனொற்றே லகார மாகும். *

இதுவுமது. நான்கனொற்று- நான்காமெண்ணின்கணின்ற னகரவொற்று—லகாரமாகும் - வகரமுதன்மொழிவந்தால்- லகரவொற்றாகத்திரிந்துமுடியும்.—(எ-று)[உ-ம்]நால்வட்டி-எனவரும். (௪௮)

ஐந்த னொற்றே மந்தை யதுகெடுமே. *

இதுவுமது. ஐந்தனொற்று - ஐந்தாமெண்ணின்கணின்ற நகரவொற்று — மந்தையதுகெடும் - வகரமுதன்மொழிவந்தால் முன்னின்றவடிவுகெட்டுமுடியும். — (எ-று) [உ-ம்] ஐவட்டி - எனவரும். மந்தையென்றதனால் நகரவொற்றுக்கெடாது வகரவொற்றாகத்திரிந்து ஐவ்வட்டியெனச் சிறுபான்மைவரும். (௪௯)

முதலீரெண்ணின் முனுயிர்வருகாலைத், தவவெனமொழிப வுகரக்கிளவி, முதனிலைநீடலாவயினான. *

இது மாட்டேற்றானெய்திய வுகரத்திற்குக் கேடுகூறி முதனீள்க வென்றவினெய்தியது விலக்கிப்பிறிதுவிதி கூறுகின்றது. முதலீரெண்ணின் முனுயிர் வருகாலை - ஒரு இருவென முடிந்துநின்றவிரண்டெண்ணின் முன்னர் அகரமுமுகரமும் வருமொழியாய்வருகாலத்து — உகரக்கிளவி தவவென மொழிப - நிலைமொழியுகரமாகியவெழுத்துக்கெடுதலாமென்று சொல்லுவர்புலவர் — ஆவயினான முதனிலைநீடல் - அவ்விரண்டெண்ணின் கணின்ற முதலெழுத்துக்கணீண்டு முடியும் (எ-று) [உ-ம்] ஓரகல் - ஈரகல் - ஓருழக்கு - ஈருழக்கு - எனவரும். (௫௰)

மூன்று நான்கு மைந்தென்கிளவியுந், தோன்றியவகரத் தியற்கையாகும். *

இதுவுமது. மூன்றுநான்கு மைந்தென் கிளவியும் - மூன்றென்னுமெண்ணுநான்கென்னு மெண்ணு மைந்தென்னு மெண்ணும் — தோன்றியவகரத்தியற்கையாகும் - முன்னர்த்தோன்றிநின்றவகரம்வருமொழிக்குக்கூறியவியல்பாக மூன்றின்கண் வகரவொற்றாயு நான்கின்கண் லகரவொற்றாயுமைந்தின்கணொற்றுக்கெட்டுமுடியும். — (எ-று) [உ-ம்] மூவ்வகல் - மூவ்வுழக்கு - இதற்குத்தோன்றிய வென்றதனால் ஒற்றிரட்டுதல் கொள்க. நாலகல் - நாலுழக்கு - ஐயகல் - ஐயுழக்கு - எனவரும். தோன்றியவென்றதனான் மேன்மூன்றென்பது முதனீண்டவிடத்து நிலைமொழி னகரவொற்றுக் கெடுத்துக்கொள்க. இயற்கையென்பதனாற் றொடர்மொழிக்கணொற்றிரட்டுதல்கொள்க. மூன்றனொற்றே முதலிய மூன்று சூத்திரமுங்கொணர்ந்துமுடிக்க. (௫௧)

'மூன்றன்முதனிலை நீடலுமுரித்தே, யுழக்கென்கிளவி வழக்கத்தான. *

இது முன்னர்க்குறுகு மென்றதனை நீண்டு முடிகவென்றவி னெய்தியது விலக்கிற்று. மூன்றன்முதனிலைநீடலுமுரித்து- மூன்றென்னுமெண்ணின்முதனின்றவெழுத்து நீண்டு முடிதலுமுரித்து அஃதியாண்டெனின் — உழக்கென் கிளவிவழக்கத்தான - உழக்கென்னுஞ் சொன்முடியும் வழக்கிடத்து.—(எ-று) [உ.ம்]மூவுழக்கு-எனவரும். வழக்கத்தான வென்பதனான் அகலென் கிளவிக்குமுதனிலை நீடலுங்கொள்க.மூவகல்- எனவரும். இன்னுமதனானே நிலைமொழி னகரவொற்றுக் கெடுக்க. மூழாக்கென்னு மருமுடி பிவ்வோத்தின்புறனடையான்முடிக்க. (௫௨)

ஆறென் கிளவிமுத னீடும்மே. *

இதுவுமஃது. ஆறென்கிளவி - ஆறென்னு மெண்ணுப்பெயர் அகல் உழக்கு என்பனவரின்—முதனீடும் - முன்னர்க்குறுகிநின்ற முதலெழுத்துநீண்டுமுடியும். — (எ-று) அறுவென்ற தாறென்றூர். திரிந்ததன்றிரிபது வென்னுநயத்தால் [உ.ம்]ஆறகல்-ஆறுழக்கு-எனவரும். (௫௫)

ஒன்பானிறுதியுருபுநிலைதிரியா, தின்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே. *

இதுகுற்றுகரமெய்யோடுங் கெடாதின்பெறுகவென்றவி னெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது. ஒன்பானிறுதியுருபுநிலைதிரியாது - அளவு நிறையும்வருவழி யொன்ப தென்னு மெண்ணி னிறுதிக்குற்றுகரந்தன்வடிவு நிலைதிரியாதுநின்று — சாரியைமொழியின் பெறல்வேண்டும் - சாரியைச் சொல்லாகியவின் பெற்று முடிதலைவிரும்புமாசிரியன் — (எ-று) [உ.ம்]ஒன்பதின்கலம்-சாடி-தூதை- பானை-நாழி-மண்டை-வட்டி-அகல்-உழக்கு-எனவும் கழஞ்சு-தொடி-பலம்-எனவும்வரும். சாரியைமொழியென்றதனானின்னே டுகரமும் வல்லெழுத்துங் கொடுத்துச் செய்கைசெய்துமுடிக்க. ஒன்பதிற்றுக்கலம் - சாடி - எனவெல்லாவற்றோடு மொட்டுக. உருபென்பதனான் ஒன்பதிற்றென வொற்றிரட்டுதலெல்லாவற்றிற்குங் கொள்க. இன்னுமதனானே ஒன்பதினாழியென்புழி வந்தவின்னினகரக்கேடுங்கொள்க. அளவாகு மொழிமுதலென்பதனானு நிலையியவென்னு மிலேசானுமின்னினகரம்றகரமாதல்கொள்க. (௫௪)

நூறுமுன்வரினுங் கூறியவியல்பே. *

இது ஒன்றுமுதலொன்பான்களோடு நூறென்பதனைப் புணர்க்கின்றது.

முன் - ஒன்றுமுதலொன்பான்களின்முன்னர்—நூறுவரினும் - நூறென்னுமென்னும்பெயர் வந்தாலும்—கூறியவியல்பு-மேற்பத்தென்பதனோடுபுணரும்வழிக்கூறியவியல்பெய்திமுடியும் — (எ-று)அதுகுற்றுகரமெய்யோடுங்கெட்டு மூன்றுமாறு நெடுமுதல்குறுகி முதலீரெண்ணினொற்று ரகரமா யுகரம்பெற்று இடைநிலைரகர மிரண்டன்கட் கெட்டுமுடிதலாம். [உ-ம்] ஒருநூறு - இருநூறு - அறுநூறு - எண்ணூறு - எனவிம்மாட்டேற்றான் முடிந்தன. மாட்டேறொவ்வாதன மேற்கூறிமுடிப்ப. (௫௫)

மூன்ற னொற்றே நகார மாகும். *

இது-மாட்டேற்றோ டொவ்வாததற்கு வேறுமுடிபு கூறுகின்றது. மூன்றனொற்றே நகாரமாகும் - மூன்றுமெண்ணின்கணின்ற னகரவொற்று நகரவொற்றாகும்.—(எ-று)[உ.ம்]முந்நூறு-எனவரும். (௫௬)

நான்கு மைந்து மொற்று மெய்திரியா. *

இதுவுமது. நான்கு மைந்துமொற்று மெய்திரியா -நான்கென்னுமெண்ணு மைந்தென்னுமெண்ணுந் தம்மொற்றுக்கணிலைதிரியாது முடியும்.—(எ-று)[உ-ம்]நானூறு- ஐந்நூறு -எனவரும். மெய்யென்றதனான் நானூறென்புழி வருமொழி நகரத்தானகரம்பிரித்து லனவெனவரூஉமென்பதனான்கரவொற்றுக்கியூகாரமேற்றி நிலைமொழி னகரங் கெடுத்துக் கொள்க. (௫௭)

ஒன்பான்முதனிலை முந்துகிளந்தற்றே. முந்தையொற்றே ளகாரமிரட்டு, நூறென்கிளவி நகாரமெய்கெட, ஊவாவாகு மியற்கைத்தென்ப, வாயிடைவருத லிகாரரகர, மீறுமெய்கெடுத்து மகரமொற்றும். *

இதுவுமது. ஒன்பான்முதனிலைமுந்துகிளந்தற்று - ஒன்பதென்னுமெண்ணின்முதனின்ற வொகர மேற்பத்தென்பதனோடுபுணரும் வழிக் கூறியவாறுபோல்வோர்தகரமொற்றி யதன்மேலேறிமுடியும் — முந்தையொற்றேளகாரமிரட்டும் - அவ்வொகரத்தின்முன்னின்றனகரவொற்று ளகரவொற்று யிரட்டித்து நிற்கும் — நூறென்கிளவிநகாரமெய்கெடஊவாவாகுமியற்கைத்தென்ப - வருமொழியாகியநூறென்னுமெண்ணுப்பெயர் நகரமாகிய மெய்கெடவதன்மேலேறிய ஊகாரம் ஆகாரமா மியல்பையுடைத்தென்பர்புலவர்—ஆயிடையிகாரரகாரம்வருதல் - அம்மொழியிடையோ ரிகாரமும் ரகாரமும்வருக — ஈறுமெய்கெடுத்துமகரமொற்றும் -

கூறியகுற்றுகரத்தினையு மதுவேறிநின்ற நகரவொற்றினையுங் கெடுத்து ஓர் மகரவொற்றுவந்துமுடியும். — (எ-று) மெய்யென்பதனானிலை மொழிக்கட் பகரங்கெடுக்க. [உ.ம்] தொள்ளாயிரம்-எனவரும். இதனை ஒன்பதென்னு மொகரத்தின்முன்னர்வந்த தகரவொற்றின் மேலே ஒகரத்தையேற்றிப்பகரங்கெடுத்துக்குற்றியலுகரமெய்யொடுங்கெடுத்து நின்றனகரவொற்றினை யிரண்டுளகரவொற்றாக்கி நூறென்பதன் நகரங்கெடுத்து ஊகாரம் ஆகாரமாக்கி ளகரத்தின்மே லேற்றி விகாரப்பட்டவுயிராகிய ஆகாரத்தின்முன்னுடம்படு மெய்யகாரம்வருவித்து இகரமும் ரகரமும் வருவித்து றகரவுகரங்கெடுத்து மகரவொற்று வருவித்துமுடிக்க. (௫௮)

ஆயிரக்கிளவி வருஉங்காலை, முதலீரெண்ணி னுகரங்கெடுமே. *

இஃதவ்வொன்றுமுதலொன்பான்களோடாயிரமுடியுமாறுகூறுகின்றது. ஆயிரக்கிளவிவருஉங்காலை - ஆயிரமென்னுஞ்சொ லொன்றுமுதலொன்பான்கண்முன் வருங்காலத்து— முதலீரெண்ணினுகரங்கெடும் - ஒருஇருவென்னு மிரண்டெண்ணின்கட் பெற்று நின்ற வுகரங்கெட்டுமுடியும். — (எ-று) உகரங்கெடுமெனவே ஏனையன முன்னர்க்கூறியவாறேநிற்றல்பெற்றும் [உ.ம்] ஓராயிரம்-இராயிரம்-எனவரும். (௫௯)

முதனிலை நீடினு மானமில்லை. *

இது எய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது. முதனிலை நீடினுமானமில்லை- அம்முதலீரெண்ணின்முதற்கணின்றவொகரவிகரங்கணீண்டுமுடியினுங்குற்றமில்லை.—(எ-று) [உ.ம்] ஓராயிரம்-ஈராயிரம்-எனவும்வரும். (௬௰)

மூன்ற னொற்றே வகார மாகும். *

இது. மூன்றென்னுமெண் ஆயிரத்தோடு புணருமாறு கூறுகின்றது. மூன்றனொற்றேவகாரமாகும் - மூன்றென்னு மெண்ணின்கணின்ற னகரவொற்று வகரவொற்றாகத் திரிந்துமுடியும்.—(எ-று) [உ.ம்] மூவ்வாயிரம்-எனவரும். முன்னின்ற சூத்திரத்து நிலையென்றதனான் முதனிலைநீட்டிவகரவொற்றுக்கெடுத்து மூவாயிரம் எனவுமுடிக்க. (௬௧)

நான்கனொற்றே லகாரமாகும். *

இதுவுமது. நான்கனொற்றேலகாரமாகும் - நான்கென்னு மெண்ணின்கணின்றனகரவொற்று லகரவொற்றாகத் திரிந்து முடியும்.—(எ-று) [உ.ம்] நாலாயிரம்-எனவரும். (௬௨)

ஐந்தனொற்றே யகாரமாகும். ❋
இதுவுமது. ஐந்தனொற்றே யகாரமாகும் - ஐந்தென்னு மெண்ணின்கணி
ன்ற நகரவொற்று யகரவொற்றாகத் திரிந்து முடியும்.— (எ-று) ஐயாயிர
ம்-எனவரும். (சாரு)

ஆறன் மருங்கிற் குற்றியலுகர, மீறுமெய் யொழியக் கெடுதல்வே
ண்டும். ❋
இதுவுமது. ஆறன்மருங்கிற்குற்றியலுகரம் - ஆறென்னு மெண்ணின்க
ணின்ற குற்றியலுகர் நெடுமுதல்குறுகி யறுவென முற்றுகரமாய் நிற்றவி
ன்—மெய்யொழியவீறு கெடுதல்வெண்டும் - அதுதானேறியமெய்யாகி
யறகரவொற்றுக்கெடா துநிற்ப முற்றுகரமாகிய வீறுதான் கெட்டுப்புண
ர்தலை விரும்புமாசிரியன்.—(எ-று)[உ.ம்] அறுயிரம்-எனவரும். முன்னர்
நெடுமுதல்குறுகுமென்றவழி யறுவென நின்றமுற்றுகரத்திற்கே யீண்டுக்
கேடுகூறினரென்பதுபெற்றும். என்னை - குற்றியலுகரயாயினேறிமுடிதலி
னிதுகுற்றுகரந்திரிந்து முற்றுகரமாய் நிற்றலினீண்டுமுடிபுகூறினர். முற்
றியலுகர மீறுமெய்யொழியக் கெடுமெனவே குற்றுகரங்கெடா தேறி
முடியுமென்பதருத் தாபத்தியாற்பெற்றும். ஆறுயிரம்-எனவும்வரும். மரு
ங்கென்றதனாற்பிறபொருட்பெயர்க்கண்ணு நெடுமுதல் குறுகாதுநின்று
முடிதல்கொள்க. ஆறுகுவதே-எனவரும். (சாச)

ஒன்பானிறுதி யுருபுநிலைதிரியா, தின்பெறல்வேண்டுஞ் சாரியைம
ரபே. ❋
இதுவுமது. ஒன்பானிறுதி - ஒன்பதென்னுமெண்ணினிறுதிக்குற்றுகரம்
—உருபுநிலைதிரியாது - தன்வடிவுநிலைதிரிந்துகெடாது — சாரியைமர
பின்பெறல்வேண்டுஞ் - சாரியையாகிய மரபினையுடையவின்பெற்றுமு
டிதலை விரும்புமாசிரியன்.—(எ-று) [உ.ம்] ஒன்பதினாயிரம் - எனவரும்.
உருபென்றுநிலையென்றுஞ் சாரியைமரபென்றுங் கூறியமிகையாலாயிர
மல்லாத பிறவெண்ணின்கண்ணும் பொருட்பெயரிடத்து மின்னுமுசர
மும் வல்லெழுத்தும் பெற்றுமுடியு முடிபுகொள்க. ஒன்பதிற்றுக்கோ
டி-ஒன்பதிற்றொன்பது-ஒன்பதிற்றுத்தடக்கை-ஒன்பதிற்றெழுத்து என
வரும். இன்னுமிவ்விலேசானே வேறொருமுடிபின்மையிற் கூறுதொழிந்த
மே லெண்ணுயிர மென்ற வழி யொற் றிட்டுதலு மீண்டுக் கூறிய வற்றிற்

கொற்றிரட்டுதலுங்கொள்க. அளவாகுமொழிமுத லென்பதனுணிலையிய வென்றதனு னகரம் றகரமாதல்கொள்க. (சுடு)

நூறாயிரமுன் வருஉங்காலை, நூறனியற்கை முதனிலைக்கிளவி. *

இஃதொன்றுமுத லொன்பான்களோடு நூறென்னுமெண் அடையடுத்த வாயிர முடியுமாறு கூறுகின்றது. நூறாயிரமுன் வருஉங் காலை - நூறாயிரமென்னு மடையடுத்தமொழி யொன்றுமுத லொன்பான்கண் முன்வருமொழியாய் வருங்காலத்து—முதனிலைக்கிளவி நூறனியற்கை - ஒன்றென்னுமுதனிலைக்கிளவி ஒன்று முன் நூறென்னுமெண்ணோடு முடிந்தாற்போல விகாரமெய்தி முடியும். எனவே வழிநிலைக்கிளவியாகிய விரண்டு முதலிய வெண்கள் விகாரமெய்தியு மெய்தாதியல்பாயுமுடியும்.—(எ-று) [உ.ம்] ஒருநூறாயிரம் - எனவரும். ஏனையன இருநூறாயிரம் - இரண்டு நூறாயிரம்- முந்நூறாயிரம- மூன்றுநூறாயிரம்- நானூறாயிரம்-நான்கு நூறாயிரம்- ஐந்நூறாயிரம்- ஐந்துநூறாயிரம்- அறுநூறாயிரம்- ஆறுநூறாயிரம்- எண்ணூறாயிரம்- எட்டுநூறாயிரம்- ஒன்பதுநூறாயிரம்-எனவரும். இவ்விகாரப்பட்டவற்றிற்குக்குற்றுகர மெய்யொடுங்கெடுத்து முதலீரெண்ணிறொற்று ரகரமாக்கி யுகரம்வருவித்து மூன்றுமாறு நெடுமுதல் குறுக்கி மூன்றனொற்று நகாரமாக்கி நான்கு மைந்து மொற்றுமெய்திரியாவாக்கி யெட்டனொற்று ணகாரமாக்கி யிலேசுகளாற்கொண்ட செய்கைகளில் வேண்டுவனவுங் கொணர்ந்துமுடிக்க. எற்புழிக்கோட லென்பதனுல்தொள்ளாயிரமென்றமுடிபினேடு மாட்டேறு சென்றதேனு மவ்வாறு முடியாதென்று கொள்க.முன்னென்பதனுனின்சாரியைபெற்று ஒன்பதினூறாயிரமென்றுமாம். நிலையென்றதனுன் மூன்றுமாறு மியல்பாகமுடிபுழி நெடுமுதல்குறுகாமைகொள்க. (சுசு)

நூறென்கிளவி யொன்றுமுதலொன்பாற், கீறுசினையொழிய வின வொற்றுமிகுமே. *

இது நூறென்பதனோடொன்று முதலொன்பான்களைப்புணர்க்கின்றது. நூறென்கிளவி - நூறென்னுமெண்ணுப்பெயர்—ஒன்றுமுதலொன்பாற்கு - ஒன்றுமுதலொன்பான்களோடு புணருமிடத்து— ஈறுசினையொழிய— ஈறாகியகுற்றுகரந்தன்னாற் பற்றப்பட்ட மெய்யொடுங்கெடாதுநிற்ப—இனவொற்றுமிகும் - அச்சினைக்கினமாகிய றகரவொற்றுமிக்கு

முடியும்.—(எ-று)[உ.ம்] நூற்றொன்று - இரண்டுமுதலொன்பதளவுஞ்செய்கையறிந் தொட்டுக. ஈறுகினை யென்றோதிய மிகையான் நூறென்பதனோடு பிறவெண்ணும்பொருட்பெயரு மிவ்விதியும்பிறவிதியுமெய்திமுடிதல்கொள்க. நூற்றுப்பத்து-நூற்றுக்கோடி - நூற்றுத்தொண்ணூறு - எனவும் நூற்றுக்குறை - நூற்றிதழ்த்தாமரை - நூற்றுக்காணம் - நூற்றுக்கான் மண்டபம்.எனவும் இனவொற்றுமிக்கன கொள்க. இன்னுமிதனானே இருநூற்றொன்று-இரண்டுநூற்றொன்று என நூறடையடுத்தவழியுங்கொள்க.(

அவையூர்பத்தினு மத்தொழிற்றாகும். ※

இஃதந்நூறென்பதனோடொன்று முதலொன்பான்க ளடையடுத்தவழிப் புணருமாறு கூறுகின்றது. அவையூர் பத்தினும் - அந்நூறென்பதுநின்று முற்கூறிய வொன்றுமுத லொன்பான்களை யூர்ந்துவந்தபத்தென்பதனோடுபுணருமிடத்தும்—அத்தொழிற்றாகும் - ஈறுகினையொழியவினவொற்றுமிக்குமுடியும்.—(எ-று)[உ.ம்] நூற்றொருபஃது- இருபஃது-முப்பஃது-நாற்பஃது-ஐம்பஃது-அறுபஃது-எழுபஃது-எண்பஃது-என வரும்.மற்று நூற்றொன்பதவையூரப்பட்டுவந்த தன்மையுணர்க. ஆகுமென்றதனானிலைமொழியடையடுத்து முடியுமுடிபுங்கொள்க.ஒருநூற்றொருபஃது-இருநூற்றொருபஃது-எனவரும். (௬அ)

அளவுநிறையு மாயியதிரியா, குற்றியலுகரமும் வல்லெழுத்தியற்கையு,முற்கிளந்தன்ன வென்மனார்புலவர். ※

இது நூறென்பதனோடு அளவுப்பெயருநிறைப்பெயருமுடியுமாறுகூறுகின்றது.அளவுநிறையுமாயியதிரியாது - நூறென்பதனோ டளவுப்பெயருநிறைப்பெயரும் புணருமிடத்துமுற்கூறியவியல்பிற்றிரியாதினவொற்றுமிக்குமுடியும்—குற்றியலுகரமும்வல்லெழுத்தியற்கையும் - அவ்விடத்துக்குற்றியலுகரங் கெடாமையுமினவொற்றுமிக்கு வன்றொடர்மொழியாய்நிற்றலின் வருமொழி வல்லெழுத்துமிகுமியல்பும்—முற்கிளந்தன்ன வென்மனார்புலவர் - வல்லெழுத்துத்தொடர்மொழி வல்லெழுத்துமிகுமே யெனவன்றொடர்மொழிக்குக் கூறியதன்மையவாய் முடியுமென்று கூறுவர்புலவர்.—(எ-று)[உ-ம்]நூற்றுக்கலம்-சாடி-தூதை-பானை-நாழி-மண்டை-வட்டி-அகல்-உழக்கு-எனவும் கழஞ்சு-தொடி-பலம்-எனவும்வரும்.திரியாதென்றதனானூறென்பதடையடுத்த வழியு மிவ்விதிகொ

ள்க· ஒருநூற்றுக்கலம்-இருநூற்றுக்கலம்-எனவரும். (௬௯)

ஒன்றுமுதலாகிய பத்தூர்கிளவி, யொன்றுமுத லொன்பாற், கொற்றிடை மிகுமே,நின்றவாய்தங்கெடுதல்வேண்டும். *

இது ஒன்றுமுதலெட்டீறாகியவெண் களடையடுத்தபத்தனோடொன்றுமுதலொன்பான்களைப்புணர்க்கின்றது. ஒன்றுமுதலாகியபத்தூர்கிளவி - ஒன்றுமுத லெட்டீறாகப் பத்தென்னு மெண்ணேறி யொருசொல்லாகிநின்ற வொருபஃதுமுதலியவெண்கள் — ஒன்றுமுதலொன்பாற்கு - ஒன்றுமுதலொன்பான்கள் வருமொழியாய்வந்துபுணருமிடத்து — நின்றவாய்தங்கெடுதல்வேண்டும் - பஃதென்பதன்கணின்றவாய்தங்கெட்டு முடிதலைவிரும்புமாசிரியன்—ஒற்றிடைமிகும் - ஆண்டின வொற்றாகியவோர்தகரவொற்றிடைமிக்குமுடியும்·—(எ-று) [உ-ம்]ஒருபத்தொன்று - இருபத்தொன்று-ஒருபத்திரண்டு- இருபத்திரண்டு-எனவெல்லாவற்றோடுமொட்டுக·இவற்றுளொருபத்தொன்று - ஒருபத்திரண்டு- என்னுமெண்க ளதிகாரத்தானூறென்பதனோடொட்டுத்துவருமென்றுணர்க. (௭௰)

ஆயிரம்வரினே யின்னென்சாரியை,யாவயினொற்றிடைமிகுதலில்லை· *

இது ஒருபஃதுமுதலியவற்றோடு ஆயிரத்தைப்புணர்க்கின்றது· ஆயிரம்வரினின்னென்சாரியை - அவ்வொன்றுமுதலாகிய பத்தூர்கிளவி யாயிரத்தோடு புணருமிடத் தின்சாரியைபெறும் — ஆவயினொற்றிடைமிகுதலில்லை - அவ்விடத்துத் தகரவொற்றிடைவந்துமிகாது·— (எ-று) [உ-ம்] ஒருபதினாயிரம்-இருபதினாயிரம்- எனவெண்பதின்காறுமொட்டுக·இவை நூற்றொருபதினாயிரம் -எனவும்வரும். ஆவயினென்றதனான் நூறாயிரத்தொருபத்தீராயிரம் என்றாற்போலவத்துப்பெறுதலும்பிறவுங்கொள்க·(

அளவு நிறையு மாயிய திரியா· *

இது ஒன்றுமுதலாகியபத்தூர்கிளவி முன்னரளவுப்பெயரு நிறைப்பெயரும்புணர்க்கின்றது· அளவுநிறையுமாயியதிரியா - ஒருபஃது முதலிய வெண்களின்முன்னரளவுப்பெயரு நிறைப்பெயரும்வந்தா லொற்றிடைமிகாதின்சாரியை பெற்றுமுடியும்·— (எ-று)[உ-ம்] ஒருபதின்கலம்-சாடி- தூதை- பானை- தாழி- மண்டை- வட்டி- அகல்-உழக்கு- எனவும் ஒருபதின்கழஞ்சு- தொடி-பலம்- எனவும்வரும்.' இவற்றிற்குநூறடையடுத்தொட்டுக.திரியாவென்றதனான் ஒருபதிற்றுக்கலம்- இருபதிற்றுக்கலம்.

[illegible]ன்னுந் தொடக்கத்தனவற்றின்கண் இன்னினகரம் றகரமாத்திரிந்திரட்டி
தலுமுகரமும் வல்லெழுத்தும் பெறுதலுங்கொள்க. இன்னுமிதனானே
யொருபதினாழியென்றவழி வருமொழிநகரந்திரிந்துழி நிலைமொழினகா
க்கேடுங்கொள்க. (௭௨)

முதனிலை யெண்ணின்முன் வல்லெழுத்துவரினு, ஞநமத்தோன்றி
னும் யவவந்தியையினு,முதனிலையியற்கையென்மனார்புலவர். *

இஃது ஒன்றுமுத லொன்பான்களோடு பொருட்பெயரைப் புணர்க்கி
ன்றது. முதனிலையெண்ணின்முன் வல்லெழுத்துவரினும் - ஒன்றென்னு
மெண்ணின்முன் வல்லெழுத்துமுதன் மொழிவரினும்— ஞநமத்தோன்றி
னும் - ஞநமக்களாகியமெல்லெழுத்து முதன்மொழிவரினும்— யவவந்
தியையினும் - யவக்களாகியவிடையெழுத்து முதன்மொழிவரினும்—மு
தனிலையியற்கை யென்மனார்புலவர் - அவ்வொன்றுமுத லொன்பான்களின்
முன்னெய்தியமுடிபுநிலைமையெய்திமுடியுமென்று கூறுவர்புலவர்(எ-று)
எனவே வழிநிலையெண்ணாகியவிரண்டுமுதலாகிய வெண்களுமொன்றுகண
மு முதன்மொழியாய்வரின் முதனிலைமுடிபாகிய விகாரமெய்தியுமெய்
தாதியல்பாயுமுடியும்.—[உ-ம்]ஒருகல் - சுனை - துடி - பறை - ஞாண் - நூல்
மணி - யாழ் - வட்டு - எனவும் இருகல் இரண்டுகல் - சுனை - துடி. பறை - ஞாண்.
நூல் - மணி - யாழ் - வட்டு - எனவுமொட்டுக. இவ்வெண்களிற்குற்றியலுகர
மெய்யொடுங்கெட்டுமுதலீரெண்ணினொற்று ரகாரமாயுகரம்வந்தது. இரு
கல் முதலியவற்றிற்கு இடைநிலை ரகாரங்கெடுக்க. முக்கல் - மூன்றுகல் -
சுனை - துடி - பறை - ஞாண் - நூல் - மணி - யாழ் - வட்டு எனவொட்டுக. இத
ற்கு நெடுமுதல்குறுகி மூன்றனொற்றேவந்ததொக்கு மென்பதனான்மு
டிக்க. முன்னரெண்ணுப்பெயரு மளவுப்பெயரு நிறைப்பெயரும்வருவ
ழிக்கூறிய விகாரங்களிற் பொருட்பெயர்க்குமேற்பன கொணர்ந்துமுடி
த்து எல்லாவற்றிற்கு நிலையென்றதனானொற்றுத் திரித்துமுடிக்க. அவை
மூன்றற்கு மைந்தற்கும் ஞகரம்வருவழிஞகரவொற்றுதலு மூன்றற்குய
கரம்வருவழி வகரவொற்றுதலுமாம். நாற்கல் - நான்குகல். சுனை - துடி - ப
றை - நான்ஞாண் - நான்குஞாண் - நூல் - மணி - யாழ் - வட்டு - எனவும் ஐங்க
ல் - ஐந்துகல். சுனை - துடி - பறை - ஐஞ்ஞாண். ஐந்துஞாண் - நூல் - மணி ஐயா
ழ் - ஐந்துயாழ். ஐவட்டு. ஐந்துவட்டு - எனவும் அறுகல் - ஆறுகல் - சுனை -

துடி-பறை-அறுஞாண்-ஆறுஞாண்- நூல்-மணி- யாழ் - வட்டு-எனவரும்.என்கல்·எட்டுக்கல்-சுனை·துடி-பறை-ஞாண்-நூல்·மணி-யாழ்-வட்டு· எனவுமொட்டுக· ஒன்பதின்கல்- எனச்சென்றதேனும் வழக்கின்மையி னொழிக்க.ஒன்பதுகல்- சுனை-துடி-பறை-ஞாண்-நூல்- மணி-யாழ்-வட்டு-எனவொட்டுக·இன்னுமாட்டேறின்றி வருவனவற்றிற்கெல்லாம் நிலையென்றதனான்முடிக்க· (௭௩)

அதனிலையுயிர்க்கும் யாவருகாலை,முதனிலையொகரமோவாகும்மே,
ரகரத்துகரந் துவரக்கெடுமே. *

இஃதொன்றுமுத லொன்பான்களோடு பொருட்பெயருளுயிர்முதன் மொழிமுடியுமாறு மேற்கூறியயகரம்வேறுபடமுடியுமாறுங் கூறுகின்றது·முதனிலைக்கு - ஒன்றென்னுமெண்ணிற்கு_உயிரும்யாவும்வருகாலை - உயிர்முதன்மொழியும் யாமுதன்மொழியும் வருமொழியாய்வருங்காலத்து— அதனிலை - அம்முதனிலையின் றன்மையிவ்வாறும்—ஒகரமோவாகும் - ஒகரமோகாரமாய் நிற்கும்—ரகாத்துகரந்துவரக்கெடும் - அவ்விடத்து ரகரத்துமேனின்ற வுகரமுற்றக்கெட்டுமுடியும்.—(எ-று)நான்காவதனைமுதனிலையோடுகூட்டி யதன்கணின்ற வும்மையையுயிரோடும்யாவோடுங்கூட்டுக எனவே வழிநிலையெண்களுயிர்முதன்மொழி வந்தவிடத்துமுற்கூறியவாறேயிருவாற்றானுமுடியும். [உ-ம்]ஓரடை-ஓரகம்-ஓரிலை·ஓரீட்டம்.ஒருலை-ஒருசல்-ஒரெழு-ஒரேடு- ஒரையம்-ஒரொழுங்கு-ஒரோலை· ஒரௌவியம்- எனவரும்·குற்றியலுகர மெய்யொடுங்கெடுத்து முதலீரொன்றினொற்று ரகரமாக்குக.ஓர்யாழ்- ஓர்யானை- எனவரும்· துவரவென்றதனான் இரண்டென்னுமெண்ணி னிகரத்தைநீட்டி ரகரத்துளுகரத்தைக் கெடுத்து. ஈரசை- ஈர்யானை- எனவும். மூன்றென்னுமெண்ணி னகரவொற்றுக்கெடுத்து· மூவசை- மூயானை - எனவுமுடிக்க. இவை செய்யுண்முடிபு·இன்னுமிதனானே யிங்ஙனம்வருவனபிறவு மறிந்து முடித்துக்கொள்க. (௭௪)

இரண்டுமுத லொன்பானிறுதிமுன்னர், வழங்கியல் மாவென் கிளவி
தோன்றின்,மகரவளவொடு நிகரலுமுரித்தே. *

இஃதிரண்டுமுதலொன்பான்களின்முன்னரளவு முதலியமூன்றற்குமுரியமாவென்பது புணருமாறுகூறுகின்றது. இரண்டுமுதலொன்பானிறுதி முன்னர் - இரண்டென்னுமெண்முதலாக வொன்பதென்னு மெண்ணீறாகநின்ற வெண்ணுப்பெயர்களின் முன்னர் — வழங்கியன்மாவென்கிளவி தோன்றின் - வழக்கின்கண்ணே நடந்த வளவுமுதலியவற்றிற்குரிய மாவென்னுஞ்சொல் வருமொழியாய் வரின் — மகரவளவொடு நிகரலுமுரித்து - அவ்வெண்ணுப் பெயர்களின் முன்னர்த்தந்து புணர்க்கப்படுமண்டையென்னு மளவுப்பெயரோடொத்து விகாரப்பட்டு முடிதலுமுரித்து. உம்மையான் விகாரப்படாதியல்பாய்முடிதலுமுரித்து. — (எ - று) வழக்கியல் வழங்கியவெனவிகாரம். மகரவளவு மகரமுதன்மொழியாகியவளவுப்பெயரெனப்பண்புத்தொகை. அது அளந்தறிகிளவியுமென்பதனுளொருமண்டையெனமுடிந்ததாம். [உ-ம்] இருமா - மும்மா - நான்மா - ஐம்மா. அறுமா - எண்மா - ஒன்பதின்மா - என முன்னர்க்கூறிய சூத்திரங்களான்விகாரப்படுத்திமுடிக்க. இனியும்மையான் விகாரப்படுத்தாது இரண்டுமா - மூன்றுமா - நான்குமா - ஐந்துமா - ஆறுமா - எட்டுமா - ஒன்பதுமா - என முடிக்க. புள்ளிமயங்கியலுள் அளவுநிறையுமென்னுஞ்சூத்திரத்தானெடுமுதல்குறுகியுகரம்வந்து புணருமாறுகூறினாராதலனீண்டு எழுமா எனமுடிக்க. எழ்மாவென முடிதல்வழக்கின்று. இரண்டுமுதலொன்பானென்றெடுத்தோதினமையினொன்றற்கு ஒருமாவென்னுமுடிபேயன்றி ஒன்றுமாவென்னு முடிபில்லையாயிற்று. (எ௫)

லனவென வரூஉம் புள்ளியிறுதிமுன், னும்முங்கெழுவு முளப்படப் பிறவு, மன்னமரபின் மொழியிடைத்தோன்றிச், செய்யுட்டொடர்வயின் மெய்பெறநிலையும், வேற்றுமைகுறித்த பொருள்வயினான. ✽

இது புள்ளிமயங்கியலுளொழிந்துநின்ற செய்யுண்முடிபு கூறுகின்றது. லனவென வரூஉம் புள்ளியிறுதிமுன் - லகாரனகாரமென்று கூறவருகின்ற புள்ளியீற்றுச்சொற்களின் முன்னர் — உம்முங்கெழுவுமுளப்பட - உம்மென்னுஞ்சாரியையுங் கெழுவென்னுஞ்சாரியையுமுட்பட — பிறவுமன்னமரபின் மொழியிடைத்தோன்றி - பிறசாரியையுமப்பெற்றிப்பட்டம

ரபினையுடையமொழி யிடத்தேதோன்றி—செய்யுட்டொடர்வயின் மெய்பெறநிலையும் - செய்யுட்சொற்களைத்தொடர்புபடுத்திக் கூறுமிடத்துப் பொருள்படநிற்கும்_ வேற்றுமைகுறித்த பொருள்வயினான - வேற்றுமையைக்குறித்தபொருட்புணர்ச்சிக்கண்.—(எ-று)[உ-ம்]வானவரிவில்லுந்திங்களும்போலும் இதற்கு உம்மென்னுஞ்சாரியையின் மகரத்தை அம்மிலிறுதியென்னுஞ் சூத்திரத்துட்டன் மெய்யென்றதனாற் பிறசாரியையுந் திரியுமென நகரவொற்றுக்கு நிலைமொழி லகரவொற்றின்மே லுயிரேற்றிமுடிக்க.வில்லுந்திங்களும்போல' வென்பதற்கு வில்விடைத்திங்கள்போலுமென வேழனுருபுவிரித்துப்பொருளுரைக்க·கல்கெழுகானவர் நல்குறுமகளே· இதற்குக் கல்லைக் கெழீஇயின வெனவுரைக்க. மாநிதிக்கிழவனும்போன்ம். இதற்குக் கிழவனைப்போன்மென வுரைக்க. இவ்வும்மை சிறப்பன்று.கான்கெழுநாடு இதற்குக் கானைக்கெழீஇய வெனவுரைக்க.இனி யன்னமரபின் மொழியிடையென்றதனாற் கெழுவென்றதுபிற சொல்விடத்தே.பணைகெழுபெருந்திறற் பலவேன்மன்னர் துறைகெழுமாந்தை யென வியல்பாக வருவனவும் வளங்கெழுதிருநகர் பயங்கெழுமாமழையென நிலைமொழியீற்றெழுத்துத்திரியவருவனவுங்கொள்க·இன்னுமிதனானே யிச்சாரியைய துகரக்கேடுமெகரநீட்சியுங்கொள்க. பூக்கேழ்தொடலை நுடங்கவெழுந்து· துறைகேழூரன்கொடுமைநாணி-யிவற்றிற்கிரண்டாவதுமேற்புழிமூன்றாவதும் விரிக்க·செங்கேழ்மென்கொடி யென்புழிக் கெழுவென்னு முரிச்சொல் எழுத்துப்பிரிந் திசைத்த லெஃபதுனீண்டதென்றுணர்க. மெய்யென்றதனாற் பூக்கேழென்புழி வல்லொற்று மிகுதல்கொள்க· இன்னுஞ்சான்றோர் செய்யுட்கட்பிறசாரியைபெற்று விகாரங்களெய்தி முடிவனவற்றிற் கெல்லாமிச்சூத்திரமே விதியாக முடித்துக் கொள்க·குற்றியலுகர விடைச்சொல்லாகிய ஞான்றுவன்பது அவாவென்பவெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுந்தவா எனவும். இவ்வாழ்க்கை- வழியெஞ்சலெஞ்ஞான்றுமில்- எனவும்வரும் இதற்கு என்றும் எனக்கொள்க· ஒழுதநிராரல்பார்க்குங்குருகுமுண்டு தாமணந்தஞான்றென்பதுதாமணந்தவன்றே யெனக்கொள்க.இது காலத்தின்கண்வரும்.(என)

உயிரும்புள்ளியு மிறுதியாகிக், குறிப்பினும்பண்பினுமிசையினுந்தோன்றி, நெறிப்படவாராக் குறைச்சொற்கிளவியு, முயர்திணையஃறிணை யாயிருமருங்கி, னைம்பாலறியும்பண்பு தொகுமொழியுஞ், செய்யுஞ்செய்த வென்னுங்கிளவியின், மெய்யொருங்கியலுந் தொழிற்றொகுமொழியுந், தம்மியல்கிளப் பிற்றம்முற்றும்வரூஉ, மெண்ணின்றொகுதியுளப்படப்பிறவு, மன்னவை யெல்லாமருவின்பாத்திய, புணரிய னிலையிடையுணரத் தோன்றா. *

இஃதிவ்வதிகாரத்திற் புணர்க்கப்படாத சொற்களிவை யென வவற்றையெடுத்துணர்த்துகின்றது. உயிரும்புள்ளியுமிறுதியாகி - கூறுங்காலுயிரும் புள்ளியுமீறாகநிற்ப தொருசொல்லாகி — குறிப்பினும்பண்பினுமிசையினுந்தோன்றி - குறிப்பினானும்பண்பினானுமிசையினானும்பிறந்து — நெறிப்படவாராக் குறைச்சொற்கிளவியும் - ஒருவழிப்படவாராதசொற்றன்மை குறைந்தசொற்களாகியவுரிச்சொற்களும — உயர்திணையஃறிணை யாயிருமருங்கின் - உயர்திணையஃறிணையென்னுமவ்விரண்டிடத்துமுளவாகிய — ஐம்பாலறியும்பண்புதொகுமொழியும் - ஒருவனொருத்தி பலரொன்று பலவென்னுமைந்துபாலினையுமறிதற்குக் காரணமாகிய பண்புகொள் பெயர் தொகுந்தொகைச்சொல்லும் — செய்யுஞ்செய்தவென்னுங்கிளவியின் - செய்யுஞ்செய்த வென்னும்பெயரெச்சச்சொற்களினுடைய — மெய்யொருங்கியலுந்தொழிற்றொகுமொழியும் - காலங்காட்டு மும்மும கரமு மொருசொற்கண்ணே சேரநடக்கும்புடைபெயர்ச்சிதொக்குநிற்குஞ்சொற்களும் — தம்மியல்கிளப்பின் - தமது தன்மை கூறுமிடத்து — தம்முற்றும்வரூஉமெண்ணின்றொகுதியுளப்பட - நிறுத்தசொல்லுங்குறித்துவருகிளவியுமாய்வாராது தம்முன்னர்த்தாமேவந்து நிற்குமெண்ணுப்பெயரினது தொகுதியுமுளப்பட — அன்னபிறவுமெல்லாம் - அத்தன்மையாகியபிறவுமெல்லாம் — மருவின்பாத்திய - உலகத்துமருவிநடந்த வழக்கினதுபகுதியைத்தம்மிலக்கணமாகவுடைய — புணரியனிலையிடையுணரத்தோன்றா - ஒன்றனோடொன்றுபுணருத னடந்ததன்மையிடத்துவிளங்கத்தோன்றா. —(எ-று) [உ-ம்] கண்விண்ணவிணைத்தது - விண்விணைத்தது

இவை குறிப்புரிச்சொல். ஆடைவெள்ளவிளர்த்தது - வெள்விளர்த்தது- இவை பண்புரிச்சொல் - கடலொல்லவொலித்தது-ஒல்லொலித்தது -ஒல்லொலிநீர்பாய்வதேபோலுந்துறைவன்·என்றார்செய்யுட்கண்ணும்.இவை யிசையுரிச்சொல். இவை யுயிரீறும் புள்ளியீறும் நிற்றலி னொன்றன்கணடக்கலாகாமையினெறிப்பட வாராவென்றார். விண்ணை வினைத்ததென்பது தெறிப்புத்தோன்றத்தெறித்ததென்றும். விண்வினைத்ததென்பது தெறிப்புத்தெறித்ததென்றும். ஏனையவற்றிற்கு மிவ்வாறேபுணர்க. இங்ஙனநிற்றலிற்றன்மை குறைந்தசொல்லாயிற்று. வினையே குறிப்பே யென்னுஞ்சூத்திரத்திற்கூறிய-எனவென்பதனை யிவற்றொடுகூட்டியவழி இடைச்சொல்லாதலிற் புணர்க்கப்படுமென்றுணர்க. இனிக் கரும்பார்ப்பான்-கரும்பார்ப்பினி.கரும்பார்ப்பார்-கருங்குதிரை-கருங்குதிரைகள் எனவும் இவற்றுட் கரியனாகியபார்ப்பான் - கரியளாகியபார்ப்பினி-கரியராகிய பார்ப்பார்-கரியதாகியகுதிரை-கரியனவாகியகுதிரைகள்- எனவைம்பாவினையு முணர்த்தும் பண்புகொள்பெயர் தொக்கவாறுகாண்க. இவற்றுட் கருமையென்னும் பண்புப்பெயர் தொக்கதேற் கருமைபாகியபார்ப்பானென விரித்தல்வேண்டும். அங்ஙனம் விரியாமையிற் பண்புகொள் பெயர்தொக்கதென்றுணர்க. வெற்றிலை- வெற்றுப்பிலி- வெற்றடி- வெற்றெனத்தொடுத்தல்- என்றாற்போல்வன வெறுமெனப் பண்புயாத்தினவே வெறுவிதாகியவிலையெனப்பண்புணர்த்துமீறுதொகுதலின்மருவின்பாத்தியவாய்நின்றொற்றடுத்தன. பாக்குங்கோட்டுநூறுங்கூடாத்தாப்பிலி னீறுகுன்றலி னொற்றடுத்து ஈறுகெடுகுவனவற்றிற்றுயினும் வெறுவிதாகியவுப்பிலியென்றது-சிறிதுமுப்பிலியெனநின்றது. ஏனையவுமன்ன- இங்ஙன மைம்பாலுந்தொகுத்தற்குரிய முதனிலையாதலிற் புணர்தலாமைகூறினார். இனி-ஆடரங்கு-செய்குன்று-புணர்பொழுது- அரிவாள்-கொல்யானை-செல்செலவு-என நிலமுதலாகிய பெயரெச்சத்தொக்க வினைத்தொகைகளைவிரிக்குங்கால்-ஆடினவரங்கு எனச் செய்தவென்னும் பெயரெச்சத்திறுவிரிந்த அகரவீறு இறப்புணர்த்தியும். ஆடாநின்றவரங்கு-ஆடுமரங்கு - எனச்செய்யுமென்னும் பெயரெச்சத்திறு விரிந்த உம்மீறு நிகழ்வுமெதிர்வுமுணர்த்தியு மவற்றனுபடைப்பெயர்க்கிளைத்

தோற்றுவித்திரண்டுபெயரெச்சமுமொரு சொற்கணொருங்குதொக்குநி
ற்றலி னதனை பொருபெய ரெச்சத்தின்கணடக்கிப் புணர்க்கலாகாமையிற்
புணர்க்கலாகாதென்றார். உம்மிறுதி நிகழ்வு மெதிர்வு முணர்த்துமாறுவி
னையின்றொகுதியென்னுமெச்சவியற்சூத்திரத்துட்கூறுதும். அதுவு மிர
ண்டுகாலமு மொருங்குணர்த்துதற் சிறப்பு நோக்கிச் செய்தவென்பதனை
ஆசிரியர்முற்கூறாராயினார். இனிப் பத்து என நிறுத்திப் பத்தெனத்தந்து
புணர்க்கப்படாது-பப்பத்தெனவும் பஃபத்தெனவும்வழங்குமாறுணர்க.
ஓரொன்றென்பதுமது அதுதானே ஒரொன்றோரொன்றுகக்கொடுவென்
றாற்புணர்க்கப்படும். இனி அன்னபிறவுமென்றதனானே உண்டானென்புழி
உண்ணென்னு முதனிலையுங் காலங்காட்டும் டகரமுமிடனும் பாலுமுணர்
த்துமானு மொன்றனோடொன்றுபுணர்க்கப்படா. அவை நிறுத்தசொல்
லுங்குறித்துவரு கிளவியுமன்மையின்) கரியனென்புழி கருவென நிறுத்தி
அன்னெனத்தந்துபுணர்க்கப்படா. அது இன்ன னென்னும் பொருடரு
தலின்) ஏனைவினைச்சொற்களுமிவ்வாறேபிரித்துப்புணர்க்கலாகாமையுண
ர்க. இன்னுமதனானே கொள்ளெனக்கொண்டான் என்புழிக் கொள்ளெ
ன்பதனை எனவென்பதனோடு புணர்க்கப்படாமையும் ஊரன் வெற்பன்
முதலியவினைப்பெயர்களும் பிறவும் புணர்க்கப்படாமையுங்கொள்க. இவ்
வாசிரியர்புணர்க்கப்படாத விச்சொற்களையும் வடநூற்கண் முடித்த அனு
கன்-அனபாயன்-அகளங்கன்-முதலிய வடசொற்களையும் பின்னுள்ளோர்
முடித்தல்முதனூலோடுமாறுகொளக்கூறலாமென்றுணர்க. (௭௭)

கிளந்தவல்ல செய்யுளுட்டிரிநவும், வழங்கியன்மருங்கின் மருவொடு
திரிநவும், விளம்பியவியற்கையின் வேறுபடத்தோன்றின், வழங்கியன்ம
ருங்கி னுணர்ந்தனரொழுக்க, னன்மதிநாட்டத்தென்மனார்புலவர். *

இது இவ்வதிகாரத்தெடுத்தோத்தானுமிலேசானுமுடியாதுநின்றவற்றை
யெல்லா மிதனானேமுடிக்கவெனவதிகாரப்புறனடைகூறுகின்றது. கிளந்
தவல்லசெய்யுளுட்டிரிநவும்(எ-து)முன்னரெடுத்தோதப்பட்டனவல்லாத
சொற்கள்செய்யுளிடத்துத்திரிந்துமுடிவனவும்—வழங்கியன்மருங்கின்ம
ருவொடுதிரிநவும்- நால்வகைவழக்குநடக்குமிடத்துமருவுதலொடுதிரிந்து
முடிவனவும்—விளம்பியவியற்கைவேறுபடத்தோன்றின்-முன்னர்க்கூறியு

விலக்கணமுறைமையினின்றும்வேறுபடத்தோன்றுமாயினவற்றை—நன்மதிநாட்டத்து-நல்லவறிவினதாராய்ச்சியாலே—வழங்கியன்மருங்கின்-வழக்கு முடிந்துநடக்குமிடத்தே—உணர்ந்தனனொழுக்கலென் மனார்புலவர்-முடிபுவேறுபாடுகளையறிந்துநடாத்துகவென்றுகூறுவர்புலவரென்றவாறு. [உ-ம்]தடவுத்திணையென உகரமும்வல்லெழுத்தும்பெற்றும்- தடவுநிலையெனவுகரம்பெற்றும்-அகரவீற்றுரிச்சொல்வந்தது.அதவத்தங்கனி-யெனவேற்றுமைக்கணகரவீறத்துப்பெற்றது-கசதபத்தோன்றினென அகரவீற்றின்முன்னர்த்தகரங்கொடுக்க·நறவங்கண்ணிநற்போர்ச்செம்பியன்-குரவநீடியகொன்றையங்கானல்-என ஆகாரவிறுதிச்சினை கெட்டம்முப்பெற்றன· இருவழியும்)முழவுமாதொலைச்சியபைந்திணப்பிளவைப்பிணவுநாய்முடுக்கிய தடியொடு விரைஇயென - அவ்வீறல்வழி யம்முப்பெறுதம்முடிபு பெற்றன· திண்வளி விசித்த முழவொடாகுளி - சுறவெறிமீன்-இரவழங்குசிறுநெறி- இவை யுகரம்பெறுமல்வந்தன. உள்ளியங்காட்டபுள்ளியம்பொறிக்கலை·என இகரவீறு வேற்றுமைக்கணம்முப்பெற்றன· தீயினன்ன வொண்செங்காந்தள். என வீகாரவீறுவேற்றுமைக்கணின்பெற்றது·நல்லொழுக்கங்காக்குந்திருவத்தவர்.எனவுகரவீறுவேற்றுமைக்கணத்துப்பெற்றது. எப்பெற்றமான்பிணைபோல என வேகார வீறுவேற்றுமைக்கணெகரம் பெறுதுவந்தது· கைத்துண்டாம்போழ்தே - கைத்தில்லர்நல்லர் எனவும் -புன்னையங்கானல்-முல்லையந்தொடை- எனவும் ஐகாரவீறுவேற்றுமைக்கணத்துமம்மும் பெற்றன.அண்ணல் கோயில்வண்ணமே· எனவோகாரவீறுயகரவுடம்படு மெய்பெற்றது. இனி அஞ்செவிநிறையவாவின் -எனக்ககரமு மகரமுங் கெட்டன· அல்வழிக்கண் மரவம்பாவை வயிறுரப்பருகி-மரவநாகம் வணங்கி மாற்கனம் எனவிரு வழியுமகரம்விகாரப்பட் டம்முப் பெற்றன. காவொதிர்கானம் பாடினே மாகபொன்னந்திகிரிமுன் சமைத்துருட்டி -பொன்னங்குவட்டிற் பொலிவெய்தி-என னகரவீறிருவழியுமம்முப்பெற்றன.வேர்பிணிவெதிர்த் துக்கால்பொருநாவிசை-என-ரகரவீறுவேற்றுமைக்கணத்துப்பெற்றது· நாவலந்தண்பொழில்-கானலம்பெருந்துறை-எனலகர வீறுவேற்றுமைக்கணம்முப்பெற்றன.நெய்தலஞ்சிறுபறைஇஃது அல்வழிக்கணம்முப்பெற்றது·ஆயிடையிருபேராண்மைசெய்தபூசல் - என்புழி ஆயிடையென்ப துருபாதவி

வீடவருதலென்பதனான்முடியாது நீண்டு வகரவீறுவேறுபடமுடி
தெம்முனை எனத் தெவ்வென்புழி வகரங்கெட்டு மகரவொற்றுப்பெற்ற
டிந்தது அ- என்னுஞ்சுட்டன்றியனைத்துமெனத்திரிந்தது-முதிர்கெ
கின்முளை- எனவும்-காய்மாண்டதெங்கின்பழம்-எனவும் - குற்றுகர
ன்பெறுதலுங்கொள்க. தொண்டுதலையிட்டபத்துக்குறை-என ணகர
ட்டாது தகரவொற்றுடகரவொற்றாய்க்குற்றியலுகரமேறிமுடிந்தது
ங்ஙனஞ்செய்யுளுட்பிறவுந்திரிவனவுளவேனுமிப்புறனடையான்முடி
அருமருந்தன்னானென்பது ரகரவுகரங்கெட்டு அருமந்தனெனமு
து.சோழனாடு-சோழநாடு-என அன்கெட்டுமுடிந்தது.பாண்டிநாடும
தொண்டைமானாடு- தொண்டைநாடென - வீற்றெழுத்துச் சிலகெ
முடிந்தது-மலையமானாடு-மலாடு - எனமுதலெழுத்தொழிந்துப
ட்டுமுடிந்தது.பொதுவிலென்பது-பொதியிலெனவுகரந்திரிந்தி
கரவுடம்படுமெய்பெற்றுமுடிந்தது-பிறவுமிவ்வாறேதிரிந்து ம
குவன வெல்லாமிப்புறனடையானமைத்துக்கொள்க. (எ

·*-❀—◆—❀-*.

# கூ-வது-குற்றியலுகரப்புணரியல் [முற்றற்

ஆ இயல்-கூ- இ-சூத்திரம்-சா௮௱.

தொல்காப்பியவெழுத்ததிகாரமூலமும்; மதுரை ஆசிரியர்
பாரத்துவாசி நச்சினார்க்கினியரியற்றியகாண்டிகையுரையு முற்றிற்று.

வெண்பா.

நூலின் மரபு மொழிமரபு நண்பிறப்பு-மேலைப் புணர்ச்சி தொகைமர
பாலா-முருபியலின் பின்னுயிர்புள்ளிமயக்கந்,தெரிவரியகுற்றுகரஞ்செப்
எழுத்ததிகாரத்துச்சூத்திரங்களெல்லா,மொழுக்கியவொன்பதோத்துள்ள
வழுக்கின்றி- நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கண்-மேனூற்
வைத்தார் விரித்து...........................................